வரு. 75 இல. 46 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
24 பக்கங்கள் 100/-

கருணை இல்லம் கோகுலம்
நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
2023 நவம்பர் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை November 19 Sunday, 2023




/ Thinakaran.lk / ThinakaranLK


05
நீதித்துறையை பலப்படுத்த அவசியமான திருத்தங்கள்!


10
மண்சரிவு


12
தாய்வான் விவகாரத்தில் அமெரிக்க தலையீட்டை குறைக்குமா?


24
உலகக் கிண்ணம் யாருக்கு?

# மாணவர்களது பகலுணவுக்கு 32.5 மில். டொலர் நிதியுதவி

## மேலும் 05 வருடங்களுக்கு வழங்குவதாக அமெரிக்கா அறிவிப்பு

பாடசாலை மாணவர்களின் உணவுத் திட்டத்துக்காக மேலும் ஐந்து வருடங்களுக்கு 32.5 மில்லியன் டொலரை வழங்குவதாக, அமெரிக்கா அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்தது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "பிள்ளைகளின் போஷாக்கை அதிகரிப்பதுடன்,

06



பிள்ளைகளின் போஷாக்கை அதிகரிப்பதுடன் கல்வி அறிவு மற்றும் ஆரம்பக் கல்வியை மேம்படுத்தும் உணவு உதவி முயற்சி திட்டத்துக்காகவே அமெரிக்க USDA இந்த நிதியை வழங்குகிறது

## USAID நிர்வாகி சமந்தா பவருடன் ஜனாதிபதி சந்திப்பு



மாலைதீவில் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற கலாநிதி மொஹமட் முய்சுவின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அபிவிருத்திக்கான ஐ.நா. முகவர் நிறுவனத்தின் (USAID) நிர்வாகி சமந்தா பவரை சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் (17) மாலைதீவு தலைநகர் மாலேயில் நடைபெற்றது.



06

## உலகின் மிகப்பெரிய சுற்றுலா கப்பல் இலங்கை வருகிறது

இன்றும் நாளையும் கொழும்பு துறைமுகத்தில்

மாகாணசபை, பாராளுமன்ற தேர்தல்களுக்கான சட்டமூலம்

## பரிசீலிக்க சபாநாயகரால் சில உறுப்பினர்கள் நியமனம்

பாராளுமன்றில் சபாநாயகர் நேற்று அறிவிப்பு



'பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தம்)' சட்டமூலத்தின் பரிசீலனைக்கென நிலையியல் கட்டளையின் 113 (2) இன் பிரகாரம் சட்டவாக்க நிலையியல் குழுவில் சேவையாற்றும் பொருட்டு பாராளுமன்ற

06

## பிரதான டிப்போவாக தரமுயரும் பொத்துவில் பஸ் டிப்போ

முஷாரப் MPயின் முயற்சியால் இன்று நிகழ்வு

அட்டாளைச்சேனை விசேட நிருபர்



பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எஸ்.எம்.எம்.முஷாரப்பின் பெரும் முயற்சியால், பொத்துவில் உப பஸ் டிப்போவை பிரதான பஸ் டிப்போவாக தரம் உயர்த்தும் நிகழ்வு இன்று (19) முற்பகல் 10.00 மணிக்கு

06

கிரிக்கெட் உலகக் கிண்ணம்

## இந்தியா–அவுஸ்திரேலியா இறுதிப் போட்டி இன்று

2023 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டி இன்று நடைபெறகிறது. இறுதிப் போட்டியில் இந்திய அணியும் அவுஸ்திரேலிய அணியும் மோதவுள்ளன. கடந்த அக்டோபர் 11ஆம் திகதி உலகக்

06




## தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு குறித்த முன்மொழிவுகள்

தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் செந்தில் கலந்துரையாடல்

மலையக தோட்டத் தொழிலாளர்களின் புதிய சம்பள உயர்வு குறித்த முன்மொழிவுகள் மற்றும் தற்போதைய தொழிற்சங்கப் பிரச்சினைகள் தொடர்பாக தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கிழக்கு

06



எங்கள் கருத்து...

## மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய யதார்த்தம்!

ஆட்சியதிகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அமர்ந்திருக்கின்ற காலத்தில் நாட்டில் பஞ்சம் நிலவுவதில்லையென்ற ஐதீகம் இன்றும் கூட மக்கள் மத்தியில் நிலவுகின்றது. பெரும்பாலும் கிராமப்பகுதிகளிலுள்ள சாதாரண மக்கள் தங்களுக்குள் இவ்வாறு பேசிக் கொள்வதுண்டு.

ஐ.தே.க ஆட்சி நிலவுகின்ற காலத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் மக்களின் கைகளில் பணம் இருக்குமென்றும், உணவுக்குப் பஞ்சம் நிலவுவதில்லையென்றும் அக்காலம் தொடக்கம் மக்கள் பேசிக் கொள்வது வழக்கம்.

மக்களின் அவ்வாறான நம்பிக்கையில் உண்மை இல்லாமலில்லை. ஐக்கிய தேசியக் கட்சியானது அமரர் டி. எஸ். சேனநாயக்க காலம் தொட்டு சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரம் குறித்து விசேட அக்கறை செலுத்தி வருகின்றது எனலாம். முக்கியமாக, கிராமத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஐ.தே.கவுக்கு விசேடமான அக்கறை உண்டென்பதை மறுப்பதற்கில்லை.

கிராமத்து மக்களின் விவசாயம் உள்ளிட்ட தொழில்துறைகளுக்கு அரசாங்கம் முழுமையான ஆதரவு நல்க வேண்டும். அரசாங்க ஊழியர்களுக்கு முடிந்தளவு

06



06

## மாவீரர் நினைவேந்தல் தடை விண்ணப்பங்கள் நிராகரிப்பு

சுமந்திரனின் சட்டவாதத்தால் நீதிமன்று கட்டளை



06

## மின்சாரம், பெற்றோலியம் அத்தியாவசிய சேவைகளாகின

ஜனாதிபதியால் அதிவிசேட வர்த்தமானி

## வெள்ளத்தில் மிதக்கும் அக்குறணை நகரம்




மத்திய மலைநாட்டின் பல பகுதிகளிலும் பெய்து வரும் கடும் மழை காரணமாக அக்குறணை நகரினூடாக பாயும் பிரதான நீரோடையும் துனுவில வீதியினூடாக செல்லும் வஹகல ஓயாவும்

06

## ஒலுவில் வாகன விபத்தில் இரு இளைஞர்கள் பலி

பெரியநீலாவணை விசேட, திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்



அம்பாறை, ஒலுவில் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (17) மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். மருதமுனையிலிருந்து ஒலுவிலுக்கு இந்த இரு இளைஞர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ் வண்டியும் மோதி விபத்து சம்பவித்தது.

இதன்போது சம்பவ இடத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், மற்றைய

06



06

## கோழி இறைச்சி, முட்டை விலைகள் குறைகிறது

பண்டிகைக் காலத்தில் முன்னேற்பாடு

விக்கல் வீராச்சாமி



"ஊருக்க யாரோ பஜிரோ ஜிப்ல வந்து சுத்தித் திரியிராராம், ஆரண்டு பாரடா தம்பி....!"

"போன எலக்சனல்ல நாங்கள் வோட்டு போட்டு மந்திரியாக்கினோமே அவர்தான் இப்ப வந்திருக்கிறார், அடுத்த வருஷம் எலக்சன் வரப்போ–குதாம், அதுதான்....!!"



# மாணவியின் உயிரை காவுகொண்ட சுவர்


## பாதுகாப்பற்ற கட்டடங்களுடன் நாடுமுழுவதும் 74 பாடசாலைகள்

## ஆத்திரமுற்று அதிபரை தாக்கிய மக்கள்



**அஷ்ரப் ஏ சமத்**

"அநே மகே ரத்தரம் துவே (எனது தங்க மகளே) உனது அம்மா உன்னை என்னிடம் ஒப்படைத்துவிட்டு இந்த 3 பிள்ளைகளுக்கும் குடியிருக்க வீடொன்றைக் கட்டவே வீட்டுப் பணிப்பெண்ணாக வெளிநாடு சென்றாளே, அவளிடம் நீ இறந்துவிட்டாய் எனச் சொன்னால், அவள் நெஞ்சு வெடித்து செத்து விடுவாளே" என வயது முதிர்ந்த பெண்ணொருவர் தலையில் அடித்தவாறு அழுது புலம்பிக் கொண்டிருந்தார். இம்மாதம் 15 ஆம் திகதி கொழும்பு மாவட்டத்தில் வெல்லம்பிட்டியில் உள்ள ஓர் சிங்கள மொழி ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்ற ஒரு கோர விபத்தில் பாடசாலையில் கல்வி கற்ற ஒரு பிஞ்சு மரணமானது. அந்த பிஞ்சின் பெயர் தக்ஸனி வயது 6. அவள் வெல்லம்பிட்டியில் உள்ள வேரகொட வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்வி கற்றாள். அம் மாணவி இறந்த அன்றான 15ஆம் திகதியே அவளது பிறந்த தினமாகும். அதே நாளிலேயே அவள் மரணமும் சம்பவித்தது. தனது அம்மாவுக்கு, வெளிநாட்டு அழைப்பினை எடுத்து "அம்மா எனக்கு பிறந்த நாள். நான் கேக் வாங்கி ஏனைய சகோதரிகளுடன் பிறந்தநாள் கொண்டாட வேண்டும்." எனச் சொல்லியிருக்கிறார். அப்பா சாதாரண கூலித் தொழிலாளி.





அவருடம் "நீங்கள் வேலை முடித்து வீடு வரும்போது, எனக்கு கேக் வாங்கி வையுங்கள்" எனக் கூறியிருக்கின்றாள். தனது பெரியதாயிடமும் சொல்லிவிட்டு தனது பிரதேசத்தில் அமைந்துள்ள தனது பாடசாலைக்குச் சென்றாள்.

அவளது வகுப்பாசிரியர் அவளை அழைத்து "இன்று உனக்கு பிறந்த நாள் அல்லவா?" என்று கேட்க, "ஆம் டீச்சர் அப்பா இரவில் வீடு வரும்போது கேக் வாங்கி வைப்பார், அதனை வெட்டி கொண்டாடுவேன்" என்றாள். இல்லை உனது பிறந்த நாளிலேயே எமது பாடசாலை அதிபருக்கும் பிறந்த நாள். அவரே கேக் கொண்டு வந்துள்ளார். வாருங்கள் அதிபரும் நீங்களும் கேக் வெட்டி நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் " என்றார் ஆசிரியை. அதன் பின்னர் அவர்கள் 10.30 அளவில் நீர் அருந்துவதற்காக நீர்க் குழாய்கள் பொருத்திய இடத்துக்குச் சென்றதும் மேலும் 4 மாணவர்கள் அந்த நீர்க்குழாய் பொருத்தப்பட்ட சுவரில் ஏறி விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போதே அந்தச் சுவர் இரண்டாகப் பிளந்து விழுந்தது.

நீர் அருந்திய மாணவியின் மீதும் மேலும் 3 மாணவிகளின் தலையிலும் சுவர் விழுந்தது. இடிபாடுகளுக்குள் அவர்கள் அகப்பட்டுக் கொண்டனர். உடன் செயற்பட்ட அதிபரும், ஆசிரியர்களும் அவ் வீதியால் வந்தவர்களும் காயத்துக்குள்ளான மாணவிகள் 4 பேரையும் கொழும்பு பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். ஆனால் தக்ஸனியின் தலையில் சுவர் விழுந்து பாரதூரமான காயம் ஏற்பட்டதால் அவள் உயிர் உடனேயே பிரிந்தது. ஏனைய மாணவிகளில் ஒரு மாணவி அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை அதிகாரி தெரிவித்தார். அவ் வீதியால் வந்தவர்கள் அதிபரை மூர்க்கத்தனமாக தாக்கியதால் அதிபர் தலையில் காயத்துக்குள்ளாகி அவர் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ் அதிபர் பாடசாலையை பொறுப்பேற்று 3 வருடங்கள் மட்டுமே ஆகின்றது. இப் பாடசாலையை முன்னேற்றுவதற்காக அவர் பாடுபட்டு வருவதாகவும். சிறந்த அதிபர் எனவும் பெற்றார் தெரிவிக்கின்றனர். இருந்தும் 10 வருடங்களுக்கு முன்பே இந் நீர்குழாய் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு விட்டது. அதனை அன்று நிர்மாணித்தவர்கள், கொங்கிரிட் கம்பி இடாது வெறும் சீமெந்து கற்களைக் கொண்டு இதன் தூண்களை நிர்மாணித்துள்ளனர். அதனாலேயே மாணவர்கள் அதன் மேல் ஏறியதும் அது உடைந்து விழுந்துள்ளது. அக் கட்டடம் பொருத்தமற்ற முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இம் மாணவியின் தாய், தனது மகளுக்கு நேர்ந்த கதியை அறிந்து நேற்றுமுன்தினம் நாடு திரும்பியுள்ளார். தனது 3 பிள்ளைகளும் வாழ்வதற்காக ஓர் வீடொன்றை நிர்மாணிக்கவே, தனது 3 பிள்ளைகளையும் தனது அம்மாவிடம் ஒப்படைத்து விட்டு வெளிநாடு சென்றுள்ளார். அவர் அங்கு 8 மாத காலமே தொழில் செய்துள்ளார், "மகளுக்கு பிறந்தநாள் கேக்கும் பரிசுப் பொருளாக ஒரு அழகிய ஆடையும் வாங்கி வைத்திருந்தேன். தக்ஸனி எங்களை விட்டு சென்றுவிட்டாள் "என மாணவியின் அப்பா கண்ணீருடன் கூறினார்.

இச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு கிராண்ட்பாஸ் பொலிஸாரும், கொழும்பு மஜிஸ்ரேட் நீதிபதியும் உடன் விஜயம் செய்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இவ்விடயமாக பாராளுமன்றத்தில் கொலன்னாவை பகுதிக்கு பொறுப்பான பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார், கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த ஆகியோர் கேள்வி எழுப்பினர். இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டு வரும் அதிபரை சிலர் தாக்கியுள்ளார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் படியும், மாணவி தக்சனிக்கு உரிய நஷ்ட ஈட்டையும் பாடசாலைகளில் கட்டடங்களை நிர்மாணித்த ஒப்பந்தக் காரர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும் படியும் கேட்டுக் கொண்டார்.





கல்வி அமைச்சர் பதிலளிக்கையில் இப் பாடசாலை மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ளதாகவும், அம் மாணவியின் குடும்பத்தாருக்கு கல்வி அமைச்சினால் 5 இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள் மூவர் அடங்கிய குழுவினர் அங்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் ஹோமாகமவில் உள்ள தேசிய பாடசாலையொன்றில் இதே போன்று ஒரு வகுப்பறைக் கட்டிடம் உடைந்த நிலையில் உள்ளதாகவும், கொழும்பில் உள்ள பிரபல பாடசாலை உட்பட 74 பாடசாலைகளில் உடைந்து விழக்கூடிய வகுப்பறைக் கட்டடங்கள் உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அவ்வாறான கட்டடங்கள் அகற்றப்பட வேண்டும் எனவும் கல்வி அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரச பாடசாலைகளில் கட்டடங்களை நிர்மாணிக்கும் போது அந்தந்த பிரதேச கல்வி அலுவலகத்தில் இவற்றினைக் கண்காணிப்பதற்கு பொறியியலாளர்கள் உள்ளனர். அவர்களே இக் கட்டடங்களை பரிசோதித்து கட்டுமானப் பணிகளுக்காக விலைமனுக் கோரும் போது சிறந்த, நீண்ட கால அனுபவமும் அரச கட்டுமானத் திணைக்களத்தில் பதியப்பட்டவர்களுக்குமே பாடசாலைக் கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கான அனுமதியை வழங்க வேண்டும்.

சில அரசியல்வாதிகளின் சிபாரிசுகளால், இவ்வாறு மனித வாழ்க்கைக்கு பொருத்தமல்லாத கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு சிறிது காலம் சென்றதும் அவை இடிந்து விழுந்து அனர்த்தங்களும் உயிர்ப்பலிகளும் ஏற்படுகின்றன.

அண்மையில் கொழும்பில் மரமொன்று முறிந்து விழுந்து மரணங்கள் சம்பவித்தன. அதே போன்று பாடசாலையில் கட்டடம் விழுந்து உயிர்ப் பலிகள் ஏற்பட்டுள்ளன. சம்பவங்கள் நடைபெற்ற பின்னரே அதனைப் பற்றிய நடவடிக்கைகளை அரச அதிகாரிகள் எடுப்பார்கள். எவரும் வரும் முன்னர் காக்கும் நடவடிக்கை எடுப்பது அரிதாகவே உள்ளது. ஆகவே தான் அரச கட்டுமான ஒப்பந்தங்களை பெறும் போது அதற்கான சட்ட திட்டங்களுக்கமைய அவற்றை மேற்கொண்டால். இவ்வாறான அனர்த்தங்களைத் தவிர்க்கலாம். அத்தோடு பொருத்தமற்ற நிர்மாணங்களைச் செய்யும் ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்ற தண்டனைகளை பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

# வரவு செலவுத் திட்டமும் கட்சிகளின் வரவேற்பும்

"வரவு செலவுத் திட்டம் தொடர்பில் எதையும் கூறுவதற்கு இல்லாத நிலையில் கிரிக்கெட் விவகாரம், முன்னாள் ஜனாதிபதி, நிதி அமைச்சர் உள்ளிட்டவர்கள் தொடர்பில் நீதிமன்றம் தெரிவித்துள்ள பொருளாதார குற்றச்சாட்டுகள், கோப் குழு சர்ச்சை என தமது திசையை மாற்றி எதிர்க்கட்சியினர் பாராளுமன்ற விவாதங்களிலும் வெளியிலும் கருத்துக்களை முன்வைத்து வருவதை காண முடிகிறது."

"வரவு செலவுத் திட்டத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட முக்கிய கட்சிகள் வரவேற்று கருத்துக்களை முன் வைத்தும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் சிறந்தது என்பதை வலியுறுத்தியும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றன."

"பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய எம்பிக்கள் சிலர் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள யோசனைகளோடு மேலும் சில யோசனைகளை இணைத்துக் கொண்டால் நல்லது என்ற வகையில் யோசனைகளை முன்வைத்து வருவதையும் குறிப்பிட முடியும்."

நாடு பொருளாதாரத்தில் மிக நெருக்கடியான ஒரு காலகட்டத்தைக் கடந்து பொருளாதாரத்தில் சற்று தலை தூக்கும் நிலையில் புரட்சிகரமான ஒரு வரவு செலவுத் திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இம்முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் முழுமையான எதிர்பார்ப்பு இதன் ஊடாக நிறைவேற்றப் படாவிட்டாலும் நாடு தற்போதுள்ள நிலைமையில் ஓரளவேனும் மக்கள் எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்வதாக இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்துள்ளதாக அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் கூட மறைமுகமாகத் தெரிவிப்பதை காண முடிகிறது.

வரவு செலவுத் திட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நடைபெற்று வரும் விவாதங்கள், பாராளுமன்றத்துக்கு வெளியில் அது தொடர்பில் முன்வைக்கப்பட்டு வரும் கருத்துக்கள், விமர்சனங்களை நோக்கும் போது அது வரவு செலவுத் திட்டத்துக்கு எதிரான கடும் போக்கைக் காட்டவில்லை என்பதைக் குறிப்பிட முடியும்.

இக்கட்டான ஒரு கால சூழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்கட்சியும் ஏற்றுக் கொண்டதாகவே தெரிகிறது. எனினும் அதை நேரடியாக சொல்ல விரும்பாமல் எதிர்க்கட்சி என்றாலே அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்பதற்காக பாராளுமன்ற விவாதங்களில் வரவு செலவு திட்டத்தில் உள்ளடங்கும் விடயங்களை தவிர்த்து மக்களை திசை திருப்பும் வகையில் வேறு கோணங்களில் அவர்களது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் சூடு பிடித்துள்ள கிரிக்கெட் விவகாரம் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சர்கள், நிதித்துறை சார்ந்தவர்கள் தொடர்பில் நீதிமன்றம் வழங்கியுள்ள நாட்டின் தீர்ப்பினை தூக்கிப் பிடித்துக் கொண்டு அதை பேசு பொருளாக எதிர்க்கட்சியினர் முன்னெடுத்து வருவதை காண முடிகிறது.

அதேவேளை, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்த வரவு செலவு திட்டத்தை ஏற்றுக் கொண்டு அதில் இவற்றையும் இணைத்துக் கொண்டால் சிறந்தது என பல்வேறு யோசனைகளை முன் வைத்து வருவதையும் பாராளுமன்ற விவாதங்களில் காண முடிகிறது. குறிப்பாக அரசியல் மற்றும் பொருளாதாரம் தொடர்பில் உன்னிப்பான அவதானத்தை செலுத்தி வரும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எரான் விக்ரமரத்ன, கலாநிதி ஹர்ஷ டி சில்வா போன்றோர் இவ்வாறான யோசனைகளை முன் வைத்து வருவதையும் குறிப்பிட முடிகிறது.

பாராளுமன்ற விவாதங்களை பார்க்கும்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட முக்கிய சில கட்சிகளும் இந்த வரவு செலவுத் திட்டம் சிறந்தது என்றும் எனினும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் அது நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு விடை தேடுவதாக அமையும் என்பதை சபையில் சுட்டிக் காட்டி வருவதையும் குறிப்பிட வேண்டும்.

குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் இவ்வாறான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர் என்பதையும் குறிப்பிடலாம்.



இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைகளில் கொழும்பில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் வாழும் அரசாங்கத்தின் மாடி வீட்டுக் குடியிருப்புகளில் மாதாந்த வாடகை அறவிடப்படுவதை நிறுத்தி அவர்களுக்கு அந்த வீடுகளை உரிமையாக்கும் யோசனை கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களால் வரவேற்கப்பட்டு பாராட்டப்படுவதக் காணமுடிகிறது. அந்த வகையில் மரிக்கார் உள்ளிட்ட பல பாராளுமன்ற உறுப்பினர்கள் அது தொடர்பில் ஆரோக்கியமான வரவேற்கத் தக்க கருத்துக்களை பாராளுமன்ற விவாதங்களில் முன்னெடுத்து வருகின்றதையும் தெரிவிக்கலாம்.

### அமைச்சர் பந்துல குணவர்தன:

இந்த வரவு செலவுத் திட்டம் புரட்சிகரமானது என ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடு முகம் கொடுத்துள்ள நெருக்கடியான நிலையில் இருந்து மீள்வதற்கு அரசியல் ரீதியான தீர்வு அன்றி பொருளாதார ரீதியான தீர்வே அவசியம் என்பது உணரப்பட்டு இம்முறை வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் அரசாங்கம் முன்னெடுத்து வரும் வேலைத் திட்டங்களையடுத்து சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை நிதி ஒத்துழைப்பு கிடைத்ததும் நாட்டில் நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களை மீண்டும் தொடர முடியும் என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர் அதற்கு உறுதுணையாக இந்த வரவு செலவுத் திட்டம் அமைவதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்ஜெயவர்தனவின் காலத்தில் அன்றைய நிதியமைச்சர் ரொனி டி மெல் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டம் வரவுக்கும் செலவுக்கும் இடையில் பெரும் இடைவெளியைக் கொண்டதாக காணப்பட்டபோதும், அதன் போது சர்வதேச நாடுகளின் உதவிகள் நாட்டுக்கு கிடைத்து நிலைமை சீர் செய்யப்பட்டன. ஜே.ஆர் ஜெயவர்தன மேற்கொண்ட புரட்சிகரமான செயற்பாடுகள் போன்றே அரசாங்கத்திற்கான வருமானத்தை அதிகரிக்கும் வழிவகைகளை உள்ளடக்கியதாக இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்துள்ளது என்றும் அதேவேளை, அரசாங்க ஊழியர்கள் உட்பட அனைத்துத் துறை சார்ந்தோரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதாகவும் புத்திஜீவிகள் தெரிவித்து வருகின்றனர்.

### எம். ஏ சுமந்திரன் எம்பி

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் முன் வைக்கப்பட்டுள்ள சில விடயங்கள் வரவேற்கத்தக்கவை.

வரவு செலவுத்திட்டத்தில் முன் மொழியப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கான வாழ்க்கை செலவு கொடுப்பனவு அதிகரிப்பு, ஓய்வூதியர்கள், விசேட தேவையுடையோர், சிரேஷ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதை வரவேற்கின்றோம்.

எனினும் அவ்வாறான முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்துவதற்கு யதார்த்தமானதா என்ற சந்தேகம் எழுகிறது. அதேவேளை காணாமல் போனோருக்கான நட்ட ஈடு வழங்குவதை துரிதப்படுத்தும் நடவடிக்கை, அவர்களுக்கான நட்ட ஈட்டுக்கு மேலும் நிதி ஒதுக்கீடு செய்வது, விவசாயிகளுக்கு காணி உரிமை வழங்குவது, உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு வீடுகள், யாழ். மாவட்டத்துக்கான குடிநீர்த் திட்டம், மீனவர்களுக்கான முன் மொழிவு ஆகிய வற்றையும் நாம் வரவேற்கின்றோம்.

பாதுகாப்புக்கு தொடர்ந்தும் பெரும் தொகை செலவிடப்படுகின்றது. பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடுகளில் இலங்கை இராணுவம் உலகில் 14ஆவது இடத்தில் உள்ளது. இந்தளவு பாரிய இராணுவமும் செலவுகளும் ஒரு காலத்தில் தேவைப்பட்டாலும் யுத்தம் நிறைவடைந்து பல வருடங்கள் கடந்துள்ள நிலையில் இராணுவக்குறைப்பு செய்யப்படவில்லை. பாதுகாப்புக்கு பெரும் தொகைப் பணத்தை வீணாக செலவிட நேர்ந்துள்ளது.

எதிர்பார்க்கப்படும் வருமான இலக்கை அடையவே வற்வரி வீதத்தை அதிகரிப்பதாக காரணம் சொல்லப்படுகின்றது. ஆனால் வருமான முன் மொழிவுகள் யதார்த்தமற்றவையாகவே காணப்படுகின்றன.

உண்மையாகவே வரி செலுத்த வேண்டியவர்களிடமிருந்து இறைவரித் திணைக்களம் ஒழுங்காக வரிகளை அறவிட்டிருந்தால் அரசாங்கத்தின் வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டிருக்காது. துறைமுகம், விமான நிலையம் போன்ற பெருமளவு வரி வருமானங்களை தரக்கூடிய நிறுவனங்களில் ஊழல் வாதிகள் இருப்பதும் அவர்களை அரசியல்வாதிகள் பாதுகாப்பதும் நாட்டின் வங்குரோத்துக்கு காரணமாகவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

### வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம். பி

வரவு செலவு திட்டத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள பத்தாயிரம் ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

பெருந்தோட்டத்துறை மக்கள் இந்த நாட்டின் இரண்டாம் தர பிரஜைகள் அல்ல என்பதை அரசாங்கம் புரிந்து செயல்பட வேண்டும்.

அத்துடன் மலையகத்தில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு தனி செயலணி அமைத்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ள வரிச் சுமைகளை வருமானம் குறைந்த பெருந்தோட்ட மக்கள் எவ்வாறு சமாளிக்கப் போகின்றார்கள் என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

பெருந்தோட்ட மக்களின் நாளாந்த வருமானம் ஆயிரம் ரூபாவாகும். அந்த வகையில் ஒரு தொழிலாளி ஒரு மாதத்தில் 20ஆயிரம் ரூபாவையே பெற்றுக் கொள்ள முடிகின்றது. பெருந்தோட்டத்துறையில் 4 பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு மாதாந்தம் 83 ஆயிரத்து 333ரூபா தேவை என்பதை கணிப்பீட்டாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

கடந்த மூன்று வருடங்களாக தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்படவில்லை எனினும் வாழ்க்கைச்செலவு மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

அத்துடன் தோட்டத்தொழிலாளர்களில் 70 வீதமானவர்கள் வறுமைக்கோட்டுக்குள் உள்வாங்கப்பட்டிருக்கின்றனர். அதன் படி ஒரு தொழிலாளிக்கு நாளாந்தம் வழங்கப்படும் சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவாக 500 ரூபா அதிகரித்து வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.




**லோரன்ஸ் செல்வநாயகம்**

### ரவூப் ஹக்கீம் எம்பி

ஊழல் மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்காமல் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

நாட்டில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் வீழ்ச்சியடைந்திருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது.

அத்துடன் ஜனாதிபதி தனது வரவு செலவுத் திட்ட உரையின்போது புத்த பெருமான் தெரிவித்த சக வாழ்வு போதனை ஒன்றை தெரிவித்திருந்தார். சிக்கனமாக வாழப்பழகிக்கொள்ள வேண்டும் என்பதையே இதன் மூலம் அவர் தெரிவிக்க வருகிறார்.

ஆனால் வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி செயலகத்திற்கு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிகமாகவே இந்த முறை நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கல்விக்கு கடந்த முறையைவிட குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. நாட்டின் கொள்கைக்கமைய நாட்டின் மொத்த வருமானத்தில் 5 வீதம் கல்விக்காக ஒதுக்கப்பட வேண்டும். ஆனால் இம்முறை 2 சதவீதத்துக்கும் குறைவாகவே அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

### எரான் விக்ரமரட்ன எம்பி

சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தை விட சிறந்த யோசனைகள் இருக்குமானால் அதனை முன் வைக்குமாறு ஜனாதிபதி விடுத்துள்ள வேண்டுகோளை ஏற்று வரவு செலவு திட்டத்திற்கு புதிய யோசனைகளை முன் வைத்துள்ளோம்.

வரவு செலவுத் திட்டத்துக்கு எதிர்க்கட்சி முன்வைக்கும் யோசனைகளை முடிந்தால் நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றோம். அதேவேளை, நாட்டில் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படுமானால் பொருளாதாரத்தை சிறப்பாக கட்டியெழுப்ப முடியும்.

நாட்டில் புத்திஜீவிகள் வெளியேற்றம் பாரியளவில் இடம் பெறுகின்றது. தொழில் சார் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர்.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட 69 யோசனைகள் நடைமுறைப்படுத்த முடியாமல் போயுள்ளது. இம்முறை அதனை நிவர்த்தி செய்ய வேண்டும்.

கடந்த 20 வருடங்களாக திட்டமிடப்பட்ட அரச வருமானம் கிடைக்கவில்லை. பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தன்னிச்சையாக மாற்றப்பட்டுள்ளது, பாராளுமன்றத்தின் அனுமதி இன்றி ஒரே இரவில் வரி அதிகரிப்பு செய்துள்ளமை தொடர்பிலேயே நாம் கேள்வி எழுப்புகின்றோம். பொருட்களின் விலைகள் அதிகரித்து வாழ்க்கைச் செலவும் அதிகரிப்பதால் பிரச்சினைகள் பூதாகாரமாகியுள்ளன. அத்துடன் உணவு பணவீக்கம் அதிகரித்துள்ளது.

20 ஆம் பக்கம் பார்க்க...



# மனிதனும் தெய்வமாகலாம்!

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 98 ஆவது பிறந்த தினம் கொண்டாடப்படுகிறது. 1975 ஆம் ஆண்டு பகவானின் பிறந்தநாளில், பாபா கூறிய ஒரு தகவல் இது. "நான் எந்த ஒரு குறிப்பிட்ட தினத்தையும் என்னுடைய பிறந்த தினமாகக் கருதவில்லை.

ஏனென்றால் எப்போது உங்கள் இதயத்தில் இறைத்தன்மை மலர்கிறதோ, அன்றுதான் உங்களுக்குள் நான் பிறந்த தினம். ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்குள் இறைத்தன்மை மலர்ந்த அந்த நாளைத்தான், என்னுடைய பிறந்ததினமாகக் கொண்டாடவேண்டும். நீங்கள் எப்போது என்னுடைய அறிவுரைகளைக் கடைப்பிடிக்க உறுதி கொள்கிறீர்களோ, எனது வழிபாடுகளை பின்பற்றுகிறீர்களோ, எனது கட்டளைகளை சேவையாக மாற்றுகிறீர்களோ, சாதனையில் ஈடுபடுகிறீர்களோ, அந்த நாள் தான் உங்களுக்கு, எனது பிறந்த தினம்.

நான் பிறந்த தினம் என்று நீங்கள் கௌரவப்படுத்தும் நாள் 23 அன்று, வழக்கமான சடங்குகளுடன் கொண்டாடினாலும், அந்த நாளும் மற்ற நாட்களைப் போல ஒரு சாதாரண நாளாகவே விளங்கும். மனிதரை மதித்து வணங்குங்கள்.

அது என்னை வந்தடையும். மனிதரைப் புறக்கணிப்பது என்னைப் புறக்கணிப்பதாகும். மனிதரை ஒதுக்கிவைத்து, இறைவனை வணங்குவதால் என்ன பயன்?

இறைவன் மீதான பிரேமை, மனிதன் மேலான பிரேமையாக வெளிப்படவேண்டும். அதாவது அப்பிரேமையானது சேவையாகப் பரிணமிக்க வேண்டும். பிரேமையின் மூலம் மட்டுமே, ஒவ்வொரு தனி மனிதனுக்கும், நாட்டுக்கும் சாந்தி கிடைக்கும். பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவும், மகான் சீரடி சாயி பாபாவும் எந்த ஒரு புதிய மதத்தை நிறுவவோ, போதிக்கவோ முயற்சி செய்யவில்லை. உலகிலுள்ள அனைத்து மதங்களையும் அனுசரித்து "தெய்வம் ஒன்றே" "அன்பே இறைவன்" என்ற அடிப்படையில் சாயி இயக்கத்தை தோற்றுவித்துள்ளார்.

சீரடி சாயி பாபாவும், சத்ய சாயி பாபாவும் ஒருவரே! சீரடி சாயி பாபா அருள்வாக்கின் படி 8 வருடங்கள் கழித்து சத்ய சாயி பாபா அவதரித்தார். சத்ய சாயி பாபாவின் அறிமுகத்துடன் தான், இலங்கையில் சாயி பக்தர்களுக்கு சீரடி சாயி பாபாவின் அருள் கிட்டியது. ஏன்? சீரடி சாயி பாபாவின் பிறப்பின் ரகசியத்தை வெளிப்படுத்தியவரும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாதான். இந்த வருடம் பகவான் சத்ய சாயி பாபாவின் 98 ஆவது பிறந்ததினம் குரு வாரமாகிய வியாழக்கிழமையில் வருவதனால். அவரது பிறந்த தினத்தை, கொழும்பு, புதுச் செட்டித் தெருவிலுள்ள ஸ்ரீ சத்ய சாயி மத்திய நிலையம், நவம்பர் 23 ஆம் திகதி வியாழக்கிழமை, சற்குருக்களாகிய சீரடி சத்ய சாயிகளின் வழிபாட்டு நாளாகிய குருவாரத்தில் கொண்டாடவிருக்கிறது. அன்று காலையில் பிரசாந்திக் கொடியினை ஏற்றி, அன்னதான நிகழ்வுகளுடன், முழு நாள் நிகழ்ச்சிகளாக, திருவூஞ்சல், பிறந்த நாள் கேக் வெட்டுதல், சாயி பூஜை, பஜன் மற்றும் சீரடிசாயி பாபாவின் நான்கு கால ஆராத்திகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. முதல் நாள் நவம்பர் 22ஆம் திகதி புதன் கிழமை மாலை, புட்டபர்த்தியில் பாபாவின் சமாதியில் வைத்து பூஜீத்து எடுத்து வரப்பட்ட, பாபாவின் திருவுருவத்துக்கு, நவதிரவிய அபீஷேகம் செய்யப்பட்டு, சித்திரத்தேர் பவனி இடம்பெறவுள்ளது. உலகிலேயே சத்ய சாயி பாபாவின் சித்திரத்தேரோட்டம் நடைபெறும் இடம், கொழும்பு சாயி நிலையம் மட்டுமே!

**எஸ்.டி.எஸ். உதயநாயகம்.**
**பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய ( கொழும்பு) நிலையம்**



# கலியுக அவதாரம் சத்திய சாயி பாபா

## அவரது ஜனன தினம் 23ஆம் திகதி

தமக்குள்ளே நம்பிக்கையும் அன்பும் இல்லாத காரணத்தால் மக்கள் அவதிப்படுகிறார்கள். தெருவிலோ, அலுவலகத்திலோ, விமானத்திலோ, வேறெங்குமோ, எதைப் பார்த்தாலும் அவர்கள் அச்சமடைகிறார்கள். அச்சத்துக்குப் பின்னால் காரணமாக அமைவன மனிதனின் கொடூரத்தன்மையும் கருணையின்மையும் ஆகும். உங்கள் எண்ணம், சொல், செயல், ஒன்றாக இருக்குமானால் அஞ்சத் தேவையில்லை.

மனித குலத்துக்கு அணி செய்வது கல்வியே. கல்வியே, புகழ், செல்வம், சுகம். யார் மிகுந்த திருப்தியுடன் இருக்கிறானோ அவனே செல்வந்தன். ஆசைகள் மிகுந்தவனாக இருக்கிறானோ அவனே மிகுந்த ஏழை. நல்லதற்கு நன்மையும், தீயதற்கு தீமையும் கர்மத்தின் விளைவு. பொறாமையும், சினமும் கொண்டவர்கள் இருகாலமும் முன்னேறமுடியாது.

வாழ்க்கை மிகவும் புனிதமானது. புனிதமான அத்தகைய வாழ்வை புனிதமானவற்றுக்காக வழங்குதல் வேண்டும். சத்தியம், தர்மம், சாந்தி என்ற இவையே அடிப்படையான கொள்கைகளாகும். இவற்றின் மூலம் ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டும். பற்றுதலே துன்பத்திற்குக் காரணம், சீலமில்லாத கல்வி, தியாகமில்லாத ஆராதனை, முயற்சியில்லாத செல்வம், கொள்கையற்ற அரசியல், இவ்வுலகத்தின் துன்பங்களுக்கெல்லாம் காரணம். நமது நடத்தையும் எண்ணங்களுமே நமது இன்ப துன்பங்களுக்குக் காரணம். உங்களிடம் சுயநம்பிக்கை இருந்தால் பிறர் குறைகூறுவதால் நீங்கள் பாதிக்கப்படமாட்டீர்கள். சுயநம்பிக்கை இல்லாதவன் தன்னைச் சுற்றி என்ன நடந்தாலும் பாதிக்கப்படுவான். கடவுள் அருள் மட்டும் இருக்குமானால் இந்த உலகத்தில் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. கலியுகத்தில் நட்பு நட்பாகவா இருக்கிறது. பையில் பணம் இருக்கிறது. தந்தை பதவியில் இருக்கிறார். அனைவரும் ஹலோ, ஹலோ என்று ஓடி வருவார்கள். அதே பணம் இல்லை என்றால் தந்தையும் ஓய்வுபெற்றுவிட்டார் என்றால், யாருமே வர மாட்டார்கள்.

பதவியாலும், பணத்தாலும் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் அகங்காரத்தால் தம்மை மறந்து செயல்படுகிறார்கள். அகங்காரம் மனிதனை இழி நிலைக்குத் தள்ளிவிடும். ஒவ்வொரு செயலுக்கும் பலன் நிச்சயம் ஏற்படும். சிலவற்றுக்கு உடனே கிடைக்கிறது. மற்றவைகளுக்கு சிலகாலம் பொறுத்துக் கிடைக்கும். விளைவுகள் இல்லை என்பது தவறு. நித்தியமான செல்வம் எது. அன்பு என்ற செல்வம்தான் அது. எந்த உயர் பதவி வகித்தும், எவ்வளவோ படித்தும் எத்தனையோ செல்வங்களைச் சேர்த்தும் என்ன பயன். இதயத்தில் இரக்கம் இன்றி வரண்டிருந்தால் அன்பை விட உலகில் விலை உயர்ந்தது வேறு எதுவும் கிடையாது.

மன நிறைவு அமைதியைத் தரும். திருப்தி இல்லாத ஒருவன் இரண்டு வகைகளிலும் நஷ்டம் அடைகிறான். அவனால் இவ்வுலகிலோ, மறுமையிலோ சந்தோஷமாக இருக்க முடியாது. நிலையற்ற எதிர்காலத்தைப் பற்றி யோசித்து அச்சத்தில் அழுகிறார்கள். நிலையற்ற எதிர்காலத்தைப் பற்றி யோசித்து நீ கவலைப்படவேண்டிய அவசியமென்ன? நடந்துபோனதைப் பற்றியும் நீ சிந்திக்க வேண்டியதில்லை. ஏனென்றால் கடந்தது கடந்ததுதான். அது திரும்பிவராது. நிகழ்காலத்தை நன்கு பயன்படுத்த நீ முயலவேண்டும். கடந்தவற்றின் விளைவுகளும், வரப்போகும் அறிகுறிகளும் நிகழ்காலத்தில் இருக்கின்றன. அதனால் நிகழ்காலம் எங்கும் நிரம்பிய காலம். இத்தகைய பல அறிவுரைகளை கலியுக அவதாரமாகிய பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா பல ஆண்டுகளாக இடைவிடாது உலகில் உள்ள மக்களுக்கு அருளியிருக்கிறார்.

**சுவாமிநாதன் தர்மசீலன் (ஜே.பி)**



# பாக்கு நீரிணையை வேகமாக நீந்தி சாதனை புரிந்த புளோரிங்டன் டியான்

பாக்கு நீரிணையை தனது இரு நண்பர்களுடன் வேகமாக நீந்தி சாதனை படைத்துள்ளார் புளோரிங்டன் டியான் பிறீடோ. இந்தியாவின் தமிழ்நாடு, தனுஸ்கோடியிலிருந்து இலங்கையின் தலைமன்னார் வரையிலான 30 கிலோமீட்டர் தூரத்தை 09 மணி 59 நிமிடங்களில் வியக்கத்தக்க நேரத்தில் இவர்கள் கடந்துள்ளனர். இந்த குறிப்பிடத்தக்க பயணத்தை அவர்கள் தனுஸ்கோடியில் இருந்து 21 ஆம் திகதி தொடங்கினர். அதிகாலை 3.00 மணிக்கு தங்கள் பயணத்தை ஆரம்பித்த அவர்கள் அதே நாள் மதியம் 12:59 க்கு அவர்களின் இலக்கான தலைமன்னாரை அடைந்ததன் மூலம் பிரமிக்க வைக்கும் சாதனையை நிகழ்த்தியுள்ளனர். இந்த சாதனை நிகழ்வு SWIM BATTI SWIMMING ACADEMY மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியின் லியோ கிளப் மற்றும் புனித மைக்கேல் கல்லூரி சாரணர் குழு என்பனவற்றின் அர்ப்பணிப்பினால் சாத்தியமானது. மட்டக்களப்பை பிறப்பிடமாகக்கொண்ட புளோரிங்டன் டியான், ஆசீர்வதம் புளோரிங்டன், டயானா சுஜீவா புளோரிங்டன் ஆகியோரின் மகனாவார்.

VEHICLE
VALUATION REPORTS
ACCEPTED BY LEASING AND FINANCE COMPANIES, BANKS, GOVERNMENT & NON- GOVERNMENTAL INSTITUTIONS
CALL:-
Automobile Association of Ceylon
40, Sir M.M.M. Mawatha, Colombo 03
Tele. No: 011 7 555 557 (Ext. 214)







# பத்தாம் ஆண்டு உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில் சாதனைத் தமிழர்கள்



தமிழ்நாடு திறந்த வெளி பல்கலைக்கழகத்துடன் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு இணைந்து நடத்தும் ஐம்பெரும் விழா ஜனவரி 6 மற்றும் 7ஆம் திகதிகளில் சென்னையில் நடைபெற உள்ளது. அந்நிகழ்வில் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மத்திய அமைச்சர்கள், முன்னாள் முதல்வர்கள், மேயர்கள், துணைவேந்தர்கள், கல்வியாளர்கள், தொழிலதிபர்கள் கலந்து சிறப்பிக்க உள்ளனர். இந்நிகழ்வானது நான்கு அமர்வுகளாகவும், பன்னாட்டு சிறு, குறுந்தொழில் அதிபர்கள் கலந்து கொள்ளும் வளரும் தமிழகம் கண்காட்சியையும், உள்ளடக்கியதாக ஐம்பெரும் விழாவாகவும் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் தமிழர்களை அடையாளப்படுத்தும் நிகழ்வாக வெளிநாட்டில் சாதனை புரிந்த தமிழர்களுக்கு சாதனைத் தமிழன் விருதும், தமிழ் மொழியைப் போற்றும் விதமாக, கல்லூரிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு நல்லாசான் விருதும் வழங்கப்பட உள்ளது. இந்நிகழ்வில் தமிழ்நாட்டில் உள்ள சிறு குறுந்தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு நாட்டு அரசு தூதர்களை அழைத்து தொழில் வாய்ப்புகளைப் பற்றிய கருத்தரங்கம் நடத்தவும், பல்வேறு நாடுகளில் உள்ள வர்த்தக சங்கங்களை அழைத்து புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யவும் தொழில் வாய்ப்புகளை தேடுவோர் ஏற்றுமதி செய்ய விரும்புவோர், ஆகியோரை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு தொழில் வர்த்தக அமைப்புகள் கருத்துரைக்க உள்ளன. மேலும், கலை, கலாசாரம், பாரம்பரிய உணவு, உடை, சித்த ஆயுர்வேத மருத்துவம் போன்றவைகளை உள்ளடக்கிய நிகழ்வும் நடைபெற உள்ளது. உணவே மருந்து என்ற கொள்கைக்கு இணங்க சிறுதானிய உணவு வகைகளை அயல் நாட்டினர்களுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வும் உணவுத் திருவிழாவும் நடைபெற உள்ளது என, உலகத்தமிழ் வர்த்தக சங்கம் மற்றும் உலகத்தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.

**தொடர்புக்கு:**
+60 166167708

# இவர்கள் என்ன சொல்கிறார்கள்?




### கிழக்கு மாகாண வீதிகள் அனைத்தையும் செப்பனிடலாம்

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் அதன் பல்வேறுபட்ட செயற்றிட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். ஒட்டுமொத்தமாக இந்த வரவு செலவுத் திட்டம், ஒரு சிறப்பான வரவு செலவுத் திட்டமாக காணப்படுகின்றது. மலையக தோட்டத் தொழிலாளர்களினதும் சம்பளம் அதிகரிக்கப்படல் வேண்டும். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, விலைவாசி அதிகரிப்பு, போன்றவற்றுக்கு ஈடுகொடுக்க முடியாதுள்ள தோட்டத் தொழிலாளர்களின் வேதனங்களும் அதிகரிக்கப்படல் வேண்டும்.

2024ஆம் ஆண்டுக்காக முன்வைக்கப்பட்டுள்ள வரவுசெலவுத் திட்டமானது, நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாக அமைந்துள்ளதாக நான் பார்க்கின்றேன். குறிப்பாக வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கு மிகவும் பயன்மிக்கதொரு வரவு செலவுத்திட்டமாக அமைந்துள்ளது. கல்வி மறுசீரமைப்புக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி வரவேற்கத்தக்கதாகும். வடக்கு, கிழக்கில் கடந்த யுத்த காலத்தில் பாதிப்புற்ற அதிகளவு மக்கள் அங்கவீனர்களாகவுள்ளனர். இந்நிலையில் அங்கவீனர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. நாட்டினுடைய முதுகெலும்பாக காணப்படும் கிராமங்களை அபிவிருத்தி செய்ய கிராமிய வீதி இராஜாங்க அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி 10 பில்லியன் ஆகும். இதனூடாக அதனைத்து கிராமிய வீதிகளையும் செப்பனிட முடியும்.



**அ. தயாபரன்**
**சமூக செயற்பாட்டாளர்**

### தேர்தலை மையப்படுத்திய வரவு செலவுத் திட்டம்.

வரவு செலவு திட்டமானது முழுமையாக தேர்தலை மையப்படுத்தியதாகவே அமைந்துள்ளது. இதன் மூலம் எமது பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவில்லை. இது ஒரு ஏமாற்றுவித்தையே என மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமும் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியருமான சங்கரன் விஜயசந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த வரவு செலவு திட்டத்தை இன்றைய இலங்கையில் இருக்கின்ற, பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க முடியாத, எந்த ஒரு ஆய்வின் அடிப்படையிலும் தயாரிக்கப்படாத ஒரு வரவு செலவு திட்டமாகவே பார்க்க வேண்டியுள்ளது.

அடுத்து இந்த நாட்டில் நடைபெறவுள்ள தேர்தல் வாக்குறுதிகளின் ஒரு அங்கமாகவே இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்துள்ளது. எனவே இது மக்களுக்கான வரவு செலவு திட்டமல்ல.



**பேராசிரியர் விஜயசந்திரன்**

### கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் 2024 பட்ஜட்

மாணவர்களின் பாடத்திட்டத்தில் ஆங்கில அறிவை மேம்படுத்துதல், மாணவர் காப்புறுதி, கல்வியற் கல்லூரிகளை பல்கலைக்கழகத்துக்குத் தரம் உயர்த்துதல், சர்வதேச பல்கலைக் கழகங்களை நிறுவுதல், போன்றன நாட்டுக்கு அவசியமாகத் தேவைப்படுபவையாகும். அங்கவீனர்கள், முதியோர்களின் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை, அத்தோடு காணி உறுதிப்பத்திரம் வழங்கவுள்ளமை, மெச்சத்தக்கது. எனவே இந்த வரவு செலவுத்திட்டம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு வெற்றியளிக்கும்.



**தேச கீர்த்தி புஹாரி முகம்மது அப்றாரி**
**காத்தான்குடி**

### அஸ்வெசும திட்டத்துக்காக பாரிய நிதி ஒதுக்கீடு

மிகவும் இக்கட்டான ஒரு நிலைமையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒரு வரவு செலவு திட்டம் இது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இதில் இருக்கின்ற நன்மைகளை நாம் பார்க்க வேண்டும். கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பு இந்த நாட்டில் இருந்த நிலைமையை அனைவரும் மறந்துவிட்டார்கள். அவ்வாறான ஒரு நிலைமையில் பலரும் நாட்டை பொறுப்பேற்க மறுத்த பொழுது தனி ஒருவராக துணிச்சலுடன் இந்த நாட்டை பொறுப்பேற்று தனது அனுபவத்தின் மூலமாக இன்று ஓரளவுக்கேனும் மக்கள் மூச்சுவிடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதியோருக்கான கொடுப்பனவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அஸ்வெசும திட்டத்துக்காக பாரியளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே குறைகளை தேடாமல் நிறைகளை பேசி அனைவரும் ஒற்றுமையாக செயற்பட்டு நாட்டை கட்டியெழுப்ப முயற்சி செய்ய வேண்டும்.

**சந்திரகுமார்**
**வர்த்தகர்**

### இதனைவிடச் சிறந்த வரவுசெலவுத் திட்டத்தை எதிர்க்கட்சியால் சமர்ப்பிக்க முடியுமா?

கடந்த வருடம் இந்த நேரத்தில் அனைத்துக்கும் தட்டுப்பாடு நிலவியது. ஆனால் இன்று அந்த நிலைமை மாற்றமடைந்துள்ளது. தட்டுப்பாடு இல்லாமல் விவசாயிகளுக்கு அனைத்தும் கிடைக்கின்றது. விலை அதிகரித்திருந்தாலும் பொருட்கள் கிடைக்கின்றன.

இந்த நிலைமையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எல்லோராலும் பேச முடியும் ஆனால் எத்தனை பேரால் செய்து காட்ட முடியும்? எதிர்க்கட்சிகளால் இதனை விடச் சிறந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முடியுமாயின், அவர்கள் அந்த யோசனைகளை மக்கள் நலன் கருதி அரசாங்கத்திற்கு பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

**இராமநாதன் விவசாயி**

### ஏற்றுக்கொள்ளக்கூடிய வரவுசெலவுத்திட்டம்

இந்த வரவு செலவு திட்டத்தை பொறுத்த அளவில் ஓரளவு நமக்கு நன்மை கிடைத்துள்ளதாகவே நான் கருதுகின்றேன். குறிப்பாக கல்வி அபிவிருத்தி தொடர்பாக அதிகம் பேசப்பட்டுள்ளது. விசேடமாக உயர் கல்வி தொடர்பில் பல முக்கிய முன்மொழிவுகளை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார்.

நாம் எதிர்பார்க்கின்ற அனைத்தையும் ஒரே இரவில் பெற்றுக் கொள்ள முடியாது. இன்றைய நிலைமையில் இந்த வரவு செலவு திட்டமானது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாகவே இருக்கின்றது.

**சின்னத்தம்பி**
**ஆசிரியர்**

### சுபீட்சமான எதிர்காலத்துக்கு கட்டியம் கூறும் பட்ஜட்

வரவு செலவுத் திட்டமானது காலத்துக்குப் பொருத்தமான ஒரு திட்டமாகவே இருக்கின்றது. இன்று நாம் இப்படியாவது இருக்கின்றோமே என்பதை நினைத்து சந்தோசப்பட வேண்டும். அன்றையநிலைமை நீடித்திருந்தால் இன்று எத்தனை பேர் உயிரிழந்திருப்பார்கள் என்பதை கூற முடியாது. நாம் ஏதோ ஒரு வகையில் முன்னோக்கிச் செல்கின்றோம். எதிர்காலம் சுபீட்சமாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் முன்னோக்கி செல்வோம். அனைத்தும் நம்பிக்கையே.

**சீதாலட்சுமி**
**அரசசார்பற்ற நிறுவன செயற்பாட்டாளர்**

### கடந்தகால வரவுசெலவுத் திட்டங்கள் ஏமாற்றத்தையே தந்துள்ளன

வரவு – செலவு வருடாந்த நிதியறிக்கை யோசனைகளை நான் பெரிதாக பொருட்படுத்துவதில்லை. பெரும்பாலான ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் நிதிநிலை அறிக்கைகள் வெறும் கண்துடைப்பாகவே முன் வைக்கப்படுகின்றன.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய ஏழைகள் அதிகமாக வசிக்கும் நாடுகளில் முன்மொழியப்படும் பல வாக்குறுதிகள் நிறைவேற்றி வைக்கப்படுவதில்லை என்பதே நடைமுறை உண்மை.

இலங்கையில் நடப்பாண்டில் 77 முன்மொழிவுகளில் தகவல்கள் வெளியிடப்படவில்லை என்றும் 16 வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவே இல்லை என்றும் நான் செய்தியொன்றில் படித்தேன்.

மக்களும் சாராய, சமையல் வாயு, எண்ணெய் விலை, பால்மா, சம்பளம், வட்டி வீதம் போன்ற அவர்களை நேரடியாகப் பாதிக்கக் கூடியவற்றைத்தான் நினைவில் வைத்திருப்பார்களே தவிர ஏனையவற்றை மறந்து விடுவார்கள். இது அரசியல்வாதிகளுக்கும் தெரியும்.

முன்னர் சீனி, மா, சிகரெட், சாராயம், பஸ் கட்டணம், எண்ணெய் என்பனவற்றின் விலைகள் வருடத்துக்கு ஒரு முறைதான் பட்ஜட்டில் அதிகரிக்கும் அல்லது குறைக்கப்படும்.

இப்போது விலைகளும் சுமைகளும் எப்போது வேண்டுமானாலும் அதிகரிக்கலாம் என்ற நிலையிலும் தொடர்ச்சியான 'அபிவிருத்தி' வரவு – செலவு திட்டங்களினால் ஆன பிரயோஜனம் ஏதும் இல்லை என்ற நிலையிலும் இந்த வரவு செலவு திட்டங்கள் நம்மை ஆர்வம் கொள்ளச் செய்வதில்லை.

மக்களின் அத்தியாவசிய பண்டங்கள், சேவைகள் மீதுதான் தொடர்ச்சியான வரி அதிகரிப்புகள் இவ் வரவு செலவு திட்டங்களின் ஊடாக செய்யப்படுகின்றன. செல்வந்தர்களிடம் வரி அறவிடுவதில் கறாராக இருப்பதில்லை. இந்த அதிகரித்த வரி வருமானங்களுக்கு என்னவாகிறது. அவை முறையாக கையாளப்படுகின்றதா என்பது பற்றி எந்தத் தகவல்களும் வழங்கப்படுவதில்லை.

சில சமயம் சுகாதாரம், கல்வித் துறைகளுக்கான நிதி ஒதுக்கீட்டிலும் வெட்டு விழுவதை அவதானித்திருக்கிறேன். அதே சமயம் பாதுகாப்பு அமைச்சுக்கு வருடா வருடம் நிதி ஒதுக்கீடு அதிகரித்து வருவது ஏன் என்ற கேள்வி எழுகிறது அல்லவா.

கடந்த நிதி அறிக்கையில் பாதுகாப்பு செலவீனங்களின் அதிகரிப்பு பற்றி கேள்வி எழுப்பப்பட்டபோது, ஏப்ரல் குண்டு வெடிப்பு காரணமாகக் காட்டப்பட்டது. மேலும் இந்து சமுத்திர, இந்தோ பசுபிக் அரசியல் பொருளாதார மற்றும் இராணுவ வியூக சூழல்கள் காரணமாக இலங்கை இராணுவ ரீதியாக எப்போதும் சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்றொரு காரணமும் முன்வைக்கப்பட்டது.

இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். இப்போது இலங்கை தேசிய அரசியலும் சரி பொருளாதாரமும் சரி குழம்பிக் கிடக்கிறது. இதில் இந்த நிதியறிக்கை நல்லதா, கெட்டதா என்று கேட்டால் என்ன பதிலைத்தான் சொல்ல முடியும்?

**அருள் மகேஸ்வரன்,**
**ஓய்வு பெற்ற தபால் அதிபர்,**
**வவுனியா.**

### கடனாளிகளாகவே வாழும் அரச ஊழியர்களுக்கு நிவாரணமளிக்கும் பட்ஜட்

அரச ஊழியர்கள் கடனாளிகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையில் 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு முன்மொழியப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

ஜனாதிபதி 2024ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்திருக்கும் இந்நிலையில் நாட்டின் எதிர்காலத்தை நோக்காகக் கொண்டு சர்வதேசத்தினால் ஏற்கப்பட்ட புதிய பொருளாதார முறைமைக்கும் அடித்தளமிடுவதாக குறிப்பிட்டுள்ளார்.

2024இல் நாட்டை பொருளாதார ரீதியில் வலுவானதாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பள உயர்வு, பொருளாதார ரீதியில் பாதிப்புற்ற குடும்பங்களின் வாழ்வாதாரம், சிறிய மற்றும் மத்தியதர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தல், போன்றவற்றுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளமையானது வரவேற்கத்தக்கதாகும்.



**கோபாலன் பிரசாத்**
**அரச உத்தியோகஸ்தர்**

### இதைவிடச் சிறப்பான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பது கடினம்

மலையக மக்களுக்கு காணி வழங்கி வீடுகள் அமைப்பதற்கு முதல் கட்டமாக 400 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி தரும் செய்தி. தொண்ணூறுகளில் என்று நினைக்கிறேன், லயன்கள் அதில் வசிப்பவர்களுக்கே உரிமையாகும் என ரணில் விக்கிரமசிங்கவும் சௌமியமூர்த்தி தொண்டமானும் அறிவித்திருந்தது எனக்கு நினைவுக்கு வருகிறது.

பின்னர் அவரே 2015 இல் தோட்டங்களை கிராமமாக்க ஒரு அமைச்சையும் உருவாக்கினார். மலையக அதிகார சபை அமைக்கப்படுவதற்கு பின்னணியில் இருந்தார். நுவரெலியாவில் பிரதேச சபைகளின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு காரணமாக இருந்தார்.

ஆனால் மலையகக் கட்சிகளுக்கு இடையிலான இழுபறிகளால் இம்மக்கள் இவற்றின் முழுமையான பலன்களை பெற முடியவில்லை.

ஜனாதிபதி, காணி உரித்துடன் காணி வழங்கப்படும் என்றும் வீடுகள் அமைக்கப்படும் என்றும், தேசிய நீரோட்டத்துடன் சம அந்தஸ்துடன் பெருந்தோட்ட சமூகம் இணைத்துக் கொள்ளப்படும் என்றும் 'நாம் 200' விழாவில் தெரிவித்திருந்தார்.

எனினும் இவை தேர்தல் வாக்குறுதிகள், ஜனாதிபதி விரும்பினாலும் இனவாதிகள் செய்ய விடுவார்களா, இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான திறன் மலையகக் கட்சிகளிடம் உள்ளதா என்ற கேள்விகள் படித்த இளைஞர் சமூகத்திடம் எழுவது இயற்கையே.

எனவே இவை தொடர்பான ஆக்கபூர்வமான கருத்துகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். அனேகமாக ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதியாக வரக்கூடிய வாய்ப்புகள் இருப்பதால் காணி உறுதி வழங்கப்படுவதை நாம் அவரிடம் வற்புறுத்த முடியும்.

மேலும் அவர் தினச் சம்பள முறையில் இருந்து தொழிலாளர்களை விடுவித்து சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்றலாம் என்றும் குறிப்பிட்டிருந்தார். மலையகக் கட்சிகளும் சிவில் சமூகமும் இதை எப்படி சாத்தியமாக்கலாம் என்பது பற்றி பேச வேண்டிய அவசியம் உள்ளது.

இந்த வரவு – செலவு பற்றி கருத்து தெரிவித்த அனுரகுமார திசாநாயக்க, கடனும் விற்பனையுமான பட்ஜட் என்று விமர்சனம் செய்திருப்பதாக ஒரு செய்தியைப் படித்தேன். அரசே நிறுவனங்களை வைத்துக் கொள்ள வேண்டும். தனியார் முதலீட்டாளர்களிடம் கொடுக்கக் கூடாது என்ற கூற்று தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகிறது.

அரசிடமிருந்த ஸ்ரீ லங்கன் விமான நிலையம் எமிரேட்சிடம் வழங்கப்பட்டதும் அது இலாபமீட்டியது. அநியாயமாக அது அரசின் பொறுப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதும் இப்போது கோடிக் கணக்கில் நஷ்டம். டெலிகொம் நிறுவனம் அரசிடம் ஒப்படைக்கப்பட்டால் என்ன நடக்கும்?

எனவே நஷ்டமடையும் அரச நிறுவனங்களை தனியாரிடம் கையளித்து லாபமீட்டுவது நல்லதே. எங்கள் சுமையும் குறையும். இது பாராட்டுக்குரிய பட்ஜட் என்று சொல்ல மாட்டேன். இதைவிட சிறப்பாக சமர்ப்பிக்க முடியாது.


**சரோஜா சந்திரன்,**
**தோட்டத்துறை,**
**பொகவந்தலாவை**

### மலையக மக்களை புறக்கணித்த வரவுசெலவுத் திட்டம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டமானது முழுமையாக மலையக மக்களை புறக்கணித்த ஒரு வரவு செலவுத் திட்டமாகவே அமைந்துள்ளது என மலையக மக்கள் முன்னணியின் உப தலைவரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.ராஜாராம் தெரிவித்துள்ளார்.

வெறுமனே மலையக மக்களை ஏமாற்றுவதற்காக வீடமைப்பிற்கு நிதியை ஒதுக்கியுள்ளனர். எந்த ஒரு விடயமும் நடைமுறைக்கு சாத்தியமானதல்ல. ஏனெனில் இன்று வரவு செலவுத் திட்டம் என்பதே வெறும் கண்துடைப்பாகும். இவர்கள் அனைவரும் எங்களுடைய மக்களை வெறுமனே வெளிநாட்டு செலவாணியை சம்பாதித்து கொடுக்கின்ற இயந்திரமாகவே பார்க்கின்றார்கள். அவர்களுடைய பிரச்சினைகளை மனிதாபிமான அடிப்படையில் பார்ப்பதாகத் தெரியவில்லை. இந்த நாட்டின் முதுகெலும்பாக, கொரோனா காலத்திலும் தங்களை அர்ப்பணித்து இந்த நாட்டுக்காக உழைத்துக் கொண்டிருக்கின்றவர்கள் அவர்கள்.

ஆனால் அவர்களுக்கு எந்தவிதமான நியாயமும் கிடைக்கவில்லை. அரச ஊழியர்களைப் பற்றி சிந்திக்கின்ற இந்த அரசாங்கம், ஏன் மலையக மக்களைப்பற்றி சிந்திக்கவில்லை? அரசாங்கத்தின் எந்த ஒரு திட்டத்திலும் எங்களுடைய மக்கள் உள்வாங்கப்படவில்லை. திட்டமிட்ட அடிப்படையில் அவர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள். இது தொடர்பாக அரசாங்கத்துடன் இணைந்திருக்கின்ற அமைச்சர்கள் கவனம் செலுத்துவார்களா?



**ஆர். ராஜாராம்**
**மத்திய மாகாணசபை**
**முன்னாள் உறுப்பினர்**

### வரவேற்க வேண்டியவை அதிகம் உள்ள பட்ஜட்

நேரடியாகப் பார்த்தால் மக்களுக்கு பாதிப்பு இருப்பது போலத் தெரியவில்லை. ஆனால் 'வெட்' வரி அதிகரிப்பு

(20 ஆம் பக்கம் பார்க்க)

**தொகுப்பு: அ.சத்யா, நுவரெலியா தினகரன் நிருபர் எஸ் தியாகு, வ.சக்திவேல்**



## அரசியல் அரங்கம்

அர்ஜூன்

# நீதித்துறையை பலப்படுத்த அவசியமான திருத்தங்கள்!

## அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ

**நாட்டின் நீதித்துறையைப் பலப்படுத்துவதற்கு அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். அரசாங்க ஊடகமான இலங்கை வானொலிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.**

**கே: கடந்த வருடங்களில் நீதியைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் செயற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டமையைக் காணக்கூடியதாக இருந்தது. இதனை சற்று விளக்கமுடியுமா?**

பதில்: உலகில் ஜனநாயகத்தைப் பின்பற்றும் நாடுகளில் சட்டத்தின் ஆட்சியையே மக்கள் பொதுவாக எதிர்பார்க்கின்றனர். சட்டத்தின் ஆட்சி எனப்படும்போது சாதாரண மக்கள் மாத்திரமன்றி, சட்டத்தை இயற்றுபவர்களும், அதனை நிர்வகிப்பவர்களும் அந்த நீதிக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அதேபோல நாட்டில் காணப்படும் சட்டக் கட்டமைப்பும் அதற்கு ஏற்றால் போல நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். எமது நாடு கடந்த வருடத்தில் பல்வேறு பக்கங்களாலும் வீழ்ச்சியுற்றிருந்தது. இது ஓரிரு நாட்களில் ஏற்பட்ட நிலைமை அல்ல, எமது நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட முடியாமையால் ஏற்பட்ட நிலைமையாகும்.

இதன் பின்புலத்தை எடுத்து நோக்குவோமாயின், கடந்த மூன்று நான்கு தசாப்தங்களாகக் குறிப்பாக 78ஆம் ஆண்டு அரசியலமைப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் மக்கள் பல்வேறு விடயங்களில் நம்பிக்கையிழந்திருந்தனர். இருந்தாலும் அவ்வப்போது அரசியல் மேடைகளில் இதற்கான மாற்று யோசனைகள் முன்வைக்கப்பட்டன. 90களில் ஜனாதிபதியின் அதிகாரம் மற்றும் பொதுத்தேர்தல் முறை தொடர்பான சாதகமான விடயங்கள் முன்வைக்கப்பட்டன. அதன் பின்னர் 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் 19 ஆவது திருத்தச்சட்டமூலம் கொண்டுவரப்பட்டது. எனினும், துரதிஷ்டவசமாக இது 2020ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக நீக்கப்பட்டதைத் தொடர்ந்து நாடு பொருளாதார ரீதியாக மாத்திரமன்றி பல்வேறு துறைகளிலும் பாரிய வீழ்ச்சியை எதிர்கொண்டது. இந்தக் குழப்பத்தாலேயே மக்கள் மோசமான சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

இந்த நிலையிலிருந்து மீள்வதற்கு அரசியல்வாதிகள் என்ற ரீதியில், நிர்வாகம் செய்பவர்கள் என்ற ரீதியில் நாம் எதனைச் செய்தாலும் பயனில்லை. அதற்குத் தேவையான அடிப்படை நீதிக் கட்டமைப்பை நாட்டுக்குள் உருவாக்க வேண்டும். இதற்கமையவே 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் நாம் நிறைவேற்றினோம். அதுதான் எமது ஆரம்பமாகும். பல்வேறு பக்கங்களிலிருந்து இதற்குத் தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும் அரசியல் வேறுபாடின்றி அதனை நிறைவேற்ற முடிந்தது. ஒட்டுமொத்த நாட்டிலும் பிரதான இடங்களை அரசியலிலிருந்து விடுவிக்க வேண்டும் எனத் தீர்மானித்தோம். நீதிச் சேவைகள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, உள்ளிட்ட நிறுவனங்களை அரசியலில் இருந்து விடுவித்து சுயாதீனமாகச் செயற்படும் நிறுவனங்களாக மாற்றுவதற்கான திருத்தங்களைக் கொண்டுவந்தோம். மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு சுயாதீனமாக இயங்குவதற்கான கட்டமைப்பு அவற்றுக்கு உள்ளன.

இருந்தபோதும், தொடர்ந்தும் பாராளுமன்றத்துக்குப் பொதுமக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதில் காணப்படும் சட்ட ஏற்பாடுகள் குறித்து பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இதில் ஒன்று மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்படுபவர்கள் யார்? இதற்கான அடிப்படை என்ன? தற்பொழுது காணப்படும் தேர்தல் சட்டத்துக்கு அமைய அதிக பணத்தைச் செலவுசெய்யக் கூடியவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. பணத்தைச் செலவுசெய்து மக்கள் மத்தியில் பலவந்தமாகத் தம்மைத் திணிக்கின்றனர். இதற்கு, பாதாள உலகக் குழுவினர் உள்ளிட்ட சட்ட விரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களின் பணமே பெருமளவு பயன்படுத்தப்படுகின்றது. தமது சொந்தப் பணத்தைப் பயன்படுத்துவது மிகவும் குறைவது.

இதனை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் பிரசாரத்துக்காக நிதியளிப்பைக் கண்காணிக்கும் சட்டத்தை ஜனவரி மாதம் நிறைவேற்றியிருந்தோம்.

**கே: அரசியல்வாதிகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்பது தொடர்பில் காணப்படும் சட்டத்திலிருந்து இது எவ்வாறு வேறுபடுகிறது?**

பதில்: அரசியலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை உறுப்பினர்களின் பிரசாரங்களுக்குப் பயன்படுத்தப்படும் நிதியைக் கண்காணிப்பது இதன் நோக்கமாகும். வரையறுக்கப்பட்ட அளவைவிட அளவுக்கதிகமாகச் செயற்பட்டால் குற்றவியல் செயற்பாடாகக் கருதி அதற்கு எதிராகத் தண்டனை வழங்க முடியும். தேர்தல் சட்டத்தை மீறியமைக்காகப் பாராளுமன்ற உறுப்புரிமையைப் பறித்து அதற்கான தண்டனையை வழங்குவதற்கும் சட்டத்தில் ஏற்பாடுகள் உள்ளன.

தேர்தல் அறிவிக்கப்பட்டு ஐந்து நாட்களுக்குள் தேர்தல்கள் ஆணைக்குழு குறித்த மாவட்டத்தில் போட்டியிடக்கூடிய ஒருவர் தேர்தல் பிரசாரத்துக்குச் செலவுசெய்யக் கூடிய அதிகூடிய தொகையை அறிவிக்க வேண்டும். அரச சொத்துக்களைப் பயன்படுத்த முடியாது, வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெறத் தடை மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பணத்தைப் பெறுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. தேர்தல் முடிவடைந்து 3 வாரங்களுக்குள் செலவு செய்த பணம் குறித்த சத்தியக்கடதாசியை வழங்க வேண்டும். இதில் நிதி செலவு செய்த முறை மாத்திரமன்றி எங்கிருந்து அந்தப் பணம் கிடைத்தது என்பதும் அதில் குறிப்பிடப்பட வேண்டும். இது தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு 42 நாட்களுக்கு காலஅவசாகம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வேட்பாளர் ஒருவர் தேர்தல் பிரசார நிதியளித்தல் எல்லையைத் தாண்டி செலவு செய்துள்ளார் அல்லது தடை செய்யப்பட்ட தரப்பிலிருந்து பணத்தைப் பெற்றுள்ளார் என நீதிமன்றத்தில் நிரூபித்தால் பாராளுமன்ற உறுப்புரிமையைப் பறிப்பதற்கு அல்லது சிறைத்தண்டனை அல்லது தண்டப்பணம் அறவிடுவதற்கான ஏற்பாடுகள் சட்டத்தில் உள்ளன.

**கே: சட்டம் இருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் காணப்படுவதாக நீங்கள் கருதவில்லையா?**

பதில்: இந்தச் சட்டம் மாத்திரமன்றி எந்தவொரு சட்டத்தை எடுத்துக் கொண்டாலும் இந்நிலைமை உள்ளது. குற்றவியல் சட்டக்கோவையில் கொலைக் குற்றவாளிகளுக்கான தண்டனை இருந்தாலும், கொலை செய்தவர்கள்தான் நூறுவீதம் இதில் அகப்படுவதில்லை. குற்றமிழைக்காதவர்களும் இதில் அகப்படுகின்றனர். எனவே, சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுதல் என்பதை எம்மால் தடுக்க முடியாது. முடிந்தளவு தவறுகளைத் தடுப்பதற்கே எம்மால் நடவடிக்கை எடுக்க முடியும்.

**கே: தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் அமைச்சரவையில் முன்மொழிவொன்றை வைத்துள்ளீர்கள். இது பற்றி விளக்க முடியுமா?**

பதில்: தற்பொழுது காணப்படும் தேர்தல் முறையை மாற்றுவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டு அதனை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது. இதற்கு அமைய பாராளுமன்றத்துக்கு 160 தொகுதிகளை உருவாக்கி 160 உறுப்பினர்களை தொகுதிகளிலிருந்து நேரடியாகத் தெரிவுசெய்தல் மற்றும் எஞ்சிய 65 ஆசனங்களுக்கும் தேசியப் பட்டியல் மற்றும் மாகாணப் பட்டியலில் தெரிவுகளை மேற்கொள்ளும் யோசனை இதில் முன்வைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையில் இதற்கு இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளபோதும் இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை. எதிர்வரும் வாரங்களில் இது பற்றிப் பாராளுமன்றத்தில் உள்ள சகல கட்சித் தலைவர்களுடனும் கலந்துரையாடி இணக்கப்பாடொன்றை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம். அமைப்பு மாற்றம் என்பது இதுவாகும். இதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்துள்ளோம்.

**கே: நீதித்துறையைப் பலப்படுத்த வேறு எவ்வாறான மாற்றங்களைச் செய்துள்ளீர்கள்?**

பதில்: நாட்டில் ஊழல் மோசடி அதிகரித்துள்ளது என்ற குற்றச்சாட்டு பொதுமக்கள் மத்தியில் அதிகம் காணப்படுகிறது. இதனைத் தடுக்கும் வகையில் இலஞ்ச ஊழல் மோசடித் தடுப்புச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளோம். இது மாத்திரமன்றி நாட்டில் உள்ள நீதிமன்றங்களில் அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் தேங்கிக் காணப்படுகின்றன. இவற்றைத் துரிதப்படுத்தும் வகையில் மத்தியஸ்த சபைச் சட்டத்தைத் திருத்தியுள்ளோம். அது மாத்திரமன்றி காணி உறுதிகளை எழுதுதல், உயில் எழுதுதல் போன்ற விடயங்களில் போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி முன்னெடுக்கும் செயற்பாடுகள் அதிகரித்திருந்தன. இதனைத் தடுக்கும் வகையில் பல வருடங்களாகத் திருத்தப்படாதிருந்த சட்டங்கள் திருத்தப்பட்டன. இந்தத் திருத்தத்தின் ஊடாக எதிர்காலத்தில் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி காணி உறுதிகளைச் சரிக்கட்டுதல் மற்றும் உயில் தொடர்பான ஆவணங்களைத் தயாரித்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு இவ்வாறான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளோம். கடந்த வருடத்தில் வீதியில் இறங்கிப் போராடிய மக்களும் இவ்வாறான மாற்றத்தையே பெரும்பாலும் எதிர்பார்த்திருந்தனர். அரசாங்கம் என்ற ரீதியில் குறிப்பாக நீதி அமைச்சர் என்ற ரீதியில் நான் இதற்கான நீதித்துறையை வலுப்படுத்த பல்வேறு மாற்றங்களைச் செய்துள்ளேன் என்பதில் பெருமை கொள்ள முடியும்.

> **'சாதாரண மக்கள் மாத்திரமன்றி, சட்டத்தை இயற்றுபவர்களும், அதனை நிர்வகிப்பவர்களும் நீதிக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்'**

**கே: தேர்தலைப் பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது என்ற குற்றச்சாட்டு எதிர்க்கட்சிகளினால் முன்வைக்கப்படுகிறது. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: தேர்தலைப் பிற்போடவேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. இந்தக் குற்றச்சாட்டு எங்கிருந்து வருகின்றது என்பது எனக்குத் தெரியவில்லை. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமைக்குத் தாக்கம் செலுத்திய காரணங்கள் என்ன என்பது இந்நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும். அன்று அந்தத் தேர்தலை நடத்தியிருந்தால் நாடு இன்று இருக்கும் நிலை வேறுமாதிரியாக இருந்திருக்கும். தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லாத சூழ்நிலையில் தேர்தலை நடத்தியிருந்தால் அதனால் ஏற்படும் பாதிப்பும் மக்களையே சென்றடைந்திருக்கும். ஆனால் நாட்டை ஓரளவுக்கு சுமுகமான நிலைக்கு நாம் கொண்டு வந்திருப்பதால் தேர்தலை ஒத்திவைப்பதற்கோ அல்லது பிற்போடுவதற்கான தேவையோ எதுவும் எமக்குக் கிடையாது.

**கே: சமூக ஊடகங்களை ஒழுங்குறுத்தும் நோக்கில் கொண்டுவரப்பட்டுள்ள சட்டமூலம் அரசாங்கம் இழைக்கும் தவறுகளை மூடிமறைப்பதற்கான முயற்சியா?**

பதில்: நாம் எந்தவொரு சட்டமூலத்தைக் கொண்டுவரும்போதும் அதற்கு ஆதரவான தரப்பினர் இருக்கின்றனர், எதிரானவர்களும் இருக்கின்றனர். சமூக ஊடகங்களை ஒழுங்குறுத்துவது தொடர்பான சட்டமூலத்தைத் தயாரிக்கும் பணிகள் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன. இதற்கு அமைய சமூக ஊடகங்களின் பயன்பாட்டின் போது சுய கட்டுப்பாட்டை மேற்கொள்வதாக இணக்கப்பாடு ஏற்பட்டிருந்தது. இனினும், நடைமுறையில் இது சாத்தியமாகவில்லை. சமூக ஊடகங்களின் பயன்பாடு மோசமான நிலைக்குச் சென்றது. எனவே நியாயமான ஒழுங்குபடுத்தல் ஒன்றுக்கான தேவை என பெரும்பாலான தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். அதேநேரம், கருத்துச் சுதந்திரத்தை எவராலும் தடுக்க முடியாது. இது அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டமூலத்தில் அவ்வாறான நிலைமை எதுவும் இல்லை.







# காஸா மக்களை காப்பாற்ற மதம் கடந்த மனிதநேயம்!

**காஸா மீது ஒரு மாதத்திற்கும் மேலாக கடும் யுத்தம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த யுத்தத்தின் விளைவான அழிவுகள், இழப்புக்கள், சேதங்கள் அளப்பரியவை. அவை உலகின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளன.**

மத்திய தரைக்கடலுக்கு அருகிலுள்ள கடற்கரை பிரதேசமான காஸா 41 கிலோ மீற்றர் நீளமும் 6 முதல் 12 கிலோ மீற்றர் அகலமும் கொண்ட 365 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்டது.

23 இலட்சம் பலஸ்தீன மக்களைக் கொண்ட இப்பிரதேசத்திற்கான தண்ணீர், எரிபொருள், மருந்து, உணவு விநியோகம் அனைத்தும் இஸ்ரேலினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட இஸ்ரேலிய படையினர் நவீன ஆயுதங்களுடன் காஸாவை சுற்றி வளைத்து இந்த யுத்தத்தை முன்னெடுத்துள்ளனர். வைத்தியசாலைகள், மக்கள் குடியிருப்புகள், அகதி முகாம்கள், பாடசாலைகள், ஐ.நா. நிவாரண நிலையங்கள், பாடசாலைகள், உட்கட்டமைப்பு வசதிகள் என அனைத்தும் இந்த யுத்தத்திற்குத் தப்பவில்லை.

இதன் விளைவாக காஸா எங்கும் ஒரே மரணஓலம். இந்த யுத்தம் ஆரம்பமானது முதல் இற்றைவரை 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 4500 இற்கும் மேற்பட்டவர்கள் குழந்தைகளாவர். அதேநேரம் காஸாவில் கடமையாற்றிய 100 இற்கும் மேற்பட்ட ஐ.நா. உத்தியோகத்தர்களும் 45 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்களும் இந்த யுத்தம் காரணமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

15 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளனர்.

காஸா பிரதேசம் முற்றிலும் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதால் மக்கள் கூண்டுக்குள் அடைக்கப்பட்டவர்களாக உள்ளனர். அதனால் யுத்தம் ஆரம்பமானது முதல் செய்வதறியாது அங்கும் இங்கும் ஓட வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் காஸாவில் மக்களின் அவலம், யுத்தத்தின் கோரமுகம் உலகின் அனைத்து ஊடகங்களிலும் ஒரு மாத காலத்திற்கும் மேலாக தினமும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

அதேநேரம் குழந்தைகள், பெண்களை அதிகளவில் பலியெடுக்கும் இக்கொடூர யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறும், மனிதாபிமான நிவாரண உதவிகளை தங்குதடையின்றி அனுப்பி வைக்குமாறும் உலகெங்கிலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் தினமும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ஸ்பெய்ன் உள்ளிட்ட எல்லா நாடுகளிலும் அவை இடம்பெற்று வருகின்றன.

இலங்கையிலும் கூட பல்வேறு அமைப்புகளும் நிறுவனங்களும் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களையும் எதிர்ப்புக்கூட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றன. அந்த வகையில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு யாழ்ப்பாணம் பஸ்தரிப்பிடத்திற்கு அருகிலும், மட்டக்களப்பு, வவுனியா நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தது.

## யுத்தத்தை உடன் நிறுத்துமாறு உலகெங்கும் வேண்டுகோள்கள்

சர்வதேச பௌத்த அமைப்பின் இலங்கைக் கிளை கொழும்பில் பாரிய எதிர்ப்புக் கூட்டத்தையும் உலகளாவிய நீதிக்கான இலங்கை ஊடகவியலாளர் அமைப்பு கொழும்பிலுள்ள பலஸ்தீன தூதரகம் முதல் ஐ.நா. அலுவலகம் வரை யுத்தத்திற்கு எதிரான ஊர்வலமொன்றையும் நடத்தியுள்ளது.

இவற்றை விட வேறுபட அமைப்புகளும் கூட காஸா மீதான யுத்தத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளன.





இந்த எல்லா ஆர்ப்பாட்டங்களுக்கும் முத்தாய்ப்பு வைத்தாற்போல் இஸ்ரேலின் தலைநகரான டெல்அவிவ் இல் காஸாவில் உடனடி யுத்த நிறுத்தத்தை வலியுத்தி ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், இந்த யுத்தத்திற்கு இஸ்ரேலுக்கு ஆதரவு நல்கிய பிரதான நாடுகளில் ஒன்றான பிரான்ஸ், காஸா மீதான யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

'பயங்கரவாதம் அழிக்கப்பட வேண்டும். அதற்காக பெண்கள், குழந்தைகள் என அப்பாவி மக்கள் கொல்லப்பட முடியாது' என்று பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் பி.பி.சி உலக சேவைக்கு அளித்துள்ள பேட்டியில் வலியுறுத்தியுள்ளார்.

இவரது இக்கோரிக்கை உலகின் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ளது. ஏனெனில் இந்த யுத்தத்திற்கு இஸ்ரேலுக்கு நேரில் சென்று ஆதரவு நல்கிய பிரான்ஸ் ஜனாதிபதி, பலஸ்தீனுக்கு ஆதரவாக பிரான்ஸில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுவதைக் கடுமையாகக் கட்டுப்படுத்தவும் ஆரம்பத்தில் நடவடிக்கைகளை முன்னெடுத்தவராவார். அவ்வாறான ஒருவரிடம் இருந்து இவ்வாறான கோரிக்கை வெளியாகி இருப்பதானது அங்கு இடம்பெறும் யுத்த கொடூரத்தின் பிரதிபலிப்பே காரணம் என போரியியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டிள்ளனர்.

இதேவேளை, காஸா மீதான யுத்தத்திற்கு இஸ்ரேலுக்கு ஆதரவு நல்கிய மற்றொரு நாடான அமெரிக்காவும் யுத்த நிறுத்தத்தை ஏற்கனவே வலியுறுத்தியுள்ளது. இவ்வாறான சூழலில் கனடாவும் காஸாவில் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

காஸா மீதான யுத்தத்திற்கு ஆதரவு நல்கிய தலைவர்களே யுத்தத்தை நிறுத்த கோருகின்றார்கள் என்றால் அங்கு நிலைமை எந்தளவுக்கு மோசமடைந்துள்ளது என்பது தெளிவாகிறது. இவை இவ்வாறிருக்க, பெல்ஜிய நாட்டின் விமான நிலையத்தில் கடமையாற்றும் த ஏ.சி.பி பிளஸ், பி.ரி.வி, பி.பி.ரி.கே, ஏ.சி.வி.கே ட்ரான்ஸசகா ஆகிய நான்கு தொழிற்சங்களைச் சேர்ந்த சுமை தூக்கும் தொழிலாளர்கள் இஸ்ரேலுக்கு ஆயுதங்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட மாட்டோம் என அறிவித்துள்ளனர். அதேபோன்று உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் ஆயுத ஏற்றி இறக்கும் பணிளையும் மேற்கொள்ள மாட்டோம் எனவும் கூறியுள்ளனர்.

அத்தோடு ஸ்பெய்னின் பாரிசிலோனா துறைமுகத்தில் பணியாற்றும் ஒ.ஈ.பி.பி தொழிற்சங்கத்தைச் சேர்ந்த 1200 சுமை தூக்கும் தொழிலாளர்களும் இஸ்ரேலுக்கு ஆயுதம் ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட மாட்டோம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை பிரித்தானிய ஆளும் பழைமைவாதக் கட்சி இந்த யுத்தத்திற்கு ஆதரவு நல்கி வருகின்ற நிலையில், அந்நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சியின் தலைவரும் அதே நிலைப்பாட்டை எடுத்துள்ளார். இது கடும் விமர்சனத்தையும் எதிர்ப்பையும் பிரித்தானியாவில் ஏற்படுத்தியுள்ளது. அதனால் தொழிற்கட்சி தலைவரின் நிலைப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்கட்சியைச் சேர்ந்த 250 கவுன்ஸிலர்கள் உள்ளிட்ட பல தலைவர்கள் அக்கட்சியிலிருந்து ஏற்கனவே வெளியேறியுள்ள நிலையில் மேலும் 50 கவுன்சிலர்களும் ஒரு நிழல் அமைச்சரும் விலகுவதாக அறிவித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த யுத்தத்திற்கான ஆதரவு நிலைப்பாடு கட்சிகளையும் கூட நெருக்கடிக்களுக்குள் தள்ளியுள்ளதையே இது எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறு காஸா மீதான யுத்தத்திற்கு இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் எதிர்ப்புக்கள் வலுத்துள்ளமைக்கு மதம் மனிதநேயமே அடிப்படைக் காரணமாகும். ஆயுத வியாபாரிகளைத் தவிர்ந்த அனைத்துத் தரப்பினரும் காஸா மீதான யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மக்களுக்கு நிவாரணம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் உடனடியாக செய்து கொடுக்கப்பட வேண்டும் என்றே கோருகின்றனர்.

உலகளாவிய இந்தக் கோரிக்கை, வலியுறுத்தல் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். அது காஸாவில் யுத்தநிறுத்தத்தை உடனடியாகக் கொண்டு வரக்கூடியதாக அமைய வேண்டும். அதுவே அமைதி, சமாதானத்தை விரும்பும் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும்.



மர்லின் மரிக்கார்...

## பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் பழைய மாணவர் சங்க கூட்டம்

யாழ். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினுடைய கொழும்புக் கிளையின் 65ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் 2023 எதிர்வரும் சனிக்கிழமை (25) மாலை 5.00 மணிக்கு வெள்ளவத்தை Marine Drive அமைந்துள்ள Global Tower விடுதியில் நடைபெறவுள்ளது.

கொழும்புக் கிளையின் நடப்பாண்டுத் தலைவர் எஸ்.பாலேந்திரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதுடன், கிளையின் உபபோஷகரும் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவருமான Dr. J.N.Chinniah பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

பழைய மாணவர் சங்கத்தின் சகல அங்கத்தவர்களும் 0714 767489 அல்லது 077 3170791 கையடக்கத் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு, விபரங்களை அறிந்து, கூட்டத்தில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு, துணைத் தலைவர்களில் ஒருவரான செல்லத்தம்பி துரைராசா கேட்டுக்கொண்டார்.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை

## கல்முனை விவேகானந்த தமிழ் வித்தியாலய மாணவர் 11 பேர் சித்தி



2023ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட விவேகானந்த தமிழ் வித்தியாலயத்தில் 11 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இப்பாடசாலையிலிருந்து 25 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றிய போதும், 11 மாணவர்கள் சித்தியடைந்துள்ளமை 44% சித்தியடைவாகும். சித்தியடைந்தோரின் விபரம் வருமாறு,

எஸ். யர்சனன்(186) ஏ.விபுசன்(171), என்.ஹபிஷன்(170), எஸ்.ஷம்ரிஷன்(159), ஆர்.ஜிதேஷ்(155), பி.டாஸ்னி(153), எம்.என்.எப்.சஹாதா(153), ஏ.ஜே.அயிரா(152), பி.ரேஷாந்த் (152), என்.சஸ்மிதா(150), எஸ்.ரிதிக்சியா(147).

## நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் கோளாறு

### திருத்த வேலைகளுக்காக 06 வாரங்கள் மூடல்



புத்தளம், நுரைச்சோலை லக்விஜய அனல் மின் நிலையத்தின் இரண்டாம் மின் உற்பத்தி இயந்திரத்தின் (Unit 02 Generator) உயர் அழுத்த ஹீட்டர் சிஸ்டம் (High Pressure Heater System) திடீரென பழுதடைந்துள்ளதாகவும் இதன் திருத்த வேலைகளுக்காக 6 வாரங்கள் அதனை மூட வேண்டியுள்ளதாகவும், இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது. இந்நிலையில், நேற்று முன்தினம் (17) இரவு முதல் ஜெனரேட்டரை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும், அச்சபை தெரிவித்தது. இதனை சீர் செய்ய தேவையான பூர்வாங்கப் பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இம்மின் நிலையத்தின் மூன்றாவது ஜெனரேட்டரின் முக்கிய பராமரிப்புப் பணிகள் (Level A – Major Overhaul) நிறைவடைந்து, தற்போது சோதனைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கமைய இந்த மூன்றாவது ஜெனரேட்டரை, மிக விரைவாக மின்சாரம் தயாரிப்பதற்கு இயக்க முடியுமென்பதுடன், இந்தக் காரணத்தால் மின்சார விநியோகம் தடைப்படாதெனவும், இலங்கை மின்சாரசபை தெரிவித்தது.

மேலும், இந்த பராமரிப்புக் காலத்தில் அதிகபட்சமாக நீர்மின்சாரத்தை உற்பத்தி செய்வதன் மூலம் மின்சாரத்தை தொடர்ந்து வழங்க மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாவீரர் நினைவேந்தல் தடை விண்ணப்பங்கள் நிராகரிப்பு

### சுமந்திரனின் சட்டவாதத்தால் நீதிமன்று கட்டளை



மட்டக்களப்பில் மாவீரர் நினைவேந்தலுக்கு தடை விதிக்குமாறு கோரி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனின் சட்டவாதத்தை அடுத்து நீதிமன்றம் நிராகரித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை விதிக்குமாறும், இந்நிகழ்வில் பங்குபற்றக்கூடாதெனவும் கூறியதுடன், முன்னாள் மற்றும் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசியப் பிரமுகர்களுக்கு தடை உத்தரவு வழங்குமாறு கோரி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் மட்டக்களப்பு மற்றும் கொக்கட்டிச்சோலை பொலிஸார் விண்ணப்பங்களை சமர்ப்பித்தனர்.

இந்த விண்ணப்பங்கள் நேற்று முன்தினம் (17) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பிரமுகர்கள் சார்பாக, மட்டக்களப்பைச் சேர்ந்த பெருமளவான சட்டத்தரணிகளில் அனுசரணையுடன் த.தே.கூ எம்.பி. சுமந்திரன் நீதிமன்றத்தில் முன்னிலையாகி நடத்திய நீண்ட சட்டவாதத்தை அடுத்து, இந்த நிராகரிப்பு உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. "உயிரிழந்த ஒருவருக்காக நினைவேந்தல் செய்யும் உரிமை ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டென்பதுடன், அது அடிப்படை உரிமையாகும். ஆகையால், அதை மறுக்கும் நடவடிக்கைக்கு நீதிமன்றம் துணை போகக்கூடாது. மாறாக, அந்த உரிமை நிலை நாட்டப்படுவதை நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும்'' என்று சுமந்திரன் எம்.பி. வாதாடினார்.

வேறொரு வழக்குக்காக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் சுமந்திரன் எம்.பி. பிரசன்னமாகியிருந்த தருணத்திலேயே பொலிஸாரின் விண்ணப்பங்கள் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதன்போது விடயத்தை அவதானித்த சுமந்திரன் எம்.பி., தடை விதிக்கக் கோரப்பட்ட பிரமுகர்கள் சார்பாக தான் முன்னிலையாகி பதில் வாதம் செய்ய விரும்புவதாக விண்ணப்பம் செய்தார். அவ்வேளை நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்த ஏனைய தமிழ் சட்டத்தரணிகள், தாமும் சுமந்திரன் எம்.பி.க்கு அனுசரணை வழங்கவுள்ளதாக தெரிவித்தனர்.

இந்நிலையில் மட்டக்களப்பு பொலிஸாரின் விண்ணப்பம் முதலில் நிராகரிக்கப்பட்டதை தொடர்ந்து, கொக்கட்டிச்சோலை பொலிஸாரின் விண்ணப்பம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, முன்னைய வழக்கின் காரணங்களின் அடிப்படையில் இந்த விண்ணப்பமும் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.

## உலகின் மிகப்பெரிய சுற்றுலா கப்பல் இலங்கை வருகிறது

### இன்றும் நாளையும் கொழும்பு துறைமுகத்தில்



உலகின் மிகப்பெரிய சுற்றுலாக் கப்பல் இன்று (19) இலங்கையை வந்தடைவதுடன், இந்தக் கப்பல் இரு தினங்கள் கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டு இருக்குமெனவும், கொழும்புத் துறைமுகத் தகவல்கள் தெரிவித்தன.

இன்று மற்றும் நாளை (20) வரை இந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும்.

நாட்டில் சுற்றுலாப் பயணத்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் இந்தக் கப்பல் இலங்கைக்கு வருகை தருவதுடன், சுற்றுலாப் பயணத்துறையில் ஈடுபட்டு வரும் பிரபல நிறுவனமான YARA GLOBAL (Pvt Ltd) நிறுவனத் தலைவர் எச்.எம்.ரியால்டீன் இந்தக் கப்பல் நங்கூரமிட்டிருக்கும் இடத்துக்கு விஜயம் செய்து, கப்பலை பார்வையிடவுள்ளதாகவும், கொழும்புத் துறைமுக தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன், இந்தக் கப்பலில் வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இலங்கையின் சுற்றுலாத் தளங்களை பார்வையிடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், கொழும்புத் துறைமுக தகவல்கள் தெரிவித்தன.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை ஏற்றுமதி செய்வது தொடர்பாக சுற்றுலாப் பயணிகளுடன் கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது.

## மின்சாரம், பெற்றோலியம் அத்தியாவசிய சேவைகளாகின

### ஜனாதிபதியால் அதிவிசேட வர்த்தமானி



மின்சாரம் மற்றும் பெற்றோலியம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

## சுற்றுலா பயணிகளின் வருகை சடுதியாக அதிகரிப்பு

இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை சடுதியாக அதிகரித்துக் காணப்படுவதுடன், இந்தியாவிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளே அதிகளவில் காணப்படுவதாகவும், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்தது.

அந்த வகையில், இந்த வருடத்தின் நவம்பர் மாதத்தின் முதல் 15 நாட்களில் மாத்திரம் 74,664 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும், அச்சபை தெரிவித்தது. இதற்கமைய இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக்கு 1,200,119 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன், இந்த மாதத்தின் முதல் 15 நாட்களில் இந்தியாவிலிருந்து 13,491 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்தது.

தென்றல் எப்.எம். வழங்கும்

## தீபாவளி சிறப்பு இசை நிகழ்ச்சி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தென்றல் எப்.எம். வழங்கும் தீபாவளி சிறப்பு இசை நிகழ்ச்சி எதிர்வரும் சனிக்கிழமை (25) மாலை 6.30 மணிக்கு ஆனந்த சமரக்கோன் கலையகத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சிக்கான அனுமதி இலவசமெனவும், ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இதேவேளை பிரபல பாடகர்களின் பாடல்கள், இலங்கை வானொலி தென்றல் எப்.எம். அலைவரிசையினூடாக நேரலையாக ஒலிபரப்பாகவுள்ள 11ஆவது மதுரகீதங்கள் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

## கோழி இறைச்சி, முட்டை விலைகள் குறைகின்றன

### பண்டிகைக் காலத்தில் முன்னேற்பாடு



எதிர்வரும் கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சி மற்றும் முட்டை விலைகள் மேலும் குறைவடையுமென, கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார்.

ஆயினும், வற் வரி அதிகரிப்பால் இறக்குமதி செய்யப்படும் கால்நடை தீவனத்தின் விலை அதிகரித்தால் இந்த நிலை மாறலாமெனவும், அவர் தெரிவித்தார்.

சிறு மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் தொடர்ச்சியாக தமது உற்பத்திகளை சந்தைக்கு கொண்டு செல்வதால், முட்டையொன்று 35 ரூபா முதல் 40 ரூபாவரை விற்பனை செய்யப்படும் சாத்தியம் இருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## எங்கள் கருத்து...

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய யதார்த்தம்!

சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும். அரசாங்கத் துறையைப் போன்று தனியார்துறையும் ஊக்குவிக்கப்பட வேண்டியது மாத்திரமன்றி, தனியார்துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படுவது அவசியம்.

இவையெல்லாம் ஐ.தே.கவின் பாரம்பரியக் கொள்கைகள் ஆகும். அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வுகளில் பெரும்பாலானவை ஐ.தே.க காலத்திலேயே வழங்கப்பட்டுள்ளன என்பதையும் மறுக்க முடியாது.

இவ்வாறான வரலாற்று யதார்த்தத்தையும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் சமர்ப்பித்திருந்த 2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தையும் சமாந்தரப்படுத்தியே நோக்க வேண்டியுள்ளது.

இன்றைய அரசாங்கத்தின் பங்காளியாக ஐ.தே.க உள்ள போதிலும், அக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவே ஆட்சித்தலைவராக உள்ளாரென்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவுகின்ற போதிலும் அரசாங்க ஊழியர்கள், ஓய்வூதியக்காரர், வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்கள் போன்றோரையெல்லாம் இந்த வரவுசெலவுத் திட்டம் நன்றாகவே பொருட்படுத்தியிருக்கின்றது. அதுமாத்திரமன்றி தனியார் துறை, கல்வி, வர்த்தகம் போன்ற துறைகளுக்கும் ஜனாதிபதி கூடுதல் முக்கியத்துவம் அளித்திருப்பதைக் காண முடிகின்றது.

பொருளாதார நெருக்கடியை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, மக்களின் வாழ்க்கைச் செலவு குறித்து ஜனாதிபதி காண்பித்திருக்கின்ற விசேட அக்கறை குறித்து பாராட்டாமலிருக்க முடியாது.

அதேவேளை அரச ஊழியர்களுக்கும் இந்த விடயத்தில் தார்மிகப் பொறுப்பு உள்ளது. பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வென்பது இன்றைய பொருளாதார நெருக்கடி வேளையில் சாதாரண விடயமல்ல. ஆகவே அரச ஊழியர்கள் மக்களுக்கான சேவைகளை மேலும் வினைத்திறனுடன் ஆற்ற வேண்டுமென்பதே இங்கு எதிர்பார்க்கப்படுகின்ற விடயமாகும்.

### பிரதான டிப்போவாக...

நடைபெறும். இந்நிலையில், முஷாரப் எம்.பி.யின் அழைப்பின் பேரில் பிரதம அதிதிகளாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோர் கலந்துகொள்வதுடன், தரம் உயர்த்தப்படும் பிரதான பஸ் டிப்போவை அவர்கள் நாடா வெட்டி திறந்துவைக்க உள்ளனர்.

இந்நிகழ்வில் அதிதிகள் பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்படுவதுடன், கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

பொத்துவில் உப பஸ் டிப்போவ பிரதான டிப்போவாக தரம் உயர்த்துவதற்கான தீர்மானம் கடந்த வருடம் அமைச்சு மட்டத்தில் எட்டப்பட்ட போதும், நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து பொத்துவில் பஸ் டிப்போ அபிவிருத்திக்கு நிதி ஒதுக்குவதில் பல சிரமங்கள் காணப்பட்டன. ஆயினும், குறித்த காலப்பகுதியில் பொத்துவில் பஸ் டிப்போ அமைந்துள்ள காணிக்கு சட்ட ரீதியான உரிமை மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

முஷாரப் எம்.பி.யின் முயற்சியால், இந்த பஸ் டிப்போவுக்கான உரிமம் சட்ட ரீதியாக வழங்கப்பட்டது. இந்நிலையில் இந்த பஸ் டிப்போவின் துரித அபிவிருத்திக்கு முதற்கட்டமாக சுமார் 60 மில்லியன் ரூபா, முஷாரப் எம்.பி.யின் வேண்டுகோளைத் தொடர்ந்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆரம்பக்கட்ட வேலை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### பரிசீலிக்க சபாநாயகரால்...

உறுப்பினர்கள் சிலரை மேலதிக உறுப்பினர்களாக நியமித்துள்ளதாக, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (18) பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

இதற்கமைய பிரசன்ன ரணதுங்க, சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி, கஞ்சன விஜேசேகர, அநுராத ஜயரத்ன, சட்டத்தரணி சந்திம வீரக்கொடி, சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ, மயந்த திசாநாயக்க மற்றும் ரோஹினீ குமாரி விஜேரத்ன ஆகியோரே இந்தக் குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 'மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தம்)' எனும் சட்டமூலத்தின் பரிசீலனைக்கென நிலையியல் கட்டளையின் 113 (2) இன் பிரகாரம் சட்டவாக்க நிலையியல் குழுவில் சேவையாற்றும் பொருட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரை மேலதிக உறுப்பினர்களாக நியமித்துள்ளதாகவும், சபாநாயகர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய சட்டத்தரணி கலாநிதி சுசில் பிரேமஜயந்த, ஜானக வக்கும்புர, இம்தியாஸ் பாகிர் மாகார், ஆர்.எம்.ரஞ்சித் மத்தும பண்டார, இரான் விக்கிரமரத்ன, இசுரு தொடங்கொட, எம்.டபிள்யூ.டீ.சஹன் பிரதீப் விதான மற்றும் டீ.வீரசிங்க ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளதாகவும், சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

### வெள்ளத்தில் மிதக்கும்...

நிரம்பியுள்ளதால், அக்குறணை நகரம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதனால் பொதுமக்கள் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அக்குறணையை அண்மித்த பல வீடுகளில் வெள்ளநீர் புகுந்துள்ளதுடன், வீடுகளில் இருந்த உடைமைகளும் வெள்ளத்தில் நனைந்துள்ளன.

அத்துடன், அக்குறணை நகரம் வெள்ளத்தில் மூழ்கியதால், A09 வீதியினூடான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த வீதி வெள்ளத்தால் மூழ்கிய போதும், இந்த வீதியினூடாக பயணிக்க முயற்சித்த பஸ் வண்டியொன்றும் லொறியொன்றும் தொடர்ந்து பயணத்தை தொடர முடியாத நிலையில், வெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டது.

இந்நிலையில், பஸ்ஸில் இருந்த பயணிகள் மிகவும் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாகவும், எமது செய்தியாளர் தெரிவித்தார்.

அக்குறணை நகரம் ஒரு மாதத்தில் நீரில் மூழ்குவது இது ஐந்தாவது தடவையென்பதும் குறிப்பிடத்தக்கது.

### இந்தியா – அவுஸ்திரேலியா...

கிண்ண தொடரின் லீக் போட்டிகள் ஆரம்பமாகின. ஒவ்வொரு அணியும், மற்ற அணியுடன் ஒரு போட்டியில் விளையாடின. அதன்படி புள்ளிகள் அடிப்படையில், முதல் நான்கு இடங்களை பிடித்த அணிகள் அரையிறுதியில் மோதின.

அரையிறுதியில் இந்தியா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் தென் ஆப்பிரிக்கா அணிகள் மோதின. இதில் வெற்றி பெற்ற இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகள் இன்று நடைபெறும் போட்டியில் மோதவுள்ளன.

இறுதிப் போட்டியையிட்டு பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஐ.சி.சி. மற்றும் பி.சி.சி.ஐ. இணைந்து ஏற்பாடுகளை செய்துள்ளன.

இந்திய விமானப்படையின் சாகசங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தேநீர் இடைவேளையின்போது இசைக் கச்சேரிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

### மாணவர்களது பகலுணவுக்கு...

கல்வியறிவு மற்றும் ஆரம்பக் கல்வியை மேம்படுத்தும் உணவு உதவி முயற்சியான Mc GovernDole International Food for Education and Child Nutrition திட்டத்துக்காக அமெரிக்க விவசாயத் திணைக்களம் (USDA) இலங்கைக்கு இந்த நிதியை வழங்குகிறது.

பாடசாலை மாணவர்களுக்கான உணவு, ஆசிரியர் பயிற்சி மற்றும் தொடர்புடைய ஆதரவை வழங்குவதன் மூலம் McGovernDole திட்டங்கள் பாடசாலை சேர்க்கை மற்றும் கல்வி செயற்திறனை அதிகரிக்க உதவுகின்றன.

இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து சிறுவர்களை காப்பாற்றும் செயற்றிட்டத்தின் அடிப்படையில் நுவரெலியா, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் கொழும்பு மாவட்டங்களில் 200,000 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் இந்த முயற்சியால் பயனடையவுள்ளனர்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க நிதி உதவியுடன் பாடசாலை உணவு வழங்கும் திட்டம் ஏற்கெனவே செயற்படுத்தப்படும் பல இடங்களுக்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், “இலங்கை குழந்தைகளின் வாழ்வில் பாடசாலை உணவு வழங்கும் திட்டத்தின் மாற்றமான தாக்கத்தை நான் கண்டுள்ளேன்.

USDA இன் McGovernDole International Food for Education மற்றும் Child Nutrition திட்டத்தின் மூலம் இந்த கூடுதல் 32.5 மில்லியன் டொலர் பங்களிப்பின் மூலம் இலங்கையிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் முயற்சிக்கு அமெரிக்கா தனது ஆதரவில் உறுதியாக உள்ளது.

இந்தத் திட்டங்கள் மிகவும் முக்கியமானவை, நாடு முழுவதும் உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மற்றும் கல்வியை மேம்படுத்துவதுடன், இலங்கை மக்களுக்கான எமது நீடித்த அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றது" எனத் தெரிவித்தார்.

### தோட்டத் தொழிலாளர் சம்பள...

மாகாண ஆளுநரும் இ.தொ.கா. தலைவருமான செந்தில் தொண்டமான் விரிவாகக் கலந்துரையாடினார். பதுளை, பசறை, மடூல்சீமை மற்றும் லுணுகல பிரதேசங்களைச் சேர்ந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களுடனேயே கிழக்கு மாகாண ஆளுநர் கலந்துரையாடினார். பதுளையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் அசோக்குமார் சிவலிங்கம், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் கணேசமூர்த்தி மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், முன்னாள் தலைவர்கள், உப தலைவர்கள் மற்றும் இ.தொ.கா. அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### ஒலுவில் வாகன விபத்தில்...

வர் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மருதமுனையைச் சேர்ந்த 19 வயதுடைய தமீம் அதான் மிப்ரித், ரிபாய் அமர் அவ்ஜ் ஆகியோரே உயிரிழந்தனர்.

மரண விசாரணையின் பின் சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு, மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்மா பள்ளிவாசலில் தொழுகை நடத்தப்பட்டு, நேற்று (18) காலை மருதமுனை மையவாடியில் சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# கல்வியமைச்சு

**திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆய்வு மற்றும் புத்தாக்கங்கள் பிரிவு**

## இவ் அதிகார சபைக்கு சொந்தமான ஹல்பராவ காணியில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இரும்புக் கட்டமைப்புக்களை விற்பனை செய்தல்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை சார்பாக தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் பெறுகைக்குழுவில் தலைவரால் அவ் அதிகாரசபைக்குச் சொந்தமான ஹல்பராவ காணியில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இருப்புக் கட்டமைப்புக்களை விற்பனை செய்வதற்காக தகைமை மற்றும் அதிகாரமுள்ள கேள்வி வைப்பாளர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

1. இதற்காக தேசிய போட்டி கேள்விகோரல் செயற்பாட்டு முறைமை பின்பற்றப்படுகிறது.
2. இதுபற்றி ஆர்வம் காட்டுகின்ற தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விபரங்கள் மற்றும் கேள்வி ஆவணங்களை, 2023.11.20 முதல் 2023.12.12 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை, பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்), தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த வெலிக்கட, ராஜகிரிய என்ற முகவரியில் பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன் தொ.பே : 011 2888782-5, நீடிப்பு 343 அல்லது பெக்ஸ் : 011 2875553 மூலம் விசாரிக்கலாம்.
3. இரும்பு தொகையை 2023.11.20 முதல் 2023.12.12 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இல. 508, ஹல்பராவ, தலங்கம காணியில் பரீட்சித்துப் பார்க்கலாம். அவ் இடத்திற்கு செல்வதற்கு முன்பு மேற்படி முகவரியில் இவ் அதிகார சபையின் தலைமையகத்திற்கு வருகைதந்து உதவிப் பணிப்பாளர் (நிர்வாக மற்றும் திட்டமிடல்) இடம் எழுத்துமூல அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
4. சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, வெலிக்கட, ராஜகிரிய என்ற முகவரியில் பணிப்பாளர் (நிர்வாக மற்றும் வளங்கள்) இடம் விண்ணபத்தை சமர்ப்பித்து 2023.11.20 முதல் 2023.12.12 மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத ரூ. 5000/= தொகையை அதிகார சபையின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.12.06 மு.ப. 10.00 இற்கு இவ் அதிகார சபையின் ராஜகிரிய தலைமையக கேட்போர்கூடத்தில் நடைபெறும்.
6. பொறியிடப்பட்ட கேள்விகள் 2023.12.13 பி.ப. 2.30 இற்கு முன்பு தலைவர், பெறுகைக்குழு, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, வெலிக்கட, ராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்பி அல்லது மேற்படி முகவரியில் முதலாம் மாடியில் வைக்கப்பட்டள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரார் அல்லது அவரது பிரிதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.
7. தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
8. கேள்விகளின் செல்லுபடியாகும் காலம் 2024.03.13 வரையானதாக இருத்தல் வேண்டும் (91 நாடகள்).
9. கேள்வி வழங்கல் கேள்விதாரரால் சகல தொகைகளையும் காசாகச் செலுத்தி குறித்த இரும்புத் தொகையை வாரத்தின் வேளை நாட்களில் (07 இற்குள்) நிறுவாக வளாகத்திலிருந்து அகற்றிக்கொள்ள வேண்டும்.
10. சகல கேள்வி ஆவணம், ஒரு பகுதி அல்லது முழுக் கேள்வி பத்திரத்தையும் நிராகரிக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது. மேலும் கேள்விகள் சமர்ப்பித்தலுக்காக கேள்விதாரருக்கு ஏற்படும் செலவுத் தொகைகள் இவ் அதிகார சபையினால் மீள் செலுத்தப்படமாட்டாது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை,**
**971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த,**
**வெலிக்கட, ராஜகிரிய**

# தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**

## அலுவலக கட்டிடம் ஒன்றை குத்தகை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வடமேல் மாகாண அலுவலகத்தை நடத்திச் செல்வதற்கு குருநாகல் நகர மத்தியில் இருந்து 3 கி.மீ. உட்புறமாக அமைந்துள்ள, 8500 சதுர அடி அளவான இட வசதிகள் கொண்ட அலுவலகம் ஒன்றுக்கு பொருத்தமான கட்டிடம் ஒன்றை குத்தகை அடிப்படை/ வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கட்டிடம் தொடர்பில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகள்**

- இந்தக் கட்டிடம் மாதாந்த குத்தகை அடிப்படையில் பெற்றுத்தர வேண்டும்.
- இந்தக் கட்டிடம் பொது போக்குவரத்து வசதிகளை பயன்படுத்தி இலகுவாக நெருங்க முடியுமான வர்த்தக பகுதி ஒன்றில் அமைந்திருக்கும் வர்த்தக ரீதியிலான கட்டிடம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.
- குறைந்தது 10 வாகனங்கள் அளவு நிறுத்துவதற்கு இட வசதி இருத்தல் வேண்டும்.
- கட்டிடத்தின் தரை முழுமையாக டைல் செய்திருத்தல் வேண்டும்.
- மும்முனை மின்சார விநியோகத்துடன் வேறான மின்சார மீட்டர் ஒன்று இருத்தல் வேண்டும் என்பதோடு, மின்சாரம் துண்டிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவதற்கு 50KW மின் பிறப்பாக்கி இயந்திரம் ஒன்று இருப்பது மேலதிக தகைமையாகும்.
- நேரடி குழாய் நீர் இணைப்புடன் வேறான நீர் மீட்டர் ஒன்று இருக்க வேண்டும் என்பதோடு கட்டிடத்திற்கு மேலால் 2000L நீர் அளவு சேமிக்க முடியுமான நீர் தொட்டி/ தொட்டிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நிலையான தொலைபேசி வசதி இருத்தல் வேண்டும்.
- பிரதான மின்சார விநியோக பலகையுடன் அடிப்படை மின்சுற்று கட்டமைப்பில் மின் விசிறி மற்றும் ஏனைய சாதனங்கள் இருத்தல் வேண்டும்.
- வருகின்ற பயனாளர்களுக்கு தங்கி இருப்பதற்கு கட்டிடத்தின் முன் பகுதியில் 120 சதுர அடி அளவு ஒதுக்க முடியுமாக இருத்தல் வேண்டும்.
- இடத்தை தேர்வு செய்திருப்பதாக அறிவித்த பின் கட்டிடம் முழுமையாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2 வாரங்களுக்குள் பெற்றுக்கொள்ள முடியுமாக இருத்தல் வேண்டும்.
- சேவையை பெறுவதற்கு வருகின்ற பயனாளர்கள் 10 பேருக்கு ஒரே நேரத்தில் அமர்ந்து தமது வேலைகளை பூர்த்தி செய்வதற்கு இட வசதி கட்டிடத்திற்குள் இருத்தல் வேண்டும்.
- கழிவு நீர் மற்றும் அழுக்குகளை அகற்றும் அமைப்பு முறையான வகையில் வடிவமைக்கப்பட்ட கட்டிடமாக இருத்தல் வேண்டும்.
- பணிக் குழு மற்றும் வெளித் தரப்பினருக்கு பயன்படுத்துவதற்காக 10 கழிப்பறைகள் வெவ்வேறாக இருத்தல் வேண்டும்.
- அறைகளை பிரித்து ஒதுக்குவது பணியாளர்களுக்கு தேவையான வகையில் மேற்கொள்ள முடியுமாக இருத்தல் வேண்டும்.
- அலுவலகத்தை நடத்திச் செல்வதன் காரணமாக குறித்த கட்டிடம் அமைந்திருக்கும் பகுதியை சூழ உள்ள குடியிருப்பாளர்களுக்கு எந்த ஒரு இடையூறும் ஏற்படாத இடத்தில் இருத்தல் வேண்டும் மற்றும் அருகாமையில் குடியிருப்பவர்களால் அலுவலகத்திற்கு இடையூறு இல்லாத இடமாக இருத்தல் வேண்டும்.
- வளிச் சீராக்கி அமைப்பு ஒன்றை பொருத்தி இருப்பது மேலதிக தகைமையாகும்.
- குத்தகை கொடுப்பனவாளராக குறிப்பிடப்பட்டிருக்கும் மாத வாடகைத் தொகை அரச மதிப்பீட்டு அறிக்கையின் கீழ் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் (குறைந்தபட்ச தொகை)
- இது தொடர்பில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மாத்திரம் தெளிவு பெறல்களை மேற்கொள்ளும்படியும், இடைத்தரகர்கள் அல்லது வேறு ஒரு அதிகாரி, வெளித் தரப்பினருடன் உடன்பாடு ஒன்றை எட்டுவது இந்த விலைமனு நிராகரிக்கப்படுவதற்கு காரணியாகும்.
- கட்டிட உரிமையாளரினால் பூர்த்தி செய்ய வேண்டிய ஆவணம் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை மேலும் தெரிவிக்கிறோம்.

பத்தரமுல்லை, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலக்கம் 234 இல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள இலக்கம் (01) என்ற விலைக்கேட்புப் பெட்டிக்கு 2023.12.11ஆம் திகதி மு.ப. 11.00க்கு அல்லது அதற்கு முன்னர் இடுதல் வேண்டும். உங்களது விண்ணப்பத்தை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் ''மாகாண அலுவலக (குருநாகல்) கட்டிடம் வாடகை அடிப்படையில். குத்தகை அடிப்படையில் பெறுகை மேற்கொள்ளல். PR/02/04-1(75)" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிப்பது அல்லது ஏற்கும் உரிமை பணியக பெறுகைக் குழு வசமானது என்பதோடு, பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும். அரச மதிப்பீட்டாளரின் அறிக்கைக்கு உட்பட்டு தேர்வு மேற்கொள்ளப்படும். மீளளிக்கப்படாத ரூபா 1000.00 தொகையை 0000001650 என்ற பணியகத்தின் இலங்கை வங்கியின் கணக்கில் வைப்புச் செய்து பற்றுச்சீட்டை முன்வைத்து விலைமனு ஆவணத்தை எசெல்ரோ ஹோல்டின் (பிறைவெட்) லிமிட்டட், வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், இலக்கம் 22/2, தெற்கு வட்டப் பாதை, குருநாகலில் அமைந்துள்ள அலுவலகத்தில் இருந்து 2023.11.20 ஆம் திகதி தொடக்கம் 2023.12.10 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் விலைமனு ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இலக்கம் 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்லை.**
**தொலைபேசி/ தொலைநகல்: 2880550/ 2887585**
**இணையதளம்: www.slbfe.lk**

“அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்”

# தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

**கைத்தொழில் அமைச்சு**

## விலைமனுக் கோரல்

## இரத்தினபுரி தெமுவாவத்த ‘இரத்தினக்கல் கோபுரத்தில’ 11 கடைகள் 30 ஆண்டுகளுக்காக குத்தகை வாடகை அடிப்படையில் வழங்குதல்

**விலைமனு இலக்கம் NGJA/18/85/2023**

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் அமைச்சு கேள்விக் குழு இரத்தினக்கல் மற்றும் ஆபரண துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக இரத்தினபுரி - தெமுவாவத்த சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக நிலையத்தின் (இரத்தினக்கல் கோபுரம்) 11 கடைகளை குத்தகை வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

நிபந்தனைகள்-

| விபரம் | பணம் / திகதி |
|---|---|
| மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் | ரூபா 10,000.00 + 2.5% SSCL + 15% VAT |
| விலைமனு ஏற்கப்படும் இறுதித் திகதி/ நேரம் | 2023.12.11 ஆம் திகதி பி.ப. 2.00 |
| விலைமனு திறப்பது | 2023.12.11 ஆம் திகதி பி.ப. 2.05 |

| வரிசை இலக்கம் | கடை இலக்கம் | மாடி | கடையின் அளவு (சதுர அடி) | தகைமை | மாதாந்த வாடகை (வரி இன்றி விலை) | அடிப்படை குத்தகை பெறுமதி (ரூபா) (வரி இன்றி விலை) | பிணை பத்திரம் (ரூபா) (வரி இன்றி விலை) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 01 | முதல் மாடி | 219 | இரத்தினக்கல், ஆபரணம் மற்றும் மாணிக்கக்கல் தொழில்துறை சார்ந்த கடை மாத்திரம் | 75,000.00 | 5,910,000.00 | 330,000.00 |
| 02 | 05 | முதல் மாடி | 289 | | 80,000.00 | 6,303,000.00 | 352,000.00 |
| 03 | 09 | முதல் மாடி | 136 | | 48,000.00 | 3,781,000.00 | 215,000.00 |
| 04 | 10 | இரண்டாவது மாடி | 193 | | 55,000.00 | 4,333,000.00 | 245,000.00 |
| 05 | 14 | இரண்டாவது மாடி | 289 | | 75,000.00 | 5,910,000.00 | 330,000.00 |
| 06 | 18 | இரண்டாவது மாடி | 136 | | 45,000.00 | 3,546,000.00 | 200,000.00 |
| 07 | 21 | மூன்றாவது மாடி | 219 | | 55,000.00 | 4,333,000.00 | 245,000.00 |
| 08 | 22 | மூன்றாவது மாடி | 385 | | 78,000.00 | 6,146,000.00 | 350,000.00 |
| 09 | 23 | மூன்றாவது மாடி | 289 | | 75,000.00 | 5,910,000.00 | 330,000.00 |
| 10 | 24 | மூன்றாவது மாடி | 280 | | 75,000.00 | 5,910,000.00 | 330,000.00 |
| 11 | 27 | மூன்றாவது மாடி | 136 | | 45,000.00 | 3,546,000.00 | 200,000.00 |

i. தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரல் முறைக்கு அமைய பெறுகை இடம்பெறும் (NCB)

ii. மீளளிக்கப்படாத ரூபா 10,000.00 + 2.5% SSCL + 15% VAT (ரூபா 1,537.50) தொகையை (முழு தொகை ரூபா 11,787.50), கொழும்பு 03, எல்பிரட் ஹவுஸ் பூங்கா, மெக்சன்ஸ் டவர் , இலக்கம் 12, இல் அமைந்துள்ள தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் காசாளருக்கு செலுத்திய பின் உதவிப் பணிப்பாளருக்கு (பெறுகை) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணம் மற்றும் குறித்த நிபந்தனைகளை 2023.11.20 ஆம் திகதி தொடக்கம் 2023.12.08 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

iii. முத்திரை பொறிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2023.12.11 ஆம் திகதி பி.ப. 2.00க்கு அல்லது அதற்கு முன்னர், தலைவர் - அமைச்சு கேள்விமனு குழு, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை, இலக்கம் 12, “இரத்தினக்கல் கோபுரத்தில்” எல்பிரட் ஹவுஸ் பூங்கா, கொழும்பு 03, என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது 4ஆவது மாடியில் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு வேண்டும். விண்ணப்பங்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “இரத்தினக்கல் கோபுரத்தின் 11 கடைகளை குத்தகை வாடகை அடிப்படையில் வழங்குதல் - 2023” என்று குறிப்பிடப்படுதல் வேண்டும்.

iv. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களுடன் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிணை பத்திரத்தின் பெறுமதியுடன் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் காசாளருக்கு செலுத்திய பின் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

v. விலைமனுக்களை திறப்பது தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் 7ஆவது மாடி, கேட்போர்கூடத்தில் 2023.12.11 ஆம் திகதி பி.ப. 2.05 க்கு மேற்கொள்ளப்படுவதோடு பி.ப. 2.00 க்கு பின்னர் கிடைக்கின்ற விலைமனுக்கள் திறக்கப்படாது இரத்துச் செய்யப்படும். இந்த திறக்கும் நிகழ்வுக்கு விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் பங்கேற்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு:- உதவிப் பணிப்பாளர் (பெறுகை) 071 5362536/ 011 2332197

**தலைவர் - அமைச்சு கேள்விமனு குழு**
**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை**
**இலக்கம் 12, “இரத்தினக்கல் கோபுரத்தில்”, அல்பிரட் ஹவுஸ் பூங்கா, கொழும்பு 03.**
**தொலைபேசி (0112-329295, 2325364, 2390645-8) தொலைநகல் (0112320758, 011-2332197)**
**இணையதளம் (www.ngja.gov.lk)**

# அரச ஈட்டு முதலீட்டு வங்கி

SMIB

## 2024ஆம் ஆண்டுக்காக வழங்குநர்களை பதிவு செய்தல்

2024 ஆம் ஆண்டுக்காக சேவைகள் மற்றும் பொருட்களை வழங்குவதற்கு பதிவு செய்வதில் ஆர்வம் காட்டும் வழங்குநர்கள், உள்ளூர் முகவர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்ததாரர்கள், தொழில்முறையாளர்கள் மற்றும் வர்த்தக அமைப்புகளிடம் இருந்து அரச ஈட்டு முதலீட்டு வங்கியினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த வங்கிக்காக அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள், தளபாடங்கள், சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரம், பாதுகாப்பு உபகரணங்கள், முறைமைகள் மற்றும் அது சார்ந்த சேவைகள், தகவல் தொழில்நுட்பம் (IT) உற்பத்திகள் மற்றும் சேவைகள், அச்சிடப்பட்ட விடயங்கள், எழுதுபொருட்கள், மோட்டார் வாகனங்கள், வசதி சேவைகள் மற்றும் பராமரிப்பு, ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் உட்பட பல்வேறு துறைகளில் இருந்து பதிவு செய்வதற்கு அழைக்கப்படுகின்றனர்.

| | |
|---|---|
| **பதிவுக் கட்டணம்** | **ரூபா 2,000** |
| **இறுதித் திகதி** | **2023 டிசம்பர் 15** |

ஆர்வமுடைய தரப்புகள் **www.smib.lk** என்ற வளைத்தலம் எந்த ஒரு SMIB கிளை அல்லது **nadung@smib.lk** என்ற முகவரிக்கு கோரிக்கை மின்னஞ்சல் ஒன்றை அனுப்புவதன் மூலம் மேலதிக விபரங்கள், விண்ணப்பப் படிவம், வழங்குநர் பிரிவுகளின் முழு பட்டியலை பெறலாம்.

**மேலதிக விபரங்களுக்கு -011-7722879/ 011-7722784/ 011-7722876**

**தலைமை முகாமையாளர் - HR & Logistics**

**அரச ஈட்டு முதலீட்டு வங்கி**

# கிரிக்கட் அணியை பலப்படுத்துவதில் ஒன்றுபட்டு நின்ற அரசியல் கட்சிகள்!

**கட்சி அரசியலால் ஒருவருக்கொருவர் முரண்பட்டுக் கொள்ளும் கலாசாரத்துக்கு மத்தியில், பொதுவான விடயமொன்றுக்காக ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இணைந்து செயற்பட்டமை அண்மித்த காலத்தில் இடம்பெற்ற பாரியதொரு அரசியல் கலாசார முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.**

இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்திற்கு எதிராக ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் ஒன்றிணைந்து பாராளுமன்றத்தில் பிரேரணையொன்றை உடனடியாகக் கொண்டு வந்து அதனை நிறைவேற்றியிருந்தன.

இந்தியாவில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை கிரிக்கெட் அணி அடைந்த தொடர் தோல்விகளையடுத்து அணியின் நிர்வாகம் பற்றிய விமர்சனங்கள் அதிகரித்து, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் ஊழல் நிறைந்துள்ளது என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

குறிப்பாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க பாராளுமன்றத்தில் முன்வைத்த குற்றச்சாட்டுக்களையடுத்து இது தொடர்பில் உடனடியாகச் செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

இதன் தொடர்ச்சியாக கடந்த வாரம் 09ஆம் திகதி பாராளுமன்றத்தில் விசேட பிரேரணையொன்று கொண்டுவரப்பட்டது. எதிர்க்கட்சி இந்தப் பிரேரணையை முன்மொழிய, ஆளும் கட்சி இதனை வழிமொழிந்திருந்தது.

பிரேரணையை முன்வைத்து விவாதத்தை ஆரம்பித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கும் முக்கியமான விடயங்களில் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இதுவரை கடைப்பிடித்து வந்த நடைமுறையில் இருந்து விலகிய போக்கின் ஆரம்பமாக இது அமையும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

ஆளும் கட்சி தரப்பில் அமைச்சர் நிமல் சிறிபால. டி. சில்வா பிரேரணையை வழிமொழிந்து உரைநிகழ்த்தினார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருந்தால் அதற்குப் பொறுப்பான நிர்வாகம் நீக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியே இந்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டிருந்தது. இந்த விடயத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் எவ்வித மாற்றுக்கருத்தும் இருக்கவில்லை.

இலங்கை கிரிக்கெட் வீரர்களின் தொடர் தோல்விகளால் இலங்கை அணியின் ஆதரவாளர்கள் மிகவும் ஏமாற்றமடைந்திருந்த நிலையில், இந்தத் தோல்விகளுக்கு இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் காரணம் என்று அமைச்சர் ரொஹான் ரணசிங்க பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாகத்துக்கு எதிராக இடைக்கால நிர்வாகக் குழுவொன்றை அமைச்சர் நியமித்திருந்தார். அர்ஜுன ரணதுங்க தலைமையில் இந்த இடைக்கால நிர்வாகக் குழு நியமிக்கப்பட்டது. இது குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்ட பின்னரே ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரும் இதுபற்றி அறிந்திருந்தனர்.

இந்த நிலையில் இடைக்கால நிர்வாகத்துக்கு எதிராக ஸ்ரீலங்கா கிரிக்கெட் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்த அதேநேரம், அமைச்சரவையும் கூடி இவ்விடயம் பற்றிக் கலந்துரையாடியது.

அமைச்சரினால் நியமிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகக் குழு பற்றியும், ஸ்ரீலங்கா கிரிக்கெட் குறித்தும் ஆராய்வதற்காக அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான அமைச்சரவை உபகுழுவை நியமிக்க முடிவு செய்யப்பட்டது.

மறுபக்கத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் இடைக்கால நிர்வாகத்துக்கு இடைக்காலத் தடை பிறப்பிக்கப்பட்டு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிர்வாக சபை செயற்படுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாறான பின்னணியிலேயே அமைச்சர் ரொஷான் ரணசிங்க பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் தொடர்பான தகவல்களையும், இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகளையும் பகிரங்கப்படுத்தியிருந்தார்.



அமைச்சரின் பகிரங்கப்படுத்தலைத் தொடர்ந்தே ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒன்றிணைந்து ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிர்வாகத்தை நீக்குவது தொடர்பான பிரேரணையைக் கொண்டுவந்தனர். கடந்த 09ஆம் திகதி வியாழக்கிழமை இது குறித்த முழுநாள் விவாதம் நடைபெற்றதுடன், விவாதத்தின் இறுதியில் ஏகமனதாக இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வரவேற்கத்தக்க முன்னேற்றம் நாட்டின் ஏனைய பிரச்சினைகளுக்கும் முக்கியம் அளிக்கப்படும் என நம்ப முடிகின்றது.

## விளையாட்டுத்துறையில் அரசியல் பேதங்களை மறந்து ஒன்றிணைந்தது போன்று, நாட்டின் ஏனையதுறை முன்னேற்றங்களிலும் நாகரிக அரசியல் கலாசாரம் உதயமாவது எப்போது?



சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் இவ்வளவு தீர்க்கமான கட்டத்தில் நாடு பிளவுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒவ்வொரு திருப்பத்திலும் ஒருவரையொருவர் எதிர்ப்பது, கட்சி அடிப்படையில் பொதுமக்களிடையே பிளவை ஏற்படுத்தும், அதுவும் நமது முன்னேற்றத்தைத் தடுக்கும். இதுவரையில் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஒருவரையொருவர் வழமையாக பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் எதிர்ப்பது வழக்கம். எனினும், நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதாரச் சிக்கல் உள்ளிட்ட சவால்களிலிருந்து மீண்டெழுவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவையே தொடர்ந்தும் வலியுறுத்தப்படுகிறது. கிரிக்கெட் விடயத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்தது போன்று நாட்டின் முன்னேற்றத்துக்கும், சவால்களுக்கு முகங்கொடுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளிலும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதேநேரம், ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். ஸ்ரீலங்கா கிரிக்கெட்டாக இருந்தாலும் சரி, வேறு நிறுவனங்களில் முறைகேடு இடம்பெற்றாலும் சரி ஊழல் மோசடி எங்கு இடம்பெற்றாலும் அது தடுக்கப்பட வேண்டும்.

இதற்கு அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பது காலத்தின் தேவையாகும். மறுபக்கத்தில் கிரிக்கெட் என்பது இலங்கையைப் பொறுத்த வரையில் மிகவும் பிரபல்யமானதும் அதிகமான மக்களால் விரும்பப்படும் விளையாட்டுமாகும்.

இதற்கு முன்னர் இருந்த இலங்கை கிரிக்கெட் அணிகளுடன் ஒப்பிடுகையில் தற்போதைய அணியின் செயல்திறன் குறைவாக இருப்பதை ரசிகர்களால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. அத்துடன், முன்னைய காலத்தில் இருந்தது போன்று அணி வீரர்கள் மத்தியில் கட்டுப்பாடு இல்லையென்ற குற்றச்சாட்டும், கிரிக்கெட் விளையாட்டுக்குக் கிடைக்கும் பணத்தின் அளவு அதிகரித்திருப்பதும் இந்த நிலைமைக்குக் காரணமாகும் என்றும் விமர்சனங்கள் பரவலாக முன்வைக்கப்படுகின்றன.

அத்துடன், திறமையான வீரர்கள் பலர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்றபோதும், தேசிய அணிக்குத் தெரிவு செய்யப்படும் வீரர்கள் தொடர்பில் விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன. வெளிப்படைத்தன்மையான முறையில் வீரர்கள் தெரிவு மற்றும் தேசிய மட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டு அபிவிருத்தி செய்யப்படாமையும் இதற்குக் காரணங்களாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் வீழ்ச்சியுற்றுள்ள இலங்கை கிரிக்கெட்டை மீண்டும் கட்டியெழுப்பி அதனை மறுசீரமைப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் சுயலாப நோக்கம் இன்றி பொதுநோக்கத்தில் செயற்பட வேண்டும் என்பது ரசிகர்களின் கோரிக்கையாக உள்ளது.

**பி.ஹர்ஷன்...**

---

# அயோத்தி இராமர் கோயில் கும்பாபிஷேக விழாவில் 10 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அழைப்பு!

**அயோத்தி இராமர் கோயில் கும்பாபிஷேக விழாவில் பங்கேற்பதற்காக இந்தியா மட்டுமன்றி வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் என 10 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட உள்ளதாக விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பு தெரிவித்துள்ளது.**

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடம் தொடர்பாக உச்சநீதிமன்றம் 2019 இல் தீர்ப்பு வழங்கியது. அந்த இடத்தில் இராமர் கோவில் கட்ட அனுமதி வழங்கி தீர்ப்பு வழங்கப்பட்டது. இதையடுத்து அயோத்தியில் பிரமாண்டமாக இராமர் கோவில் கட்டுவதற்கான பணி தொடங்கியது.

இராமர் கோவில் கட்டுவதற்காக ஸ்ரீ ராம் ஜென்மபூமி தீர்த்த சேத்ரா அறக்கட்டளையை உருவாக்கினார். அதன்பிறகு 2020 ஒகஸ்ட் 5 ஆம் திகதி அயோத்தி இராமர் கோயில் கட்டுவதற்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.

இதையடுத்து கட்டுமானப் பணிகள் தொடங்கின. ரூபா 1000 கோடி செலவில் பிரமாண்டமாக இராமர் கோயில் கட்டும் பணி தொடங்கியது. கலைநுட்பத்துடன் சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட தூண்கள், கற்கள், இந்தியாவின் பல்வேறு இடங்களில் இருந்து காணிக்கையாகப் பெறப்பட்ட செங்கற்களைப் பயன்படுத்தி கோயில் பிரமாண்டமாகக் கட்டப்பட்டு வருகிறது.


இந்தப் பணி விறுவிறுப்பாக நடந்து வந்தது. இந்நிலையில் இராமர் கோயிலின் தரைத்தளம் முழுவதுமாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அயோத்தி இராமர் கோயில் கும்பாபிஷேக விழா எதிர்வரும் ஜனவரி 22 ஆம் திகதி நடைபெற உள்ளது. அவ்விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க உள்ளார்.

தற்போது தற்காலிகமாக இராமர் சிலை வைக்கப்பட்டுள்ள இடத்தில் இருந்து அதனை கோவில் கருவறைக்கு ஊர்வலமாக எடுத்து வருவதற்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இந்த விழாவுக்கு இந்தியாவில் இருந்து ஆன்மிகத் தலைவர்கள், மடாதிபதிகள், பா.ஜ.க தலைவர்கள், பிற அரசியல் கட்சியினர் மற்றும் வெளிநாட்டுத் தலைவர்கள், பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.

மேலும் வெளிநாடுகளில் இருந்து ஏராளமானவர்கள் அழைத்து வரப்படவுள்ளனர். இந்நிலையில் விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பு இந்தியா மட்டுமன்றி வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கும் அழைப்பு விடுத்து வருகிறது.

இதுபற்றி விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் செயல் தலைவர் அலோக் குமார் கூறுகையில், "உலகம் முழுவதும் வசிக்கும் இந்துக்கள் தங்கள் குடும்பத்துடன் இந்த விழாவில் பங்கேற்க வேண்டும். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஜனவரி 1 முதல் 15 ஆம் திகதி வரை 10 கோடிக்கும் மேற்பட்ட குடும்பத்தினருக்கு அழைப்பு விடுக்க திட்டமிடப்பட்டுள்ளது" என்றார். அயோத்தி இராமர் கோவில் கும்பாபிஷேக விழா நெருங்குவதால் தற்போது அதற்கான பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

எதிர்வரும் ஜனவரி மாதம் 22 ஆம் திகதி அயோத்தி இராமர் கோவில் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது. இந்த வேளையில் பிரதமர் நரேந்திர மோடி இராமர் சிலையை கருவறைக்கு எடுத்துச் செல்லவுள்ளார்.



ரூபா 1000 கோடி செலவில் பிரமாண்டமாக இராமர் கோயில் கட்டப்பட்டு வருகிறது. கோயில் பீடத்தின் மீது மூன்று அடுக்குகளாக இராமர் கோவில் அமைய உள்ளது. கோயிலின் பீடம் கிரனைட் கற்களால் அமைக்கப்பட்டுள்ளது.

## ஜனவரி 22 ஆம் திகதி நடைபெறவிருக்கும் கோலாகல நிகழ்வுக்காக களைகட்டுகிறது உத்தர பிரதேச மாநிலம்



கோயிலில் 5 மண்டபங்கள் அமைகின்றன. கோயிலில் மிக உயரமான சிகரம் என்பது கர்ப்பக்கிரஹத்திற்கு மேல் இருக்கும்.

அத்தோடு கலைநுட்பத்துடன் சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட தூண்கள், கற்கள், இந்தியாவின் பல்வேறு இடங்களில் இருந்து காணிக்கையாகப் பெறப்பட்ட செங்கற்களைப் பயன்படுத்தி கோவில் பிரமாண்டமாக கட்டப்பட்டு வருகிறது.

கும்பாபிஷேக விழா அழைப்பிதழ் பிரதமர் நரேந்திர மோடிக்கு முறைப்படி வழங்கப்பட்டது. இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று கோயிலை பிரதிஷ்டை செய்ய உள்ளார். அதன் பிறகு கோயிலில் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட உள்ளனர்.

ஜனவரி 22 ஆம் திகதி காலை 11.30 மணி முதல் 12.30 மணிக்குள் முக்கிய பூஜைகள் நடைபெற உள்ளன. நாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்து அர்ச்சகர்கள் வருகை தருவர். இந்து மத சம்பிரதாயங்கள் முறையில் இராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது. மேலும் கோயில் கர்ப்பகிரஹகத்துக்குள் வைக்க 3 வகையான இராமர் சிலை செய்யும் பணியை கோயில் அறக்கட்டளை தீவிரமாக செய்து வருகிறது. அவற்றில் எந்த சிலையை கர்ப்பக்கிரஹத்தில் வைப்பது என்பது பற்றி இன்னும் முடிவு எடுக்கப்பவில்லை. ராஜஸ்தான் மார்பிள் அல்லது கர்நாடகா கிரனைட் கற்களால் செய்யப்படும் இராமர் சிலையில் ஒன்று கர்ப்பக் கிரஹத்தில் வைக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

மற்றொரு சிலையானது 2 ஆவது தளத்தின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்த பிறகு அங்கு வைக்கப்பட உள்ளது. 2 ஆவது தளத்தில்தான் இராமர் தர்பார் அமைக்கப்படும். கோயில் திறப்பு விழாவையொட்டி சரயு உள்ளிட்ட பிற புனித நதிகளில் இருந்து தீர்த்தம் கொண்டு வரப்படுகிறது.

இந்த விழாவுக்கு இந்தியாவில் இருந்து ஆன்மிகத் தலைவர்கள், மடாதிபதிகள், பா.ஜ.க தலைவர்கள், பிற அரசியல் கட்சியினர் மற்றும் வெளிநாட்டுத் தலைவர்கள், பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். மொத்தம் 136 சனாதன பாரம்பரியங்களைச் சேர்ந்த 25,000 இந்து மதத் தலைவர்களை அழைக்க அறக்கட்டளை திட்டமிட்டுள்ளது. இதுதவிர, 10,000 சிறப்பு விருந்தினர்களும் பங்கேற்பார்கள் என்றும் அறக்கட்டளை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எஸ்.சாரங்கன்...**

# இன்றைய புதுயுகத்துக்கு பொருத்தமாக அமைந்துள்ள வரவு செலவுத் திட்டம்



**2024 நிதியாண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை சமர்ப்பித்திருந்தார். நாட்டை இக்கட்டான சூழ்நிலையிலிருந்து மீட்டெடுத்த பின்னர் ஜனாதிபதி சமர்ப்பித்த இரண்டாவது வரவுசெலவுத் திட்டம் இதுவாகும்.**

கடந்த வருடத்தில் நிலவிய மக்கள் கியூ வரிசைகளை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டில் சுமுகமான நிலைமை ஏற்பட்டுள்ள இன்றைய நிலையில், அடுத்த வருடத்துக்கான வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் தேர்தல் வருடமாக இருக்குமென ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அதாவது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் என்பன நடைபெறவிருப்பதால் அதனை இலக்கு வைத்து தயாரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம் இதுவென்ற விமர்சனங்களும் மற்றொரு புறத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும், "தேர்தலை இலக்கு வைத்து இந்த வரவுசெலவுத் திட்டத்தை நாம் தாக்கல் செய்யவில்லை, நாட்டின் எதிர்காலத்தையும் மக்களையும் நோக்காகக் கொண்டே இதனைத் தாக்கல் செய்திருக்கிறோம்" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வரவு செலவுத்திட்ட உரையில் கூறியிருந்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், 'சிலர் இந்த வரவுசெலவுத் திட்டத்தை தேர்தல் வரவுசெலவுத் திட்டம் என்கிறார்கள். அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறவிருப்பதால் இவ்வாறு அழைக்கின்றனர். தேர்தலில் வெற்றி பெறும் நோக்கில் முடிவில்லாத சலுகைகளையும் சம்பள அதிகரிப்பையும் வழங்குவதே அத்தகைய தேர்தல் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

சுதந்திரம் அடைந்த பின்னரும் 75 வருடங்களில் பலமுறை அதுதான் நடந்தது.

ஆனால் இந்த வரவு செலவுத் திட்டம் வித்தியாசமானது. இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் வரவுசெலவுத் திட்டமாகும். தற்போதைய சர்வதேச போக்குகளுக்கு ஏற்ப ஒரு புதிய பொருளாதார அமைப்பின் அடித்தளத்தை அமைக்கும் வரவு செலவுத் திட்டம்.

தேர்தல் வெற்றியை விட நாட்டின் வெற்றியே எனக்கு முக்கியம். இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டின் வெற்றிக்காகத் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டமாகும். பௌத்த பொருளாதார தத்துவத்தின் படி தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம்.







## நாட்டை இருண்ட காலத்திலிருந்து மீட்டெடுத்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த இரண்டாவது பட்ஜட்!

சமநிலைவாழ்வு என்ற எண்ணக்கருவின் அடிப்படையில், நாட்டுக்கும் நாட்டின் எதிர்காலத்திற்கும் நன்மை பயக்கும் பல முன்மொழிவுகள் இந்த வரவுசெலவுத் திட்ட ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன' என்றும் தெரிவித்திருந்தார்.

இந்த வரவுசெலவுத் திட்டம் நீண்ட கால பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு பல்வேறு தரப்பினருக்கும் நன்மை பயக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருப்பதாகப் பார்க்கப்படுகிறது. குறிப்பாக நாட்டில் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவு குறித்துக் கவனத்தில் எடுத்து அரசாங்க ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனைவை அதிகரிக்க அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையை இதற்கு சிறந்த உதாரணமாகக் குறிப்பிடலாம்.

2015 ஆம் ஆண்டின் பின்னர் அரசாங்க ஊழியர்களுக்கு எவ்வித சம்பள அதிகரிப்பும் வழங்கப்படவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு, தற்பொழுதுள்ள 1.3 மில்லியன் அரசாங்க ஊழியர்களுக்குமான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு அதிகரிக்கப்படவுள்ளது.

அரச ஊழியர்களுக்குத் தற்பொழுது கிடைக்கும் மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவான 7,800 ரூபாவை 10,000 ரூபாவினால் அதிகரிப்பதற்கு ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார். திறைசேரிக்கு குறித்த வருடத்திற்குரிய வருமானம் கிடைக்க ஆரம்பிப்பது பெப்ரவரி, மார்ச் மாதங்களின் போதாகும்.

எனவே இக்கொடுப்பனவு அதிகரிப்பினை மாதாந்த சம்பளத்தில் சேர்த்துக் கொள்வது ஏப்ரல் மாதத்திலிருந்தாகும். ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையான நிலுவைத் தொகையினை ஒக்டோபர்மாதத்திலிருந்துதவணைஅடிப்படையில் ஆறு மாதங்களுக்குள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி அறிவித்திருந்தார்.


அதேபோல, ஓய்வூதியம் பெறுகின்ற 730,000 பேருக்கும் தற்பொழுது கிடைக்கும் 3,525 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ஆகும். அவர்களுக்கு தற்போது கிடைப்பது ரூபா 3,525 மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாகும். அரச ஓய்வூதியதாரர்களின் மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை ரூபா 6,025 வரை அதிகரிக்கவிருப்பதாகவும் வரவுசெலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது மாத்திரமன்றி, சமூகத்தில் நலிவுற்றவர்களுக்காக வழங்கப்படும் நலன்புரிக் கொடுப்பனவான 'அஸ்வெசும' நலன்புரித் திட்டம், கர்ப்பிணித் தாய்மாருக்கான விசேட கொடுப்பனவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கும் வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இந்த ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனஎன்பதைநாம்அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

(17ஆம் பக்கம் பார்க்க)

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

POSTGRADUATE INSTITUTE OF HUMANITIES & SOCIAL SCIENCES (PGIHS)
University of Peradeniya

Join the Nation's Leader in Postgraduate Education and Research in Humanities and Social Sciences

**The PGIHS calls applications for the following Postgraduate Diploma and Degree programmes for the Academic Year 2024**

| | |
|---|---|
| Postgraduate Diploma (SLQF Level 8) 1 Year | தொல்பொருளியல், அரசியல் விஞ்ஞானம், புவியியல், சமூகவியல், சிங்களம், ஆங்கிலம், தமிழ், பொருளியல், தத்துவவியல், பௌத்தகல்வி, சமஸ்கிருதம், பாளி, அழகியற்கலை, கிரேக்கம் மற்றும் ரோமன் கல்வி, இஸ்லாமியக் கல்வி |
| Master [Recommended Course Work and Project] (SLQF Level 9) 1 Year | தொல்பொருளியல், அரசியல் விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சமூகவியல், சிங்களம், ஆங்கிலம், தமிழ், பொருளியல், தத்துவவியல், பௌத்தகல்வி, சமஸ்கிருதம், பாளி, அழகியற்கலை, கிரேக்கம் மற்றும் ரோமன் கல்வி, இஸ்லாமியக் கல்வி |
| Master of Arts [Recommended Course Work and Research] (SLQF Level 10) 2 Years | தொல்பொருளியல், அரசியல் விஞ்ஞானம் ,வரலாறு, புவியியல், சமூகவியல், சிங்களம், ஆங்கிலம், தமிழ், பொருளியல், தத்துவவியல், பௌத்தகல்வி, சமஸ்கிருதம், பாளி, அழகியற்கலை, கிரேக்கம் மற்றும் ரோமன் கல்வி, இஸ்லாமியக் கல்வி |
| Master of Arts in Applied Economics (SLQF Level 9) – 1 Year | (பரிந்துரைக்கப்படும் பாடநெறி மற்றும் செயற்றிட்டம்) |
| Master of International Relations (SLQF Level 9) – 15 months | (பரிந்துரைக்கப்படும் பாடநெறி மற்றும் செயற்றிட்டம்) |
| Master of Human Rights and Multiculturalism (SLQF Level 9) – 15 months | (பரிந்துரைக்கப்படும் பாடநெறி மற்றும் செயற்றிட்டம்) |
| Master of Environmental Management (SLQF Level 9) – 15 months | (பரிந்துரைக்கப்படும் பாடநெறி மற்றும் செயற்றிட்டம்) |
| Master of Sustainable Tourism (SLQF Level 10) - 18 Months | (பரிந்துரைக்கப்படும் பாடநெறி மற்றும் செயற்றிட்டம்) |
| Master of Science in Sustainable Tourism (SLQF Level 10) - 2 years | (பாடநெறி வேலை மற்றும் செயற்றிட்டம்) |
| Master of Philosophy (Research only*/(SLQF Level 11) Minimum 2 years of full time Research | மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகியதுறைகளில் தொடர்புடைய எந்தவொரு பாடம் |
| Doctor of Philosophy (Research only*/(SLQF Level 11) Minimum 3 years of full time Research | மானிடவியல், சமூக விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் தொடர்புடைய எந்தவொரு பாடம் |

விண்ணப்ப முடிவு திகதி 2023 டிசம்பர் 17

நிகழ்ச்சித் திட்டங்கள் 2024 பெப்ரவரி ஆரம்பமாகும்

* தேவைப்படும் போது பாடநெறிகள் பரிந்துரைக்கப்படும்
Application Fee: Local Rs. 2000.00 Foreign: US $ 25.00

குறிப்பு: விண்ணப்பங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாதபட்சத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தாது விடுவதற்கான உரிமையை PGIHS கொண்டிருக்கும். சில நிகழ்ச்சித்திட்டங்கள் தகைமைப் பரீட்சை மற்றும் / நேர்முகத் தேர்வைக் கொண்டிருக்கலாம். கற்பித்தல் முறைமை: நேரடியாக வகுப்புக்கள் + தேவையானால் மெய்நிகர் (online)

பட்டப்பின் படிப்பு நிகழ்வுகளுக்கான உள்நுழைவு தகைமை பாடநெறி கட்டமைப்பு, பாடநெறி கட்டணங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட தகவல்களுக்கு தயவுசெய்து www.pgihs.ac.lk என்ற இணையதளத்திற்குள் பிரவேசியுங்கள்.

விண்ணப்பிக்கும் முறைமை: விண்ணப்பப்படிவங்கள் மெய்நிகர் (online) முறையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தயவுசெய்து விண்ணப்பப்படிவ இணைப்பை தேடுவதற்காக www.pgihs.ac.lk/applications என்பதற்குள் பிரவேசிக்கவும். விண்ணப்பப்படிவம் மற்றும் துணை ஆவணங்களின் அச்சுப் பிரதிகளைப்பதிவுத் தபாலில் PGIHS, பேராதனை பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

Web: www.pgihs.ac.lk inquiries: info@pgihs.ac.lk தொலைபேசி : +94 812 388 957 / +94 812 068363 தொலை நகல் : +94 812 068 362



மண்சரிவினால் உயிரிழந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர்.

# மண்சரிவு: நிலத்தை தவறாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் அனர்த்தம்

சிரேஷ்ட பூகற்பவியலாளர் லக்சிறி இந்திரதிலக்க

மழையுடன் கூடிய காலநிலை நிலவும் போது இலங்கை முகம் கொடுக்கும் அனர்த்தங்களில் மண்சரிவும் ஒன்றாகும். இம்மண்சரிவு காரணமாக உயிரிழப்புக்களும், காயங்களும் மாத்திரமல்லாமல் சொத்தழிவுகளும் பொருளாதார இழப்புக்களும் ஏற்படவே செய்கின்றன. அந்த வகையில் கடந்த ஞாயிறன்று (12.11.2023) பலாங்கொடை, கரவங்கேன, வெஹிந்த பிரதேசத்தில் திடீரென ஏற்பட்ட மண்சரிவினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மண்ணில் புதையுண்டு உயிரிழந்தனர். அவர்களில் தாயும் தந்தையும் அவர்களது இரு பிள்ளைகளும் அடங்கியிருந்தனர். இது அப்பிரதேசத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்திய சம்பவமானது.

என்றாலும் இராணுவத்தினரும், பொலிஸாரும், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளும், பிரதேச மக்களும் விரைந்து செயற்பட்டு மண்மேட்டை அப்புறப்படுத்தி புதையுண்டவர்களை உயிருடன் மீட்டெடுக்கவென கடும் பிரயத்தனம் மேற்கொண்டனர். இருப்பினும் அவர்கள் சடலங்களாகவே மறுநாள் கண்டெடுக்கப்பட்டனர்.

அத்தோடு இம்மண்சரிவின் விளைவாக அப்பிரதேசத்தில் மேலும் மூன்று வீடுகளும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இரத்தினபுரி

**14 மாவட்டங்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் ஆறு வாரங்களில் 996 மண்சரிவுகள்**



மாவட்ட அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

மழையுடனான காலநிலையின் போது மலைகள் மற்றும் மலைசார்ந்த பிரதேசங்களில் இவ்வாறான அனர்த்தங்கள் அண்மைக்காலமாக ஏற்படக்கூடியனவாக உள்ளன. இந்நாட்டில் 14 மாவட்டங்கள் மலைகளையும் மலை சார்ந்த பிரதேசங்களையும் கொண்டுள்ளன. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, குருநாகல், கேகாலை, இரத்தினபுரி, பதுளை, நுவரெலியா, கண்டி, மாத்தளை ஆகியன அவற்றில் குறிப்பிடத்தக்க மாவட்டங்களாகும். இம்மாவட்டங்களில் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன. அவ்விடங்கள் தொடர்பில் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு, மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு இது தொடர்பில் அறிவூட்டல்களும் வழங்கப்பட்டுள்ளன.

இருந்தும் கூட மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களிலும் மக்கள் வாழவே செய்கின்றனர். இவ்வருடம் (2023) செப்டெம்பர் வரையும் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளின் படி, நாட்டில் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் 14 ஆயிரத்து 224 குடியிருப்புக்களும் கட்டடங்களும் அமைந்திருப்பதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் குறிப்பிட்டிருக்கிறது.

மண்சரிவு ஒரு அனர்த்தமான போதிலும் அவ்வனர்த்தம் ஏற்பட முன்னர் சில முன்னறிகுறிகளை குறித்த பிரதேசத்தில் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். குறிப்பாக நிலத்தில் திடீரென வெடிப்புக்கள் ஏற்படும். அவ்வெடிப்புகள் விரிவடைந்து பிளவுகளாகும். அவ்வாறான வெடிப்புக்களை கட்டடங்களின் சுவர்களிலும் வீதிகளிலும் அவதானிக்க முடியும். அது மாத்திரமல்லாமல் பிரதேசத்தில் புதிய நீரூற்றுக்கள் திடீரென ஏற்படும். அவற்றின் ஊடாக சேறு சகதிமிக்க நீர் வெளிப்படும். அப்பிரதேசத்தில் ஏற்கனவே நீரூற்றுக்கள் காணப்படுமாயின் அவை திடீரென காணாமல் போய்விடும். அப்பிரதேசத்திலுள்ள உயரமான மரங்கள், தொலைபேசி மற்றும் மின்கம்பங்கள் சரிவடையலாம். இவை அனைத்தும் மண்சரிவு ஏற்படுவதற்கான முன்னறிகுறிகளாகும்.

அதனால் அவ்வாறான அறிகுறிகளை அவதானித்தால் தாமதியாது அப்பிரதேசங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும். அதன் பின்னர் இவ்வறிகுறிகள் குறித்து பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். அவர் மூலம் பிரதேச செயலாளர் ஊடாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்திற்கு இவ்வறிகுறிகள் குறித்து அறிவிக்க வேண்டும். இது மக்களின் பொறுப்பாகும்.

இருந்த போதிலும் மண்சரிவு குறித்த அறிவுரை மற்றும் ஆலோசனைகள் தொடர்பிலோ தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுக்கின்ற மண்சரிவு முன்னெச்சரிக்கைகள் குறித்தோ கவனம் செலுத்தத் தவறிவிடுபவர்களும் இருக்கவே செய்கின்றனர். இவ்வாறானவர்கள் மண்சரிவு அனர்த்தத்திற்கு உள்ளாகும் துர்ப்பாக்கிய நிலைக்கு முகம் கொடுக்கின்றனர். ஆனால் மண்சரிவு குறித்த விழிப்புணர்வு அறிவுரைகளையும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னெச்சரிக்கைகளையும் கருத்தில் கொண்டு செயற்படும் போது இவ்வனர்த்தத்தின் பாதிப்புக்களைக் குறைத்தும் தவிர்த்தும் கொள்ளலாம் என்பது தான் பூகற்பவியலாளர்களின் கருத்தாகும்.

இந்நாட்டில் கடந்த செப்டெம்பர் முதல் மழையுடன் கூடிய காலநிலை நிலவுகின்றது. அதனால் செப்டெம்பர் 31ஆம் திகதி தொடக்கம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மண்சரிவு முன்னெச்சரிக்கைகளை தொடராக வழங்கி வருகின்றது. அதுவும் தினமும் புதுப்பிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. அப்படியிருந்தும் கூட இம்முறை ஏற்பட்டுள்ள மண்சரிவுகளினால் 07 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் ஐவர் இரத்தினபுரி மாவட்டத்தையும் காலி மற்றும் கண்டி மாவட்டங்களில் தலா ஒருவருமாக 07 பேர் மரணமடைந்துள்ளனர். ஆனால் இம்முறை மழைக் காலநிலை ஆரம்பித்தது முதல் கடந்த ஆறு வாரகாலப்பகுதியில் (16.11.2023 வரை) 996 மண்சரிவு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவை நாட்டிலுள்ள மலை மற்றும் மலைசார்ந்த 13 மாவட்டங்களில் பதிவாகி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில், பதுளையில் 26, கொழும்பில் 14, காலியில் 133, ஹம்பாந்தோட்டையில் 61, களுத்துறையில் 50, கண்டியில் 21, கேகாலையில் 221, குருநாகலில் 19, மாத்தளையில் 20, மாத்தறையில் 321, நுவரெலியாவில் 25, இரத்தினபுரியில் 74, கம்பஹாவில் 11 என்ற படி வெவ்வேறுபட்ட எண்ணிக்கையில் மண்சரிவுகள் பதிவாகியுள்ளன என்று குறிப்பிட்டுள்ள தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் மண்சரிவு ஆய்வு மற்றும் அச்சுறுத்தல் முகாமைத்துவப் பிரிவு சிரேஷ்ட பூகற்பவியலாளர் லக்சிறி இந்திரதிலக்க, இம்மண்சரிவுகளில் பெரும்பாலானவை மனிதர்கள் நிலத்தைத் தவறாகவும் பிழையாகவும் பயன்படுத்தியதன் வெளிப்பாடு' என்று கூறியுள்ளார்.



**பலாங்கொடையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வரை காவுகொண்ட மண்சரிவு**

**தரையிலும், சுவரிலும் திடீர் வெடிப்புக்களா? சேறு, சகதியுடன் புதிய நீரூற்றுக்களா? தொலைபேசி, மின்கம்பங்கள் சரிகின்றனவா? தாமதியாது செயற்பட வேண்டிய நேரம்**

இம்முறை ஏற்பட்டுள்ள மண்சரிவுகளில் பெரும்பாலானவை தொடர்பில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வுகளைச் செய்துள்ளது. அந்த ஆய்வுகளின் படி அவற்றில் 75 தான் உண்மையான மண்சரிவுகள்.

ஏனைய 529 உம் குடியிருப்புக்கள், கட்டிடங்கள், வீதிகள் அமைக்கவும் விவசாயப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காகவும் நிலத்தை ஒழுங்குமுறையாகப் பயன்படுத்தத் தவறியதன் விளைவாக ஏற்பட்ட மண்மேடுகளின் சரிவாகுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளார் பூகற்பவியலாளர் லக்சிறி இந்திரதிலக்க. இந்நிலையில் தான் மலையகத்திலும் மலைசார்ந்த பிரதேசங்களிலும் கட்டடங்களை நிர்மாணிக்க முன்னர் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் வழிகாட்டல்களைப் பின்பற்றுவதன் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது.

அதேநேரம் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகளின் ஊடாக புதிதாக ஏற்பட்ட மண்சரிவுகளும் ஏற்கனவே மண்சரிவு ஏற்பட்ட இடங்களில் மீண்டும் மண்சரிவுகள் ஏற்பட்டிருப்பதும் கண்டறியப்பட்டிருக்கின்றது. குறிப்பாக மாத்தறை, இரத்தினபுரி மாவட்டங்களில் புதிதாக மண்சரிவுகள் ஏற்பட்டுள்ள அதே நேரம், பதுளை உள்ளிட்ட ஏனைய மாவட்டங்களில் பழைய இடங்களில் மீண்டும் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

அதனால் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக மாத்தறை, இரத்தினபுரி, பதுளை உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தற்போது அப்புறப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிலையில் இரத்தினபுரி, பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு தற்போதும் மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான ஏற்பாடுகளின் ஊடாக மண்சரிவு மற்றும் மண்மேடுகள் சரிந்து விழுவதைக் குறைத்து உயிரிழப்புக்களையும், காயங்களையும் மாத்திரமல்லாமல் சொத்தழிவுகளையும் தவிர்க்கவே எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் மழைக் காலங்களில் மண்சரிவு முன்னெச்சரிக்கைகள் மற்றும் அது தொடர்பிலான விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். அது மக்கள் முன்பாக உள்ள பாரிய பொறுப்பாகும்.

**மர்லின் மரிக்கார்**


## தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

**வர்த்தகம்**

**207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு**

0777438169 ஹந்தான ஹாரகம வத்தேகம மாத்தளை 5 ஏக்கர் முதல் அதற்கு மேல் வருமானம் பெறும் பல தோட்டங்க ள் விற்பனைக்கு. 20 மில்லியன் முதல் அதற்கு மேல் 0777282147. 068548

**வேலைவாய்ப்பு**

**318 வெற்றிடங்கள் டிரைவர்கள்**

கொழும்பு பாதைகள் பற்றி நல்ல அனுபவமுடைய வெள்ளவத்தை வீட்டில் தங்கி வேலை செய்யக்கூடிய Tinted Jeep (Auto) ஓட்டத்தெரிந்த சாரதிகள் (Drivers) தேவை. வயதெல்லை 40 50 இடைப்பட்டவர், Motor Bike License உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். இலவச தங்குமிட வசதி, நாள் சம்பளம் Rs.2000 வழங்கப்படும், நேர்முக தேர்வுக்கு கிழமை நாட்களில் 2 P.M பின் கீழ்கண்ட முகவரிக்கு நேரில் வரவும்.இல.18, வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளைதொ.பே.இல. 076 6200300 075696

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

வலந்த ரெஸ்டூரன்ட் ரைஸ் அன்ட் கறி/ சைனீஸ்/ கொத்து/ அப்பம் சகல வேலைகளும் தெரிந்தவர் உடன் தேவை. 0710 5 16882/ 07185 5722 3 / 0773584224 075310

**325 தொழில்துறை பொது**

டயர் கடையில் வேலைக்கு சகல வேலைகளும் தெரிந்த ஒருவருடன் குடும்பம் தேவை தங்குமிட வசதியுண்டு. 0777034780, 0112255927, 0774944316 075299

வேலை வெற்றிடங்கள் கீழ்க்காணும் எமது நிறுவனத்தின் கிளைகளுக்காக பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் தொழிலாளர்கள் தேவை. நேரில் விசாரியுங்கள். அலி பிரதர்ஸ் தனியார் கம்பனி, இல. 228, லெயார்ட்ஸ் புரோட்வே வீதி, கொழும்பு14. தொ. பே. இல. 0776603030. 075839

50 வயதிற்குக் குறைந்த பெருந்தோட்ட தமிழ் ஆரோக்கியமான மண்வெட்டி வேலைக்கு, தீந்தை பூசுவதற்கு, வீடு சுத்தம் செய்யக்கூடிய மூன்று நேரமும் சோறு. ரூபா. 35000/ விரும்பக்கூடிய 2024 ஜனவரி 12 வீடு செல்லக் கூடியவர் தேவை.07723 92522 074992

**காணி/தோட்டம்**

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

அத்துருகிரிய மிலேனியம் சிட்டிக்கு அண்மையில் மனோரம்மியமான கடற்கரைக்கு முகப்பாக அமைந்துள்ள இருமாடி வீடு விற்பனைக்கு (8.8 பேர்ச்) காரொன்றிற்கு அல்லது வேன் ஒன்றிற்கு பரிமாற்றம் செற்வதற்கு விருப்பமுள்ளது. 0742622738 0757766600. 073160

இரத்மலானையில் 15.30 பேர்ச் இரண்டு மாடி வீடு விற்பனைக்கு. Bank Loan உண்டு. Old House விலை 3 கோடி. 0777568349. 075904

கல்கிஸ்ஸ பொலிசுக்கு அருகாமையில் வீட்டுடன் கூடிய 3 பேர்ச் காணி விற்பனைக்கு உள்ளது. காலி வீதிக்கு நடைதூரம் தொடர்புகளுக்கு 0701140622 075451

**617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு**

ராகம தேவத்த வீதி, 12.5 பேர்ச் காணியுடன் வீடு விற்ப னைக்கு. 0773255346, 0764661816 075577

**621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு**

எல்கடுவ வீதி, இல. 86/ A , காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய இல. 0769878134 075302

077 7 282147 கண்டி நகரிற்கு 4 km - 5km. தூரத்தில் சகல வசதிகளுடைய வவீடுகள் 10 விற்பனைக்கு 20 30 மில்லியனுக்கு இடையில் 0777438169 068529

**623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு**

மனங்கவரும் இயற்கைக் காட்சிகள் நிறைந்த குளிரான மலைநாட்டின் சுகத்தினை அனுபவிக்க விரும்பும் உங்களுக்கு ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக பெறுமதியுள்ள வியாபார மற்றும் குடியிருக்க உகந்த காணித்துண்டுகள் 100. ஒரு காணித்துண்டு 235 இலட்சம். விசேட விலைக் குறைப்புடன் வட்டியற்று இலகு பணக் கொடுப்பனவு முறைமை. அழைக்கவும். சிறிபால லாண்ட்ஸ் 0702484848. 075850

ஹட்டன் நகருக்கு அண்மையில் 10 பேர்ச் காணித்துண்டுகள் 100 விற்பனைக்கு. குழாய் நீர் மற்றும் மூன்று முதன் நிலை மின்சாரம். முழுக் காணித்துண்டும் 35 இலட்சம் முதல். இலகு பணக் கொடுப்பனவு முறைமை மற்றும் விசேட விலைக் குறைப்புடன் உங்களது காணித்துண்டை இன்றே ஒதுக்கிக் கொள்ள அழைக்கவும். சிரிபால லாண்ட்ஸ் 0702484848. 075849

**641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு**

கொழும்பு 02, மாடி வீட்டுத் தொகுதியில் அமைந்துள்ள 03 குளியலறை, 02 அறைகளுடனான 800 சதுர அடி கொண்ட புதிய வீடு தம்பதிக்கு வாடகைக்கு/குத்தகைக்கு உண்டு. தொடர்புகள் 07 14391552, 0724 391552 074661

**தினகரன் வாரமஞ்சரி திருமண சேவைகள்**

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா

* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk



## விலைமனுக்களுக்கான அழைப்பு கோரல்

### துப்புரவு சேவை வழங்கல்

### சனாதிபதி அலுவலகம்

**பெறுகை இலக்கம்: PS/FIN/PRO/04/Cleaning S./77/2023**

1. சனாதிபதி அலுவலகத்திற்காக சனாதிபதி அலுவலக பெறுகைக் குழுவின் தலைவரினால் சனாதிபதி அலுவலக வளவு மற்றும் அதனுடன் சேர்ந்த கட்டிடங்களில் துப்புரவு சேவை வழங்குவதற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. 250க்கும் குறையாத ஊழியர் எண்ணிக்கையைக் கொண்ட நிறுவனங்கள் இதற்காக தகுதி பெறுவதோடு விலைமனுதாரர்கள் அரச அல்லது தனியார் துறை அலுவலக கட்டிடங்களுக்காக துப்புரவு சேவை வழங்குகின்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
3. தேசிய போட்டிரீதியான விலைமனு முறை மூலம் விலைமனுக் கோரல் செயற்பாடு மேற்கொள்ளப்படும்.
4. **2023 டிசம்பர் 10 ஆம் திகதி வரை அனைத்து வார நாட்களிலும் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00** வரையான காலத்தில் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து, செமா கட்டிடத்தின் 2ஆவது மாடியில் அமைந்துள்ள கணக்குப் பிரிவின் சிறாப்பருக்கு ரூபா 10,000.00 மீளளிக்கப்படாத கட்டணம் ஒன்றை செலுத்திய பின், இதற்காக ஆர்வத்தை வெளிப்படுத்தும் விண்ணப்பதாரர்களுக்கு முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியை பெற்றுக்கொள்ள முடியும்.
5. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை **“தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, சனாதிபதி அலுவலகம், காலிமுகத்திடல், கொழும்பு 01”** என்ற முகவரிக்கு **2023 டிசம்பர் 11 ஆம் திகதி பி.ப. 2.30க்கு** அல்லது அதற்கு முன்னர் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும் என்பதோடு தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் மேலுள்ள முகவரியில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
6. அனைத்து விலைமனுக்களுடனும் ரூபா 300,000.00 (மூன்று இலட்சம் ரூபா) பெறுமதியான விலைமனு பிணை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரர்கள் தேவையான மேலதிக விபரங்களை, கொழும்பு 01, காலிமுகத்திடல், சனாதிபதி அலுவலகத்தில் பெறுகைப் பிரிவின் தலைமை கணக்காளர் (பெறுகை) இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். தொ.பே./ தொலைநகல்: 0112354354 (நீடிப்பு இலக்கம்: 3852/ 3854)/ 0112354410

**தலைவர்**
**பெறுகைக் குழு**
**சனாதிபதி அலுவலகம்**
**காலிமுகத்திடல், கொழும்பு 01**
**திகதி : 2023 நவம்பர் 19**



அமெ ரிக்க முத்தமிழ் பல்கலைக்கழகம், உலக முத்தமிழ் கூட்டமைப்பு, இலண்டன் குளோபல் ஆர்ட்ஸ் அகடமி என்பன இணைந்து நுவரெலியா இறம்பொடை சௌமியமூர்த்தி தொண்டமான் கலாசார மண்டபத்தில் நடத்திய “மலையகம் 200”, உலக முத்தமிழ் மாநாட்டின் பட்டமளிப்பு விழாவில் எழுத்தாளர் கலாபூஷணம் மாத்தளை பெ.வடிவேலன் “மதிப்புறு முனைவர்” பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுவதையும், அமெரிக்க முத்தமிழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் தாழை இரா.உதயநேசன், உலக முத்தமிழ் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் முனைவர், ரா.குறிஞ்சிவேந்தன், இங்கிலாந்து குளோபல் ஆர்ட்ஸ் அகடமியின் நிறுவுனர் பிரதீஸ்குமார் உட்பட, தஞ்சை தமிழ் பல்கலைக்கழக பதிவாளர் சி.தியாகராஜன், உ.கலையரசி, அமெரிக்க பல்கலைக்கழகம், தஞ்சை மன்னர் சரபோசி அரசுக் கல்லூரி இணை பேராசிரியை முனைவர் சி.அமுதா, முனைவர் மோ. பாட்டழகன் உட்பட கருத்தரங்கில் கலந்து கொண்ட பேராசிரியர்களையும் படத்தில் காண்க.

# இலங்கையில் முதல் தடவையாக தமிழ் பிரபஞ்ச அழகிகள் போட்டி






இலங்கையில் முதலாவது தடவையாக நடத்தப்பட்ட தமிழ் பிரபஞ்ச அழகிகள் போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு மெரினா பீச் ஹோட்டலில் இடம்பெற்றது. இப்போட்டியில் நூற்றுக்கும் அதிகமான தமிழ் யுவதிகள் கலந்து கொண்டனர். நிகழ்வில் புரவலர் ஹாசிம் உமர், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் சமூக சேவையாளர் ரகு இந்திரகுமார் உட்பட பலரும் அதிதிகளாக கலந்து கொண்டனர்.


வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

0777 394 679 | 070 663 33 88

LAND
8P NEAR
DIYATHA UYANA
DIYAWANNA RESIDENCIES
RAJAGIRIYA
Contact:
071 9640037

கறையான்களை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு
Solution to Get rid of Termites
Pre & Post Construction treatments For Termites
RODENT CONTROL To Minimize the Pest Attack & Usage of Pesticide Keep Your environment Clean
COCKROACHES, FLIES MOSQUITOES, ANTS BED BUGS, WOOD BORES
Hotline: 074 031 5517
Leemaka Industries (Pvt)Ltd.
No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
Tel - 0112 785344, Email - Leemakaindustries@gmail.com

APARTMENT BUILDING FOR SALE
KALUBOWILA
HOSPITAL ROAD FACING
14.5 PERCH
FOR STOREY WITH SIX APARTMENTS BUILDING
FOR SALE
CALL AND GET MORE DETAILS
0762 177 814

තාර දැමීම
APSARA GLOBAL HOLDINGS
0778 383 834
Email. asankasameera417@gmail.com

ORGANIC
COCONUT MILK
PRODUCED IN SRI LANKA
EXPORT QUALITY
400 ML ORGANIC
COCONUT MILK
PRODUCT OF SRI LANKA
AVAILABLE FOR
IMMEDIATE
SALE.
WHOLESALE OR RETAIL SALE
ACCEPTED
SPECIAL DISCOUNT
FOR BULK PURCHASE AND CASH PAYMENT
AALAM HOLDINGS (PVT) LTD.
NO.20/1, KOTHALAWELA AVENUE,COLOMBO 4.
FOR FURTHER DETAILS CONTACT ON
0712727920 OR 0117173864

Christmas Trees & Santa Kits
are Available FOR SALE
0777 664 655/ 0742 864 600

Branded Watches, Ceylon old notes, Silver & Gold items & Foreign Imitation Items
PAWNED GOLD WILL BE REDEEMED AND MONEY WILL BE REFUNDED
WHATSAPP 0777 077 333, 0776 562 382

NEGOMBO LAGOON FRONTAGE
22 ACRES FOR SALE
Access to Katunayake Airport
OFFERS INVITED
EAST WEST PROPERTIES PLC
0777 748 423 / 0743 375 358

HOUSE WITH LAND FOR SALE IN
POLGASOWITA
52 perches
430,000/- per perch
house is not charged.
5 rooms, 1 bathroom, living room, Dining room, kitchen
please contact (Vasanthi) : 0704 210 020

Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

BUDGET adz
போட்டோ குறும் விளம்பரம்
Toyota KDH TRH 200v 2017 Engine capacity 1990 cc petrol Efi Alto Triptonic transmission Silver colour 12 air bages, Mileage 47790 km Price - Rs. 18,000,000/- Negotiable Contact No. 077197 9992
kut-1

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

பட்ஜட் 2024;

# சரிந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் முயற்சியின் விளைவு

**அரச ஊழியர்கள் கோரிய 20000 சம்பள அதிகரிப்புக்குப் பதிலாக வாழ்க்கைச் செலவுப்படியில் 10000 அதிகரிப்பு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு 2024 ஜனவரியிலிருந்து வழங்கப்படுமெனக் கூறப்பட்டாலும் அரச ஊழியரொருவர் அந்தக் காசை ஏப்ரல் மாத சம்பளத்திலேயே கண்ணில் காணமுடியும். முதல் மூன்று மாதங்களுக்கான முப்பதாயிரம் ரூபா நிலுவைத்தொகை ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 2024 ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து ஆறு மாதங்களுக்கு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது**

இலங்கையில் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அரச ஊழியர்கள் கோரிய 20000 சம்பள அதிகரிப்புக்குப் பதிலாக வாழ்க்கைச் செலவுப்படியில் 10000 அதிகரிப்பு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு 2024 ஜனவரியிலிருந்து வழங்கப்படுமெனக் கூறப்பட்டாலும் அரச ஊழியரொருவர் அந்தக் காசை ஏப்ரல் மாத சம்பளத்திலேயே கண்ணில் காணமுடியும்.

முதல் மூன்று மாதங்களுக்கான முப்பதாயிரம் ரூபா நிலுவைத்தொகை ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 2024 ஆண்டு ஒக்டோபர்மாதத்திலிருந்து ஆறு மாதங்களுக்கு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக ஓய்வூதியக்காரர்களுக்கு 2500ரூபா அதிகரிப்பும் ஏனைய தங்கி வாழ்வோருக்கான நலன்புரிக் கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த 2019இலிருந்து தொடர்ச்சியாக அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அத்தனை பொருட்கள் சேவைகளின் விலைகளும் இருமடங்குக்கும் மேலாக உயர்ந்துள்ளன. விலைகள் அதிகரித்துச் செல்லும் வேகம் (பணவீக்கம்) தற்போது குறைவடைந்து சென்றாலும் 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இருமடங்குக்கும் மேலாக அதிகரித்த பொருட்களின் விலைகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி எதுவும் பதிவாகவில்லை. ஆகவே 2019இல் என்னசம்பளம் நிலவியதோ அந்தச் சம்பளம் இருமடங்காக அதிகரித்தால் மட்டுமே மக்கள் தமது கொள்வனவுச் சக்தியை தொடர்ந்து தக்கவைக்க முடியும்.




ஆகவே அரசு வழங்கியுள்ள சம்பள அதிகரிப்பு யானைப்பசிக்கு சோளப்பொரி போலத்தான் பார்க்கப்படும். ஆயினும் சுமார் 14 இலட்சம் அரச ஊழியர்களுக்கும் 6 இலட்சம் ஓய்வூதியக்காரர்கள் மற்றும் தங்கி வாழ்வோருக்கான கொடுப்பனவுகளை வழங்க அரசாங்கம் பாரியளவு நிதியை ஒதுக்க வேண்டியுள்ளதும் இன்றைய அரச நிதி நிலைமைகளில் அது மிகக் கடினமான ஒன்று என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் இந்த அதிகரித்த கொடுப்பனவுகளின் நன்மை மக்களுக்கு உண்மையிலேயே கிடைக்குமா என்பது சந்தேகத்திற்கு இடமானது. ஏனெனில் இந்த நன்மை மக்களுக்கு கிடைக்கத் தொடங்குவதற்கு முன்னதாகவே 2024 ஜனவரியிலிருந்து பொருட்கள் சேவைகள் மீதான பெறுமதி சேர்வரி 15 வீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரிக்கும்.

அத்துடன் முன்னர் வற் வரி அறவீட்டிற்கு உட்பட்டிருக்காத பல பொருட்கள் சேவைகள் அதில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. இதனால் பொருட்கள் சேவைகளின் விலைகள் ஜனவரியில் அதிகரிக்கும். ஏற்கெனவே மின்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இப்போது மின்சாரமும் வற்வரியின் கீழ் கொண்டு வரப்படுமாயின் உற்பத்திச் செலவுகளும் வியாபாரம் செய்வதற்கான செலவுகளும் பாரியளவில் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

எனவே மக்களுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணங்களின் பயன் பெயரளவினதாக மாத்திரமே இருக்கும். அது மட்டுமன்றி தனியார் துறையில் தொழில் புரியும் தொழிலாளர்களின் நிலை என்ன என்பது பற்றிய வினா தொடர்ந்தும் தொக்கி நிற்கிறது.

ஒரு புறம் அரச கொள்கைப் பிறழ்வுகள் காரணமாக ஏற்பட்ட பாரிய பொருளாதார வீழ்ச்சி தொடர்ந்தும் நீடித்துச் செல்கிறது. பொருளாதார வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

வழமைபோலவே அடுத்து வரும் மூன்று மாதங்கள் மிகக் கடினமாக இருக்கப் போகிறது என்கிறது அரசாங்கம். ஆனால் கடந்த இரண்டு வருடங்களில் எந்தக்காலம் கடினமாக இருக்கவில்லை என்று மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள். எதிர்வரும் காலமும் இதைவிடக் கஷ்டம் என்றால் எப்போது அது குறையும் என்று சொல்லுங்கள் என்று மக்கள் கேட்பது நியாயம் அல்லவா? ஒரு புறம் பொருளாதார வீழ்ச்சி மறுபுறம் சடுதியாக அதிகரித்துச் செல்லும் அரச வரிகள் மற்றும் மூலப்பொருள் மற்றும் இடைநிலைப் பொருள் விலைகள் எல்லாமாக ஒன்று சேர்ந்து இலங்கையில் வியாபாரம் செய்வதை மிகக்கடினமானதாக மாற்றியுள்ளது.

அதனால் தனியார் துறை தமது ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க வாய்ப்பில்லை. ஜோன் மொனார்ட் கெயின்ஸ் என்ற இருபதாம் நூற்றாண்டின் செல்வாக்கு மிக்க பொருளியலாளரின் கருத்துப்படி பொருளாதார வீழ்ச்சியில் சிக்கியுள்ள ஒரு பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் அதனை பொருளாதார வளர்ச்சிப்பாதையில் நிலை நிறுத்துவதற்கும் அரசாங்கம் தீவிரமான பங்களிப்பு செய்ய வேண்டும். அதன் போது மக்களுக்கு தமது நாளாந்த செலவீடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான வருமானம் கிடைப்பதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

அதனூடாகவே வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதார நடவடிக்கைகளை சீர்படுத்த முடியும் என்கிறார். ஆனால் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பிழையான பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாகவே ஏற்பட்டதென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆகவே இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் IMF இன் பரிந்துரைகளின் பேரில் மேற்கொள்ளப்படுவதாக தற்போது கூறப்படுகிறது.

ஆனால் தற்போது பின்பற்றப்படும் பொருளாதாரக் கொள்கைகள் பொருளாதாரத்தை மேலும் சுருங்கச் செய்யுமேயன்றி பொருளாதார நடவடிக்கைகளை விரிவாக்கச் செய்து மக்களின் வருமானத்தைப் பெருக்கி அதனூடாக அரசாங்கத்தின் வரிவருவாயை அதிகரிக்க முயற்சிக்க வேண்டுமேயல்லாது பொருளாதாரம் சுருங்கியுள்ள போது வரிகளைப் பெருமளவில் அதிகரித்தால் அரசாங்கம் எதிர்பார்க்கும் வருமான அதிகரிப்பைப் பெறமுடியாது. ஏனெனில் பொருளாதார நடவடிக்கைகள் மேலும் சுருங்குவதோடு மக்களின் வருமானம் குறைந்து அவர்களின் செலவிடும் ஆற்றல் குறையும்.

இதனால் எதிர்பார்க்கும் வரிவருவாய் கிடைக்காது. அது மட்டுமன்றி ஒரு வரவு செலவுத்திட்டம் ஒரு வருட காலப்பகுதிக்கானது. அதை வைத்துக் கொண்டு நீண்ட கால இலக்குகளை அடைய முயற்சிப்பது பொருளாதாரச் சுருக்கத்தை மேலும் நீடிக்கச் செய்யுமேயன்றி அதிலிருந்து மீட்சியடைய அது ஒரு போதும் உதவாது.

கேயின்ஸைப் பொறுத்தவரை அரசாங்கம் பொருளாதார மந்த காலங்களில் தமது செலவீடுகளை அதிகரிப்பதனூடாக மக்களின் கொள்வனவுச் சக்தியைப் பெருக்க வேண்டும். வரிகளை முடிந்தளவில் குறைக்க வேண்டும். வரவு செலவுத்திட்டத்தை ஒருவருடத்திற்குரிய திட்டமாக அமுல்படுத்த வேண்டும்.

அடுத்த வருடம் முன்னைய வருட வரவு செலவுத்திட்டத்தின் அடையப்பட்ட இலக்குகள் பரிசோதிக்கப்பட்டு அதன் குறைபாடுகள் களையப்படவேண்டும். ஒருவரவு செலவுத்திட்டத்தை நீண்டகால பொருளாதார இலக்குகளை அடைவதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்த முடியாது.

ஏனெனில் நீண்டகாலத்தில் நாம் அனைவரும் இறந்துவிடுவோம். ஆகவே இப்போதைய தேவை முதலில் மக்களை இந்த நெருக்கடியிலிருந்து மீட்பதற்கான உடனடிக்கொள்கைத் திட்டங்களே தவிர, கனவு வேலைத்திட்டங்களல்ல.

சீன –அமெரிக்கத் தலைவர்கள் சந்திப்பு

# தாய்வான் விவகாரத்தில் அமெரிக்க தலையீட்டை குறைக்குமா?



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

சர்வதேச அரசியல் பரப்பானது வியத்தகு மாற்றங்களை அடைந்து வருகிறது. சவூதி அரேபியாவில் இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள் ஒன்றிணைந்துள்ளனர், சீன ஜனாதிபதி அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார், ஹமாஸ் இஸ்ரேல் தாக்குதல், எல்லையற்ற மனித அவலத்தை தந்துள்ளமை குறிப்பிடத்தக்க அரசியல் நிகழ்வாக அமைந்துள்ளது. மறுபக்கத்தில் இஸ்ரேலிய இராணுவமும் அதன் புலனாய்வுத் துறையின் குழப்பகரமான தகவல்களும் ஹமாஸின் உத்திகளும் என புதிய உலகத்தை நோக்கி அரசியல் நகர்கிறது. மிக நீண்டகாலமாக இஸ்ரேலிய புலனாய்வுத் துறையான மொஸாட் அமைப்பு உலகளாவிய ரீதியில் அதிக முக்கியத்துவம் பெற்ற நிலையிலிருந்து தோல்விகளை நோக்கி செயல்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழ ஆரம்பித்துள்ளன. ஹமாஸ் அமைப்பின் செப்டெம்பர் 7 தாக்குதலை மொஸாட்டினால் கண்டறிய முடியவில்லை என்பது போல் தற்போது அல்ஷிபா மருத்துவமனையில் ஹமாஸின் கட்டளை பீடம் இயங்குவதாகவும் பணயக்கைதிகளை அங்குதான் ஹமாஸ் வைத்துள்ளதாகவும் மொஸாட் தெரிவித்திருந்த போதும் தற்போது எதுவுமற்ற நிலையில், இஸ்ரேலிய இராணுவம் வைத்தியசாலையை சூழ்ந்துள்ளது. உலகத்திற்கு ஒரு போலியான தகவலை வழங்குவதில் மொஸாட் மட்டுமல்ல அமெரிக்காவின் சி.ஐ.ஏ.வும் பங்காற்றியதாக தெரிகிறது. இக்கட்டுரையும் சீன, அமெரிக்க உறவில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை தேடுவதாக அமையவுள்ளது.

15.11.2023 சான்பிரான்ஸ்சிஸ்கோவில் நடைபெற்ற ஆசிய, பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்த சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்து உரையாடியுள்ளார். இத்தகைய சந்திப்பின் முக்கியத்துவம் அதிகம் உலகளாவிய ரீதியில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. இரு நாட்டுக்குமான பொருளாதார அரசியல் மற்றும் இராணுவ ரீதியிலான முறுகல் அதிகம் நீடிக்கும் நிலையில் இத்தகைய சந்திப்பு நிகழ்ந்துள்ளமை முக்கியத்துவம் பெறுவதற்கு காரணமாக உள்ளது. இச்சந்திப்பில் இரு நாட்டு தலைவர்களும் இராஜதந்திரிகளும் உரையாடிய முக்கிய விடயங்களை நோக்குவது அவசியமானது.

பொருளாதார வர்த்தக ரீதியில் இரு நாட்டக்குமான பரிவர்த்தனைகளை மீள ஆரம்பிப்பதென்ற முடிவை எடுத்துள்ளதுடன், கடந்த காலத்தில் கைவிடப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளை மீள தொடங்குவதற்கான உரையாடல்களை தொடர்வதாக முடிவாகியுள்ளது. குறிப்பாக செயற்கை நுண்ணறிவு விடயத்தில் ஏற்பட்ட தடைகளை மீளமைக்க தொடர்ச்சியாக உரையாடுவதாக இரு நாட்டுத் தலைவர்களும் அறிவித்துள்ளனர். சீனாவின் பொருளாதார வளர்ச்சி மட்டுமன்றி அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சியிலும் காணப்பட்ட வேகம் 2019 களுக்கு பின்னர் படிப்படியாக குறைவடைந்துள்ளது. அதனை சரிப்படுத்துவதில், இரு நாட்டுத் தலைவர்களும் கவனம் செலுத்தியதை காணக்கூடியதாக இருந்தது. இரு நாட்டுக்குமான பொருளாதார ஒத்துழைப்பினை இச்சந்திப்பு ஏற்படுத்தும் என்ற எதிர்பார்க்கை இரு நாட்டு இராஜதந்திரிகளுக்கும் இருந்துள்ளது என்பதை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக வர்த்தக ரீதியில் ஒத்துழைப்பினைக் கூட்டுவது ஏற்கனவே நின்றுபோன ஏற்றுமதி, இறக்குமதிக்கான நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது என்பன இரு நாடுகளாலும் உரையாடப்பட்டு தீர்மானிக்கப்பட்டள்ளன.

அவ்வாறே உலகளாவிய பிணக்குகள் தொடர்பில் இரு நாட்டுத் தலைவர்களும் உரையாடியுள்ளதாக தெரியவருகிறது. ஆனால் அதற்கான முக்கியத்துவத்தை விட பொருளாதார உறவுக்கான முக்கியத்துவமே அதிகமாக இருந்துள்ளது. அதனைக்கடந்து உக்ரைன் ரஷ்யப் போர் பற்றியோ, ஹமாஸ், இஸ்ரேலிய அமெரிக்க கூட்டுப் போர் பற்றியோ அதிக முக்கியத்துவம் இரு நாட்டுத் தலைவர்களது உரையாடலிலும் இருந்ததாக கூறிவிட முடியாது. அந்தளவுக்கு, சீனா உலகளாவிய போர் விடயங்களில் முக்கியத்துவம் பெறும் நாடாக தன்னைக் காட்டிக் கொள்வதில் கவனமாக செயல்படுகிறது. இரு போர்களிலும் மறைமுகமாக செயல்படுகின்றதே அன்றி நேரடியான எதிர்வினையை ஆற்றும் திறனை சீனா வெளிப்படுத்தவில்லை என்றே குறிப்பிடலாம். ஆனால் இத்தகைய போர்கள் எந்தளவுக்கு இரு நாட்டின் பொருளாதாரத்தையும் பாதித்துள்ளது என்பதில் கவனம் கொண்ட நாடாகவே சீனா காணப்படுகிறது. சீனாவின் தற்போதைய உலகளாவிய இலக்கு பொருளாதாரமே. அதன் வளர்ச்சியே இராணுவ அரசியல் விடயங்களில் சீனாவை பலமடையச் செய்யும் என்ற தெளிவான கருதுகோளுடன் செயல்படும் நாடு சீனா. அதற்கு அமைவாகவே உலகளாவிய ரீதியில் சீனாவின் அரசியல் நகர்த்தப்படுகிறது.



இதனோடு இந்தோ, பசுபிக் பொருளாதாரப் பிரச்சினை, மருத்துவம், காலநிலை மாற்றம் தொடர்பிலும் இரு நாட்டுக்கும் முக்கிய உரையாடல் நிகழ்ந்துள்ளது. அதிலும் ஈரான் விடயம் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன. மேற்காசியாவில் ஈரானின் நடவடிக்கைகளை அதிகம் எதிர்நோக்கும் நாடுகளில் அமெரிக்காவும் ஒன்றாகும். அது இஸ்ரேலுக்கு மட்டுமல்ல அமெரிக்காவுக்கும் நெருக்கடியான நிலையை கொடுப்பதாகவே அமெரிக்க நகர்வுகளும் உரையாடலும் அமைந்துள்ளதாகத் தெரியவருகிறது. காரணம் ஈரானுடனான நெருக்கமான உறவை கொண்டுள்ள சீனாவின் நடவடிக்கையை கட்டுப்படுத்தவும், கண்டிக்கவும் அமெரிக்கத் தலைவர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தியிருந்தமை கண்டு கொள்ள முடிந்தது. இவை எல்லாவற்றுக்கும் அப்பால் தாய்வான் விடயத்தில் இரு நாட்டுத் தலைவர்களும் அதிக முக்கியத்துவம் கொடுத்து உரையாடியதாக தகவல்கள் உண்டு. அதற்கான முக்கியத்துவமே இரு நாட்டு தலைவர்களது உரையாடலுக்கும் அடிப்படை என்ற விவாதம் உள்ளது. அதனை விரிவாக தேடுவது அவசியமானது.

ஒன்று, தாய்வான் தொடர்பில் அமெரிக்காவின் நகர்வுகள் அதிகம் இரு நாட்டுக்குமான விரிசலை அதிகரித்திருந்தது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அமெரிக்காவின் இராணுவ உதவிகளும் பொருளாதார ஒத்துழைப்பும் தாய்வான் இருப்பினை பலப்படுத்தி வருகிறது. அமெரிக்காவுக்கும் தாய்வானை முதன்மைப்படுத்திக் கொள்வதன் வாயிலாக சீனாவை கட்டுப்படுத்த முடியும் என்பதைக் காட்டிலும், அமெரிக்க, ஆசிய, பசுபிக் வர்த்தக மற்றும் இராணுவ போக்குவரத்துக்கான வாய்ப்புக்களை பாதுகாப்பதற்கும் அவசியமானது. அத்தகைய வாய்ப்புக்களை பலப்படுத்த வேண்டுமாயின் தாய்வான் அமெரிக்க உறவு பலமானதாக அமைந்திருத்தல் வேண்டும். அது தனித்து சீனாவுக்கு நெருக்கடி கொடுப்பதல்ல. மாறாக அமெரிக்க இராணுவ பலத்தை தக்கவைப்பதாகவே உள்ளது. இதனால் அமெரிக்க தாய்வான் உறவு பிராந்திய பொருளாதார இராணுவ ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே உள்ளது.

இரண்டு, தாய்வானின் புவிசார் அரசியல் சீனாவுடனான போருக்கு வாய்ப்பான களத்தை தாக்கக்கூடியதாக உள்ளது. அதனால் தாய்வானை மையப்படுத்தி ஒரு போரை அமெரிக்க திறக்குமாயின் அதன் விளைவு சீனாவுக்கு ஆபத்தானதாக அமையும். சீனாவின் இராணுவத் திறனுடன் தாய்வானை ஒப்பிட்டால் சீனாவுக்கு தாய்வானை கைப்பற்ற ஓரிரு மணித்தியாலங்கள் போதுமானது. ஆனால் அதற்கான அணுகுமுறையல்ல தாய்வான் விடயம். அதன் புவிசார் அரசியல் இருப்பு, போரை நீடிக்கவும் தாக்குப்பிடிக்கவும் உதவக் கூடியது.

அதனால் உலகம் ஒரு பாரிய மாற்றத்திற்கு நகரும் போதோ, அல்லது அமெரிக்கா பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போதோ, சீனா தாய்வானைக் கைப்பற்ற முனையும். அதற்கு முன்பான போர், சீனாவின் அனைத்து வளர்ச்சியையும் பாதிப்பதாகவே சீனார்கள் கருதுகின்றனர். அதனால் இந்தப் போரை தடுப்பதிலும் காலம் தாழ்த்துவதிலும் சீனாவின் நகர்வு அடிப்படையானதாகவே அமையும்.

மூன்று, அண்மைய உலகளாவிய அரசியலில் அமெரிக்கா சிறிய போர்களையும் போர்க்களங்களையும் உருவாக்குவதிலும் கவனம் கொள்கிறது. அமெரிக்கா மற்றும் மேற்குலகத்தால் திறக்கப்பட்ட களமாகவே உக்ரைன், ரஷ்ய போர் அமைந்திருந்தது. அடிப்படையில் அந்தப் போரில் எந்தத் தரப்பும் வெற்றி கொள்ளாத போதும் ரஷ்யா வெற்றி கண்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. ஆனால் பொருளாதாரத்தில் ரஷ்யா பாரிய நெருக்கடியை போரால் எதிர் கொண்டுள்ளது. அவ்வாறான நிலையை நோக்கியே இஸ்ரேலிய பொருளாதாரம் மட்டுமல்ல அதன் புலனாய்வு மற்றும் இராணுவ நகர்வுகள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. இத்தகைய செய்முறைக்கான நகர்வு தாய்வான் பரப்பிலும் ஏற்பட்டால், சீனாவின் பொருளாதாரப் பாய்ச்சல் மற்றும் 2070ஆம் ஆண்டில் சீனாவின் இலக்கு என்பன காணாமல் போய்விடும் என்பதே இரு தரப்புக்குமான சந்திப்பின் அடிப்படையாகும். சீனாவைப் பொறுத்தவரை தாய்வான் தனது நிலம் என்பதற்கு அப்பால் அதனை கைப்பற்றுவதற்கான சந்தர்ப்பம் இதுவல்ல எனக் கருதுகிறது. அதனால் தாய்வான் பரப்பில் ஒரு போருக்கான வாய்ப்பினை முடிவுக்கு கொண்டுவருவதையே நோக்கமாகக் கொண்டு அமெரிக்க, சீன உறவை கையாள முனைகிறது. அதன் எல்லை மீறும் போது அதனைக் கண்டு கொள்ளாது இருக்காது என்பதும் அதன் இன்னோர் செய்தியாக அமைந்துள்ளது.

எனவே சீன, அமெரிக்கத் தலைவர்களது சந்திப்பு உலகளாவிய விடயங்களை விட இரு நாட்டுக்குமான பொருளாதார மற்றும் வர்த்தக உறவைப் பலப்படுத்துவதுடன் தாய்வான் விடயத்தில் அமெரிக்காவின் தீவிரத்தன்மையை குறைப்பதாகவே தெரிகிறது. உலகளாவிய விடயங்களில் சீனாவின் போக்கும் அதன் தலைமையின் அணுகுமுறையும் வேறுபட்டது.

சீனா உலகளாவிய அரசியல், இராணுவ விடயங்களில் அதிகம் மௌனமாகவே செயல்படுகின்றது. அதன் உலகம் வேறானதாகவே உள்ளது. எல்லாவற்றிலும் மறைமுகமாக இயங்க முனைகிறது. தனக்குரிய காலத்தை நோக்கி மட்டுமே சீனா நகர்வதாக தெரிகிறது. அவ்வப்பொது சீனாவுக்கு ஏற்படும் நெருக்கடிக்கு எதிர்வினையாற்றுவதிலேயே கவனம் கொண்டு செயல்படுகிறது.



இரண்டாவது பயணமாக இருந்தது. 1977 பொதுத் தேர்தலுக்கு 12 வருடங்களுக்குப் பின்னர் 1989 இல் அவர் மீண்டும் பாராளுமன்றத்திற்குத் திரும்பினார்.

மஹிந்த ராஜபக்ஷவின் அனைத்து வெற்றிகளுக்கும் அவரது வீட்டில் விவாதம் நடந்தது என்பதில் சந்தேகமில்லை. இதில் கலந்து கொண்டவர்கள் கலாநிதி வில்லி கமகே, கே. எச். அது. கொடவத்த, டி. ஜயசிங்க, தர்மன் விக்கிரமரத்ன, எஸ். சஹபந்து, அமரசிங்க குடகலர, ஜஸ்டின் திஸாநாயக்க, சமல், மஹிந்த மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோர் மகிந்த ராஜபக்சவின் அரசியல் வாழ்வின் விசேட அம்சம் என்னவென்றால், லிகளும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களும் அவர்களின் அடிவருடிகளும் அதை விரும்பவில்லை. மஹிந்த தன் வாழ்நாளிலேயே தனது மகத்துவத்தைப் பெற்றுக் கொண்டார். இருள் என்பது விடியலின் ஒரு பகுதியாகும். இரவைக் கடக்காமல் எவராலும் விடியலை நோக்கி பயணிக்க முடியாது. சூரியன் மேற்கில் மறைவது உண்மைதான். ஆனால் அது கிழக்கிலிருந்து நாளை காலை மீண்டும் எழும்.

மஹிந்த தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவராகும். அத்துடன் எந்த ஒரு சவாலுக்கும் தைரியமாக முகங்கொடுப்பவராகும். நன்றிக்கு சிறந்த உதாரணமாக இருப்பதும்

# தாய்நாட்டைக் காப்பாற்றிய பெருமைக்குரிய தலைவர்

அரசாங்கத்தினால் புதிய அரசியலமைப்பு 1972ம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட போது அந்தப் பிரேரணை தொடர்பான ஆரம்ப யோசனையை 1970 ஜூலை மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது மஹிந்த ராஜபக்ஷவாகும். தற்போதைய பாராளுமன்றத்தின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினராக இருப்பவரும் அவரேயாகும். 1970ம் ஆண்டு தேர்தலில் பெலியத்தையிலிருந்து அவருக்கு ஆச்சரியமிக்க ஒத்துழைப்பு கிடைத்தது. அதனை 2010ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுடன் மாத்திரமே சமப்படுத்த முடியும்.

விஷேடமாக அவர் ஒரு இளைஞராக இருந்ததும், தந்தையின் வழியிலான அரசியல் வாழ்வும் அதற்கு காரணமாக அமைந்தன. 1970ஆம் ஆண்டில் 80 வீதமான சிறியளவிலான பிரசாரக் கூட்டங்களே நடைபெற்றன. எல்லா கூட்டங்களிலும் சுமார் 250 பேரளவில் கலந்து கொண்டிருந்தனர். பெரியவர்கள் அவரை மஹிந்த மஹத்தயா என்றே அழைத்தார்கள். இளைஞர்களுக்கு அவர் அண்ணன் அல்லது தம்பியாக இருந்தார். எல்லா கூட்டங்களின் மேசைகளிலும் குளிர்பான போத்தல்களும், சிறிய கேக் துண்டுகளும் இருந்தன. கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரே அவர் ஏற்பாட்டாளர்களுடன் சேர்ந்து அவற்றை ருசி பார்த்துவிடுவார்.

மஹிந்த ராஜபக்ச 1989ம் ஆண்டு பொதுத் தேர்தலை எதிர்கொண்டது அவரது அரசியல் வாழ்க்கையின் எந்தவொரு நெருக்கடியான சூழ்நிலையிலும் அவர் தைரியமிழக்காததாகும். தடைகளைக் கண்டு மனம் தளர்ந்து போகமாட்டார்.

பகவத் கீதையில் குறிப்பிட்டுள்ளபடி, அவர் செயற்பட்டது அதனால் கிடைக்கும் பெறுபேற்றை எதிர்பார்த்து அல்ல. அவர் தன்னைப் புரிந்து கொண்டார்; தனது எதிரியையும் புரிந்து கொண்டார். ஆயிரம் போராட்டங்களைச் செய்து ஆயிரம் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டார். என்றாலும் நண்பர்கள் வேடத்திலிருந்த எதிரிகளை இனங்கண்டு கொள்ள முடியாமல் போனது.



இலங்கையின் வளங்கள் ஏராளமாக உள்ளது என்பதையும், மக்கள் புத்திசாலிகள் என்பதும் மகிந்தவின் நோக்காக இருந்தது. மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக அரச சேவை விரிவுபடுத்தப்பட்டது.

நாட்டின் அபிவிருத்திக்கு அனைத்து துறைகளையும் மஹிந்த இணைத்துக் கொண்டார். ஹத்மாலு, மாத்தறையில் அம்புல்தியல், புத்தளத்தில் கத்தரிக்காய் மோஜு, யாழ்ப்பாணத்தில் ஆட்டிறைச்சி வறுவல், கெக்கிராவவில் குரக்கன் மா என பலவேறு வகையான உணவுத் தேர்வுடையவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக ஆகினர். முப்பது வருட யுத்தத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தார். என்றாலும் தமிழ் பிரிவினைவாதிகளும் அவர்களின் கைக்கூ மஹிந்த போன்றவர்களாகும்.

உலகின் முக்கிய தலைவர்கள் இரண்டு தரப்பினராகும். அதில் ஒரு வகையினர் தாம் முன்னெடுத்துச் சென்ற பணிகளிலிருந்து நீங்கிய பின்னரும் பின்தொடர்பவர்களால் அவற்றைச் செய்பவர்களாகும். சிங்கப்பூரின் லீ குவான் யூ, தென்னாப்பிரிக்காவின் நெல்சன் மண்டேலா, மலேசியாவின் மஹதீர் முகம்மது, மற்றும் மஹிந்த ராஜபக்ச ஆகியோரும் அந்த தரப்பினைச் சேர்ந்தவர்களாகும். கொழும்பு துறைமுக நகரத் திட்டம், கண்டி அதிவேக நெடுஞ்சாலை, கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி என மஹிந்தவின் அனைத்துத் திட்டங்களும் இன்றும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

**தர்மன் விக்ரமரத்ன**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

# தற்போதைய நெருக்கடியில் இருந்து மீள பொருளாதார தீர்வுகள் மாத்திரமே அவசியம்!



## அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து மீள, அரசியல் தீர்வுகள் பயனற்றவை என்றும், பொருளாதாரத் தீர்வுகளே அவசியம் எனவும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

> கடன் மறுசீரமைப்பு மூலம் தீர்வைப் பெறுவதற்கு ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணை கிடைத்ததன் பின்னர், தடைப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன,

“ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க வரலாற்று சிறப்புமிக்க, புரட்சியான ஒரு வரவு செலவுத்திட்டத்தையே இம்முறை சமர்ப்பித்துள்ளார். இது வங்குரோத்து அடைந்ததாக உத்தியோகபூர்வமாக அறிவித்த ஒரு நாட்டின் வரவு செலவுத் திட்டமாகும். வேறு எந்தவொரு நிதி அமைச்சரும் வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்கும்போது இவ்வாறான தொரு நிலைமை நாட்டில் இருக்கவில்லை.

இந்நாடு, பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு தர்க்க ரீதியிலான பிரதான இரண்டு காரணங்களே உள்ளன. முதலாவது, அரச வரவு செலவுத் திட்டத்தில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை. இரண்டாவது, சர்வதேச கொடுப்பனவுக் கையிருப்பின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை ஆகியவை ஆகும்.

நாட்டின் அன்றாட செயற்பாடுகளுக்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நிர்வாக செலவுகளுக்கு போதுமான அளவு நிதி இல்லாமை மற்றும் இறக்குமதிகளுக்கு ஏற்ப ஏற்றுமதி வருமானம் இல்லாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்தப் பற்றாக்குறைகள் ஏற்படுகின்றன. கடந்த காலங்களில் அனைத்து அரசாங்கங்களும் பின்வரும் மூன்று பிரதான வழிமுறைகளின் ஊடாக இந்தப் பற்றாக்குறைகளை ஈடுசெய்துள்ளன. முதலாவது, தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கடன்களைப் பெற்றுக்கொள்ளல். இரண்டாவது, அரச சொத்துக்களை விற்பனை செய்தல். மூன்றாவது, இவை இரண்டும் போதுமானதாக இல்லாதவிடத்து பணத்தை அச்சிடுதல் ஆகும். அரச நிதி தொடர்பான அனைத்து முகாமைத்துவ அதிகாரமும் பாராளுமன்றத்திற்கே உள்ளது.

> இந்நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு தர்க்க ரீதியிலான பிரதான இரு காரணங்களே உள்ளன.

இவ்வாறு பற்றாக்குறை தொடர்ந்தும் ஏற்பட்டு, நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்லாமல் இருப்பதற்காக கடந்த காலங்களில் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. துரதிஷ்டவசமாக அண்மைய வருடங்களில் இந்த சட்டங்களுக்கேற்ப செயற்படாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது.

நிதி முகாமைத்துவம் தொடர்பில், அன்று ஆட்சியில் இருந்த அரசாங்கம் தோல்வி கண்டதையடுத்தே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவியேற்று, இந்த நெருக்கடியைத் தீர்க்க முன்வந்தார். இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் போன்ற பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் கலந்தாலோசித்து இதற்குப் பொருத்தமான தீர்வாக கடன் மறுசீரமைப்பு மூலம் தீர்வைப் பெறுவதற்கு ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டார்.

இவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படாமல் இருக்க, பின்வரும் நான்கு முக்கிய நோக்கங்களைக் கருத்திற்கொண்டு 2024 வரவு செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இயலுமான அளவு அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ளல், அரசாங்கத்தின் மூலதனச் செலவுகள் மற்றும் நிர்வாகச் செலவுகளைக் குறைத்தல், ஏற்றுமதி மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் அந்நிய செலாவணியை அதிகரித்தல், இறக்குமதிக்காக செலவிடப்படும் அந்நிய செலாவணியைக் குறைத்தல் ஆகிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக சர்வதேச கொடுப்பனவுகளில் நடைமுறைக் கணக்கு மேலதிகக் கையிருப்பு மீதியைப் பேணுவதன் மூலம் அதில் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

2024 வரவு செலவுத்திட்டம் மூலம் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களின் சம்பளத்தை அரசாங்கத்தின் பிரதான வருமான மூலமான அரச வரி வருமானத்தில் இருந்துதான் வழங்க வேண்டும் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

# தினகரனின் ஊடக அனுசரணையில் கட்டாரில் விருது வழங்கும் விழா

## 30ஆம் திகதி அசோகா மண்டபத்தில்




கட்டாரில் தொழில் செய்யும் இலங்கை மற்றும் இந்திய ஆளுமைகளை "ஸ்கை தமிழ் விருது" வழங்கி கௌரவிக்கும் விழா எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு டோஹகா கட்டாரில் உள்ள இந்திய கலாசார நிலையத்தின் அசோகா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையில் இடம்பெறும் இவ்விழாவில், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர், தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளார்கள். கட்டாரில் பணிபுரிந்து கொண்டே தங்களது திறமைகளை வெளிக்காட்டி வரும் கலைஞர்கள், புகைப்படப்பிடிப்பாளர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், அறிவிப்பாளர்கள், இளம் கண்டுபிடிப்பாளர்கள் ஆகியோர் இங்கு விருது வழங்கி கௌரவிக்கப் படவுள்ளார்கள். இதற்கான விண்ணப்பம் ஒகஸ்ட் மாதம் கோரப்பட்டிருந்தது. 2023.08.10ஆம் திகதி விண்ணப்பம் கோரும் விபரங்கள் தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# கலாநிதி ஹஸன் மௌலானாவுக்கு ஸ்ரீலங்கா ஷரிஆ கவுன்சில் தலைவர் வாழ்த்து!

ஐக்கிய நாடுகள் சமாதான தூதுவர்கள் பேரவையின் உறுப்பினராக அண்மையில் நியமிக்கப்பட்ட இலங்கை தேசிய ஐக்கியத்திற்கான சர்வமத கூட்டமைப்பின் முஸ்லிம் விவகார சம தலைவர் அஷ்ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்காதிரியை, ஸ்ரீ லங்கா ஷரிஆ கவுன்சிலின் ஆயுட்கால தலைவரும், பஹ்ஜதுல் இப்ராஹீமியா அரபுக் கல்லூரியின் பணிப்பாளருமான அஷ்ஷெய்க்ஹ் தேசமான்ய ஹஸ்புல்லாஹ் அப்துல் காதிர் பஹ்ஜி உத்தியோகபூர்வமாக சந்தித்து பொன்னாடை போர்த்தி தனது வாழ்த்துகளை தெரிவித்தார். இந்நிகழ்வில் பஹன மீடியாவின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ்ஷெய்க்ஹ் அப்துல் முஜீப், ஜாமிஉல் கைராத் மஸ்ஜித் பிரதம இமாம் அஷ்ஷெய்க்ஹ் ஏ.எச். எம். மஹ்தி ரவ்லி மற்றும் நிவ்ஸ் நவ் மீடியாவின் பிரதம ஆசிரியர் பியாஸ் முஹம்மத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# கலாநிதி ரெவான்ட் விக்ரம் சிங்கின் மெச்சத்தக்க மக்கள் சேவை





கலாநிதி ரெவான்ட் விக்ரம் சிங் முன்னாள் கொழும்பு ஸ்வாமி விவேகானந்தா கலாசார மையத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். இலங்கையில் ஒரு பிரபலமிக்கவராக இன்றும்ள விளங்குகின்றார்.

தற்பொழுது மும்பாயிலுள்ள மஹரிஷி தயானந் கலை விஞ்ஞான வர்த்தக கல்லூரியின் வரலாற்றுப் பகுதியின் தலைவராக பணி புரிந்து வருகின்றார். கலாநிதி சிங். ஆகஸ்ட் 2019 ஆம் ஆண்டு கொழும்பு சுவாமி விவேகானந்தா கலாசார மையத்தின் பணிப்பாளராகப் பொறுப்பேற்று 2022 வரை பணிபுரிந்தார். கொவிட் 19 சர்வதேச தொற்று பரவலாகப் பரவிய காலகட்டத்தில் பாரிய சவால்களை அவர் எதிர்கொண்டாலும் தன் கடமைகளைத் துடிப்புடனும் முனைப்புடனும் செவ்வனே நிறைவு செய்தார். ஒரு பரவலான சமூக கலாசார சமய வலைப்பின்னலை பிரகடனப்படுத்திய கலாநிதி சிங் தனது கடமைகளை ஒழுங்காக முறையாக ஒப்பேற்றினார். பொருளாதார சுமையில் இலங்கை சிக்குண்டு கிடந்த காலகட்டத்தில பத்து மாணவர்களைத் தேர்ந்தெடுத்து தனது சுயமுயற்சியால் முற்றிலும் இலவசமாக கற்பதற்கு பாரதத்தின் ஆந்திர பிரதேசத்திலுள்ள ஒரு பிரபலமான பல்கலைக்கழகத்தில் ஒழுங்கு செய்து அவர்களின் மேற்படிப்பிற்கு வழிவகுத்தார். ஜாதக கதைகளை ஒலிப்புத்தகம் மூலம் சிங்களத்தில் பார்வை அற்றோருக்காக கலாநிதி சிங் உருவாக்கினார். கிராம யாத்திரைகள் மூலம் இந்திய இலங்கை இருதரப்பு உறவையும் இரு நாடுகளுக்கு இடையான புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காகவும் ஏறத்தாள இருபத்தைந்து கிராமங்களுக்குச் சென்று சந்தித்தார். அத்துடன் பௌத்த விகாரைகள் பிரிவினாக்களுக்கும் சென்று அவ்வவ்வூர் மக்களையும் சமயக் குருமார்களையும் சந்தித்து இலங்கை இந்திய உறவுப்பாலத்தை மேலும் பலப்படுத்தினார். மேலும் பௌத்த அண்மையில் மஹாவம்சத்தை மேலதிக குறிப்புகளுடன்ப்ரெ யிலில் வெளியிட்டு பார்வையற்றோருக்கு வழங்கினார். இது உலகனைத்திலும் உள்ளோருக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இவரின் அற்புதமான சேவையை சிறப்பிக்குமுகமாக மகாபோதி சங்கம் “ஸ்ரீ லங்கா தேசாபிமானி ஜனரங்கன்” எனும் கௌரவ பட்டத்தை அநாகரிக தர்மபாலவின் பிறந்தநாள் நினைவு தினத்தன்று பிரதம மந்திரி மூலம் இவருக்கு வழங்கி கௌரவித்து.

“சர்வோதய சர்வதேச ஒத்துழைப்பு விருது” இவருக்கு 15.08.2023 இல் வழங்கப்பட்டது. இலங்கை இந்த சுதேசிய இயக்கமானது பல திட்டங்களை மக்களின் நல்வாழ்வுக்காக வழங்கி வருகின்றது. இன்று ஏறத்தாள 150000 கிராமங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தை பரோபகாரியும் சமூக முன்னேற்றவாதியும் சர்வதேச சமூக சேவையாளருமான கலாநிதி ஆரியரட்ன 1958ஆம் ஆண்டு தொடங்கிவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அண்ணளவாக இன்று நூறு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுகின்றனர். கலாநிதி சிங் பாரதத்தை தனது ஜன்மபூமி என்றும் இலங்கையை தனது கர்மபூமி என்றும் குறிப்பிடுவார். தனது மெச்சத்தக்க சேவை மூலம் இலட்சக்கணக்கான இலங்கை மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளார் என்றால் அது மிகையாகாது.

# கலைக்கமலின் இசைமுரசு பாடல்கள்

## இம்மாதம் 25 ஆம் திகதி இரவு



காலி சோலை நீலக் குளத்தடி ஸிந்தார் ஷேக்மதார் ஒலியுல்லாஹ் தர்கா ஷெரீப்பின் 138 ஆவது வருடாந்த மனாகிப் மஜ்லிஸ் சிறப்பு நிகழ்ச்சிகள் மௌலவி மிஸ்ருள் லாஹிர் ஜிப்ரி தலைமையில் நடைபெற்றுவருகின்றன. எதிர்வரும் 26 ஆம் மனாகிப் தமாம் கந்தூரி நடைபெறவுள்ளது.

25ஆம் திகதி இரவு கொழும்பின் பிரபல கஸீதா குழுவினரான மஹ்தூமி கஸீதா குழுவினரின் இஸ்லாமிய கீதங்கள் நிகழ்ச்சி சிறப்பம்சமாக இடம்பெறவிருக்கிறது.

ஜனரஞ்சகப் பாடகர் ஈழத்து இசைமுரசு கலைஞர் கலைக்கமல் இசைமுரசு நாகூர் ஹனிபாவின் பல பாடல்களைப் பாடவிருக்கின்றார்.




எழுத்தாளர் ராணி சீதரன் எழுதிய சிறுகதை தொகுப்பான 'கடவுள் தான் அனுப்பினாரா' நூல் இன்று 19/11/2023 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு சங்கானை கலாசார மண்டபத்தில் வெளியிடப்படுகின்றது. ஐ. சாந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. கிருஷ்ணகுமார் பிரதம அதிதியாக் கலந்துகொள்வார். நூல் அறிமுகத்தை சபா.தனுஷன் மேற்கொள்ள நூல் நயவுரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன் வழங்குவார்.

# ஹரீஷின் இசை நிகழ்ச்சி



இசைக்கலைமணி ஹரீஷ் ஸ்ரீதரனின்(சுவிஸ்) இசைநிகழ்வு(பாட்டு)எதிர் வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் எஸ். திபாஹரன் (வயலின்), அபிநவ் ரட்ணதுரை (மிருதங்கம்). ரட்ணம் ரட்ணதுரை(மோர்சிங்) ஆகியோர் அணிசேர் கலைஞர்களாக கலந்து கொள்வர். ஹரீஷ் ஸ்ரீதரன் சங்கீதாலயம் அதிபர் ஆறுமுகம் செகசோதியின் மாணவனும், ஸ்ரீதரன் தங்கராஜா கலாநிகேதன் நடனப் பள்ளி(சுவிஸ்)அதிபர் கிருஷ்ணபவானி ஸ்ரீதரன் ஆகியோரின் மகனுமாவார்.

இவர் அனைத்து உலகத் தமிழ்க் கலை நிறுவகத்தால் நடத்தப்படும் மாபெரும் இசை போட்டியான இசைக்குயில் போட்டியில் பங்குபற்றி 2022ஆம் ஆண்டு இசைக்குயில் விருதினையும் மேற்படி நிறுவகத்தால் நடத்தப்படும் இசைப் பரீட்சைகளில் தோற்றி மிருதங்கம் வாய்ப்பாட்டு முதலியவற்றில் ஆசிரியர் தரம் வரை சித்தி அடைந்து டிப்ளமோ பட்டமும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.




## மன்னிக்க மாட்டோம்



குருதி வழிந்து
குற்றுயிராய்க் கிடந்தாலும்
கொண்ட கொள்கை
விடமாட்டோம்
அடக்குமுறை கண்டு
அஞ்சவில்லை நாமும்
அல்லாஹ்வின் உதவி வரும்
அதுவரையும் காத்திருப்போம்!
ஆதரவற்ற அநாதைகளாய்
அலைந்து திரிந்த யூதர்களே
நாம் செய்த நன்றியை
மறந்து விட்டீர்
கண நேரத்தில்
சிறுவர் பெரியோரெல்லாம்
சிந்தும் கண்ணீர்
ஆறாய் ஓடுவதை
நீ பார்க்கவில்லையா!
பலஸ்தீனம் தாய்ச்சொத்து
என்றொருநாள்
அதை மீட்போம்
யூத வெறித்தனம்
செய்த பாவத்தை
மன்னிக்கவும் மாட்டோம்!
குர்ஆனைச் சுமந்த
ஹாபிழ்கள் நாம்
இறந்தாலும் மடிந்தாலும்
சுவர்க்கம் தான் எமக்கு!
வெற்றி பெறுவோம்
வீரக் கொடியேந்துவோம்
இறையுதவி வேண்டிநிதம்
பிரார்த்தனை புரியுங்கள்!

தோப்பூர்.எஸ்.சிராஜுதீன்

## மேற்கே மறைய கிழக்கே மலராதோ!

உள்ளம் மகிழும்
தெள்ளத் தெளிவாக
சொல்லிப் போயிட
மனம் விரும்பிடாது.
நேற்று எங்கள்
மண்ணில் நடந்த
போர் ஒன்றால்
நாம் அழுதோம்.
இன்று உலகில்
நடக்கிறது போர்.
பாவம் என்றுரைக்க
துடிக்கிறது மனம்.
கடகக் கோட்டிலும்
மகரக் கோட்டிலும்
நடக்கிறதோ இரு
பெரும் போர்கள்.
நாளும் வீழும்
உயிர்களை விட்டு
பல உடல்கள்.
உள்ளம் நடுங்கிட.
பெரும் போரின்
நடுவே நின்று
வந்தவன் தான்
இருந்தும் துடிக்கிறது.
இழப்பதை கண்டு
என் மனம் மரத்து
பலவாண்டு கடந்து
சிலது மறந்தும் போக.
உற்ற உறவுகள்
கொடும் போரால்
மடிந்து போவதாய்
ஒரு நினைவு மீள.
ஏனிந்த போர்
இனியும் தொடராது
காரணம் தொலைந்து
முடிந்திடாதோ என்பேன்.
பலஸ்தீனரும் இறக்க
உக்ரைனியரும் கூடவே
மடிந்தவர் கடந்து
நடக்கிறார் போரிடை.
கிட்லர் நடத்திய
கொடும் போரில்
வீழ்ந்து வீழ்த்தியவர்
ரஷ்யர்கள் புரியாரோ?
போரின் கொடுமையில்
அதன் மடியில்உயிரை
விடும்
மனிதங்கள் பற்றி.
ஏன் இவர்களும்
போரையும் வலியையும்
நன்றே தெரிந்தவர்
இந்த இஸ்ரேலியர்கள்.
எப்படி இன்று
அந்த வலிகளை
மற்றாருக்கும் பகிர
மனம் கொண்டாரோ?
தேவைகள் தான்
நடந்திட தூண்டும்.
அவர்களும் நடந்திட
தேவை என்ன வந்ததோ?
வாழ்ந்திட வருந்தி
எதிர்கொண்டு
போரிட
துணிந்தார்
பலஸ்தீனரும்
உக்ரைனியரும்.
பலம் கொண்டு
மோதி உடைத்திட
எண்ணி நடக்கிறார்
ரஷ்யரும் இஸ்ரேலியரும்.
தப்பிக்க தரணியில்
உயிர்கள் கொண்ட
தந்திரம் தானோ?
ஆறாம் அறிவெங்கோ?
உடல் குண்டு பாய
துளைத்து காயம் பட
வலித்திட ஓவென
அழுதிட கண்டேன்.
உள்ளம் கரைந்து
விழிவழி நீர் சொரிய
இறைவழி ஒரு
தொழுகை செய்தேன்.
ஆதவன் மேற்கே
மறைந்திட முடியட்டும்.
கிழக்கே கதிர் பரப்பிட
முகங்கள் மலர்ந்திடாதோ?

அன்புடன் நதுநசி

## சிறுமியும் செல்பேசியும்



சீனங்கோட்டை
ஒன்பது வயதுச் சிறுமி
ஓயாமல் கைபேசியில்
பட்டினி தீர்க்க தாய்
பட்டணம் செல்ல
பாதியில் தந்தை
பரிதாபமாக விட்டுச் செல்ல
பாட்டியின் அரவணைப்பில்
பாதுகாக்கப்பட்ட பட்டாம்பூச்சி
படிப்பில் கெட்டிக்காரி
பதக்கம் வென்ற திறமைசாலி
விளையாட யாரும் இல்லை
வினையாகிப் போனது கைபேசி
செல்பேசி கேட்டு
சொல் பேச்சு கேட்காமல்
அடம் பிடித்தாள்
பாட்டியின் மறுப்பு
பாலகனின் மனதில் வெறுப்பு
அரை மணித்தியாலங்கள் கடந்தும்
அடைக்கப்பட்டிருந்த
அறைக் கதவு
தட்டிப் பார்த்தும்
திறக்கப்படவில்லை
தள்ளி உடைத்து
புகுந்தனர் உள்ளே
தூக்குக் கயிற்றில்
தொங்கினாள் சிறுமி
வைத்தியசாலை செல்ல
வைத்தியர்கள் கைவிரித்தனர்
தொலைபேசிக்கு அடிமையாகி
தொலைந்து போனவர்கள் பலர்
உயிரையே இழந்து
உலகையே விட்டு
போனாள் இவள்
பொடுபோக்கு வேண்டாம்
பொறுப்புகள் விசாரிக்கப்படும்
நீங்கள் பெற்ற பிள்ளைகளுக்கு
நீங்கள் தான் பொறுப்புதாரி
விழித்துக் கொள்ளுங்கள்
வீட்டுக்குள்ளேயே
உயிர்கொல்லி வீற்றிருக்கு
காசு போனால்
தேடிக் கொள்ளலாம்
கைத்தொலைபேசியினால்
உயிர் போனால்..!?

(அண்மையில் நடந்த
உண்மைச் சம்பவம்)

ஷஹாமா ஸனிர்

## அது ஒரு பொற்காலம்..!

குளத்துகரையோரம்.....
குழி
தோண்டி விளையாடி..
ஆலமரத்து
கொடிகளிலே...
தொங்கித்தான்
ஊஞ்சலாடி..
நெஞ்சத்து
கவலைகள் எல்லாம்
தெரியாமல் கவி பாடி....
சந்தோசம் மட்டுமே
தெரிந்தது
அந்தக் காலம்....
கொய்யாக்காய்
குண்டு கொண்டு...
குழி தோண்டி
ஆடுமாட்டம்..
கும்பலாய்
நண்பர்கள் நின்று..
இறைச்சி கொப்பு
ஆட்டத்தினால்
அடி வாங்கி
ஓடும் ஓட்டம்.
கிட்டிப்புள்
ஆடும் போதும்..
கிடைத்திடுமே
ஆனந்தம்..
கிராமத்து
வாழ்க்கையிலே..
இப்படி ஒரு
சந்தோசம்...
மண்பானை
முட்டி சோறும்...
நல்ல தண்ணி
ஜப்பான் மீனும்..
விறகு அடுப்பில்
சமைத்தெடுத்து.
வெட்ட வெளியில்
பாய் விரித்து..
வந்தவரெல்லாம்
வயிறார...
உண்டு மகிழ்ந்தது
அந்தக் காலம்.
பூவரச இலையிலே
ஊதி செய்து ஊதியதும்.
தென்ன மர இலையிலே
விசிறி செய்து
ஓடியதும்..
இளம் பனங்காயில்.
வண்டி செய்து
உருட்டியதும்....
அந்தக் கால
சிறுவர்கள்...
ஆடிய ஆட்டமும் ...
விளையாடிய
விளையாட்டும்.
கிடைத்திடுமோ!
இந்த கால
சிறுவர்களுக்கு.

கிண்ணியா எம்.நௌபர்



## காற்றை தேடும் புல்லாங் குழல்


இங்கு எல்லாமே தேடல்தான்
தேடல்களின்றி எதுவுமில்லை
நமது அயர்ச்சியுறா
தேடலில்தான் துளிர்க்கிறது
புன்னகை மிகு வாழ்க்கை
அதற்காக நிறைய காலடிகளை
தொலைக்க வேண்டும்
நிறைய வெயில்களை
சந்திக்க வேண்டும்
நிறைய முட்களை
மிதிக்க வேண்டும்
நிறைய பள்ளங்களில்
இடறி விழ வேண்டும்
நிறைய வியர்வைகளை
சிந்த வேண்டும்
நிறைய கண்ணீரை
காய்ச்ச வேண்டும்
நிறைய கனவுகளை
விதைக்க வேண்டும்
தேடலென்பது
நீங்கள்.கருதுவதுபோல்
அத்தனை.இலகுவான
காரியமல்ல
சிலர் தேடியதை
தொலைக்கின்றனர்
வேறு சிலர்
தொலைத்ததை தேடுகின்றனர்
மேலும் சிலர் காலம் முழுவதும்
தேடிக் கொண்டலைகின்றனர்
நதி கடலை.தேடுகிறது
வானம் சிறகுகளை தேடுகிறது
இருள் ஒளியை தேடுகிறது
வெயில் நிழலை தேடுகிறது
புல்லாங் குழல் காற்றை தேடுகிறது
விதை மண்ணை தேடுகிறது
பயணி சாலைகளை தேடுகிறான்
தேடலென்பது வேறொன்றுமில்லை
அது நமது வாழ்வின் இருப்பு
அது நமது வாழ்வின் ஆணிவேர்
அது நமது வாழ்வின் அச்சாணி
அது நமது வாழ்வின் சிறகுகள்

ஜமீல்



## தீபாவளி

மனவெளியில்
ஒளி பரவட்டும்
மன இருளின்
இருள் அகற்றட்டும்
மனப்பாரங்கள்
மனதில் நீங்கட்டும்
மனமே மன
இறைவனாகட்டும்
தீபங்கள் போல்
ஒளி கொடுப்போம்
தீபங்கள்
போல் இருள்
அகற்றுவோம்
தீபங்கள் போல்
வாழ்ந்திருப்போம்
தீப ஒளியாய்
பிறருக்கும் பயன்தர



இணுவில் வாகீசன்

## மரணம்



வாழ்தலின் தடத்தை
தேடித் தோற்று உதிரும்
பழுப்பிலையின்
சலனமற்று
வழியும் கண்ணீரில்
கண்மூடிக்கிடக்கின்றது
நிலையற்ற
வாழ்வின் இறுமாப்பு..
மண் தின்னும்
வாழ்வென்று
எறும்புகள் ஆர்ப்பரிக்க
மழை நீர் மெல்ல
மரணத்தின்
தடங்களை
அழித்துக்கொண்டிருக்
கின்றது..
மரணத்துள்
சிக்கிய வாழ்வில்
நிலமெங்கும்
உதிரும் இருப்பு
நிலையாமையை
மௌனமாய்ச்
சொட்டிக்கொண்டிருக்
கின்றது..
தொடும் தூரத்தில்
மிளிர்ந்தபடி
இருக்கும் மரணத்தில்
அடங்கும்
வாழ்வென்று
மனம்
ஏற்றுக்கொண்டாலும்,
இதயத்தில் அணையாது
சுடர்விட்டபடியிருக்கின்றது
ஆசைகளும்
தேவைகளும்..
வாழ்தலுக்கான
போராட்டத்தில்
காயங்களும்
களிம்புகளும்
வலிகளும் வழிகளும்
அழைத்துச்
செல்கின்றன
கைகோர்த்தபடி..
மரணித்த
மழலை கைவிட்ட
முலைகளாய்
விம்மி வலித்து
கிடக்கும்
வாழ்வை
போராடி ஜெயித்தாலும்
மரணத்திடம்
தோற்றுத்தான்
போகின்றோம்..

வி.அபிவர்ணா
முல்லைத்தீவு

## காதல் பித்தன்



நீண்டு போகும்
பாதையில் ஏதோ
எழுதிப் போகிறேன்
வலிகளை.
எழுத முடித்தவைகளைப்
பார்த்து
பரிதாபம் கொள்ளுகிறது
கண்ணீர்த் துளிகளைக் கொண்ட
வாழ்க்கை.
உறவாடிய உறவுகளை
களவாடிப் போனாது
என்னோடு விளையாடிய
பொழுதுகள்.
பத்திரமாய் பார்த்துக்
கொண்ட பாசக்காரி
பக்குவமாய் கூறிப்
போகிறாள் நான்
ஏழையென.
எழுந்து பறக்க
துடிக்கும் வைராக்கியம்
சிதைந்து கிடக்கும்
வாழ்வினைப் பார்த்து
சிறகுடைந்து கிடக்கிறது
இன்று வரை.
இதனால்தான் ஏதோ
புலம்பி கிறுக்கிறேன்
பித்தன் எனக்
கூறி.

பொத்துவில் அஜ்மல்கான்


## அன்னையின் அறிவுரை!

உன்னை பெற்றதால்
அன்னையான
'அம்மா' நான்!
உன்னை எனக்குள்
வைத்துக்கொண்டதால்
வாய்மையான
தாயே நான்!
பாசமும் நேசமும்
எனக்குள்ளிருந்தல்லவா
பிறக்கின்றன!
மனிதமும் புனிதமும்
என்னாலல்லவா
மலர்கின்றன!
அன்பும் பண்பும்
என்னால்தானே
வளர்கின்றன!
உத்தமனாய்
வித்தகனாய்
இந்த உலகில் நீ
உலா வருவதற்கு
வித்திட்டவள்
தாய் நானல்லவா!
தாய்
நானில்லையென்றால்
சேய் நீயில்லையல்லவா!
என்னாலே
பிறந்த நீ
எனக்குள்ளே இருந்து
எல்லாம் பெற்ற நீ
மகானாக மகாத்மாவாக
இந்த மண்ணில் நீ
வாழாவிட்டாலும்
மனிதனாக
வாழ மாட்டாயா?
மனிதத்துவதையும்
புனிதத்துவத்தையும்
உன்னில் நீ
வளர்க்க மாட்டாயா?
நாணயத்தையும்
நாணத்தையும்
வாழ்வில் நீ
பேணமாட்டாயா?
எனக்குள்ளிருந்து
வந்தவனே!
என் மகனே!
உனக்குள் உள்ள
உணர்வுகளை
ஊனமாக்கிக்
கொள்ளாதே!
அரக்கத்தனத்தை வளர்த்து
இரக்கத்தனத்தை
கொல்லாதே!
தீக்குணங்களை விதைத்து
தீவினைகள் செய்யாதே!
மனிதத்தை புதைத்து
மிருகமாய் வாழாதே!
அன்னை என்
அறிவுரைகளை
ஏற்றுக் கொள்!
உன்னை நீ
மாற்றிக்கொள்!

கலைமதி றபாய்தீன்
காத்தான்குடி



## நல்ல மாப்பிள்ளை



நல்ல மாப்பிள்ளைதான்
மிச்சம் நல்ல
மாப்பிள்ளைதான்
அழகென்ன குணமென்ன
அன்பென்ன அறிவென்ன
இறைவன் கொடுத்த வரம்
மிச்சம் நல்ல
மாப்பிள்ளைதான்......
விடியவும் எழும்பமாட்டார்
வேலைக்கும்
போக மாட்டார்
பிடியாய்ப் பிடித்திடுவார்
சாப்பாட்டை ஒரு
பிடியாய்ப்
பிடித்திடுவார்.........
ஆடைகளை
துவைச்சி வச்சா
அழகழகா
உடுத்திக்குவார்....
மேடைகளில் ஏறி நின்று
தத்துவமும்
பேசிக்குவார்.......
நகச்சுவையாய் பேசிப் பேசி
நங்கையரை
வளைத்திடுவார்
புகைந்து புகைந்து
நெஞ்சுக்குளே
பொறாமையையும்
வளத்துக்குவார்.......
எச்சி கணக்குப் பார்ப்பார்
எச்ச வாயில
பிச்சையும் எடுப்பார்
பிச்சி தேங்காயிலும்
தைலம் வடிப்பார்
போதுமடா இவரோடு
வாழ்ந்த வாழ்க்கை.!
உல்லாசமாய் சாஞ்சிகிட்டு
ஊர்வம்பு அளந்திடுவார்
சல்லாபமாய்
கதைகள் சொல்லி
சாகசங்கள்
படைத்திடுவார்......
மாப்பிள்ளை
மாடென்று
இவரைத்தான்
சொன்னார்களா..??
காப்பிள்ளை
கணக்கிற்கும்
கையால் ஆகாதடா.....
வேப்பிலை
வாழ்க்கை போலே
வீணான
மாப்பிள்ளை தான்....!

மாஜிதா தவ்பீக்

## அணுவையும் பிளந்திட்ட...

அறிவியல் உலகில்
அறிவது அறமே
அடியொற்றிப் புதினங்கள்
படைத்திடல் வளமே
ஆய்ந்திடும் போதிலே
புதுமைகள் பிறக்குமே
ஆழமாய்க் கற்றிட
அறியாமை அகலுமே
ஆற்றலை வளர்த்திட
அறிவே துணையாம்
புதுக்கற்கைகள் நிகழ்த்திடப்
புத்தகங்கள் வழியாம்
மற்ற உயிர்களோடொப்பிட
இவ்வுலகில்
மானிடனே
அறிவிலுயர்ந்து சிறந்தான்
வையம் சுருங்கி
கரங்களில் குவியும்
ஐயமின்றி நாளும்
அருந்திடல் முடியும்
அலைக்கற்றை
மீதேறி ஞானமும்
வழிந்திடும்
அருகிலே சென்றிடக்
கடலாய் விரிந்திடும்
அன்று முதல் இன்று வரை
வளர்ந்து வரும்
மனிதனின் திறமை
ஆக்குந் திறனில் அசுர வளர்ச்சி
அசர வைக்கும் மனித முயற்சி
இறவாப்புகழில்
நிலையாய் நீடிக்கும் புலமை
எண்ணிப்பார்க்கவே
முடியாத எண்ணில் வலிமை
அறிவே அணையா
அகலாத் தீபம்
அணுவையும் பிளந்திட்ட
நல் பெருமை
ஆயினும் மனிதனின்
அடங்கா மனதில்
அந்தகாரம் குடிகொண்டு
பலமாய் ஆட்டுவிக்க
ஆயுத கலாசாரம்
உச்சத்தை அடைந்தது
அநியாய உயிரழிப்பு
அச்சத்தை வளர்க்குது
அணுவைப்பிளந்த
மனிதன் நெஞ்சத்தில்
அன்பு வற்றி வன்மம்
படையெடுத்தது
குழந்தைகளைக்
கொல்லும் குரூர புத்தி
குறைவின்றிக் கோரமாய்ப்
பெருக்கெடுத்தது
ஐயோ இந்த அவலம் ஏன்?
ஆத்திரம் கொண்டு
உயிர் குடிப்பதும் ஏன்?
ஆக்கிரமிக்கும்
அநீதிக்கு ஆதரவு ஏன்?
அனைவரும் இதனை
வேடிக்கை பார்ப்பது ஏன்?

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்



# Acer மடிக்கணனிகளை அறிமுகப்படுத்தும் சிங்கர்



சிங்கர் ஸ்ரீலங்கா பீஎல்சி, இலங்கையின்; நுகர்வோர் தொழிற்துறையில் முன்னணி நிறுவனமாக நீடித்துத்திகழ்வதோடு, கணினி சந்தைப் பிரிவில் தனது நிலையை மேலும் பலப்படுத்துமோர் நோக்குடனும், தனது மூலோபாய நகர்வுடனும், கடந்த காலங்களில் DELL, ASUS, MSI மற்றும் Huawei மடிக்கணனி நாமங்களை தன் தரவரிசையுடன் இணைத்துள்ள சிங்கர், தற்போது உலகளவில் புகழ்பெற்ற' Acer' வர்த்தக நாமத்தினையும் இணைத்துக் கொண்டுள்ளமையை பெருமையுடன் அறியத்தருகின்றது.

சிங்கர் ஸ்ரீலங்கா பீஎல்சி, இலத்திரனியல் பொருள் நாமங்களிடையே சந்தையில் முன்னணியில் திகழ்வதுடன், நாடு முழுவதும் உள்ள தனது வாடிக்கையாளர்களுக்கு புதுமையான மற்றும் நம்பகமான தொழில்நுட்பத் தீர்வுகளையும் வழங்கி வருகின்றது.

Acer மடிக்கணினிகளின் அறிமுகமானது, பல்வேறு வாடிக்கையாளர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப, பரந்த அளவிலான தேர்வுகளை வழங்கக்கூடியமை, நிறுவனத்தின் அர்ப்பணிப்பினை மேலும் உறுதி செய்துள்ளது.

"எங்கள் Desktop கணனிகள் மற்றும் மடிக்கணனிகளின் விரிவான தேர்வுகளிடையே, உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற Acer வர்த்தக நாமத்தை இலங்கையில் அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

எங்கள் வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளை நாம் நன்கறிந்துள்ளதோடு, காலத்துடன் வேகமாக மாறிவரும் தொழில்நுட்ப மாற்றத்திற்கு ஏற்ப சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்களை வழங்குவது மட்டுமல்லாமல், விற்பனைக்குப் பிந்தைய சேவைகளுடன், மலிவு விலையில் சலுகைகளையும் வழங்குவதே எமது நோக்காகும். எமது தரவரிசையில் Acer மடிக்கணினிகளும் இணைந்துள்ளமை, எம் வாடிக்கையாளர்களுக்கு சிறந்ததை மட்டுமே வழங்குவதில் எங்களின் உறுதிப்பாட்டை மேலும் உறுதிப்படுத்துகின்றது," என சிங்கர் ஸ்ரீலங்கா பிஎல்சியின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஷனில் பெரேரா கருத்து தெரிவித்தார்.





பல் மருத்துவ துறையில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் ஒராம் நிறுவனத்தின் ஆரம்ப மற்றும் இடை நிலை பல் நடுகை மருத்துவ கற்கை நெறியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் மற்றும் விருது வழங்கும் வைபவம் கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் ஒரம் குழுமத்தின் தலைவர் ஜாபிர் சாலி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இக்கற்கை நெறியை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு பங்களித்த இந்திய பல் மருத்துவ சத்திர சிகிச்சை பேராசிரியர் வினோத் குமார் நிறுவனத்தின் பணிப்பாளர் முதஸ்ஸிர் ஜாபிரினால் பாராட்டு சான்றிழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார். நிறுவனத் தலைவர் ஜாபிர் சாலி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக இந்தியாவின் கமல் என்கோன் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் விக்ரம் குப்தா, ஒரம் குழும முகாமைத்துவ பணிப்பாளர் முஸ்தாக் ஜாபிர், பல் மருத்துவ சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர். வி. துதிகரன் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கையில் மீண்டும் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ள Sun Siyam பாசிக்குடா



Sun Siyam Resorts இன் கீழ் காணப்படும் புட்டிக் ஹோட்டல் தொடரின் பெருமைக்குரிய அங்கமாக அமைந்துள்ள இலங்கையின் Sun Siyam பாசிக்குடா, 2023 நவம்பர் 17ஆம் திகதி முதல் தனது செயற்பாடுகளை மீள ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளது. விருந்தினர்களுக்கு நவீன சொகுசான அனுபவங்களை பெற்றுக் கொடுக்கும் வகையில் நவீன மயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில், சொகுசான அனுபவத்தை வழங்குவதுடன், இலங்கையின் கலாசார பெறுமதிகளை உணர்த்தும் வகையிலும் அமைந்திருக்கும்.

Sun Siyam பாசிக்குடாவின் பொது முகாமையாளர் அர்ஷத் ரிஃபாய், ஹோட்டல் பொது மக்களுக்காக மீளத் திறக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தார். உள்நாட்டினருக்கு ஆதரவளித்து வாய்ப்பளிப்பதற்கான தமது உறுதியான அர்ப்பணிப்பு தொடர்பில் அவர் தெரிவித்திருந்ததுடன், குறிப்பாக பலகைசார் மரத் தளபாட செயற்பாடுகளில் உள்ளூர் சமூகத்தாரின் ஆதரவைப் பெற்றிருந்தமை தொடர்பில் குறிப்பிட்டிருந்தார். உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மற்றும் உள்நாட்டிலிருந்து பெறப்பட்ட தயாரிப்புகளினூடாக ஹோட்டலின் நவீனமயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததாகவும், உள்நாட்டு கலைஞர்கள் மற்றும் சமூகத்தாருடன் இணைந்து தளபாடங்கள், செடிவிளக்குகள் (chandeliers) மற்றும் மூட்டுவேலைப்பாடுகள் (joinery) போன்றவற்றை முன்னெடுத்திருந்ததாகவும் அர்ஷத் குறிப்பிட்டார். இந்த ஹோட்டலில் பெருமளவு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வர்ண அமைப்புகள் முதல் சாதனங்கள் மற்றும் பொருத்திகள் போன்றன வரையில் அனைத்து அம்சங்கள் மாற்றப்பட்டிருந்த போதிலும், ஹோட்டலின் அசல் கட்டமைப்பில் எவ்விதமான மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை.

# காலியில் நடைபெற்ற USAID/ SLTDA கற்றல் கண்காட்சிக்கு பாராட்டு



சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகம் (USAID) மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்து அதிகாரசபை (SLTDA) என்பன இணைந்து அக்டோபர் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலியில் நடத்திய நிலையான சுற்றுலா கற்றல் கண்காட்சியை சுற்றுலாத் துறையில் உள்ள சிறு வணிக ஏற்பாட்டாளர்கள் பாராட்டியுள்ளனர். "இது ஒரு சிறந்த முன்முயற்சி மற்றும் சிறந்த திட்டமாகும், இது பரந்த அளவிலான தலைப்புகளில் எங்கள் அறிவை மேம்படுத்த உதவியது" என்று சிறிய ஹோட்டல் சொந்தக்காரரான பங்கேற்பாளர் கூறினார். "நாங்கள் சுற்றுலாத் துறையில் ஒப்பீட்டளவில் புதிதாக நுழைந்தவர்கள், மேலும் எங்கள் ஹோட்டல் அறைகள் எப்போதும் நிரம்பியே இருப்பதற்கு செல்வாக்குச் செலுத்தும் பல அம்சங்கள் உள்ளன என்பதை நான் இன்று உணர்ந்தேன். இது மிகவும் சிறந்த அனுபவமாக இருந்தது," என்று அவர் மேலும் கூறினார்.

இந்நிகழ்வு 100க்கும் மேற்பட்ட சிறு வணிகங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பங்குதாரர்களை ஈர்த்திருந்தது மற்றும் நாடு முழுவதும் நடைபெறும் இதே போன்ற நிகழ்வுகளில் இது இரண்டாவது நிகழ்வாகும்.

முதல் நிகழ்வு கொழும்பில் செப்டம்பர் மாதம் நடைபெற்றது.

தற்போதைய டிஜிட்டல் மார்க்கெட்டிங், பயணப் போக்குகள் மற்றும் தங்கள் அன்றாட நடவடிக்கைகளில் நிலைத்தன்மையை எவ்வாறு இணைப்பது என்பதைப் பற்றி பங்கேற்பாளர்கள் கற்றுக் கொண்டனர்.

# இரண்டு வெற்றிகளுடன் சிறந்து விளங்கும் NDB வங்கி



2023 இல், NDB இன் இஸ்லாமிய வங்கிப் பிரிவு (IBU) ஒரு குறிப்பிடத்தக்க சாதனையைக் கொண்டாடியது,கோழிப்பண்ணை தொழிலில் முன்னணியில் இருக்கக்கூடிய ஒரு வருக்கு குறைவடையும் முஷாரகா வசதியை கட்டமைத்தமைக்கு, 2022 ஆம் ஆண்டின் சிறந்த ஒப்பந்தத்திற்கான தங்க விருதை வென்றது. வருடாந்த IFFSA (தெற்காசியாவின் இஸ்லாமிய நிதி மன்றம்) நிகழ்வில் இந்த மதிப்புமிக்க அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இது இஸ்லாமிய வங்கி நடைமுறைகளில் சிறந்து விளங்குவதற்கான NDBயின் அர்ப்பணிப்பு மற்றும் புதுமையான நிதி தீர்வுகளை உருவாக்கும் திறனை எடுத்துக்காட்டுகிறது.

NDB ஷரீக் இஸ்லாமிய வங்கிப் பிரிவின் குறைவடையும் முஷாரகா வசதியானது தனிநபர்கள், சிறு நடுத்தர நிறுவனங்கள் மற்றும் பெரு நிறுவனங்களுக்கு விரிவடைகிறது. வீட்டுவசதி, நீர் மின் உற்பத்தி திட்டங்கள், கோழி வளர்ப்பு, சூரிய ஒளி தொழில் முயற்சிகள் மற்றும் உற்பத்தி போன்ற நோக்கங்களுக்காக வழங்கப்படுகிறது.

கூடுதலாக, NDB/IBU இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் நடைமுறை மூலதனத் தேவைகளுக்கு இஸ்லாமிய வங்கி வசதிகள் மூலம் உதவுவதுடன் அவர்களின் உள்ளூர் வர்த்தகம், இறக்குமதி நிதித் தேவைகளையும் நிவர்த்தி செய்கிறது. விருது பெற்ற குறைவடையும் முஷாரகா வசதியைத் தொடங்கி செயல்படுத்திய தனித்துவமான குழு உறுப்பினர்களை அங்கீகரிப்பது முக்கியம்.

# இசைக் கருவிகளை நன்கொடையாக வழங்கிய யூனியன் அஷ்யூரன்ஸ்



இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், கைரானகம வித்தியாலயத்துக்கு இசைக் கருவிகளை நன்கொடையாக வழங்கியிருந்தது. பாடசாலையின் நாடக ஆசிரியர் புத்திமா அபேசிங்கவின் அயராத முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த நன்கொடையை வழங்கியிருந்தது. நாடகப் பாடத்தை அறிமுகம் செய்வதில் அபேசிங்க ஆசிரியரின் அர்ப்பணிப்பினூடாக, மாணவர்களுக்கு வழங்கப்படும் பாடத் தெரிவுகள் விஸ்தரிக்கப்பட்டிருந்ததுடன், அவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் சிறந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது.

2016ஆம் ஆண்டில் பாடசாலையில் அவர் நியமிக்கப்பட்டதை தொடர்ந்து, பாடசாலையில் கலை தொடர்பான மட்டுப்படுத்தப்பட்ட பாடத் தெரிவுகள் நிலவுவதை அவதானித்திருந்தார். பல சவால்களுக்கு மத்தியிலும், மாணவர்களுக்காக நாடகப் பாடத்தை அறிமுகம் செய்வதற்கான முழு முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தார். இவரின் அயராத முயற்சி, அணியினரின் ஆதரவுடன் கைரானகம வித்தியாலயத்தின் இளம் திறமைசாலிகளுக்கு பல்வேறு கௌரவிப்புகளை பெற்றுக் கொடுக்க முடிந்திருந்தது. சிறந்த கதை, சிறந்த நாடகம், சிறந்த நடிகர் மற்றும் சிறந்த நடிகை போன்ற விருதுகளை பிராந்திய மற்றும் மாவட்ட போட்டிகளில் வெற்றியீட்ட முடிந்தது.

# National Innovation Challenge போட்டிக்கான கூட்டாளர்களை அறிவித்தது Dialog



டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனர், Dialog Innovation Challenge க்கான தனது கூட்டாளர்களை பெருமிதத்துடன் அறிவித்தது. நாட்டை டிஜிட்டல் தொழில்நுட்பம் நோக்கி இட்டுச்செல்லும் வல்லமை படைத்த புத்தாக்கமான டிஜிட்டல் தீர்வுகளை வலுப்படுத்துவதே இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும்.

சமீபத்திய கூட்டாளர் உள்ளடக்கங்கள், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வளர்க்கும் இந்த தேசிய முயற்சியில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) தேசிய தொழில்நுட்ப பங்காளராக பொறுப்பேற்று சவாலின் தொழில்நுட்ப அடித்தளத்திற்கு ஆதாரமாய் திகழ்கிறது. இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகம் (IESL), இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழு (SLIC) மற்றும் தேசிய கண்டுபிடிப்பு முகவர் நிறுவனம் (NIA) ஆகியவை தொழில்நுட்ப சுற்றுச்சூழல் பங்குதாரர்களாக கைகோர்க்கின்றன. வர்த்தக அறிவு கூட்டாளர்களாக, இலங்கை வர்த்தக சம்மேளனம் (CCC), இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகம் (SLIM), மற்றும் இலங்கை டிஜிட்டல் சந்தைப்படுத்தல் சங்கம் (DMASL) ஆகியவை இந்த முன்னெடுப்புக்கு இணையற்ற தொழிற்துறை அறிவை அளிக்கின்றன.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் மலிக் ரணசிங்க இந்த கூட்டாண்மை குறித்து பேசுகையில், "ICTA சார்பாக, Innovation Challenge இல் Dialog உடன் பங்காளியாக கைகோர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்." என்றார்.

# ஆரம்ப நிறுவனங்களுக்கான மதிப்பீட்டில் தரம் A; அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் சாதனை



டேவிட் பீரிஸ் குழுமத்தின் நிதிச் சேவைப் பிரிவின் முன்னணி நிறுவனமான அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் (AFL) நிறுவனம் கடன் கொடுத்தல் சந்தையில் தனது நடுத்தர மற்றும் நிலையான இருப்பைப் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை தரப்படுத்தல் முகவரமைப்பின் ஆரம்ப தரப்படுத்தலில் A பிரிவில் தரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிறுவனமானது இரு சக்கரவண்டிகள், முச்சக்கரவண்டிகள், கார், மோட்டார் ட்ரக்ஸ் மற்றும் ஏனைய வாகனங்களுக்கான லீசிங் வசதிகள், செயற்பாட்டு மூலதன நிதியளிப்பு, முகவர் நிதியளிப்பு, வாகனக் கடன் போன்ற பரந்துபட்ட சேவைகளை வழங்கி வருவதுடன், நாடு முழுவதிலும் உள்ள வாடிக்கையாளர் கட்டமைப்புக்கு (தனிப்பட்ட மற்றும் கூட்டாண்மை) தொடர்ந்தும் சேவையாற்றி வருகிறது. டேவிட் பீரிஸ் குழுமத்தின் உப நிறுவனம் என்ற ரீதியில், வாகன வியாபாரத்தில் தாய் நிறுவனம் கொண்டுள்ள ஈடுபாடு மற்றும் அதன் ஆரோக்கியமான நிதி நிலைமை இந்தத் தரப்படுத்தலுக்கு வழிகோலியுள்ளது.

அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனம் 55 கிளைகளைக் கொண்டிருப்பதுடன், இதற்கு மேலதிகமாக டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் நாடளாவிய ரீதியில் காணப்படும் விநியோக வலையமைப்பின் ஊடாக வாடிக்கையாளர்களைச் சென்றடைய முடிந்தது என இலங்கை தரப்படுத்தல் முகவரமைப்பு தெரிவித்துள்ளது. வாகனங்களுக்கான இறக்குமதித் தடை மற்றும் பொருளாதாரக் கொந்தளிப்புக் காரணமாக கடன்வழங்கலில் வீழ்ச்சி ஏற்பட்டமையால் நிறுவனம் கணிசமான சவால்களுக்கு முகங்கொடுத்திருந்ததுடன், ஒதுக்கீட்டுக்கான நாட்களை 180 இலிருந்து 90 ஆக மாற்ற வேண்டி ஏற்பட்டது.

# சர்வதேச சிறுவர்கள் தினத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடிய Sunshine Holdings PLC

Sunshine Holdings PLC அண்மையில் Battaramullaவில் உள்ள Ape Gama வளாகத்தில் சர்வதேச சிறுவர்கள் தினத்தை கொண்டாடியது. இந்த நிகழ்வு 16 வயதுக்குட்பட்ட SUN ஊழியர்களின் குழந்தைகளுக்கு ஒரு அன்பான சந்தோஷம் தந்த தருணமாக இருந்தது, அவர்கள் நாள் முழுவதும் வேடிக்கை, படைப்பாற்றல் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

Sunshine Holdings PLC குழந்தைகளின் திறன் மற்றும் வாக்குறுதியின் மீது வலுவான நம்பிக்கை கொண்டுள்ளது, அவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாகவும் பிரகாசமான எதிர்காலத்துக்கான நம்பிக்கையாகவும் கருதுகிறது. சர்வதேச சிறுவர்கள் தின கொண்டாட்டம் இந்த உறுதிப்பாட்டிற்கான ஒரு சான்றாக இருந்தது, பெற்றோர்களுடன் சேர்ந்து குழந்தைகள் உற்சாகம் மற்றும் மகிழ்ச்சியால் நிரப்பப்பட்ட நாளில் பங்கேற்க கூடினர். இந்த நிகழ்வு பல்வேறு வகையான நடவடிக்கைகளை உள்ளடக்கியிருந்ததுடன், ஒவ்வொரு குழந்தையும் விரும்பும் ஏதாவது ஒன்றைக் கண்டறியும் வகையில் உறுதி செய்தது. வண்ணமயமான முகச் சித்திரம் வரைதல் அமர்வுகளில் இருந்து மிகவும் கவனத்தை ஈர்க்கும் கலை, நடனம் மற்றும் பாட்டு போட்டிகள், உற்சாகமூட்டும் விளையாட்டுக்கள், ஒரு கவர்ச்சிகரமான மாயாஜால நிகழ்ச்சி மற்றும் ஒரு Fancy Dress போட்டி வரை, குழந்தைகள் பல்வேறு பொழுதுபோக்கு உலகை அனுபவித்து மகிழ்ந்தனர். இந்த சிறுவர் தினக் கொண்டாட்டத்தின் இறுதி நிகழ்வாக கலை, பாடல் மற்றும் நடனப் போட்டிகளின் வெற்றியாளர்களை தெரிவு செய்து அவர்களுக்கு பரிசில் வழங்குதல் நடைபெற்றது, அங்கு திறமையான சிறுவர்கள் அவர்களது திறமைகள் மற்றும் படைப்பாற்றலுக்காக கௌரவிக்கப்பட்டனர்.

# பாவப்பட்டவர்கள்

மேற்கு கரையோரங்களில் சித்திரை மாதம் பிறந்து விட்டகையோடு, கடல் சீற்றம் கொதிநிலையில் இருக்கும். இதன் பின் புலத்துடன் உடப்பு தொழிலுக்கு முடிவு கட்டப்படும். இதனோடு வீறாப்புடன் வீசும் கச்சான் காற்றினால் கடற்றோழில் செய்ய முடியாத நிலை காணப்படும். இதனால் இவ்வூர் மக்களின் வாழ்வாதாரம் குறைவாக இருக்கும் அதேவேளை, வருமானமும் மந்தகெதியில் தாண்டவமாடும்.

கிழக்கின் அடிவானம் வெளுக்க... மரங்களில் பட்டுப் படர்ந்த பனித்துளிகள் கூட மாயமாக மறைந்து கானல் நீராகிவிடும்.

சூரிய வெளிச்சத்தைக் கண்ட கடற்றொழிலாளர்கள், தத்தம் தொழிலுக்கான ஏற்பாடுகளோடு மும்முரமாகிவிடுவார்கள்.

ஊரின் நடுநாயகமாக அமைந்திருந்த திரௌபதியம்மன் ஆலயத்தின் "சுப்ரபாத" த்தைக் கேட்ட ஐயாத்தக்குட்டி பரபரப்புடன் அரக்கப்பரக்க நித்திரை விட்டெழுந்தாள்.

இச்செயலானது கணவன் மேல் ஐயாத்தைக்குட்டி வைத்துள்ள பாச உணர்வை வெளிப்படுத்துவதாக அக்கம்பக்கத்தவர்கள் வாய்விட்டுக் கூறிக்கொள்வார்கள்.

குளிர்காற்றின் ஈரத்தன்மையை தாங்கமுடியாத குஞ்சான் போர்வைக்குள் சுருண்டு கிடக்கும் கோலத்தைப் பார்த்த ஐயாத்தாய்க்குட்டி... இந்தாங்க...! இந்..தாங்..க.. கொஞ்சலாக கெஞ்சிய பாணியில் நகைமுகத்துடன் தட்டி எழுப்பி தூக்கத்தை கலைத்து நின்றாள்.

சத்தத்தைக்கேட்டு சோம்பல் முறித்துக் கொண்ட குஞ்சான் ஏண்டி..! இந்தாங்க இந்..தாங்..க என கத்தி கொரவச்சி ஒன்ற சத்ததினாலதானடி நான் அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு நின்றேனடி..! ஏண்டி என்ன வதையா வதைக்கிறா.

இந்த கொள்ள கழிச்சிப் போவாளுக்கு எங்கங்க தெரியப்போவுது நம்ம.. மாச்சல்.. மனதுக்குள்ளே முணுமுணுத்து கொண்டவனாக நின்றான் குஞ்சான்.

தன் கை, கால் முகத்தை கழுவின குஞ்சான் ஆத்தாளே..! எம்ம காப்பவளே..! அன்னை திரௌபதியே என விழித்துக்கொண்டு நின்ற இடத்தில் அன்னையை சாஷ்டாங்கமாக வணங்கி..! தாயே..! இந்த நாளைப் போல எந்த நன்னாளிலும் எவ்வித விக்கினமுமின்றி நல்லருள் தாருமம்மா தாயே..!! என்று இறைஞ்சி துதித்து நின்றான்.

வழக்கம் போல் தன்னை சுதாரித்தவளாக ஐயாத்தக் குட்டி.....! தன்னோடு நித்திரையில் இருந்த மகள் வேலாயைக் காணாது அரக்கப் பரக்க செய்வதறியாது நின்றாள். ஆனால் வேலாய் கால்மாட்டு மூலையில் சுருண்டு தலைவிரி கோலத்துடன் காட்சியளித்தாள்.

வெகுளித்தனம் கொஞ்சமேனும் இல்லாதவளாக காணப்பட்ட வேலாய். யாருடனும் ஒளிவு மறைவின்றி பேசுபவள். சோம்பல் முறித்த வேலாய்க்கு... தேத்தண்ணிக் கோப்பையுடன் வந்த ஐயாத்தக்குட்டி.... ஏ..? புள்ள...!! என்னம்மா செய்ரா..? எழும்பிட்டியா கால நேரத்துடன் எழுந்திடு...! ஒனக்கு என்னடி தெரியப்போது... நம்ம துக்க தொயரங்கள் என்று நச்சரித்துக் கொண்டவளாக...

இந்தாம்மா நம்மள படைச்ச கடவுள்..! தொயரத்த தந்திட்டான் பாரு!!. நா .. மீன் வாடி பக்கம் போய் வந்தாத்தானே யம்மா, நம்மட வயித்த நிரப்ப முடியும்? அதனோடுதானே எம்மா காலத்தையும் ஓட்ட முடியும்? அதனால யாருகிட்டயும் கையேந்திநிற்க தேவையில்லயடி புள்ள என்று சொன்னாள்.

நா செய்யும் மீன் வாடி பக்கம் போய் கெழமக் காசை நேர காலத்துடன் கேட்டுப் பாக்க வேண்டும். ஆனால் நாம் போய் கேட்காவிட்டால் அந்தப் பணத்த சூக்குமாத்து பண்ணிப் போடுவாங்க. கூலிப் பணத்த முன் கூட்டியே கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டும் என மனதுக்குள் சஞ்சலப்பட்டவளாக நின்றாள் ஐயாத்தக்குட்டி.

ஆனால்...!

இந்த கெழம எக்கச்சக்கமாக மீன் பட்டு அழிந்தது. இது நாம் வணங்கும் ஆத்தாளின் புண்ணியத்தால் தான் மீன் பட்டழிந்தது. வாடியில் வந்து கொட்டிய மீன்களை வேறு வேறாக பிரித்து தெரிந்து கொடுக்க பட்டபாடோ பெரும்பாடாச்சி.

அந்த பரமனுக்குத்தான் தெரியும் நா கால் கடுக்க..! முதுகு வலிக்க நாடி நரம்பெல்லாம் வலியெடுக்க நின்றதை. உடம்பெல்லாம் நோவு எடுக்க வந்த மீன்களை பிரித்து தெரிந்து கொடுக்க வேண்டும். நேர காலத்துக்கு அப்படி கொடுக்கட்டா ஏச்சும் பேச்சும் தான்.

அவளுடைய வீட்டின் பின்புறமாக உடைந்த நிலையில் வேலி அலங்கோலமாக, கண்றாவியாக காட்சியளித்தது. அந்த வேலிக்கேட்டை விலக்கிக் கொண்டு நேரே மண்டாடி மஞ்சான் வீட்டை அடைந்தாள் ஐயாத்தைக்குட்டி.

பரபரப்புடன் வந்த ஐயாத்தைக் குட்டியைப் பார்த்த மண்டாடி மஞ்சான்

"வாம்மா.... வா! என்னம்மா!! என்ன!!? ஒன்ற விஷயத்த..! சொல்லு பாப்போம்?

இல்லங்க! மண்டாடியார்! இந்த மொற நமக்கு கிடைத்த மீன்கள் எல்லாம் பெரிய பெரிய மீன்கள் தானே! அதனால் தான் நான் வந்து வாடியில் மீன் தெரிந்த பங்குக் கூலிய கேட்டு வாங்க ஓடோடி வந்துருக்கிறேன். எனக்கு தரவேண்டிய என்ர இந்தப் பங்குக் கூலி நேரத்தோட கெடச்சிட்டா நான் பசி பட்டினியின்றி வயிறார சமைத்து சாப்பிடலாந் தானே.. மண்டாடியார் என்றாள்.

இந்தாம்மா! கொஞ்சம் பொறு ஒனக்கு தரவேண்டிய பங்குக்கூலி இருக்கே அத தரத்தான் வேண்டும். ஆனால் நீ கேட்டவுடன் தர முடியாது என்பதை கச்சிதமாக அவள் காதில் கேட்கும்படி ஏத்தி வச்சான் மண்டாடி மஞ்சான்.

இல்லங்க.. மண்டாடியார்..!

இன்று வெள்ளிக்கிழமை நல்ல நாளாச்சே விடுமுறை தினந்தானே வீட்டில நாலு பேருடன் ஒன்றாகக் கூடி குசலம் விசாரித்து.. புள்ள குட்டிகளுடன் சப்பாணி போட்டு ஒன்றாக சாப்பிட்டா எப்படி இருக்கும் மன்றாடியார். அத சொல்லவா வேண்டும்.

அதுவல்லடி ஐயாத்த! ஒன்ர பணத்த நாம் அபகரிக்க இல்லயடி. இன்று மாலை ஆனதும் முறைப்படி குத்து விளக்கேற்றி நம்மட சம்பிரதாய முறைப்படி சம்மாட்டியார் ராஜனின் முன்னிலையில் தான் பணத்தை பிரித்துக் கொடுப்போம் என கறாராக கடும் தொனியில் கூறினார் மண்டாடி, பின்னர்,

இந்தப் பணத்தை பவ்வியமாக பெற்ற ஐயாத்தைக்குட்டி தனது இல்லம் நோக்கி விரைந்தாள். வேர்த்துவிறுவிறுத்து தனது வீட்டை அடைந்ததும் முன் வளவில் அங்கும் இங்குமாக சிதறிக் கிடந்த கருவாடு, மீன் செதில், உப்பு மூட்டை, கத்தி, மண்வெட்டி போன்ற சட்டி முட்டி என்பனவற்றையும் உடைந்த நொறுங்கிக் கிடந்த போத்தல்களையும் வீட்டின் ஒதுக்குபுறமாகத் தென்பட்ட ரங்குப் பெட்டிகளையும் எடுத்து ஒழுங்குபடுத்தி நின்றாள் ஐயாத்தை குட்டி.

தன் நடுவீட்டில் கம்பீரமாக காட்சியளித்த கணவன் நல்லராக்குவின் போட்டோவை கண்டு ஐயாத்தக்குட்டி ஒரு கணம் நிலை தடுமாறினாள்.

அத்தான்! நாம் ஒன்றாக ஒற்றுமையாக வாழ்ந்தோம். கருத்தொருமித்து காதல் பூண்டோம். அந்நியோன்ய உறவோடு பழகினோம். இது பிடிக்காத எம்மை படைத்த கடவுள் பிரித்து விட்டானே..! என ஒவென்று அழுது புலம்பினாள்.

அத்தான் நீங்கள் இல்லா எம்மில்லம்.! துடுப்பில்லா படகாகி விட்டதே. நான் இன்று பிள்ளைகளுடன் தனித்து தவித்து தத்தளித்து தனி மரமாகி விட்டேனே.. என் ராசா! எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டீங்களே. என கண்ணீர் விட்டு தன் துயரத்தை சோகத்தை வெளிப்படுத்தி நின்றாள் ஐயாத்தை.

ஆம்..!

சித்திரை மாதம் 25ஆம் திகதி அவளது கணவன் அவளைப் விட்டு பிரிந்து சென்ற துயரநாள்.

அன்று கடல் கொந்தளித்து நிற்க, காற்று சுழன்று சூறாவளியாக வீசியது. அலைகள் ஒன்றோடு ஒன்று அடித்து மாயும் காலம். கடலுக்கு போய் தொழில் செய்ய முடியாத பேரிடர் காலமும் தான் அந்த ஏப்ரல் மாதம்.

அந்தக் காலங்களில் கடலுக்குப் போகாதே என்று அரசு எச்சரிக்கை விடுத்த போதும் ராஜன் சம்மாட்டியாரின் திமிரும், ஆணவப் பேச்சும், பேராசையும் அவளது கணவனை இழக்கச் செய்தது.

ராஜன் சம்மாட்டியார்! தொழிலாளர்களைப் பார்த்து கர்ச்சித்தார். அடே..! வள்ளத்தை கடலில் தள்ளுங்கடா...! வலை இழுங்கடா.. அவரது கர்ண கொடூரமான தொனியை கேட்ட தொழிலாளர்களெல்லாம் நடுங்கிப் பயந்து அரக்கப் பரக்க வள்ளத்தை கடலில் தள்ளினார்கள்.

கடும் காற்றுடன் உயர எழுந்த அலையால் வள்ளம் தாக்கப்பட்டதும். வள்ளத்திலிருந்த நல்லராக்கு வலைக்குள் சிக்குண்டு பரிதாபகரமாக பலியானான்.

இந்த அவல சாவானது ஒவ்வொரு தொழிலாளர்களையும் துயரத்தில் ஆழ்த்தியது.

ராஜன் சம்மாட்டியாரின் பண ஆசையும் பேராசையுமே அவலச் சாவுக்கு காரணம் என ஊரே சொல்லி மாரடித்து நின்றது.

வந்தாரை வாழவைக்கும் சிங்கார சீர் பெறும் கிராமங்களில் ஒன்றே உடப்பில் உள்ள மங்களபுரம். அதன் அடையாளம் அன்னை பத்தினியம்மன் ஆலயம்.

இக்கிராமத்தின் மத்தியில் ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதியின் மேற்கே குறுக்குத் தெருவில் உள்ளது சமாதான நீதவான் பெரிய முத்து வைரனின் இல்லம். அதை ஒட்டியே ஐயாத்தைக் குட்டியின் வீடும் அமைந்துள்ளது.

ஐயாத்தக்குட்டி தந்தை கதிர்காமுத்தையா தனது சுய தொழிலான தெப்பத் தொழிலை மனம் கோணாத முறையில் யாருக்கும் அடிபணியாமல் கௌரவமான முறையில் நடத்தி வந்தார். அவரின் வாழ்க்கைச் சக்கரம் எவ்வித விக்கினமும் இன்றிச் சுழன்று ஓடியது.

அவள் பெற்று, ஆசையோடு வளர்த்த மகள் வேலாய் பருவமயக்கத்தில் கண்டதே காதல் கொண்டதே கோலம் என காதல் வலையில் சிக்குண்டு தவித்தாள். கண்ணுக்கு கண்ணாக வளர்ந்தவள் இன்று கர்ப்பிணிக் கோலத்தில் குலப் பெருமையை இழந்து நிற்பதைக் கண்டு வெகுண்டெழுந்தார்.

என் கண் முன்னே நிக்காதே துரோகி..! என சீறிப்பாய்ந்தார். நீ எக்கேடு கெட்டுப்போ.. என பேத்தியைப் பார்த்து கோபாவேசத்துடன் வெகுண்டெழுந்தார், கர்ச்சித்தார்.

(இதைக் கேட்டு நின்ற வேலாய்)

தாத்தா..!

நான் செய்தது தப்பிலும், பெரும் தப்பு..! என்னை மன்னித்து விடுங்கள். சாஷ்டாங்கமாக காலில் விழுந்து பணிந்தாள். கண்ணீர் வெள்ளமென பாய்ந்து ஓடியது.

பேத்தியின் பரிதாப கோலத்தைக் கண்டதும் கதிர்காமுத்தையா மனம் மாறி நெகிழ்ந்தார்.

வேலாயின் நிலை அறிந்த கதிர்காமுத்தையா தனது சொந்த பந்தங்களுடன் சேர்ந்து பக்கத்து ஊர் பாரிப்பாடு முருகன் சந்நிதானத்தில் மேளம் முழங்க எளிமையாகத் திருமணத்தை முடித்து வைத்தார்.

கதிர்காமுத்தையா வழமை போல், தான் செய்யும் தெப்பத் தொழிலுக்கான பூர் வாங்க ஏற்பாடுகளில் ஈடுபடலானார்.

கடற்தொழிலில் எவ்வித பயிற்சியோ அனுபவமோ, தெளிவோ இல்லாத வண்டியன் தொழில் செய்ய வேண்டுமென்று உந்துதலைக் கொடுத்தான்.

வண்டியனின் விடாமுயற்சியும், தொழில் ஆர்வத்தையும் கண்டு பிரமித்துப் போன கதிர்காமுத்தையா அன்று பிழையாக எண்ணியதை நினைத்து மனம் நொந்து போனான். என் பேத்தி வேலாய் கொடுத்து வைத்தவள். அவளின் தெரிவு தனக்கு மனப்பூரிப்பை தருவதாக எண்ணி சந்தோசமுற்று காணப்பட்டான் கதிர்காமுத்தையா.!

அந்த சந்தோச பூரிப்பில் திளைத்த கதிர்காமுத்தையா தனக்கு பூட்டப் பிள்ளை கிடைத்தமையையிட்டு இரட்டிப்பு மகிழ்ச்சி கொண்டான். சந்தோஷம் அவனை திக்குமுக்காட வைத்தது.

அமாவாசை நாட்கள் என்றால் கடல் கொந்தளிக்கும். காற்று வீரியத்துடன் வீசும். கடல் சீற்றம் கொள்ளும். அலைகள் வீறு கொண்டு எழும். இந் நாட்களில் கடல் தொழில் செய்வதை தவிர்த்துக் கொள்வார்கள் மீனவ சமூகத்தினர்.

ஆனால்..! இந்தக்காலம் ஆபத்தைத் தரும் என்பதை அறியாத கதிர்காமுத்தையா தெப்பத்தை கடலில் செலுத்தினான். பலமாக வீசி அடித்த அலையில் தாக்கப்பட்ட இருவரும் கடலில் மூழ்கி இறந்தார்கள்.

இத்துயரசம்பவமானது மங்களபுரக் கிராமத்தை மீண்டும் சோகத்தில் ஆழ்த்தியது. அநியாயச் சாவினால் இக்கிராமமே துக்கத்தில் துவண்டது. மக்கள் கண்ணீர்விட்டு அழுதுபுலம்பினார்கள். கிராமமே சோகத்தில் மூழ்கியது. எங்கும் கறுப்பு வெள்ளை கொடிகள்பறந்து துயரத்தை பறைசாற்றி நின்றன.

...

மூளியாக காட்சியளித்த வேலாயைப் பார்த்து கண்ணீரும் கம்பலையாக நின்ற ஐயாத்தக்குட்டி,

'என் செல்வ மகளே, நான்தான் கைம் பொஞ்சாதி என அவப் பெயருடன் நிற்கின்றேன். நீயுமா அந்த சொல்லுக்கு ஆளாகி விட்டாய்? எனக் கதறினாள்.

தன் மகள் வேலாயிக்கு பிறந்த பித்தனை நல்லா படிக்க வைத்து சிறந்தவனாக்குவோம் என எடுத்துரைத்த போதுதான்.

ஏ..! வேலாய். இன்று தான் சித்திரை 25 ஆம் நாள் கரிநாள். நம் வாழ்க்கையில் துயரத்தைத் தந்த நாள். காத்துக் கடலென்று பாராமல், தொழிலுக்குச் சென்றவர்கள், உயிர்களைப் பறிகொடுத்த பரிதாப நாளம்மா என்றாள்.

இந்த இரு ஆத்மாக்களும் சாந்தியடைய வேண்டுமானால் ஆலயம் சென்று சுவாமி தரிசனம் செய்தால் நம் எதிர்காலம் சீரும் சிறப்புமாக பிரகாசிக்கும் என எடுத்துரைத்தாள் மகள் வேலாய்.


ஆ..! ஓமடிபுள்ள அதுவும் சரிதான் பாரு..! ஆலயத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஆத்தாளைத் துதித்தால் நாம் நினைத்த காரியம் கை கூடும். நம் நம்பிக்கை வீண் போகாது புள்ள.

வாழ்வில் சுபீட்சம் காணும் முகமாக ஐயாத்தக் குட்டியுடன் வேலாயும் தமது குலதெய்வமான ஆத்தாள் கோவிலை நாடி விரைகின்றனர்.



**கலாபூசணம்**
**உடப்பூர் வீரசொக்கன்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
### இல: 96



திரு/திருமதி.செல்வி ........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ........................................
........................................
........................................

........................ ........................
திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
**போட்டி இல. 96**
**த.பெ.இல.834. கொழும்பு**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 96

### இடமிருந்து வலம்

01. உறுதி அல்லது கனமானது
05. ஒரு தமிழ் மாதம்
07. தோல் (குழம்பியுள்ளது)
08. விற்பனைப் பொருட்களை சட்டவிரோதமாக மறைத்து வைத்திருப்பது.
09. உணவு உண்ணத் தூண்டும் உணர்வு (திரும்பியுள்ளது)
10. பாடசாலைகளில் எழுதிக் காட்டப் பயன்படும் சாதனம். (குழம்பியுள்ளது)
12. உடன்படுவதைத் தெரிவிக்கும் சொல் (திரும்பியுள்ளது)
14. கருமையைக் குறிக்கும்
15. ஒரு சிற்றுண்டி
17. ஆகாயம்
19. வண்டிச் சக்கரம் திரும்பிவிட்டது.
20. தூக்கம்
21. ஆணவப் போக்கு(குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. ஆதரவற்றோரைப் பராமரிக்கும் இல்லம்
02. கடல்வாழ் உயிரினங்களில் ஒன்று
03. ஆட்டத்துடன் சேர்ந்த நாட்டுப்புறக் கலை (குழம்பியுள்ளது)
04. மிளகாய், தேங்காய்ப்பூவில் தயாரிக்கப்படும் துவையல்(குழம்பியுள்ளது)
06. கல் அல்லது மரத்தில் செதுக்கப்படும் உருவம்
09. எண்ணிக்கையில் குறைந்தவர்கள்
11. இரக்கம் அல்லது கருணை (குழம்பியுள்ளது)
13. எதிர்பார்ப்புடன் கூடிய விருப்பம்
16. இறுதி (குழம்பியுள்ளது)
17. நாய்க்கு இது வந்தால் அவதானமாக இருக்க வேண்டும்
18. ஓர் உறவு முறை
19. பலம் அல்லது உறுதி (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 95

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. நத்தார்
4. அவதி
7, வேகம்
9. ஆனி
10. ரகம்
12. அத்தை
14. நாம்
15. வம்பு
17. புதுமை
20. பல்
21. தரை
22. கரம்
24. கவலை
26. திருமணம்

**மேலிருந்து கீழ்**

1. நகரம்
2. தாகம்
3. வேர்
5. வனிதை
6. ஆதி
8. அம்பு
11. நாதம்
13. புத்தகம்
15. வயல்
16. ஆமை
18. துவரை
19. பாகல்
20. பணம்
23. ரதி
25. வலை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 95

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு 150.00 |
| --- | --- | --- |
| **அ. கௌரிதாசன்,** வள்ளுவர் வீதி. ஆலங்கேணி கிழக்கு, கிண்ணியா | **ஏ.எல்.கலீல்,** 114, ஏ எல் ஹுதா ரோட் இறக்காமம் | **அனுராதா பாக்கியராஜா,** 88 1/1 பசல்ஸ் லேன், வெள்ளவத்தை, கொழும்பு 06 |

### பாராட்டு பெறுவோர்

1. **ரதி சிவசீலன்** நீர்வேலி
2. **எஸ்.எச்.எம். ஜிப்ரி,** கொழும்பு 10
3. **எச். சல்பியா,** பாணந்துறை
4. **ஷிபானா ஷாபி** மாத்தறை
5. **என்.கே. வேணி** பலாங்கொட
6. **எம். டபிள்யூ. எம். நபாஸ்,** துல்ஹிரிய
7. **கே.எப் மில்ஹானி** ஏறாவூர்
8. **ஏ.கே.ஏ. வாஹிட்,** பதுளை,
9. **ஏ. சந்தியாகோ** கண்டி
10. **இல்யாஸ் தாஸிம்,** பாணந்துறை

## இன்றைய புதுயுகத்துக்கு... (09ஆம் பக்கத் தொடர்)



இது ஒருபுறமிருக்க, அரசாங்க ஊழியர்களுக்கான கொடுப்பனவு இதனைவிட அதிகமாக இருக்க வேண்டும் எனத் தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன. இருந்த போதும், நடைமுறைச் சாத்தியமான தொகையினால் அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும், ஒரு சில தொழிற்சங்கங்கள் இதுவிடயத்தைத் தூக்கிப்பிடித்து தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிப்பதாகவே தெரிகிறது.

இதேவேளை, வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் தொடர்பிலும் வரவுசெலவுத் திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பெருந்தோட்டப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு வீட்டு உரிமையை வழங்கும் நோக்கில் அவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு காணி உரித்து வழங்குவதற்கும், இதன் ஆரம்ப கட்டமாக ரூபா 4 பில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி வரவுசெலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டிருந்தார்.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்கள் அதேபோன்று பதுளை, காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் குருநாகல் மாவட்டங்களை உள்ளடக்கிய மலைநாட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்த 89 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியதாக 10 வருட பல்நோக்கு கிராமிய மற்றும் சமுதாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றினை 2024 ஆம் வருடத்திலிருந்து செயற்படுத்துவதற்கும், இதற்காக ரூபா 10 பில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

வீடமைப்பு எனும் போது வடக்கு, கிழக்குத் தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. வடக்கு, கிழக்கில் யுத்தம் முடிவடைந்த 14 வருடங்கள் பூர்த்தியடைந்திருந்தாலும், அப்பிரதேசங்களில் மக்கள் இன்னமும் வீடற்றவர்களாக இருக்கின்றனர். அவர்களை மீள்குடியேற்றுவதற்கான தேவைகளை நிறைவேற்ற 2,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக நிதி ஒதுக்கீடாக வீடமைப்புத் திட்டத்தை விரைவுபடுத்தவும், மீதமுள்ள வீடற்ற குடும்பங்களுக்கு அத்தியாவசிய நிவாரணங்களை வழங்கவும் ரூபா 500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமன்றி, யுத்தத்தினால் காணாமல் போனவர்களுக்கான இழப்பீட்டுக்காக ஏற்கனவே ரூபா 1,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், அடுத்த வருடத்துக்கான வரவுசெலவுத் திட்டத்தில் 1,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேசத்தில் குடிநீர்ப் பிரச்சினை பல வருடங்களாக தீர்க்கப்படாதிருப்பதுடன் வெற்றிகரமான கருத்திட்டமெதுவும் இதுவரை செயற்படுத்தப்படவில்லை. தற்பொழுது காணப்படும் சிக்கலான பல்வகை நீர்ப் பிரச்சினைகளுக்கு தீர்வொன்றாக ஏற்கனவே சாத்தியவள ஆய்வு நிறைவு செய்யப்பட்டுள்ள பாலி ஆறு நீர் கருத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்திருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தக் கருத்திட்டத்தின் ஆரம்ப வேலைகளை 2024 இன் முதல் அரை ஆண்டில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும், இதற்காக 250 மில்லியன் ரூபாவை செலவிட எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார்.

யாழ்ப்பாணம், மன்னார் பிரதான வீதியில் சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகில் அமைந்துள்ள பூநகரி நகரத்தை சுற்றுலாத்துறைக்கு ஒரு முக்கிய நகரமாக அபிவிருத்தி செய்வதற்கு 500 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபோன்று வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி குறித்தும் மலையகத்தின் முன்னேற்றம் குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பது அப்பகுதி மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறையின் வெளிப்பாடாக அமைகிறது.

இது இவ்விதமிருக்க, ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள வரவுசெலவுத் திட்டத்தில் கல்வித்துறை தொடர்பில் குறிப்பாக உயர்கல்வி குறித்து முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளன. விசேடமாக நான்கு புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பது குறித்த முன்மொழிவுகள் பலரின் வரவேற்பைப் பெற்றுள்ளன.

சீதாவக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (இதற்கு லலித் அதுலத்முதலி பட்டப்பின் படிப்பு நிறுவனம் சேர்த்துக் கொள்ளப்படும்.), கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கீழ் குருநாகல் தொழில்நுட்ப பல்கலைக்கழகம், முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம், காலநிலை மாற்றத்திற்கான சர்வதேச பல்கலைக்கழகம் ஆகியவற்றை உருவாக்குவதற்கான முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி, உயர்கல்வித் துறையில் தற்பொழுது செயற்பட்டு வரும் தனியார் நிறுவனங்களான வியாபார முகாமைத்துவ தேசியக் கல்லூரி, இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம், ஹொரைசன் வளாகம் மற்றும் றோயல் இன்ஸ்ரிடியூட் ஆகியவற்றை பல்கலைக்கழகங்களாகத் தரமுயர்த்துவதற்குத் தேவையான சட்டத்திருத்தங்களை மேற்கொள்ளவும்ஜனாதிபதிமுன்மொழிந்துள்ளார்.

ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளும் பல்கலைக்கழங்களை ஆரம்பிப்பதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் மாகாண சபைகளின் மூலமும் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் முன்மொழிந்துள்ளார்.

இவ்வாறு பல்வேறு துறைகள் பற்றியும், நாட்டின் அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்தும் காலத்துக்குப் பொருத்தமான வரவுசெலவுத்திட்டமாக இது அமைந்துள்ளது.

---

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

**வியாழன் 2023.11.16**

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5300 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,959,800.00
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 6 0 6 9 9 2

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3542 — சீட்டிழுப்பு திகதி 2023.11.16 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,539,009.60
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 02 35 50 77 — விசேட எழுத்து C — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 36166

**Mega POWER** — சீட்டிழுப்பு இலக்கம் 1648 — 2023.11.16 — 45428 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 414,774,048.00
ஆங்கில எழுத்து F — சுப்பர் இலக்கம் 02 — வெற்றி இலக்கங்கள் 04 38 61 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**லக்கி 7 Lucky** — திகதி 2023.11.16 — சீட்டிழுப்பு இலக்கம் 0126
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 5 9 7 1 6 2 — L7 இலக்கம் 2 0
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,084,733.20

**ராசி சுப பலன்** — திகதி 2023.11.16 — சீட்டிழுப்பு இலக்கம் 609 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,240,902.00
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 17 28 34 35 — தனயோக இலக்கம் 53689 — நாளுக்கான விதி எண் 15

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1330 — 2023.11.16 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 120,750,687.20
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 32 41 52 74 — விசேட எழுத்து V — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 49112

---

## களனிப் பல்கலைக்கழகம்

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் — 2024

களனிப் பல்கலைக்கழகத்திற்கு கீழ்க்காணும் பொருட்கள், சேவைகள் மற்றும் ஒப்பந்தங்களை வழங்குவதற்காக 2024 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்வதற்கு விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வகுதி இல — பொருட்கள் வழங்குதல்**

01. காகிதாதிகள் (போட்டோப்பிரதிதாள், தட்டச்சுத்தாள் நகல் பிரதித்தாள்)
02. சகல வகையான அச்சு விடயங்கள்/இறப்பர் முத்திரை/தின முத்திரை என்பன
03. அலுவலக மற்றும் வேறு பொருட்கள் - பலகை
04. அலுவலக மற்றும் வேறு பொருட்கள் - இரும்பு
05. பைபர் கிளாஸ் உற்பத்திகள்
06. அலுவலக உபகரணம், போட்டோப்பிரதி இயந்திரம், பெக்ஸ் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள், மெகி போர்ட் போன்றன.
07. டயர், டியூப் மற்றும் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்
08. கிழித்த பலகை (உள்ளூர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்டவை)
09. ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் (பற்சிகிச்சை உபகரணங்கள் உட்பட)
10. இரசாயனப் பொருட்கள், மருந்துகள்
11. கற்பித்தல் உபகரணங்கள், வீடியோ, ரேடியோ, கெமரா மற்றும் போட்டோப்பிரதி உபகரணம் மற்றும் ஓவர்ஹெட் மல்டிமீடியா புறொஜெக்டர், மக்கள் தொடர்பாடல் உபகரணங்கள் போன்றன.
12. பாதுகாப்பு கெமரா அமைப்பு
13. தொலைபேசி செட் மற்றும் உதிரிப்பாகங்கள்
14. மின் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
15. குளிர்சாதனம், அதி குளிரூட்டி, போத்தல் குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி இயந்திரம் போன்றன.
16. கணனி, அச்சு இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் மற்றும் கணனி காகிதாதிகள்
17. நூலகப் புத்தகம் மற்றும் பருவ வெளியீடுகள் போன்றன.
18. தீயணைப்பு உபகரணங்கள்
19. இரும்புப் பொருட்கள்/கட்டிடப்பொருட்கள்/தீந்தை/மின்சாரப் பொருட்கள் போன்றன.
20. துப்புரவேற்பாட்டு பொருட்கள்/பிவிசி பைப் மற்றும் உதிரிப்பாகங்கள்/நீர்ப்பம்பி போன்றன.
21. விளையாட்டுப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
22. பிளாஸ்திக் பித்தளை பெயர் பலகை, சமிக்ஞை பலகைகள்
23. தும்புத்தடி/விளக்குமாறு/பிரஷ் மற்றும் மெத்தை (இறப்பர் கலப்பு)
24. வீட்டு அலங்காரத்திற்காக பாவிக்கப்படும் உபகரணங்கள் (பூங்கா கதிரை உட்பட) பூச்சாடி, கன்று வகைகள், கிருமிநாசினி இரசாயனப் பொருட்கள் மற்றும் உர வகைகள்

**சேவைகள்/ஒப்பந்தங்கள்**

25. அலுவலக உபகரணங்கள் பழுது பார்த்தல்
26. மின் உபகரணங்கள் பழுதுபார்த்தல் (குளிர்சாதனம்/வளிச்சீராக்கி/வீடியோ கெமரா உபகரணம்/ கணனி/மின்விசிறி/CCTV கெமரா அமைப்புக்கள் போன்றன.)
27. கணனி வலையமைப்பு உருவாக்குதல் மற்றும் பழுதுபார்த்தல்
28. பாதுகாப்பு கெமரா அமைப்பு பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு
29. மோட்டார் வாகனம்/லொறி பஸ் போன்றவை பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
30. கட்டிடங்கள் பழுதுபார்த்தல் மற்றும் சிறிய கட்டிடங்கள் பழுதுபார்த்தல்/ மேம்படுத்தல், கட்டுதல் மற்றும் தீந்தை பூசுதல், வெல்டிங் வேலை மற்றும் இரும்பு வலை பொருத்துதல் / அலுமினியம் பிரேம் பொருத்துதல்
31. உள்ளக தொலைபேசி அமைப்பு ஒழுங்குபடுத்தல், வயர் இணைத்தல்
32. உள்ள தொலைபேசி அமைப்பு, பழுது பார்த்தல்/ வயர் இணைத்தல்
33. ஆய்வுகூட மற்றும் மருத்துவ உபகரணங்கள்/காஸ் உபகரணங்கள் பழுதுபார்த்தல்
34. வீதி பராமரிப்பு மற்றும் தரைக்காட்சி விடயங்கள் மரம் வெட்டுதல், கிளைகள் வெட்டுதல் மற்றும் அகற்றுதல்
35. அலுவலக கதிரைகள் போன்றவை பின்னுதல்.ʼ.பழுது பார்த்தல், பொலிஷ் மற்றும் குஷன் செய்தல்/திரைச்சீலை வழங்குதல், தரை விரிப்புக்கள் வழங்குதல்
36. மரத்தளபாடங்கள் பழுதுபார்த்தல் மற்றும் உருக்கும் பொருட்கள் பழுது பார்த்தல்
37. நூலக புத்தகங்கள் மற்றும் வார வெளியீடுகள் கட்டுதல்
38. அலுவலக திரைச்சீலை சுத்திகரித்தல்/லொண்டரி விடயங்கள்
39. தையல் விடயங்கள்/பட்டதாரி இலச்சினை/ பட்டதாரி கழுத்து மாலை/சீருடை/தோல் பை/துவா போன்றன வழங்குதல்
40. சாணம் உரம், மண், கருங்கல், மணல், சீமெந்து, செங்கல் போன்ற கட்டிடப்பொருட்கள் வழங்குதல்
41. வாகனங்கள் குத்தகை அல்லது வாடகைக்கு வழங்குதல் (கார்/வேன்/லொறி/பஸ்/முச்சக்கர வண்டி) கலி இயந்திர சேவை.
42. வாகன வளிச்சீராக்கி பழுது பார்த்தல் /ஆசனங்களை குசன் செய்தல்/ சுத்திகரித்தல்
43. பயிற்சிபெற்ற மற்றும் பெறாத தொழிலாளர்களை வழங்குதல்', சாரதிகளை வழங்குதல்
44. பொருட்கள் போக்குவரத்து மண் வெட்டும், துகள்களாக்கும் மற்றும் ஏற்றும் இயந்திரம் வழங்குதல், ஜே.சி.பீ மற்றும் பெகோ இயந்திரம்.
45. நேரடித் திரை வழங்கிப் பொருத்துதல்/திரைச்சீலை/கார்பட்
47. தீயணைப்பு உபகரணம் வழங்கிப் பொருத்துதல்
48. தொழிலாளர்கள் ஒப்பந்தம் (தச்சு வேலை, மேசன் வேலை, மின், நீர், மரம் வெட்டுதல், தோட்டம் சுத்தம் செய்தல்)
49. தனியார் பாதுகாப்பு சேவை
50. சுத்திகரிப்பு சேவை/குப்பைகள் அகற்றும் சேவை/கலி குழிகளை சுத்தமாக்குதல்
51. பீடைக்கட்டுப்பாட்டு விடயங்கள்/விவசாய கட்டுபாட்டு விடயங்கள்
52. வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சிகள் (out bond Traing Programmes) ஏற்பாடு செய்தல்
53. நிகழ்வு முகாமைத்துவம் (Event Management)
54. உணவுப் பானங்கள் வழங்குதல்

வழங்குநர்கள் ஒரு சேவை, வழங்கல் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கு பதிவுசெய்ய முடியும் அத்துடன், அதன் பிரகாரம் எந்த ஒரு சேவை அல்லது வழங்கல்களுக்கும் ரூ.1000/- மீளளிக்கப்படாத கட்டணத்தை களனிப் பல்கலைக்கழகத்தின், கணனி மக்கள் வங்கி கிளையின் 055-100110667549 கணக்கிற்கு வைப்பிலிடுமாறு செலுத்துதல் வேண்டும். கொள்கையளவில் களனிப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்ற போதிலும் அதற்கு அப்பாலும் வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களை கோரும் மற்றும் கொள்வனவு செய்யும் ஆற்றல் உண்டு.

வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ளும் முகமாக https://apps.kln.ac.lk/sup_reg_2024/ இணையத்தளத்திற்கு பிரவேசித்து 2023.12.31 அல்லது அதற்கு முன்பு அங்கு குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிரப்புதல் வேண்டும்.

**நிபந்தனைகள்**

01. தற்போது பதிவுசெய்துள்ள வழங்குநர்கள்/அனுமதிக்கப்பட்ட முகவர்களும் எதிர்வரும் வருடம் (2024) இற்கு மீண்டும் பதிவு செய்தல் வேண்டும்.
02. சகல நிறுவனங்களும் செல்லுபடியாகும் பதிவுச்சான்றிதழ் பத்திரத்தை பதிவுசெய்யும் போது Upload செய்தல் வேண்டும்.
03. பதிவு செய்த நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக இருக்கும் வேளையில் கம்பனியாக பதிவு செய்த சான்றிதழை Upload செய்தல் வேண்டும்.
04. பதிவு செய்த கம்பனியாக இல்லாத வேளைகளில் குறித்த பதிவுச்சான்றிதழை UPload செய்தல் வேண்டும்.
05. வேறு உற்பத்தி நிறுவனத்தின் பொருட்கள் விற்பனை செய்யும் முகவர் நிறுவனங்ளான வளைகளில் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் மூலம் விநியோகிக்கப்படும் அதிகாரத்தை ஒப்படைக்கும் கடிதத்தை Upload செய்தல் வேண்டும்.
06. பதிவுசெய்யும் உருப்படிக்காக குறைந்தபட்சம் மூன்று வருடமாவது அனுபவம் இருத்தல் வேண்டும்.
07. உங்கள் நிறுவனத்தின் அல்லது கம்பனியின் வங்கி விபரம் (கணக்கு விபரத்தை) தெளிவாகத் தெரியுமாறு) Upload செய்தல் வேண்டும். (உ+ம்) கணக்கின் பெயர், கணக்கு இலக்கம், வங்கி, வங்கிக்கிளைகள் போன்றன.
08. காசு செலுத்தியதாக உறுதி செய்வதற்காக பற்றுச்சீட்டு, VAT பதிவுச்சான்றிதழ் அல்லது VAT இல் இருந்து விடுவித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட கடிதம் Upload செய்யப்படல் வேண்டும்.
09. சகல விண்ணப்பதாரிகளும் குறைந்தபட்ச ஒரு மாத கடன் காலத்தை வழங்குதல் வேண்டும்.
10. பூர்த்தியற்ற, முறையற்ற மற்றும் குறித்த சான்றிதழ்களின் பிரதிகளை Upload செய்யாத விண்ணப்பங்கள் பதிவு செய்யப்படமாட்டாது.
11. விண்ணப்பங்கள் எமக்குக் கிடைத்ததாக மற்றும் உங்கள் நிறுவனங்கள் / தனி நபர்கள் 2024 ம் ஆண்டிற்காக பதிவு செய்யப்பட்டு இருப்பதாக, விண்ணப்பதாரியினால் குறிப்பிடப்படும் மின்னஞ்சல் முகவரிக்கு தெரிவிக்கப்படும். எனவே நிதமும் பாவிக்கும் மின்னஞ்சல் முகவரியை விண்ணப்பத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

**பதிவாளர்,
களனிப் பல்கலைக்கழகம், களனி
2023.11.19**

---

## மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (PGIM)

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**Tender Notice for the supply, delivery, installation & Commissioning of Laboratory Equipment (UVVisible Spectrophotometer, Grossing Station & Slide Cabinet with Lock) to the PGIM**

**(Tender No.: PGIM/DB/02/2023)**

1. ஆய்வுகூட உபகரணங்களின் (UV Visible Spectrophotometer, Grossing Station & Slide Cabinet with Lock) வழங்கல்,ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்காக திணைக்கள பெறுகைக் குழுத் (கீழ் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. பின்வரும் தகுதித்தன்மை தேவைப்படுத்தல்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

   நிகரான துறையில் ஆகக் குறைந்தது 10 வருட முன்னைய அனுபவத்தை விலைமனுதாரர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

**தகைமை மற்றும் அனுபவம்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றில் இருந்து கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பத்தில் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்

அல்லது

(2) i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றில் இருந்து ஒரு பிரதான பாடமாக கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பத்துடன் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் (பட்டத்தின் குறைந்தது 1/3 கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பத்தை கொண்டிருத்தல் வேண்டும்)

மற்றும்

ii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மனியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றில் இருந்து கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பத்தில் பெறப்பட்ட பட்டப்பின் டிப்ளோமா ஒன்றை பெற்றிருத்தல்.

அல்லது

(3) i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றில் இருந்து பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

மற்றும்

ii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றில் இருந்து கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பத்தில் பெறப்பட்ட பட்டப்பின் பட்டம் ஒன்றை.

அல்லது

(4) i. மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் தகைமையின் குறைந்தது தரம் ஏழு (07) தகைமை அல்லது அதற்கு இணையான தகைமையை பெற்றிருத்தல்.

மற்றும்

ii. தொடர்புடைய துறையில் இரண்டு (02) ஆண்டுகள் தொழில்முறை அனுபவத்தை பெற்றிருத்தல்

வயது : 22 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்

சம்பளம் : MN6, Grade 11

ரூபா 49390 - 10 x 895 - ரூபா 58,340/-

மேலுள்ள சம்பளத்திற்கு மேலதிகமாக, அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

பணியமர்த்தல் விதிமுறைகள் : நிரந்தரம் மற்றும் சேமலாப நிதி அடிப்படையில்

விண்ணப்பதாரர்கள் அரச சேவை பதவியில் இருந்தால் நேரடி பிரதி ஒன்றுடன் அவர்கள் பணியாற்றும் நிறுவனத்தின் தலைவர்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்டால் அபேட்சகரை விடுவிப்பதற்கு நிறுவனத்தின் தலைவரிடம் இருந்து சான்றிதழ் ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

நியமனத்தை மேற்கொள்வது/ மேற்கொள்ளாதிருக்கும் உரிமை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக சபை வசமானதாகும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். உறவினர் அல்லாத இரு (02) நடுவர்களின் பெயர்கள் மற்றும் முழுமையான சுயவிபரக் கோவையுடன் அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை 2023 டிசம்பர் 04ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் கையொப்பமிட்டு கிடைப்பதற்கு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**
**தலபத்பிட்டிய**
**நுகேகொடை**
**2023.11.15**

# துறைமுகங்கள், கப்பற்சேவை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

## இலங்கை மட்டக்களப்பு விமானநிலையத்தில் வானில் பறக்கும் பயிற்சி பாடசாலையை (FLYING TRAINING SCHOOL) வடிவமைத்தல், நிர்மாணித்தல், செயற்படவைத்தல் மற்றும் ஒப்படைத்தல்

**விலைமனுக்களுக்கான அழைத்தல்**

1. இலங்கை, மட்டக்களப்பு விமானநிலையத்தில் வானில் பறக்கும் பயிற்சி பாடசாலையை வடிவமைத்தல், நிர்மாணித்தல், செயற்படவைத்தல் மற்றும் ஒப்படைத்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து துறைமுகங்கள், கப்பற்சேவை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரல் சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் செயற்பாட்டின் மூலம் நடத்தப்படும்.
3. விலைமனுவிற்கு தகுதியாவதற்கு பின்வரும் ஆகக்குறைந்த தகைமை தகவுத்திறனுக்கு விலைமனுதாரர்கள் அமைந்தொழுகல் வேண்டும்.

   அ. பறக்கும் பாடசாலையை செயற்படவைத்தல் மற்றும் முகாமைத்துவத்தில் அனுபவமும் கடந்த ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது 10 எண்ணிக்கையான மாணவர்களை எந்தவொரு வழங்கப்பட்ட நேரத்திலும் பயிற்சியை வழங்கியிருத்தல் வேண்டும். கூட்டுமுயற்சி பங்காளர்களின் அனுபவமானது கூட்டு முயற்சியின் நிதியிடல் அமைப்பு/ பங்கு ஆகியவற்றை பரிசீலனை செய்யப்படாமல் மதிப்பீட்டிற்கு பரிசீலனை செய்யப்படும்.

   ஆ. பாதுகாப்பு விடயங்கள், வழக்கு வரலாறு போன்றவை விமான சேவைத் துறையிலுள்ள முக்கியமான செயற்பாடுகள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட முன்னைய பதிவுகள் ஏதுமிருப்பின் இணைக்கப்படல் வேண்டும்.
4. 2023.11.20 ஆம் திகதிக்கும் 2024.01.16 ஆம் திகதிக்குமிடையில் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கிலத்திலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் மேலேயுள்ள முகவரியிலிருந்து கையேற்கப்படலாம்.
5. இந்த விலைமனு தொடர்பாக தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கட்டுநாயக்க, மினுவாங்கொட வீதி, 152/1 ஆம் இலக்கத்தின் CAASL இன் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் செயற்றிட்டங்கள் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011 2358824). விலைமனுக்கோரல் ஆவணங்கள் மேலேயுள்ள அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
6. விலைமனுப்பிணையானது 300 அ.ஐ.டொலராகவும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட புகழ்வாய்ந்த வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு குறையாத காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. சித்திகரமான விலைமனுதாரர் மொத்த முதலீட்டுப் பெறுமதியின் 5% பெறுமதிக்கு CAASL இன் பெயரில் நிபந்தனையற்ற செயற்பாட்டு உத்தரவாதமொன்றை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர். கம்பனியானது திருப்திகரமான சேவையொன்றை வழங்காவிடின் செயற்பாட்டு உத்தரவாத பெறுமதியை தேவைக்கேற்றவாறு கோருவதற்கான உரிமையை சிவில் விமான சேவை அதிகாரசபையானது கொண்டுள்ளது.
8. பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுகள் தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு, துறைமுகங்கள், கப்பற்சேவை மற்றும் விமான சேவை அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு - 01 என்ற முகவரிக்கு சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட நபர்களின் கையொப்பங்கள்/உத்தியோகபூர்வ முத்திரையுடன் 2024 ஸனவரி 17 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "For design build operate transfer of flying training school Batticaloa Airport, Sri Lanka" என அடையாளமிடப்பட்டு நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது மின்னஞ்சல் வழியாக அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
9. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியானது 2024 ஸனவரி 17 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி என்பதுடன் விலைமனுக்கள் அதன் பின்னர் மூடப்பட்டு விரைவாகவே திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்சேவை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல.: 19, சைத்திய வீதி,**
**கொழும்பு-01.**

04 ஆம் பக்க தொடர்ச்சி...

நல்லாட்சி அரசில் பத்தாயிரம் ரூபாவும் எட்டு ஆண்டுகளின் பின்னர் தற்போது பத்தாயிரமும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தனியார் துறை ஊழியர்களுக்கு எந்த சம்பள அதிகரிப்பும் இல்லை.

இந்த சம்பள அதிகரிப்புகள், துஷ்பிரயோகங்கள், பலவீனமான பொருளாதார முடிவுகள் காரணமாக தனியார்துறை ஊழியர்கள் தான் அதிக சுமைகளை சுமக்க வேண்டியிருக்கிறது. தனியார்த் துறைக்காரன் என்ற அளவில் இதை சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றைய சூழலில் எந்தவொரு கொம்பனாலும் சிறப்பான ஒரு வரவு செலவு அறிக்கையைத் தர முடியாது. சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? அப்படிப் பார்க்கும் போது பாதிப்பு ஏற்படுத்துவதாக இல்லை. ஏற்கனவே துண்டு விழும் தொகை 2851 பில்லியன்களாக இருப்பதால் வரி விதிப்புகள் அதிகரிக்கவே செய்யும்.

நான்கு புதிய பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படுவது நல்ல செய்தி. நுவரெலியாவிலும் பல்கலைக்கழகமொன்றை நிறுவும் யோசனை இருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால் விபரங்கள் தரவில்லை. மலையகத்துக்கு ஒரு பல்கலைக்கழகம் என்ற கோரிக்கை இருப்பதால் இது அதனுடன் தொடர்புபட்டதா என்று தெரியவில்லை. இதில் முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டியது கொழும்பு நகர குடியிருப்பாளர்கள் செலுத்திவந்த மூவாயிரம் ரூபா வீட்டுக்கான கொடுப்பனவு இரத்து செய்யப்பட்டிருப்பதை சொல்லலாம்.

போக்குவரத்து டிஜிட்டல் மயப்படுத்தப்படுவது கட்டாயம். முன்னர் முன் கொடுப்பனவு அட்டை பஸ்களில் புழக்கத்தில் இருந்து பின்னர் மறைந்து போயிற்று. அது மீண்டும் புழக்கத்துக்கு வந்தால் கண்டக்டர்களுக்கும் பயணிகளுக்கும் இடையில் மிகுதிப் பணம் தொடர்பான சச்சரவுகள் நீங்கும் என எதிர்பார்க்கலாம்.

இலங்கையில் காணப்படும் பிரச்சினையே எந்த சட்டமும், விதிமுறைகளும் தொடர்ச்சியாக கைக் கொள்ளப்படாதது தான். வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கு ஊக்குவிப்பாக 500 மில்லியன் ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். அது எந்த அடிப்படையிலானது என்று தெரியவில்லை. எனினும் வரவேற்கத்தக்கது. மலையகத் தொழிலாளர்களைப் போலத்தான் மீனவர் வாழ்க்கையும் ஊசலாட்டமானதே!

அன்று பிரிட்டனுக்கு கடன் கொடுத்த இலங்கை, கல்லோயா திட்டத்தை சொந்த நிதியில் செயல்படுத்திய இலங்கை இன்று பிச்சை எடுக்கிறது என்ற ஜனாதிபதியின் கூற்று கவனத்துக்கு உரியது.

ஆனால் எமக்கல்ல; அரசியல்வாதிகள் தான் நாட்டை சீரழித்தார்கள் என்பதால் அவர்களே இதுபற்றி சிந்திக்க வேண்டும். வடக்கு, கிழக்கு வீடமைப்புக்கு 200 கோடி, சிறிய நடுத்தர வர்த்தகர்களுக்கு இலகு வட்டிக்கடன், யாழ்ப்பாணத்தில் முதலீட்டு வலயம் என்பன முற்போக்கான முன்மொழிவுகள். ஆனால் இவை செயல்படுத்தப்படுமா, போதிய பணம் உள்ளதா என்ற கேள்வியும் உள்ளது.

***ரஸ்மிகா சுலோச்சனா,***
***வங்கி ஊழியர், பதுளை***

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களைப் பதிவுசெய்தல் - 2024
## ஒப்பந்தங்கள், பொருட்கள், பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரித்தல் அத்துடன் சேவைகளை வழங்குதல்

2024 ஆண்டு காலப்பகுதியில் கீழ் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்கள், பொருட்கள், பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு அத்துடன் சேவைகளை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியுடன் பதிவுசெய்வதற்கு ஆர்வமுள்ள கீர்த்திமிக்க தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களது ஒப்புதலளிக்கப்பட்ட முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஏனைய வியாபார தாபனங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வகை 01 - ஒப்பந்தங்கள்**

**துணை வகை**

- கட்டடக்கலை ஆலோசனை
- பொறியியல் ஆலோசனை
- சிவில் நிர்மாணம்
- உள்ளக அலங்காரம்
- மின்சாரம்
- கணனி மற்றும் வலையமைப்பு
- இயந்திரவியல்

**வகை 02 - பொருட்கள்**

**துணை வகை**

- செவிப்புல மற்றும் கட்புல உபகரணங்கள்
- தொலைபேசி சாதனங்கள்
- நுழைவு கட்டுப்பாட்டு முறைமை
- கண்காணிப்பு முறைமைகள்
- கணனிகள், வலையமைப்பு உபகரணங்கள் மற்றும் துணைக் கருவிகள்
- அச்சுப் பொறிகள், நிழற்பிரதி இயந்திரங்கள் மற்றும் ஸ்கானர்கள்
- மென்பொருள் பொதிகள்
- இயந்திரம் மற்றும் உபகரணங்கள்
- கட்டும் பொருட்கள்
- மின்சார கருவிகள் மற்றும் துணைப் பொருட்கள்
- மின்சார உபகரணங்கள்
- இயந்திரவியல் உபகரணங்கள்
- இயந்திரவியல் கருவிகள் மற்றும் துணைப் பொருட்கள்
- கதிரைகள் மற்றும் சோபாக்கள்
- பொதுவான தளபாடங்கள் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள்
- மேசைகள்
- கட்டடப் பொருட்கள் மற்றும் பொதுவான வன்பொருட்கள்
- சுத்திகரிப்புப் பொருட்கள்
- ஆய்வுகூட உபகரணங்கள்
- மருந்து உற்பத்திகள்
- சத்திர சிகிச்சைச் சாதனங்கள்
- மருத்துவச் சிகிச்சை உபகரணம்
- பொதுவான அலுவலக உபகரணங்கள்
- பொதுவான அலுவலகக் காகிதாதிப் பொருட்கள்
- கடதாசிக் கற்றுகள்
- கடதாசி அடிப்படையிலான உற்பத்திகள்
- டோனர்கள், காட்ரிச்சுக்கள், றிபன்கள்
- உணவக உபகரணங்கள் மற்றும் சமையலறைப் பொருட்கள்
- உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் துணைப் பொருட்கள்
- நூலக உபகரணங்கள் மற்றும் பொருட்கள்
- பாதுகாப்பு உபகரணங்கள்
- பொதுவான புடவைகள்
- விளையாட்டு ஆடைகள்
- சீருடை மற்றும் துணைப் பொருட்கள்

**வகை 03 - பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்**

**துணை வகை**

- பொதுவான பழுதுபார்த்தல்கள்
- பாரமான இயந்திரங்கள்
- பாதுகாப்பு உபகரணங்கள்
- வாகனங்கள்

**வகை 04 - சேவைகள்**

**துணை வகை**

- விளம்பரப்படுத்தல்
- விமானப் பயணச்சீட்டு சேவைகள்
- நிர்மாணம் தொடர்புபட்ட சேவைகள்
- அச்சுறப்படுத்தல் மற்றும் பொருட்கள் அனுப்புதல் சேவைகள்
- நிகழ்வு முகாமைத்துவம்
- இல்லப் பேணுகை
- ஊடக மற்றும் விளம்பரப்படுத்தல் சேவைகள்
- மனித வலுச் சேவைகள் (ஒப்பந்த அடிப்படையில்)
- கொண்டுசெல்லும் சேவைகள்
- ஏனைய சேவைகள்
- தொழில்சார் சேவைகள்
- அச்சிடல் சேவைகள்
- ஸ்கானிங் சேவைகள்
- தையல் சேவைகள்
- போக்குவரத்துச் சேவைகள்

**விண்ணப்பதாரிகளுக்கான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**

(i) விலைக் கோரல்கள் பொதுவாக பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள்/அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள்/ஒப்பந்ததாரர்களிடமிருந்து அழைக்கப்படும் எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கியானது பதிவுசெய்யாத அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்/வழங்குநர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள்/ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைக்கோரல்களை வரவழைப்பதற்கு சுயமாக உரிமையினைக் கொண்டிருக்கும்.

(ii) மத்திய வங்கியானது, பதிவுக்காக கிடைக்கப்பெற்ற ஏதேனும் விண்ணப்பத்தினை மதிப்பீட்டின் மீது அவர்களது உறுதிச்சான்றிதழ்கள் திருப்திகரமற்றதாக இருப்பது கண்டுபிடிக்கப்படுமாயின் நிராகரிப்பதற்கு சுயமான உரிமையினைக் கொண்டிருக்கிறது.

(iii) 2023ஆம் ஆண்டிற்காக ஏற்கனவே வங்கியுடன் பதிவுசெய்துள்ள வழங்குநர்கள், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் 2024ஆம் ஆண்டிற்கான பதிவிற்காக மீண்டும் விண்ணப்பித்தல் வேண்டும்.

(iv) நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் அல்லது இலங்கை தேசிய நிர்மாண அமைப்புடன் பதிவுசெய்துள்ள ஒப்பந்ததாரர்கள் மாத்திரம் நிர்மாணங்களுக்காக பதிவுசெய்துகொள்வதற்கு தகைமை பெறுவர்.

(v) இலங்கை சிவில் விமான சேவை அதிகாரசபையுடன் பதிவுசெய்துள்ள விமானப் பயணச்சீட்டு முகவர்கள் மாத்திரம் விமான பயணச்சீட்டு சேவைகளுக்கு பதிவுசெய்துகொள்வதற்கு தகைமை பெறுவர்.

(vi) பாதுகாப்பு பணிகளை வழங்குவதற்காக மாகாண சபையில்/பிரதேச செயலகத்தில் பதிவுசெய்த அத்துடன் பாதுகாப்பு அமைச்சின் மூலம் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்கள் மாத்திரம் பாதுகாப்பு ஆளணியினை வழங்குவதற்கு பதிவுசெய்துகொள்வதற்கு தகைமைபெறும்.

(vii) மேலே, (iv), (v) மற்றும் (vi) கீழ் வேண்டப்பட்ட நிபந்தனைகளை விண்ணப்பதாரிகள் நிறைவுசெய்கின்றனர் என்பதனை மெய்ப்பிப்பதற்கு அவசியமான ஆவணங்களின் பிரதிகள் முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(viii) தேவையான துணையளிக்கின்ற ஆவணங்களை உள்ளடக்காத அத்துடன் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

(ix) வேண்டப்படுகின்ற போது உடனடியாக விலைக்கோரல் சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அல்லது பொருட்களை அத்துடன் சேவைகளை உரிய நேரத்தில் விநியோகிப்பதற்குத் தவறுகின்ற அல்லது தரம் குறைந்த பொருட்களை, சேவைகளை, பழுதுபார்த்தல்களை மற்றும் பராமரிப்பினை வழங்குகின்றவர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**

(i) பதிவுசெய்வதற்கான விண்ணப்பப்படிவம் https://www.cbsl.gov.lk/en/tenders என்ற இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளத்தினுள் நுழைவதன் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும். பதிவுசெய்வதற்கு ஏற்புடைய மீளளிக்கப்படாத கட்டணங்கள் வழங்குநர் பதிவு படிவத்தில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பத்தினைப் பூர்த்திசெய்வதற்கான அறிவுறுத்தல்கள் வலைத்தளத்தில் கிடைக்கப்பெறுகின்றன.

(ii) முறையாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை தொடர்புடைய ஆவணங்களுடன் சேர்த்து 2023 டிசெம்பர் 06 அன்று அல்லது அதற்கு முன்னர் supreg@cbsl.lk என்ற மின்னஞ்சல் ஊடாக மாத்திரம் அனுப்பப்படவேண்டும். விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை கைகளினால் பூர்த்திசெய்து ஸ்கான் செய்யப்பட்ட பிரதிகளை அனுப்பலாம் அல்லது டிஜிட்டல் ரீதியாக பூர்த்திசெய்யலாம்.

(iii) விண்ணப்பங்களின் வன்பிரதிகள் அனுப்பப்படக்கூடாது.

**கொடுப்பனவுகள்**

(i) விண்ணப்பதாரிகள் அவர்கள் விண்ணப்பிக்கின்ற விடயத்திற்காக ஒவ்வொரு துணை வகைக்குமான தொடர்புடைய கட்டணத்தினை கொடுப்பனவு செய்வதற்கு வேண்டப்படுகின்றனர். வேண்டப்பட்ட கட்டணத் தொகையினைக் கொடுப்பனவு செய்வதற்குத் தவறுகின்ற வழங்குநர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் ஏதேனும் மேலதிகத் தொகை மீளளிக்கப்படாது.

(ii) பதிவுக்கட்டணங்களை ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினூடாக கொடுப்பனவு செய்யலாம்.

ஏதேனும் மேலதிகத் தகவல்களுக்கு 011-2477919, 011-2477123, 011-2477599 என்ற தொலைபேசி இலக்கத்தில் பெறுகைப் பிரிவின் உதவிச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**செயலாளர்**
**இலங்கை மத்திய வங்கி**

02 ஆம் பக்கம் தொடர்...

இந்த நிலையில் சொத்துவரியை ஏன் கொண்டு வரவில்லை என நாம் கேட்கின்றோம். 2021ஆம் ஆண்டில் அதன் மூலம் 8 பில்லியன் வருமானத்தை பெற்றுக் கொள்ள முடிந்தது. நூற்றுக்கு 0.05 என்ற வகையிலேயே அந்த வரி நடைமுறைப்படுத்தப்பட்டது. உலகின் ஏனைய நாடுகளில் அந்த வரி நூற்றுக்கு 10 முதல் 20 வீதம் வரை நடைமுறையில் உள்ளது. வரி செலுத்தக்கூடியவர்களிடமிருந்து வரி அறவிடாததேன்? தடுத்து வைப்புக்கான வரி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். வரி செலுத்தாதவர்களே அதனை எதிர்ப்பர். இந்த முறை வரவு செலவுத் திட்டத்தில் தனியார் துறையினருக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. அரசாங்கமானது வரிக் கொள்கையில் மாற்றங்களை கொண்டு வராமல் நடைமுறைப்படுத்த வேண்டும்.

வரவு செலவுத் திட்ட அலுவலகம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் அவ்வாறான நடவடிக்கைகளுக்கு நாம் இரு கைகளையும் உயர்த்தி ஆதரவு வழங்குவோம். அதன் செயற்பாடுகள் சுயாதீனமாக முன்னெடுக்கப்பட வேண்டும். சுயாதீனமான வழக்கு தொடுக்கும் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என நாம் யோசனை முன் வைக்கின்றோம். ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு சிறந்த யோசனை இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

**இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்**

நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சவால்களை எதிர்கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தவும் பாரியளவில் நிதி ஒதுக்கீடுகளை செய்துள்ளார். குறிப்பாக கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதற்காக 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கி இருப்பதன் மூலம் வடமாகாண கடற்றொழிலாளர்களுக்கு பல நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும். வன்னி மாவட்ட மக்கள் நீண்டகாலமாக காணிப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் 20 இலட்சம் குடும்பங்களுக்கு காணி வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அதேபோன்று விவசாயிகளுக்கு காணி வழங்குவதற்கு 2பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. எமது பகுதியை பொறுத்தவரையில் காணி பிரச்சினை என்பது பாரிய பிரச்சினையாகும். என்றாலும் ஜனாதிபதி அதனை உணர்ந்து அந்த பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுத்திருப்பது பெரும் வரமாகும். மேலும் கிராமிய பாதைகளை புதுப்பிப்பதற்காக வரவு செலவு திட்டம் மூலம் 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதனால் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு, அபிவிருத்தி செய்யப்படாமல் உள்ள எமது பிரதேச கிராமிய பாதைகளை புதுப்பிக்க அந்த நிதியில் இருந்து ஒரு பில்லியனாவது வழங்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

# மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபை

**வெற்றிடங்கள்**

மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையின் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு நிரப்புவதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. முகாமைத்துவ உதவியாளர் (IIIம் தரம்)**

விண்ணப்பங்கள் 2023.12.04ம் திகதி அல்லது அதற்கு முன்பு அனுப்புதல் வேண்டும்.
மேலதிக தகவல்களுக்கு கீழ்க்காணும் இணையதளத்திற்கு பிரவேசியுங்கள்.

**https://moj.gov.lk/images/sccb/ma-vacancy.pdf**

**மார்ஷல்,**
**மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபை,**
**த.பெ. 223, கொழும்பு - 12**
**தொலைபேசி - 011-2437501**




## மேஷம்

**(அஷ்விணி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

எந்த விஷயத்தையும் உடனடியாக செயல்படுத்துவீர்கள். இருப்பினும் ஆளுமை திறன் அதிகம் தேவை. எந்த சூழ்நிலையையும் அவசரப்படாமல் பொறுமையுடன் கையாள்வது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றமும் ஏற்படும். நீண்ட நாளாக வரவேண்டிய பணம் தற்போது வந்து சேரும். பயணங்களில் உங்களுடைய உடமைகளை கவனமாக வைத்துக் கொள்ளுங்கள். தாய் உடல் நலனில் கவனம் தேவை. வீடு வாகனம் சொத்து தொடர்பான செலவினங்கள் உண்டு. குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. பூர்வீக சொத்து விஷயங்களை கவனமாக கையாளுங்கள். அரசால் அனுகூலம் உண்டு. தந்தை உங்கள் உயர்வுக்கு உறுதுணையாக இருப்பார். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

பொறுமையே பெருமை தரும் என்பதை உணர்ந்து செயல்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொருளாதார நிலை தேவைக்கு ஏற்ப உயரும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். உங்கள் பேச்சுக்கு மதிப்பு அதிகரிக்கும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். தங்க நகை ஆபரணச் சேர்க்கை உண்டு. பூர்வீக சொத்தால் ஆதாயம் உண்டு. எதிரிகளால் வீண் பிரச்சினைகள் வந்தாலும் எதிர் கொண்டு வெற்றி பெறுவீர்கள். வழக்கு விஷயங்களில் கவனம் தேவை. கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வியாபார ரீதியான புதிய ஒப்பந்தங்களில் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியது அவசியம். இதுவரை தடைபட்டு வந்த திருமண முயற்சிகள் இனிமேல் நிறைவேறும். எதிர்பாராத அதிர்ஷ்டமும் தன வரவும் உண்டு.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

இன்பமும் துன்பமும் வாழ்வின் இரு பக்கங்கள் என்பதை உணர்ந்து செயல்படுவீர்கள். எடுக்கும் முயற்சிகள் வெற்றி அடையும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. பொருளாதார நிலையில் ஏற்ற தாழ்வுகள் வந்து நீங்கும். பேச்சில் அதிக கவனம் தேவை. தாயால் அனுகூலமான பலன்கள் ஏற்படும். வீடு, வாகனம், சொத்து தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும். பூர்வீக சொத்து விஷயங்களை கவனமாக கையாளுங்கள். கணவன் மனைவிக்குள் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். வியாபார ரீதியான ஒப்பந்தங்களால் மேன்மை உண்டாகும். தந்தையால் அனுகூலமான பலன்கள் ஏற்படும். பிதுர் வழிபாடும் குரு மற்றும் மூத்தோரின் ஆசியும் நன்மை தரும். தடைப்பட்ட பதவி உயர்வு ஊதிய உயர்வு கிடைக்கும். நண்பர்களால் ஆதாயமான பலன்கள் உண்டு.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

அரசியலில் ஆர்வத்துடன் செயல்படுவீர்கள். வீண் பேச்சுகளை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வதால் தேவையற்ற பிரச்சினைகளை தவிர்க்கலாம். எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். தங்க நகை ஆபரணச் சேர்க்கை உண்டு. உறவுகளால் மனக்கசப்புகள் வந்து நீங்கும். வீடு, வாகனம் சொத்து தொடர்பான விஷயங்களை கவனமாக கையாள்வது நல்லது. குழந்தைகளின் செயல்பாடுகள் பெருமைப்படக்கூடியதாக இருக்கும். பூர்வீக சொத்தால் ஆதாயம் உண்டு. எதிரிகளால் பிரச்சினைகள் வந்தாலும் எதிர்கொண்டு வெற்றி பெறுவீர்கள். கணவன் மனைவிக்குள் அன்பும் ஆதரவும் இருக்கும். வியாபார ரீதியான ஒப்பந்தங்களில் எச்சரிக்கையுடன் செயல்படுங்கள். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். தந்தையால் அனுகூலம் உண்டு. தொழில் மற்றும் உத்தியோகத்தில் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

மற்றவர்களை எளிதில் அடக்கி ஆளும் திறனுடன் செயல்படுவீர்கள். பொருளாதார நிலை மேம்படும். எடுக்கும் முயற்சிகளில் தடைகளும் தாமதங்களும் உண்டாகும். விடாமுயற்சியே வெற்றி தரும். தங்க நகை ஆபரணங்களை கவனமாக கையாளுங்கள். உறவுகளால் பிரச்சினைகள் வந்து நீங்கும். வீடு, வாகனம் சொத்து தொடர்பான செலவினங்கள் உண்டு. குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. குலதெய்வ அருள் உண்டு. வியாபாரத்தில் கூட்டாளிகளிடம் கவனம் தேவை. வியாபார ரீதியான புதிய ஒப்பந்தங்களை ஒரு முறைக்கு பலமுறை கவனித்து செயல்படுத்துங்கள். யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம். தந்தையால் அனுகூலமான பலன்கள் ஏற்படும். குரு மற்றும் மூத்தோரின் ஆசி கிடைக்கும். தொழில் மற்றும் உத்யோகத்தில் மேன்மை உண்டாகும். சக ஊழியர்கள் உங்களை ஆதரிப்பார்கள். வெளிநாட்டு தொடர்பால் ஆதாயமான பலன்கள் உண்டு.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

புத்திக் கூர்மையும் சாதுரியத்தோடும் செயல்படுவீர்கள். குடும்பத்தில் இதுவரை இருந்த பிரச்சினைகள் நீங்கும். உங்கள் பேச்சுக்கு மதிப்பு மரியாதை அதிகரிக்கும். உடன் பிறப்புகளால் ஆதாயம் உண்டு. தாயால் அனுகூலமான பலன்கள் ஏற்படும். வீடு வாகனம் சொத்து தொடர்பான செலவினங்கள் உண்டு. குழந்தைகளின் செயல்கள் பெருமைப்படக்கூடியதாக இருக்கும். பூர்வீக சொத்தால் ஆதாயம் உண்டு. உடல் ஆரோக்கியம் மேம்படும். வழக்கு விஷயங்களில் வெற்றி உண்டாகும். அரசால் அனுகூலம் உண்டு. வாகனப் பயணங்களில் கவனம் தேவை. நீண்ட நாட்களாக கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்ல முயற்சி செய்து கொண்டிருப்பவர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பு உண்டாகும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் மற்றும் சக ஊழியர்கள் சாதகமாக செயல்படுவார்கள். நண்பர்களால் ஆதாயம் உண்டு.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எந்த நிலையிலும் தன் நிலை மாறாது இருப்பீர்கள். எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். மகிழ்ச்சியும், உற்சாகமும் அதிகரிக்கும். பொருளாதார நிலையில் நல்ல மாற்றமும் முன்னேற்றமும் ஏற்படும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். உடன்பிறப்புகளால் ஆதாயம் உண்டு. பயணங்களால் மகிழ்ச்சி உண்டு. தாயால் அனுகூலமான பலன்கள் ஏற்படும். வீடு மனை சொத்து தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும். வியாபார ரீதியான புதிய ஒப்பந்தங்கள் நன்மை தரும். எதிர்பாராத அதிர்ஷ்டமும் தன வரவும் உண்டு. தந்தையால் அனுகூலமான பலன்கள் ஏற்படும். கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்வதற்கான முயற்சிகள் கைக் கூடும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். உங்கள் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

அதிர்ஷ்டம் தரும் வாரமாக இருக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு வெளியூர்ப் பயணமும் அதனால் ஆதாயமும் ஏற்படும். திருமண வயதில் உள்ள மகன் அல்லது மகளின் திருமணம் தொடர்பான முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் உறவினர்களிடம் கௌரவம் அதிகரிக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சற்று இழுபறியான நிலையே காணப்படும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருந்தாலும் அதற்கேற்ற சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாகச் செயல்படுவீர்கள். அதிகாரிகள் அனுசரணையாக இருப்பார்கள்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

மனதில் ஆயிரம் ரகசியங்களை கொண்டு விளங்குவீர்கள். எதிரிகள் விலகி செல்வார்கள் வீண் செலவுகளை குறைத்துக் கொள்ளுங்கள். பொருளாதார நிலை உயரும். நீண்ட நாளாக வங்கி கடனுக்கு முயற்சி செய்து கொண்டிருப்பவர்களுக்கு வங்கி கடன் கிடைக்கும். கடன் பிரச்சினைகள் தீரும் பயணங்களின் போதும், வாகனத்தில் செல்லும் போதும் ஆவணங்களை கவனமாக வைத்துக் கொள்ளுங்கள். வாகனங்களில் நிதானமாக செல்வது நல்லது. குழந்தைகள் உடல் நலனில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துவது நல்லது. கணவன் மனைவிக்குள் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். வியாபார ரீதியான தள்ளிப் போனஒப்பந்தங்கள்கைகூடும். வியாபாரம்பெருகும். எதிர்பாராத அதிர்ஷ்டமும் தனவரவும் உண்டு. யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

எத்தனை தடைகள் பிரச்சினைகள் வந்தாலும் எதிர் கொண்டு வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. பொருளாதார நிலையில் ஏற்றத் தாழ்வுகள் வந்து நீங்கும். அரசால் அனுகூலம் உண்டு. உறவுகளை கவனமாக கையாளுங்கள். வாகனப் பழுது ஏற்படக்கூடிய சூழல் உருவாகும். குழந்தைகள் உடல் நலனில் கவனம் தேவை. குழந்தையின் நட்பு வட்டத்தை கண்காணிப்பில் வைத்துக் கொள்வது நல்லது. குலதெய்வ வழிபாடு நன்மை தரும். கணவன் மனைவிக்குள் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். வியாபாரத்தில் கூட்டாளிகளால் ஆதாயம் உண்டு. புதிய வியாபார முயற்சிகள் கைகூடும். வெளிநாட்டு தொடர்பால் ஆதாயம் உண்டு.

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எதிர்பாராத அதிர்ஷ்டமும் தன வரவும் உண்டு. எதிர்மறை சிந்தனையை தவிர்த்து நேர்மறை சிந்தனையை வளர்த்துக் கொள்ளுங்கள். பணக் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. வீண் வாக்குவாதத்தை தவிர்க்கவும். குடும்பத்தில் மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. எடுக்கும் முயற்சிகளில் தடை வந்தாலும் விடா முயற்சி வெற்றி தரும். தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ளுங்கள். பயணங்களில் கவனம் தேவை. தாயால் அனுகூலமான பலன்கள் ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. பூர்வீக சொத்தால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் கூட்டாளிகளிடம் கவனம் தேவை. புதிய வியாபாரம் முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத பண வரவும் அதிர்ஷ்டமும் உண்டு. வெளிநாட்டு தொடர்பான விஷயங்களை கவனமாக கையாளுங்கள்.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் உருவாகும். உடன்பிறப்புகளால் ஆதாயம் உண்டு. வெளியூர் பயணங்கள் நன்மை தரும். ஆடை ஆபரண சேர்க்கை உண்டாகும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. கணவன் மனைவிக்குள் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். வியாபார ரீதியாக புதிய முயற்சிகள் வெற்றி தரும். பணக் கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை. உறவினர் மற்றும் நண்பர்களை பண விஷயத்தில் முழுமையாக நம்ப வேண்டாம். சிலருக்கு மருத்துவ செலவினங்கள் ஏற்படலாம். சொத்து மற்றும் தங்க நகையில் முதலீடு செய்வது வீண் விரயத்தை தடுக்கும். யோகா மற்றும் தியானம் பயில்வது மன உறுதியை தரும். எதிர்மறை சிந்தனை தவிர்த்து நேர்மறை சிந்தனை வளர்த்துக் கொள்ளுங்கள்.

---

## தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்



அருணாசலம் லெட்சுமணன் 13

# பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் பின்னரேயே மலேசியாவுக்கு தமிழர்கள் அதிகளில் குடிபெயர்ந்தனர்

பத்து மலை முருகன் ஆலயம் வழிபாட்டுக்கு உரிய இடமாக மட்டுமல்லாது உல்லாசத்துறையில் முக்கிய கேந்திரமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மலேசிய ரயில் நிலையமும் ஆலயத்திற்கு அருகிலேயே அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கோலாலம்பூர் விமான நிலையத்திலிருந்து புகைவண்டி ஊடாகவும் இவ் ஆலயத்திற்கு பயணிப்பது இலகுவானதாகும். கோலாலம்பூர் மாநகர் முழுதும் மினி ரயில் சேவை மிக இலகுபடுத்தப்பட்டிருக்கும். மினி ரயில் சேவை மேம்பாலங்கள் ஊடாகவே வடிவமைக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. இவ் வடிவமைப்பானது இடங்கள் வீண் விரயமாவதையும், விபத்துக்களை தடுப்பதாகவும் அமைகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பத்துமலை முருகன் ஆலயம் தனித்து முருகனுக்குரிய வழிபாட்டுத் தலமாக மாத்திரம் இல்லாமல் அதனைச் சூழ பிற தெய்வங்களின் சந்நிதானங்களும் அமையப்பெற்றிருந்தது. இந்நிலை மேலும் அழகை ஆராதிப்பதற்கு உகந்த இடமாக வலுப் பெற்றிருந்தமையும் சிறப்பம்சமாகிறது. ஸ்ரீ கந்தரேஸ்வரர், வேலாயுதர், வள்ளி தெய்வானை, முருகன் இணைந்த ஆலயம் என்றவாறு முருகனின் வேறுபட்ட பரிமாணங்களை அவதானிக்க முடிகிறது. அவ்வாறே அறுபடை வீடுகளின் மாதிரி உருவாக்கமும் குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்க்கின்றமையும் கவனிக்கத்தக்கது. விநாயகர், மீனாட்சி அம்மன், ஆஞ்சநேயர், வெங்கடாசலபதி ஆகியோருக்கு



தனித்துவமாக கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளமையும் இஷ்ட தெய்வ வழிபாட்டுக்கான வழிபாட்டுத் தலங்களாகவும் அமையப்பெற்றுமுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சிவ வழிபாட்டுக்கு சகல தலங்களும் முக்கியத்துவத்தை வழங்குவதும் குறிப்பிடத்தக்கது.

இவ் ஆலயத்திற்குரிய கலைக் கூடமும், இராமாயண அழகியல் சிறப்பை வலியுறுத்தும் வகையில் அமையப்பெற்றுள்ள கலைக்கூடமும் மதங்களுக்கப்பால் அழகியலை மேன்மையாக கருதும் சாராருக்கு வாய்ப்பான களமாக அமையப்பெற்றுள்ளமையும் கவனிக்கத்தக்கது. சில தலங்களில் உபயங்களையும் நன்கொடைகளைகளையும் வழங்கியதில் சீனர்களின் பங்கேற்பும் இருந்து வருகின்றமையை அறிய முடிகிறது.

இராமாயணத்தின் செல்வாக்கு நிலை தென்னாசிய நாடுகளில் மிக முக்கியத்துவம் பெற்றிருந்ததைப் போலவே தென் கிழக்காசிய நாடுகளிலும் மிகுந்த செல்வாக்கு நிலை பெற்றிருப்பதை உணர முடிகிறது. தமிழர் கலாசாரத்தில் ஆரிய வாதத்தின் மேன் முனைப்பு தாக்கத்தின் ஊடுருவலின் அடையாளமாகவே இதனை பார்க்கலாம். இந்த இராமயணம் தென் கிழக்காசிய நாடான கம்போடியாவிலும் மிகுந்த செல்வாக்கிற்குற்பட்டுள்ளதை 2018ம்ஆம் ஆண்டு கம்போடிய பயணத்தில் உணர்ந்தேன். கம்போடிய இராமயணம் அனைத்து அருங்காட்சிக் கூடங்களிலும் ஏதோவொரு வகையில் முக்கியத்துவம் பெறுவதையும் அவதானிக்கலாம். சில அருங்காட்சிக் கூடங்களில் இராமயணததின் முக்கிய அம்சங்கள் முழுதும் ஓவியமாக வரையப்பட்டிருந்தமையும் அந் நாட்டின் தொல்லியல் துறையின் முக்கிய தடயமாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. கம்பராமாயணம், வால்மீகி இராமாயணம் என்பவற்றில் இருந்து கம்போடிய இராமாயணம் சற்று வேறுபடுவதையும் அவதானிக்க முடிகிறது. இந்திய இராமாயணங்களில் அனுமன் பிரமச்சாரியாகவும் எதிர்ப்பால் கவர்ச்சியில் நாட்டமில்லாத பாத்திரமுமாகவே சித்தரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மாறாக கம்போடிய இராமாயணத்திலும் மூலக் கதைப் பொருள் மாறுபடாத நிலையிலும் கூட சில பாத்திர வார்ப்புகளில் வித்தியாசங்களை அவதானிக்க முடிகிறது. எடுத்துக்காட்டாக இராமாயண காவியத்தில் மிக முக்கியத்துடன் அமைந்த பாத்திரமான அனுமன் பாத்திரம் எதிர்ப்பாலாரான பெண்களில் நாட்டமுடைய பாத்திரமாகவும், திருமணம் முடித்து இல்லற வாழ்வில் ஈடுபடுகின்ற பாத்திரமாகவும் சித்தரிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறே தென்கிழக்காசிய நாடுகளில் ஒன்றான தாய்லாந்தின் பிரயோகத்தில் இருக்கும் “தாய் இராமாயணம்” என அழைக்கப்படும் இலக்கியத்திலும் வேறுபட்ட போக்குகளை அவதானிக்கலாம்.

பூர்வீக மலாயாவோடு இந்தியாவும், இந்தியத் தமிழர்களும் தொடர்புபட்ட போதிலும் பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சியின் பின்னரே மலேசியாவில் தமிழர்கள் நிலை கொள்கிறார்கள். பிரித்தானியர்களின் பெருந்தோட்ட பொறிமுறை விருத்திக்காக தென்னிந்தியாவில் இருந்து இலங்கை, மலேசியா போன்ற நாடுகளுக்கு தமிழர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவ்வாறு இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட சம காலத்திலேயே மலேசியாவில் இறப்பர் தோட்டங்களின் உருவாக்கத்துக்கும் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். மலேசியாவில் இந்தியத் தமிழர்களின் வாழ்வியலும் இருநூறு வருடத்தை நிறைவு செய்துள்ள நிலையில் அவர்கள் தம்மை இந்தியத் தமிழர்கள் என அடையாளப்படுத்துவதில் ஆத்மார்த்தமாகவே திருப்தி கொள்கிறார்கள். மலேசிய தேசிய நீரோட்டத்தில் பொதுமையான பார்வையுடன் கூடிய அணுகுமுறை அங்கு வாழும் தமிழர்களில் ஒரு திருப்தி நிலையை உணர முடிகிறது. அதன் ஓர் அம்சமாகவே நான்காவது முறையாகவும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை அந்த நாட்டில் நடாத்தியமை கவனிக்கத்தக்கது.

பிரித்தானிய காலனித்துவத்தில் தென்னிந்தியாவில் இருந்து தமிழர்கள் இலங்கைக்கு புலம் பெயர்ந்து இருநூறு வருடத்தை எய்தியுள்ளார்கள். இந் நிலையில் அக் கால நிறைவை சிலர் கொண்டாட்டமாகவும், சிலர் அனுஷ்டிப்பாகவும் நோக்குகின்றார்கள். அவ் விடயம் ஒவ்வொருவரது அணுகு முறையைப் பொறுத்து வேறுபடுகின்றமை கவனிக்கத்தக்கது. இவ்வாறே இரு நூறு வருட வரலாற்றை கொண்ட இச் சமூகத்தின் இன்றைய முகவரி தொடர்பில் இரு வேறுபட்ட வாதப்பிரதி வாதங்கள் முன் வைக்கப்படுகின்றன. இந்திய வம்சாவளி தமிழர்கள் என்றே இது வரையில் சட்ட ஏற்பாடுகளில் அடையாளப்படுத்தியமையே பொருத்தமானது என கருத்துக்களை முன் வைப்பவர்களும் உள்ளார்கள். மாறாக கால மாற்றத்தில் சமூக நகர்வின் விளைவாக கல்வி, இலக்கிய எழுத்துத்துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்கின் காரணமாக சுயம் சார்ந்த உணர்வுடன் தனது சமூகத்தை மலையகம் என அடையாளப்படுத்துவதில் ஆர்வம் காட்டலாயினர். இது தொடர்பில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை கருத்தியலுக்கு அப்பாலான வக்கிர நிலையைப் பெற்றிருப்பது கவலைக்கிடமான விடயமாகும்.

மலேசியாவில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களும் ஒரே பண்பாட்டுச் சூழலில் வாழ்ந்தவர்கள், வளர்ந்தவர்கள் என்ற வகையில் சமய நம்பிக்கைகளும் ஒரே மாதிரியான ஊடுகடத்தலுக்கு உட்பட்டதாகவே அமையும் என்பது திண்ணமாகும். அந்த வகையில் இலங்கையில் வாழும் மலையகத் தமிழர்களோடு மாரியம்மன் வழிபாடு இரண்டற கலந்த நிலை பெற்றிருப்பது யாவரும் அறிந்ததே! அவ்வாறே மலேசியாவில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்களோடும் மாரியம்மன் வழிபாடு மிகுந்த செல்வாக்கு நிலையைப் பெற்றிருப்பதைக் காணலாம். இலங்கை மலையகத்தில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தைப் போன்று மலேசியாவில் மகா மாரியம்மன் ஆலயம் அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக் கோயிலும் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தைப் போன்றே கிராமிய மரபுடனான வழிபாட்டுடன் தொடர்புபட்டிருந்த நிலையில் பின்னாளில் ஆகம முறைப்படியான வழிபாட்டில் கவனத்தை செலுத்திக் கொள்கிறது.

பத்து மலை முருகன் ஆலயம் இத் தளத்தின் செயற்பாட்டில் இருந்தே அமையப் பெற்றுள்ள நிலையில் இரண்டு ஆலயங்களின் உற்சவங்களுடன் நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றமை கவனிக்கத்தக்கதாகும். தைப்பூசம் இரண்டு ஆலயங்களிலும் மிகச் சிறப்பாக அனுட்டிக்கப்படுவதோடு கோலாலம்பூரைச் சூழவுள்ள தமிழர்களை ஒன்றிணைப்பதில் சிறப்பாக பணியாற்றுகின்றன எனலாம். மகா மாரியம்மன் ஆலயம் 1873ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த ஆலயம் தனியார் ஒருவரின் பராமரிப்பிலேயே நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. 1920ஆம் ஆண்டு முதல் பொது மக்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் 1968ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் இருந்த கட்டடக் கலைஞர்கள் அழைத்து வரப்பட்டு திராவிட கட்டட பாணியில் 1972ஆம் ஆண்டு நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றன. எழுபத்தைந்து அடி உயரத்தில் கோபுரம் அமைக்கப்பட்டிருந்த நிலையில் 1973ஆம் வருடம் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. மலேசியாவில் இந்திய வம்சாவளி தமிழர்கள் எங்கெல்லாம் பெருந்தோட்ட கட்டமைப்பை நிறுவுவதில் பங்கேற்றார்களோ இத் தோட்டங்களில் எல்லாம் முத்துமாரியம்மன் வழிபாடு நிலவியதோடு, ஆலயங்களும் அமையப்பெற்றன. மலேசியா கொடா மாநிலத்தில் இதன் தாக்கத்தை அறியலாம். அவ்வாறே மலேசியாவின் மிக அண்மைய நாடான சிங்கப்பூரிலும் இதன் தாக்கம் தொடர்ந்ததை அறியலாம். இலங்கையில் மேற்கத்தேயரின் வருகையைத் தொடர்ந்து கிறிஸ்தவ சமயம் எவ்வாறு ஊடுருவியதோ அது போன்றே மலேசியாவிலும் கிறிஸ்தவர்கள் உருவாகிறார்கள். பின்னாளில் தொழில், கல்வி, வர்த்தகம், யுத்தம் போன்ற காரணங்களினால் மலேசியாவுக்கு புலம் பெயர்ந்த கிறிஸ்தவர்களினாலும் கிறிஸ்தவ மக்களின் கட்டமைப்பு மலேசியாவில் வளர்ச்சி பெறுகிறது எனலாம்.



வேறு நாடுகளைச் சேர்ந்த பல்வேறுபட்ட நபர்களை சந்தித்துக் கொள்கிறோம். ஆலயம், அழகியல், வரலாறு, பூர்வீகம் பற்றியெல்லாம் கலந்துரையாடல் தொடர்கிறது. செல்பிக்குள்ளும், குழு புகைப்படத்துக்குள்ளும் பலரும் உள்வாங்கப்பட்டாலும் மனதில் ஒரு சிலரே உள்வாங்கப்படுவது என்பது இயல்பான மாற்றமே! துறை சார்ந்து, உறவு சார்ந்து, சமூகம் சார்ந்து, இயல் சார்ந்து, இசம் சார்ந்து, வர்க்க உந்துதல் சார்ந்து, பழக்கம் சார்ந்து, அணுகுமுறை சார்ந்து, உருவம் சார்ந்து, உள்ளம் சார்ந்து இவ்வாறு உந்தப்படுவது தவிர்க்க முடியாத விடயமாகும். அவ்வாறு இத் தளத்தில் சந்தித்தவர்களில் இருவர் மிக முக்கியத்திற்குரியவர்களாக விளங்குகிறார்கள். அவர்களுடனான கலந்துலையாடல் மிக, மிக ஆக்கபூர்வமானதாக அமைந்தது. இருவரையும் தமிழியல் ஆய்வாளர்கள் என்ற வகையில் பொதுமைப்படுத்தலோடு நோக்கினாலும், இரு வேறுபட்ட துறைகளில் நிபுணர்களாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. ஒருவர் ஆன்மிக சொற்பொழிவுகளில் தலை சிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றையவர் ஓலைச்சுவடிகளின் உள்ளடக்கம் தொடர்பிலான ஆய்வாளரும் ஆவணப்படுத்துபவருமாவார். அவர்களுடனான உரையாடல் மிக காத்திரம் பெற்றதாக அமைந்தது.

**பயணம் தொடரும்...**

# படித்ததும் பகர்வதும் 167



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### வேண்டாம் தற்கொலை!




உலகில் வாழ்வதற்காக இறைவன் மனிதனுக்கு வழங்கிய ஆயுட்காலத்தை, இடை நடுவில் முடித்துக்கொள்ளும் அதிகாரம் எவருக்கும் வழங்கப்படவில்லை. இது உலக வாழ்வியலுக்கு மாற்றமான செயலாகும். இதனால் தான் தற்கொலை முயற்சியை தண்டனைக்குரிய குற்றமாக சட்டம் பிரகடனப்படுத்தியுள்ளது.

எல்லா சமயங்களும், கொள்கைகளும், நெறிமுறைகளும் தற்கொலையை முற்றாக வெறுத்துள்ளன அல்லது தடைசெய்துள்ளன. ஆயினும் நடைமுறையில் அன்றாடம் தற்கொலை செய்து கொள்ளும் நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும். தற்கொலைக்கு வெவ்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் அவற்றில் எதனையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கையில் கடந்த மூன்று ஆண்டுகளில் 9700 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக சுகாதார அமைச்சின் புள்ளி விபரங்களின் படி அறிந்து கொள்ள முடிகிறது. 2002ஆம் ஆண்டில் 3406 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் அதில் 2832 பேர் ஆண்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தற்கொலை செய்து கொண்டவர்களில் 83%மாக இருப்பது கவனிக்கத்தக்கது.

2022ல் தற்கொலை செய்து கொண்டவர்களில் 192 பேர் பொருளாதார சிக்கல்களாலும், 593 பேர் குடும்ப தகராறுகள் காரணமாகவும், 274 பேர் போதைப் பொருட்களுக்கு அடிமையானதாலும், 412 பேர் மனநல கோளாறுகள் காரணமாகவும் தற்கொலை செய்து கொண்டதாக இத்தரவுகள் தெரிவிக்கின்றன.

இதே போன்று காதல் தோல்வி, பரீட்சையில் சித்தியடையத் தவறியமை, தமது எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறாமை போன்ற காரணங்களுக்காகவும் சிலர் தற்கொலையில் ஈடுபடுவதைக் காணக் கூடியதாக உள்ளது. இவை தவிர விவசாயிகள், தொழிலாளர்கள் கூட பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக தற்கொலை செய்து கொள்கின்ற தகவல்கள் வெளி வந்தவண்ணமாக இருக்கின்றது. இதுவும் வேதனைக்குரிய விடயமாகும்.

தற்கொலை செய்து கொள்வதிலிருந்து ஒருவரை பாதுகாத்துக் கொள்ள முயற்சிப்பது அவரைச் சூழ்ந்துள்ள, சேர்ந்துள்ள அனைவர் மீதுமுள்ள பொறுப்பாக உள்ளது. தற்கொலை செய்துகொள்பவர்களது நடத்தையில் ஏற்படுகின்ற மாற்றங்கள், அவர்களது மனோநிலை, பேச்சுக்கள் போன்றவற்றிலிருந்து அவர்களது தற்கொலைக்கான எண்ணத்தை, நோக்கை கண்டறிந்து அவர்களை, அம்முயற்சியிலிருந்து தடுத்துக் கொள்ளும் வகையில் செயல்படுதல் வேண்டும்.

உரிய உளவள ஆலோசனைகள் வழங்குதல், அவர்களது பலவீனங்களை போக்கி தைரியத்தை வரவழைக்கக் கூடிய விடயங்களை செய்தல், பணம், பொருள், பொருளாதார உதவிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் மூலம் அத்தகையவர்களை தற்கொலை முயற்சியிலிருந்து மீட்கலாம்.

இவற்றைக் கருத்தில் கொண்டு, தற்கொலைக்கான சிந்தனையை முற்றாக தவிர்த்துக் கொள்வதுடன் அத்தகைய சிந்தனையுடையவர்களை அவற்றிலிருந்து மீட்டெடுக்கவும் ஒவ்வொருவரும் செயற்படுதல் வேண்டும்.

## நெஞ்சுக்கு நீதி

**வாழ்க்கை வாழ்வதற்கே இறைவன் தந்தான்**
**வலிகள்தற்காலிகமே புரிதல் தேவை தான்**
**தற்கொலை சிந்தனை கோழைத்தனம் தான்**
**தத்துவம் தெரிந்தாலே எங்கும் மகிழ்ச்சிதான்**

## நூலகத்துக்கு ஒரு நூல்

### இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தந்துள்ள "சிதமு" – 'சிந்திப்போம்'

இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் எனும் மூவின மக்களினதும் அபிமானத்தை வென்ற அரசியல்வாதியாக பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் திகழ்கிறார். சந்தர்ப்பவாத அரசியல் செய்யாது, கொள்கைப் பிடிப்போடு அரசியல் செய்கின்ற இலங்கையின் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில அரசியல்வாதிகளில் இவர் குறிப்பிடத்தக்கவர் என துணிந்து குறிப்பிடலாம்.



சிறந்த பேச்சாளரும், எழுத்தாளருமான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், சிங்கள மொழியில் பல பத்திரிகைகளிலும் தொடர்ந்து எழுதி வருகிறார். இவர் சிங்கள வாரப் பத்திரிக்கை ஒன்றில் "சிதமு" (Sithamu) – 'சிந்திப்போம்' எனும் தலைப்பில் எழுதி வந்த சிங்கள பத்தி எழுத்துக்களின் தொகுப்புதான் 'சிதமு' என்ற பெயரில் நூலுருவம் பெற்றுள்ளது.



ஏற்கனவே நான்கு சிங்கள நூல்களையும், "இதயம் பேசுகிறது", "நாடுவது நலம்" எனும் இரு தமிழ் நூல்களையும் வெளியிட்டுள்ள இவரது ஏழாவது நூலாக 'சிதமு' நூல் அமைந்துள்ளது.

"சி – சிங்களவர், தமிழர், மு – முஸ்லிம்கள்" என அர்த்தம் தொனிக்கும் வகையில் மூவினத்தவரையும் ஒன்றிணைக்கும் வகையில் 'சிதமு' (சிந்திப்போம்) என்ற இப்பெயர் இப்பத்தி எழுத்துக்கு வைக்கப்பட்டிருப்பது விசேடமானதாகும்.

"சுயநலனிலிருந்து விடுபட்டு பன்மைத்துவத்துக்கு", "பெண்களுக்கான கௌரவமே சமூகத்தின் உயர் தன்மையை அளவிடும் அளவுகோல்", "புதிய மரங்கள் வளர களமமைப்போம்", "அரண்களுக்கு பதிலாக பாலங்கள் அமைப்போம்", "வெறும் நாட்டுக்கு பதிலாக உயர்ந்த நாடு", "விபத்துக்களை அரண்களாக்கி எழுந்து நிற்போம்", "புதிதாக சிந்திப்போம்" போன்ற கருத்தாழமிக்க 100 தலைப்புகளிலான சிங்கள கட்டுரைகள் இந்நூலை அலங்கரித்துள்ளன. கட்டுரைகளின் தலைப்புகளே பத்திகளின் கருத்தாழத்தை காட்டி நிற்கின்றன.

எமது நாட்டையும், எமது நாட்டு மக்களின் பிரச்சினைகளையும், இளைஞர்களின் பிரச்சினைகளையும், நாட்டு நடப்புகளையும் நன்கு அலசி ஆராய்கின்ற, நற் கருத்துக்களை தருகின்ற பத்தி எழுத்துக்களாக இவை உள்ளன. இவற்றோடு நாட்டின் எதிர்காலம் சுபீட்சமாக அமைய பொருத்தமான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் கருத்துக்களும் பரந்த சிந்தனையோடு முன்வைக்கப்பட்டுள்ளன.

சிங்களம் தெரிந்தவர்கள் தவறாது வாசிக்க வேண்டிய ஓர் அரிய நூலாக 'சிதமு' திகழ்கிறது. இந்நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, தமிழ் வாசகர்களும் வாசிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென துணிந்து சிபாரிசு செய்யலாம். சிங்கள வாசகர்களைக் கொண்ட பிரதேசங்களிலுள்ள நூலகங்களில் கட்டாயமாக இருக்க வேண்டிய ஒரு நூலாக இதனைக் குறிப்பிடலாம்.

நூல்: "சிதமு" (சிந்திப்போம்), நூலாசிரியர்: பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், பக்கங்கள்: xvi + 412, விலை: ரூபா 1950.00, வெளியீடு: எஸ். கொடகே சகோதரர்கள் தனியார் நிறுவனம், தொடர்புகளுக்கு: 0775100001.

## சிந்தனை செய் மனமே

### பிறரை தவறாகக் கருதாதீர்!

ஒரு மருத்துவர் மிக அவசரமாக வைத்தியசாலைக்கு ஓடி வந்தார். சத்திரசிகிச்சை அறைக்குள் நுழைந்து ஆடைகளை மாற்றிக்கொண்டு சத்திரசிகிச்சைக் கூடத்துக்குள் நுழைந்தார்.

அருகில், சத்திர சிகிச்சைக்காக காத்திருந்த பிள்ளையின் அப்பா மிகவும் கோபத்துடன், "இவ்வளவு லேட்டாவா வருவீங்க. என் பிள்ளைக்கு எதாவது நடந்தா யார் சார் பொறுப்பு?" என்று காரசாரமாக பேசினார்.

மருத்துவர் அமைதியாக, சிரித்த முகத்துடன், "எனக்கு வைத்தியசாலையில் இருந்து இப்போதுதான் அழைப்பு வந்தது. அவசரமாக ஓடி வந்துட்டேன். பொறுமையாக இருங்கள். உங்கள் மகனுக்கு ஒன்றும் ஆகாது. நான் வந்து விட்டேனே. பார்த்துக்கொள்கிறேன்" என்றார்.

"ஆமாம்! நீங்கள் சொல்வீர்கள். உங்கள் மகனுக்கு இப்படி ஒன்று நடந்தால் இப்படி லேட்டா வருவீங்களா? இப்படியெல்லாம் பேசுவீங்களா?" என்றார் பிள்ளையின் தகப்பனார் மருத்துவர் புன்னகையுடன், "பொறுமையாக இருங்கள். நான் பார்க்கிறேன்." என்று சொல்லிவிட்டு சத்திரசிகிச்சைக் கூடத்துக்குள் நுழைந்தார். சில மணித்தியாலங்கள் கழித்து வெளியே வந்து. "உங்கள் மகன் மிக்க நலமாக இருக்கிறார். கவலைப்படாதீர்கள். மற்ற விடயங்களை தாதியிடம் கேட்டுக் கொள்ளுங்கள்." என்று சொல்லிவிட்டு அவசரமாக புறப்பட்டுச் சென்றார்.

அப்போது அங்கே வந்த தாதியிடம் தகப்பனார் பிள்ளை தொடர்பில் விசாரித்துவிட்டு "டாக்டர் ஏன் அவசரமா போகிறார்" என்று வினவினார். அதற்கு அந்த தாதி, "டாக்டரின் மகன் நேற்று ஒரு விபத்தில் சிக்குண்டு உயிரிழந்தார். அவரது இறுதி கிரியைகள் மயானத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த நேரத்தில் தான் உங்கள் பிள்ளையின் நிலை குறித்து போன் பண்ணிய போது, அதை விட்டுட்டு உடனே ஓடி வந்து உங்கள் மகனின் சத்திரசிகிச்சையை செய்து விட்டு மீண்டும் மகனின் இறுதிச் சடங்கைத் தொடர மயானத்துக்கு சென்று விட்டார்" என்று கூறினாள்.



தகப்பன் அதிர்ந்து போனார். தான் ஆவேசப்பட்டது எவ்வளவு பெரிய தவறு என்பதை உணர்ந்தவனாக மிகுந்த கவலையுடன் தன் மகனை பார்க்க சென்றார். அவரது மனம் மருத்துவரை பாராட்டியதோடு அவருக்காக பிரார்த்தித்தது.

கால, நேர, சூழல், உண்மை நிலைமைகளை புரிந்து கொள்ளாமல் எவரும் எவரைப் பற்றியும் தன்னிச்சையாக தீர்மானம் எடுத்தல் சரியானதல்ல.

## பேசும் கவிதை

### தற்கொலை வேண்டாம்!

அழு! கோபப்படு! ஆத்திரப்படு!
அத்தனையும் செய்து முடித்த பின்
ஆரம்பத்திலிருந்து யோசி!
எப்படி எதிர் கொள்வதென
வாழ்வைக் கண்டு
எந்நிலையிலும் அஞ்சாதே...
தாங்க முடியா துயரம் நிலையில்லை
தற்கொலை நாடாதே...
பிறப்பின் சூட்சமம்
வாழ்ந்து பார்ப்பதில் தான்...
அவமானமாய்க் கருதும் எதையும்
எவருமே கடந்து வராமலில்லை....
உன் சுவாசம் தானாய் நிற்கும் வரை
இறப்பைச் சிந்திக்காதே...
காதல் தோல்வி
வாழ்வில் விரக்தி
கண்டுகொள்ளா தனிமை..
மீள முடியா துரோகம்
இதனையும் மீண்டு வென்றோர் பலருண்டு..,
மீண்டு வா வாழ்வை அர்த்தப்படுத்துவோம்...

## நலமே வாழ்வோம்

### டெங்கு அபாயம்!

2023 ஆம் ஆண்டில் இதுவரை நாட்டில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 70 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நாற்பதற்கும் அதிகமாக பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் தலா 14,000க்கும்



அதிகமான டெங்கு நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் பெய்து வரும் கடும் மழையுடன் கடந்த சில நாட்களாக இனங்காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், டெங்கு காய்ச்சலை தடுக்கும் வகையில், மக்கள் தங்கள் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்துக் கொள்ளவும், நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழிக்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரும் தமது நலன்களோடு பொது நலன்களையும் கருத்தில் கொண்டு டெங்கு பரவாமல் தடுப்பதற்கான செயன் முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**




ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன்

# ஆரம்பத்திலேயே வருகிறது சந்தேகம்! ஆடித்தான் போகும் அழகிய தேகம்!

மாடியில் இருந்து,
அடிகளை எண்ணி,
படிகளில் பதியவைத்தபடியே,
மெல்ல நடந்து வந்தார்,
மணிமாறன்!
நடுஹாலில் அமர்ந்து அன்றைய பத்திரிகையை படித்துக் கொண்டிருந்தான் சிந்துஜன்.
இரண்டு இரண்டு படிகளாகத் தாண்டி வந்த சிரஞ்சீவி,
மெல்ல ஊர்ந்து வந்து,
சிந்துஜனுக்கு எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்து கொண்டார்,
அவர் வாயில்,
வெளிநாட்டு வெண் சுருட்டு ஒன்று புதைந்து கொண்டிருந்தது!
"என்ன சிந்துஜன் இன்னிக்கி பேப்பர் நியூஸ்ல ஏதாவது புதிய தகவல்கள் உண்டா?"
"இல்லை மாமா" எல்லாமே கொலை, கொள்ளை, கற்பழிப்பு, திருட்டு சம்பந்தமானதாகவே இருக்கிறது. இன்றைய பத்திரிகையிலும் மூன்று கொலைகள், இரண்டு கற்பழிப்புகள், இரண்டு கொள்ளை சம்பவங்களுக்குத் தான் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். அதிலும் மூன்று கொலைகளில் இரண்டை செய்தது யாரென்று இன்னும் கண்டுபிடிக்கப்படவே இல்லையாம். கொலையும் இப்போது ஒரு கலையாகிவிட்டது." என்றான் சிந்துஜன்.
"கொலை என்பது கலையோ விஞ்ஞானமோ இல்லை, அது ஒரு நோய் அதுவும் மனநோய்"
"ம்.. அதற்கு மருந்துதான் தூக்குமரம்!"
"இல்லை தூக்குமரம் அதற்கு மருந்தல்ல, பாதுகாப்புக்காக கட்டப்படும் ஒரு பாதுகாப்பு நூல்! பலவீனமான இதயத்துடன் இருக்கும் ஒருவருக்கு மந்திரவாதி ஒருவர் போடுகின்ற அந்த நூலினால் ஒரு குணம் கிடைப்பதைப் போல் தூக்குமரத்தினால் சில கொலைகள் தடுக்கப்படுவது உண்மையாக இருந்தாலும் அது நிரந்தரமான தீர்வாக அமையாது!"
வேலைக்காரி கொண்டு வந்து வைத்துவிட்டுப் போன காலை உணவை இருவரும் சுவைபார்க்க ஆரம்பித்தார்கள்.
சிரஞ்சீவி,
பொலிஸ் குற்றப்புலனாய்வுத் துறையில் இன்ஸ்பெக்டராக கடமையாற்றியவர்,
இப்போது ஓய்வு பெற்றவர்.
அந்தக் காலத்தில்,
மூன்று வருட ஒப்பந்தத்தில்
இங்கிலாந்தில் உள்ள ஸ்கொட்லாந்துக்குச் சென்று,
குற்றப் புலனாய்வு சமபந்தமான எல்லாத் துறைகளிலும் பயிற்சி பெற்றதோடு,
கைரேகை அடையாளம்,
இரத்தக்கறை சம்பந்தமாகவும் விசேட பயிற்சி பெற்று,
பட்டமும் வாங்கிக் கொண்டு திரும்பினார்!
சட்டத்தையே தனது உயிராக மதித்தார் சிரஞ்சீவி.
குடும்ப பாசத்தை விட சட்டத்துக்குத் தான் அவர் முக்கியத்துவம் கொடுத்தார்.
இதனால்தான் அவர் இதுவரை திருமணம் கூட செய்து கொள்ளாமல்,
கட்டை பிரம்மச்சாரியாகவே இருக்கிறார்.
இதனால்தான்,
பொலிசில் இருந்து ஓய்வு பெற்று வந்ததும்,
தனக்கிருந்த ஒரே உறவினனான சிந்துஜனுடன்,
பம்பலப்பிட்டியில் இருந்த ஒரு வீட்டில் வசித்து வருகிறார்.
ஆனாலும்,
இன்னமும் அவர் பொலிஸ் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டு தான் இருக்கிறார்!
அவரிடம் ஆலோசனை பெறுவதற்காக,
பலரும் இப்போதும்
வந்து போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள்!
வக்கீலுக்குப் படிக்கும் சிந்துஜன்,
சிரஞ்சீவிக்கு இருக்கும் ஒரே உறவினன்,
சிரஞ்சீவியைப் போல்,
சிந்துஜனுக்கும் இருக்கும் ஒரே உறவினனும் நண்பனும், சிரஞ்சீவிதான்!
சிந்துஜன் சிறு வயதிலேயே தாய் தந்தையை இழந்தவன்,
அவனை வளர்த்ததெல்லாம்
சிரஞ்சீவிதான்.
மாமனும் மருமகனுமாக இருந்தாலும்,
நண்பர்களைப் போல்தான் இருவரும் பழகிவந்தார்கள்,
காலை உணவை முடித்துக் கொண்டு,
மீண்டும் ஹாலுக்கு வரும் போது,
"எத்தனை மணி டிரெய்னுக்கு நாங்கள் போகவேண்டும்?" என்று கேட்டது சிந்துஜன்தான்.
"மருதானையில் இருந்து மாலை இரண்டு இருபது மணிக்கு புறப்படுகிறது டிரெயின்" என்று சொல்லிவிட்டு சுருட்டொன்றை எடுத்து பற்ற வைத்துக் கொண்டார் சிரஞ்சீவி.
"பழக்கமில்லாத ஒரு வீட்டில் ஓர் இரவைக் கழிப்பதென்பது மிகவும் கஷ்டமான ஒரு காரியம் மாமா"
"வாலிப வாழ்க்கைக்கு துன்பங்களும் தொல்லைகளும் நல்லதொரு மருந்து சிந்துஜன். அனுபவங்களின் தாலாட்டில் தானே வாழ்க்கையும் முழுமை பெறுகிறது".
"ஆமா, ஆமா, சும்மா இருந்து கொண்டே துன்பங்களையும் துயரங்களையும் அனுபவிப்பதும் நல்ல மருந்துதான்" என்று சொல்லிவிட்டு ஒரு மாதிரியாகச் சிரித்தான் சிந்துஜன்.
"இப்படி நீ இப்போது கூறு. அந்த துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் நடுவில் இருந்து உன்னை மீண்டும் அழைத்துக் கொண்டு போக முடியுமானால் அது அதிர்ஷ்டம்தான்" இப்படிச் சொல்லிவிட்டு,
கடைக்கண்ணால் அவனைப் பார்த்தபடியே,
இதழ்களைப் பாதி திறந்து,



சிரித்தார் சிரஞ்சீவி.
அவர் இப்படிச் சொன்னதும்,
படாரென்ற திரும்பி
அவரைப் பார்த்தான் சிந்துஜன்,
என்ன மாமா? ஏதோ பொடி வைத்து பேசுற மாதிரி தெரியுதே?"
அவன் அதரங்கள் அசைந்தன.
"ம், செல்வராகவனுக்கு அழகான ஒரு மகள் இருக்கிறாள்! நாங்கள் இருவரும் ஒரு வாரம் அவர் வீட்டில் தங்கப் போகிறோம் என்பதை மறந்து விடாதே"
"ஓ, அழகான பெண்களைக் கண்டால் நான் அங்கேயே தங்கிவிடுவேன் என்று நினைக்கிறீர்களோ?"
"அழகான பெண்களை நீ பார்த்திருக்கமாட்டாய் என்று தான் நான் நினைக்கிறேன்" சொல்லிவிட்டு,
நாடியைத் தடவிக் கொண்டு,
இதழ்விரித்துச் சிரித்தார் சிரஞ்சீவி
"சரி இந்த பயணத்தை நீங்களாக ஏற்பாடு செய்தீர்களா? அல்லது செல்வராகவனின் அழைப்பா?"
அவன் கேள்விக்கு உடனே பதில் சொல்லாமல்,
மீண்டும் ஒரு மேல்நாட்டு சுருட்டை பற்ற வைத்துக் கொண்டு,
சிந்துஜனின் இடதுகையைப் பிடித்தபடியே,
மாடிப்படிகளில் ஏறினான்.
"நானும் செல்வராகவனும் ஒன்றாகத்தான் பொலிசில் வேலை செய்தோம். நான் உதவி இன்ஸ்பெக்டராக இருந்த போது இன்ஸ்பெக்டராக இருந்த அவர் திடீரென்று விலகி வியாபாரத்துறையில் ஈடுபாடு கொண்டார். அதே நேரம் சாஜண்டாக இருந்த ஜனகனும் விலகிச் சென்றார். இணை பிரியாத நண்பர்களாக இருந்த அவர்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்ததாக பின்னர் நான் கேள்விப்பட்டேன். அவரும் இப்போது பதுளையில் தான் இருக்கிறார்.
செல்வராகவனும் அங்குதான் இருக்கிறார். இவர்கள் இருவரும் பொலிஸ் சேவையில் இருந்து விலகி இப்போது எட்டு வருடங்கள் இருக்கும். இதுவரை காலமும் இவர்கள் இருவரிடமிருந்தும் எந்த விதமான தகவல்களும் எனக்குக் கிடைக்கவில்லை. அதனால் தான் திடீரென்று அங்கே வரும்படி விஜயராகவனிடமிருந்து அழைப்பு வந்ததும் நான் உண்மையிலேயே வியப்படைந்தேன்" என்று சொல்லி விட்டு,
பயணத்திற்குத் தேவையான உடைகளை எடுத்து பிரயாணப் பையில் அடுக்கினார்.
அத்தோடு சேர்ந்து,
தனது துப்பறியும் தொழிலுக்கு வேண்டிய முக்கியமான பொருட்களையும் ஒரு சிறிய பெட்டியில் எடுத்து வைப்பதைப் பார்த்ததும்,
சிந்துஜனுக்கு வியப்பாக இருந்தது!
"என்ன மாமா இது? உங்கள் துப்பறியும் தொழிலுக்குத் தேவையான பொருட்களையும் எடுத்துக் கொண்டு போவதாக உத்தேசமோ?"
வியப்பை
வார்த்தைகளில்,
வடித்தான்
"ஏன், கூடாதோ?"
"அப்படியானால் போகிற இடத்தில் ஏதாவது விபரீதம் நடக்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா?"
"ம், அது அந்த கடவுளுக்குத்தான் தெரியும்" சொல்லிவிட்டு,
தோள்களை உயர்த்தினார் சிரஞ்சீவி,
"ம், அதில் இப்போ எனக்கோர் ஐயம்"
"எந்த விஷயத்தில் வந்த ஐயம் அது?"
"உங்கள் நண்பர் செல்வராகவிடமிருந்து எட்டு வருடங்களாக கடிதம் கூட வரவில்லை என்று சொன்னீர்கள் தானே"
"ஆமாம்! அதில் உனக்கென்ன ஐயம் இப்போது?"
"இல்ல விஷயம் அப்படி இருக்கும் போது அவருக்கு அழகான ஒரு மகள் இருப்பது உங்களுக்கு எப்படி தெரியும்?"
அவன் இப்படிக் கேட்டதும் படாரென்று திரும்பிய சிரஞ்சீவி,
ஓரக்கண்களால் சிந்துஜனைப் பார்த்தார்.

தொடரும்...



**அறன் வலியுறுத்தல் : மனத்துக்கண் மாசிலன் ஆதல்**
**அனைத்து அறன் ஆகுல நீர பிற...**

**தெளிவுரை :**
ஒருவன் தன்மனதில் குற்றம் இல்லாதவானாக இருக்க வேண்டும். அறம் அவ்வளவே: மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை

# இவ்வார மழலை



**ஆரவ்**

ரமேஸ் – தீபிகா

# கொடுத்தவன் கெட்டதில்லை

முன்பு ஜெர்மனி நாடு பிளவுப்பட்டிருந்தபோது பெர்லின் நகரத்தை கிழக்காகவும் மேற்காகவும் பெரிய மதில் சுவர் பிரித்தது.

ஒருநாள் கிழக்கு பெர்லினை சேர்ந்த சிலர், ஒரு லொரி நிறைய குப்பை கூளங்களை கொண்டுவந்து மதில் தாண்டி மேற்கு பெர்லின் பக்கம் கொட்டினார்கள். (அவ்வளவு குரோதம்!) மேற்கு பெர்லினை சேர்ந்த மக்களும் அதே மாதிரி செய்திருக்கலாம்.

ஆனால் அவர்கள் அப்படி செய்யவில்லை. மாறாக ஒரு லொரி நிறைய உணவு பொருட்கள், ரொட்டிகள், பால் பொருட்கள் மற்றும் மளிகை சாமான்களை கொண்டு வந்து மதில் தாண்டி இந்த கிழக்கு பெர்லின் பக்கம் அழகாக அடுக்கி வைத்துவிட்டு போனார்கள்.




மேலும் அதன் மீது இவ்வாறு எழுதி வைத்து விட்டு போனார்கள்: "ஒவ்வொருவரும் தன்னிடம் என்ன இருக்கிறதோ அதையே கொடுப்பார்கள்".

("EACH GIVES WHAT HE HAS"). எவ்வளவு நிதர்சனமான உண்மை....!

உங்களிடம் என்ன இருக்கிறதோ அதைதானே உங்களால் கொடுக்க முடியும். அன்பை விதைப்போம்!

அன்பை அறுவடை செய்வோம்! அன்பை கொடுப்போம்!

# கங்காரு எலி



Kangaroo Mouse எனப்படும் கங்காரு எலிகள் தண்ணீர் குடிப்பது குறைவாம். இவை நெவேடா பாலைவனத்தில் வாழ்வதால், (வறண்ட பகுதி) உடலுக்கு தேவையான நீரை தாம் சாப்பிடும் வித்துக்களின் மூலம் பெற்றுக்கொள்கின்றன.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 89

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
| 07 | | | 08 | | 09 |
| 10 | 11 | 12 | | 13 | 14 |
| 15 | | 16 | 17 | | |
| | 18 | | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | | 25 | 26 |

பெயர் ..........................................
வகுப்பு ..........................................
தொலைபேசி இல ..........................................
பாடசாலை பெயர் ..........................................
வதிவிட முகவரி ..........................................
..........................................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) திருவள்ளுவர் எழுதிய உலகப் பொதுநீதி நூல். மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் இரு வரிகளில் கூறப்பட்டுள்ளன.
(10) நன்னீர் நிலைகளில் ஒன்று இது. விவசாயத்துக்கும், மக்களுக்கான குடிநீருக்கும் நீரை வழங்கும் நீர்நிலையான இதனை நதி, ஆறு என்றெல்லாம் கூறலாம்.
(13) குளங்களில் நீரைத் தேக்கி வைப்பதாயின், அதனைச் சுற்றிவர அமைக்கப்பட வேண்டியது இது. (தலைகீழான சொல்)
(16) விற்றமின் சி நிறைந்த பழம். புளிப்பும் இனிப்புமான சுவை கொண்ட பழம். இதன் உள்ளீடு சுளைகள். முட்கள் நிறைந்த தாவரத்தில் காய்ப்பது.
(19) சூரியனிலிருந்து வருகின்ற ஒளிக்கீற்றுகளை மாத்திரமன்றி, சூரியனையும் குறிக்கும் சொல். வேளாண்மையில் உள்ள முற்றிய நெல்மணிகளின் தொகுதியையும் இச்சொல்லால் குறிப்பிடலாம்.
(22) சூரியன் உதயமாகி, இருள் அகன்றதும் தோன்றும் பொழுது.
(25) களிமண் அல்லது உலோகங்களால் தயாரிக்கப்படுகின்ற பாத்திரத்தின் பெயர். (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) இச்சொல்லுக்கு பல அர்த்தங்கள் உள்ளன. மாதம், சந்திரன் ஆகிய அர்த்தங்களை மாத்திரமன்றி, வாரத்திலுள்ள நாளொன்றையும் குறிக்கின்ற சொல்.
(4) மழைக்கும் வெயிலுக்கும் பாதுகாப்பு தருவது. வீட்டை விட்டு வெளியே புறப்படும் போது இதனை மறக்காமல் எடுத்துச் செல்வது அவசியம்.
(6) பெண்பால், ஒருமை, படர்க்கைச் சொல். (தலைகீழான சொல்)
(12) மயிலின் சிறகுக்கான சிறப்புப் பெயர். (தலைகீழான சொல்)
(17) பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்ற இடம். (தலைகீழான சொல்)
(18) காய் கனிந்த பின்னர் இப்பெயர் பெறும். (தலைகீழான சொல்)
(20) தானியங்களில் ஒன்று. இத்தானியம் இந்தியாவில் அதிளவில் விளைகின்றது.
(21) உலகம் என்பதற்கான ஒத்தபொருள் சொற்களில் இதுவும் ஒன்று. (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 88

### விடைகள்

**இடமிருந்து வலம்**
01. மாலைதீவு 05. மடி 08. அதிபர் 12. காலை
14. பாப்பா 17. முதலை 22. அச்சம்

**மேலிருந்து கீழ்**
01. மாடி 02. மலை 07. சர்ப்பம் 09. பாதி
11. பார் 12. கமுகு 13. தலை 19. அலை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 87

### பாராட்டு பெறுவோர்

1. **டி. ரவீந்திரா**
அம்மன் வீதி, மீசாலை கிழக்கு, மீசாலை.

2. **என்.ஏ. நுதைஸ்**
தரம் 04, தி/தி/ சதாம் வித்தியாலயம், பிரதான வீதி, புல்மோட்டை 03.

3. **இ. கலைநிலா**
தரம் 01, கொ/ கணபதி வித்தியாலயம், இல. 70/100B, ரொக்ஹவுஸ், கொழும்பு 15.

4. **எம்.ஆர்.எம். அக்மல்**
தரம் 04B, அஜ்மீர் தேசிய கல்லூரி, இல. 1/C, மானாம்பொட, உக்குவளை.

5. **எம்.ஆர்.எம். ஹஸான்**
தரம் 07B, அஜ்மீர் தேசிய கல்லூரி, இல. 1/C, மானாம்பொட, உக்குவளை.

6. **எம்.வை. யூசுப் உமர்**
தரம் 04, கே/ ஜாமியுல் அசர் ம.கல்லூரி, இல. 17/1, தரகமுவ வீதி, உடதலவின்ன.

7. **ஸீனத் தஹானி சாட்**
தரம் 11B, க/ பதியுதீன் மகளிர் கல்லூரி, இல. 34/12, செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர, கண்டி.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 89**
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : siruvarulagam.lakehouse@gmail.com

# ஆய்வறிஞர் எஸ்.எச்.எம். ஜெமீல்

மருதூர் மண்ணின் மைந்தனராம்
அறிவால் உயர்ந்த ஜெமிலவரின்
பணியை வியந்து நிற்கும் நாம்
சிந்தை மகிழ்ந்தே நினைத்திடுவோம்

இலக்கியம் போற்றும் பெரும் அறிஞர்
ஆய்கலை அறிதிறன் பெற்றவராம்
நாட்டார் இலக்கியம் படைத்தவராம்
சரித்திர வரலாறு படைத்தவராம்

சுவடிகள் ஆற்றுப் படை தந்து
எழுத்தாளர் உள்ளம் மகிழ்ந்திடவே
ஆவணமாக ஆக்கித் தந்த
ஜெமீலின் சிறப்பை படித்திடுவோம்

வாழும் கலைஞர் வாழ்த்திடவே
முஸ்லிம் பண்பாட்டலுவல்களின்
எழுவான் கதிராய் நின்றவரே
என்றும் மறவா எம் அறிஞர்

செம்மொழியின் அழகின் மகிமைதனை
தமிழைத் தமிழாய் உச்சரித்து
தென்றலில் நறுமணம் வீசிடும்
தெவிட்டாத சிம்மக் குரலோனே

கல்முனை சாஹிராவின் சூரியனாய்
ஆசிரியர் கலாசாலையின் அறிவொளியாய்
கல்விப் பணிகள் பல செய்து
மனதைக் கொள்ளை கொண்டவரே

இன நல்லிணக்கம் மலர்ந்திடவே
இனிய இலக்கியம் படைத்தவரின்
புகழைப் பாடி தினமும் நாம்
அவரைப் போன்று உயர்ந்திடுவோம்

இக்பால் அலி...

# வானத்திலிருந்து நெருப்பு மழை



பூமியில், நமக்கு விளங்காத மர்மங்களை கொண்டிருக்கும் பல இடங்கள் உள்ளன. அதில் ஒன்று தான் டானாகில் டிப்ரஷன் (Danakil Depression) என்ற இடம். இது வட ஆப்பிரிக்காவில் எத்தியோப்பியா என்ற நாட்டில் அமைந்துள்ளது. இங்கு பல சூடான நீரூற்றுகள் உள்ளன, எரிமலைகளும் உள்ளன. அதோடு மட்டுமல்ல இங்கு நெருப்பு மழையும் பெய்யுமாம்.

டானாகில் டிப்ரஷன் என்ற இடத்தில் அதிக அளவு பொட்டாசியம் உப்பு மற்றும் கந்தகம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் காரணமாக, அதைச் சுற்றியுள்ள நிலம் சிவப்பு, மஞ்சள், ஆரஞ்சு மற்றும் வெள்ளை நிறமாக மாறியுள்ளது.

அதுமட்டுமல்ல, இதில் ஆச்சரியமான விடயம் என்னவென்றால், டானாகில் டிப்ரஷன் கடல் மட்டத்திலிருந்து 125 மீற்றர் கீழே அமைந்துள்ளது

இந்த இடத்தில் மூன்று டெக்டோனிக் ப்ளேட்டுகள் உள்ளன. டெக்டோனிக் இயக்கம் காரணமாக, இந்த தட்டுகள் ஒவ்வொரு ஆண்டும் 1 அல்லது 2 சென்டிமீற்றர் தொலைவில் நகர்கின்றன. தட்டுகள் விலகுவதால் இங்கு விரிசல் வருகிறது. இதன் காரணமாக, பூமியின் உள்ளே இருந்து சூடான எரிமலை வெடிக்கிறது. சிறிது நேரம் கழித்து ஆழமான பள்ளம் தோன்றி, அதில் கடல் நீரை முழுமையாக நிரம்பி விடும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த காரணத்திற்காக, இந்த இடம் கேட்வே ஆஃப் ஹெல், அதாவது நரகத்தின் நுழைவாயில் என்றும் அழைக்கப்படுகிறது





வாசகர்களே!
உங்களது ஆக்கங்கள், சிறுகதைகள், சிறுவர்களின் புகைப்படங்கள் மற்றும் சித்திரங்கள் ஆகியவற்றை தினகரன் வாரமஞ்சரி 'சிறுவர் உலகத்தில்' பிரசுரிக்க வேண்டும் என்றால், siruvarulagam.lakehouse@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

# பறி



பறி என்னும் இந்தக் கருவி பழந்தமிழரின் வேளாண்மையில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இது பெரும்பாலும் இரும்பு அல்லது தோலினால் ஆனது. நம் முன்னோர்கள் இதன் மூலம் தான் கிணற்றிலிருந்து நீர் இறைத்தனர்.

# பழங்களின் தமிழ் பெயர்கள்

| | |
|---|---|
| APPLE | – அரத்திப்பழம், குமளிப்பழம் |
| APRICOT | – சர்க்கரை பாதாமி |
| AVOCADO | – வெண்ணைப் பழம் |
| BANANA | – வாழைப்பழம் |
| BELL FRUIT | – பஞ்சலிப்பழம் |
| BILBERRY | – அவுரிநெல்லி |
| BLACK CURRANT | – கருந்திராட்சை, கருங்கொடிமுந்திரி |
| BLACKBERRY | – நாகப்பழம் |
| BLUEBERRY | – அவுரிநெல்லி |
| BITTER WATERMELON | – கெச்சி |
| BREADFRUIT | – சீமைப்பலா, ஈரப்பலா |
| CANTALOUPE | – மஞ்சள் முலாம்பழம் |
| CARAMBOLA | – விளிம்பிப்பழம் |

சர்மிளா...

# கண்டுபிடிப்பாளர்கள்

## வானியலாளர் கோபர்நிகஸ்



உலகப் புகழ்பெற்ற முன்னோடி வானியலாளர் நிகோலஸ் கோபர்நிகஸ் (Nicolaus Copernicus) போலந்து நாட்டின் தோர்ன் நகரில் செல்வச் செழிப்பான குடும்பத்தில் 1473ஆம் ஆண்டு பிறந்தார். தந்தை வணிகர். 10 வயதில் தந்தையை இழந்து மாமாவின் பராமரிப்பில் வளர்ந்தார். இயற்பெயர் மைகொலாஜ் கோபர்நிக். பல்கலையில் படித்தபோது, 'நிகோலஸ் கோபர் நிகஸ்' என்று மாற்றிக்கொண்டார்.

கிரேக்க கவிதைகளை லத்தீனில் மொழிபெயர்த்தார். 18 வயதில் கிராக்கோவ் பல்கலைக்கழகத்தில் வானியல், கணிதம், தத்துவம், புவியியல், அறிவியல் பயின்றார். இங்கு இவரது ஆசிரியர் ஆல்பர்ட் ப்ரட்ஜூஸ்கியின் மீதான தாக்கத்தால் வானியலில் ஆர்வம் பிறந்தது. அதுகுறித்து ஏராளமான நூல்களை படித்தார்.

கத்தோலிக்க தேவாலயங்களின் சட்ட விதிமுறைகள் குறித்து படிக்குமாறு கூறி இத்தாலிக்கு இவரை அனுப்பினார் மாமா. பொலோனா பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றவர், தனது பெரும்பாலான நேரத்தை வானியல் ஆராய்ச்சிகளில் செலவிட்டார்.

போலந்து திரும்பியவர் வார்மியாவில் உள்ள தேவாலயத்தில் பணி புரிந்தார். மாமாவின் செயலாளராகவும் அவரது தனிப்பட்ட மருத்துவராகவும் இருந்தார். மதப் பணிகளையும் செய்து வந்தார். ஒரு பொருளாதார வல்லுநராக அரசுப் பணிகளையும் மேற்கொண்டார்.

மீண்டும் இத்தாலி சென்று, வானியல் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். பல ஆராய்ச்சி கட்டுரைகளை எழுதினார். 1514இல் தான் எழுதிய கையெழுத்துப் பிரதி நூலை பல்வேறு வானியலாளர்கள், நண்பர்களுக்கு அனுப்பி வைத்தார்.

எந்த தொலைநோக்கி கருவியும் இல்லாமலேயே இவரது ஆராய்ச்சிகள் நடைபெற்றன. வானியல் குறித்து அதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்த புவி மையக் கோட்பாட்டை மறுத்து சூரிய மையக் கோட்பாட்டை வகுத்தார். கணித அடிப்படையில் இந்த ஆராய்ச்சிகளை இவர் மேற்கொண்டார். 7 பகுதிகள் கொண்ட சுழற்சிக் கோட்பாட்டை உருவாக்கினார். அனைத்து கோள்களும் சூரியனையே சுற்றி வருகின்றன என்பதுதான் அதில் முக்கியமானது.

சூரியனை மையமாகக் கொண்டே பூமி உள்ளிட்ட கோள்கள் இயங்குகின்றன என்ற உண்மையை உலகுக்கு எடுத்துரைத்தார். கோள்களின் பின்னோக்கிய நகர்வு, அவற்றின் ஒளி வேறுபாடுகள் ஆகியவற்றையும் விளக்கினார். விண்மீன்கள் அமைந்துள்ள இடங்களை வரையறுத்துக் கூறினார்.

அவர் வாழ்ந்த காலத்தில் இந்த கோட்பாடுகள், கண்டுபிடிப்புகள் பெரிதாக கொண்டாடப்படவில்லை. இவரது காலத்துக்குப் பிறகே இவரது கோட்பாடுகளை கலிலியோ உள்ளிட்ட பிரபல வானியலாளர்கள் ஏற்றுக்கொண்டு, அதுபற்றி பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். இவரது சூரிய மையக் கோட்பாடுகள் வானியல் வளர்ச்சிக்கு வித்திட்டன.

*'On the Revolutions of the Heavenly Spheres'* என்ற நூலில் தனது ஆய்வுகள் குறித்து எழுதியுள்ளார். இதில் பூமி தனது அச்சில் சுழல்கிறது என்பதையும் பூமியை சந்திரன் சுற்றி வருகிறது என்றும் துல்லியமாக குறிப்பிட்டிருந்தார். பல ஆண்டுகளுக்கு முன்பே இவர் எழுதிய இந்த நூல், இவர் மரணப் படுக்கையில் இருந்தபோதுதான் வெளியானது.

வானியல் ஆய்வாளராக மட்டுமல்லாமல், சட்ட நிபுணர், மருத்துவர், பழங்கலை அறிஞர், மதகுரு, ஆளுநர், அரசுத் தூதர் என பல்வேறு களங்களில் செயல்பட்ட நிகோலஸ் கோபர்நிகஸ் தனது 70ஆவது வயதில் 1543 இல் மறைந்தார்.

# விளையாட்டு



## உலகக் கிண்ணம் யாருக்கு?

உலகக் கிண்ணத்தை வென்று பழகிப்போன அவுஸ்திரேலியாவும் அண்மைய வரலாற்றில் அசைக்க முடியாத அணியாக மாறியிருக்கும் இந்தியாவும் உலக சம்பியனாவதற்காக இன்று (19) பலப்பரீட்சை நடத்தப்போகின்றன.

கடந்த ஒரு மாதங்களுக்கு மேல் நடைபெறும் உலகக் கிண்ணத்தின் உச்ச தருணத்தை சந்திப்பதற்கு அஹமாபாத், நரேந்திர மோடி மைதானத்தில் அனைத்தும் தயாராக உள்ளன. இந்திய அணியின் பயணம் தெளிவானது. அதனை இதுவரை நடந்த போட்டிகளில் எந்த அணியும் சீண்டிப்பார்க்கக்கூட இல்லை.

குழுநிலை போட்டிகள் அனைத்திலும் வெற்றி, அரையிறுதிப் போட்டியில் நியூசிடம் வெற்றி என்ற உலகக் கிண்ணத்தை வெல்ல இந்திய அணிக்கு இன்னும் ஒரு வெற்றி தான் மிச்சம் இருக்கிறது.

பெரிதாக நம்பிக்கை இல்லாத அணியாக களமிறங்கிய அவுஸ்திரேலியா முதல் போட்டியில் இந்தியாவிடம் 199 ஓட்டங்களுக்கு சுருண்டு படுதோல்வி பின்னர் தென்னாபிரிக்காவிடம் 177 ஓட்டங்களுக்கு சுருண்டு மோசமான தோல்வி. பின்னர் இலங்கையை வீழ்த்திய ஆஸி. இறுதிப் போட்டிவரை வெற்றி நடை போட்டது.





எனவே இன்றைய இறுதிப் போட்டி ஒன்றுக்கொன்று சளைக்காமல் இருக்கப்போகிறது. இந்தியாவின் துடுப்பாட்டம், பந்துவீச்சு பற்றி கூறவே தேவையில்லை. அனைத்து வீரர்களும் சோபித்து வருகிறார்கள். அணியில் எந்த ஓட்டையும் இல்லை. அதனுடன் ஒப்பிடுகையில் அவுஸ்திரேலியாவின் அணி வரிசை சற்று குறைபாடு கொண்டது என்றாலும் அந்த அணியின் சமயோசித ஆட்டம் எந்த அணியையும் எந்த நேரத்திலும் மண்டியிடக்கூடியது.

இந்த இரு அணிகளும் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் சந்திப்பது இது முதல் முறையல்ல. சரியாக இருபது ஆண்டுகளுக்கு முன் 2003 ஆம் ஆண்டு ஜெஹன்னஸ்பேர்க்கில் நடந்த இறுதிப் போட்டியில் இந்திய அணியை அவுஸ்ரேலியா வீழ்த்தி இருந்தது.

அவுஸ்திரேலிய அணி ஆறாவது முறை உலகக் கிண்ணத்தை வெல்வதற்காகவே இன்று களமிறங்கவுள்ளது. உலகக் கிண்ண கிரிக்கெட்டின் அந்த அணியின் ஆதிக்கம் நிகரற்றது. தவிர 2021இல் டி20 உலகக் கிண்ணத்தை வென்ற ஆஸி. அணி இந்த ஆண்டு ஆரம்பத்தில் இந்தியாவை வீழ்த்தி டெஸ்ட் உலக சம்பியன்சிப் கிண்ணத்தையும் கைற்றியது.

என்றாலும் இன்று நடைபெறும் உலகக் கிண்ணம் என்பது அவுஸ்திரேலியாவுக்கு சாதாரணமாக இருக்காது. மைதானத்தில் இந்திய அணியின் சவால் ஒரு பக்கம் இருக்க ஒரு இலட்சத்திற்கும் அதிமானோர் அமரக்கூடிய உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமான அஹமதாபாத் அரங்கில் கூடப்போகும் இந்திய ரசிகர்களின் ஆரவாரம் அதற்கு இணையாக நெருக்கடியை கொடுக்கும்.

இந்திய அணி உலகின் வலுவான கிரிக்கெட் அணியாக உருவெடுத்தபோதும் உலக அரங்கில் கடந்த பத்து ஆண்டுகளில் எந்த கிண்ணத்தையும் வென்றதில்லை. அது 2013 ஆம் ஆண்டு சம்பியன்ஸ் கிண்ணத்தை வென்ற பின்னர் இந்தியாவின் பரிதாபம் தொடர்கிறது. இதனை சரிசெய்வதற்கான வாய்ப்பாகவே இன்றைய ஆட்டம் இருக்கப்போகிறது.

இந்தியா அணி 1983 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் உலகக் கிண்ணத்தை வென்றது. 2011இல் அது சொந்த மண்ணிலேயே இலங்கை அணியை வீழ்த்தி உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது. என்றாலும் சொந்த ரசிகர்கள் முன் ஆடுவது வேறு எந்த அணியை விடவும் இந்தியாவுக்கு சாதகமானது என்பதோடு அதற்கு நிகராக அதிக அழுத்தத்தை தரும் ஒன்றாகவும் உள்ளது.

அதோபோன்று வேறு எந்த அணியை விடவும் எதிர்வுகூறக் கடினமான அணியாக இருக்கும் அவுஸ்திரேலியாவின் சவாலையும் அது சமாளித்தாலேயே உலகக் கிண்ணத்தை வெல்ல முடியும்.

அஹமதாபாத், நரேந்திர மோடி அரங்கு சுழற்பந்துக்கு சாதகமானது. இந்த ஆண்டில் அங்கு ஒருநாள் போட்டிகளில் அணி ஒன்று சராசரியாக ஓவருக்கு 5 க்கு குறைவான ஓட்டங்கள் மீதமே பெற்றிருக்கிறது. எவ்வாறாயினும், அண்மைக் காலத்தில் குறிப்பாக ஐ.பி.எல் போட்டிகளில் இங்கு துடுப்பாட்ட வீரர்கள் வேகமாக ஓட்டங்களை பெற்று வருகிறார். இங்கு இந்தியாவுக்கு எதிரான தென்னாபிரிக்க அணி 2 விக்கெட்டுகளை இழந்து பெற்ற 365 ஓட்டங்களுமே அதிகூடிய ஓட்டங்களாகும். எனவே, இன்றைய ஆட்டத்தில் ஆடுகளம் ஒரு சரிசமமாக மைதானமாக இருக்கும் என்று நம்பலாம்.



## இலங்கை கிரிக்கெட் இங்கிருந்து எங்கே?

விளையாட்டு என்றால் வெற்றியும், தோல்வியும் சகஜம் என்று தத்துவம் பேசும் நேரமல்ல இது. உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி பெற்ற தோல்விகள் சகிக்க முடியாததாகிவிட்டது. கடைசியில் சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் தடை செய்யும் அளவுக்கு உச்சத்தை தொட்டுவிட்டது. உண்மையில் இலங்கை அத்தனை மோசமாகவா ஆடியது!

முதல் மூன்று போட்டிகளிலும் தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலியாவிடம் தோற்ற இலங்கை அணி அடுத்து வந்த நெதர்லாந்து மற்றும் இங்கிலாந்தை வீழ்த்தியது வரை வழக்கமானது. ஆனால் அதற்குப் பின்னர் நடந்த ஐந்து போட்டிகளிலும் தோற்றது மாத்திரமல்ல மோசமான தோல்விகளை சந்தித்து அணியின் பலவீனத்தை ஒட்டுமொத்தமாகக் காட்டியது.

இலங்கை வீழ்த்திய நெதர்லாந்து அணி தொடரில் பலவீனமான அணி என்பதோடு நடப்புச் சம்பியனாக வந்தபோதும் இங்கிலாந்து கூட இந்தத் தொடரில் மோசமாகவே ஆடியது.

இலங்கையின் துயரக் கதை ஆரம்பத் துடுப்பாட்ட வரிசையில் இருந்தே தொடங்குகிறது. தொடர்ச்சியாக ஓட்டங்கள் சேகரித்த வீரராக பத்தும் நிசங்க இருந்ததோடு அவர் மொத்தமான 332 ஓட்டங்கள் பெற்றார். ஓட்ட சராசரியும் 41.50 என்ற அளவில் ஓரளவு நன்றாக இருந்தது.

தபோதே காயத்துக்கு மாற்று வீரராக அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸை அணிக்கு அழைக்க வேண்டி ஏற்பட்டது. வந்த முதல் போட்டியில் இங்கிலாந்தின் விக்கெட்டுகளை சாய்த்து நம்பிக்கை தந்தார். அது அடுத்தடுத்த போட்டிகளில் உற்சாகத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது. என்றாலும் கால, சூழல் சாதகமாக இருக்கவில்லை.

ஒட்டுமொத்தமாக, உலகக் கிண்ணத்தில் இலங்கையின் துடுப்பாட்ட சராசரி 25.89. இது அனைத்து அணிகளுடனும் பார்த்தால் நான்காவது மிக மோசமானது. பங்களாதேஷ், இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து அணிகளை விடவே நல்லது.

அண்டை நாட்டில் துடுப்பாட்டத்திற்கு சாதனமான ஆடுகளங்கள் இருந்தபோதும் இலங்கை அணியால் ஒன்பது போட்டிகளிலும் மொத்தமாக 45 சிக்ஸர்களையே பெற முடிந்தது. இலங்கை அணி தொடரில் ஐந்து முறை முதலில் துடுக்கெடுத்தாடியது. அதில் ஒரு முறை மாத்திரமே 300 ஓட்டங்களை தாண்டியது. ஆனால் அதனையும் பாகிஸ்தான் அணி துரத்தி அடித்தது.

தொடர் முழுவதிலுமே இலங்கை வீரர்கள் மொத்தமாக நான்கு முறை மாத்திரமே நூறு ஓட்டங்களுக்கு மேல் இணைப்பாட்டத்தை பகிர்ந்து கொண்டது மற்றொரு மிகப்பெரிய குறை. போட்டி ஒன்றை கட்டி எழுப்புவதற்கு இணைப்பாட்டங்கள் தான் அடிப்படை, அது கைகூடவில்லை.



பத்தும் வேகமாக ஓட்டங்கள் சேகரிப்பதில்லை என்பதால் மறுமுனை ஆரம்ப வீரர் குசல் பெரேரா மீதே எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது. அதிலும் அணித் தலைவர் தசுன் ஷானக்க முதல் இரண்டு போட்டிகளில் ஆடிவிட்டு வெளியேறியபோதும் அணியில் சொல்லிக்கொள்ளும்படியான ஒரே அதிரடி வீரராக குசல் பெரேரா இருந்தார். ஆனால் அவர் தடுமாற்றம் கண்டார். விளையாடிய ஏழு போட்டிகளில் 149 ஓட்டங்களையே பெற்றார்.

தொடரில் ஒரே ஒரு போட்டியில் தான் அவர் ஆரம்ப விக்கெட்டுக்காக 25 க்கும் மேல் இணைப்பாட்டத்தை பெற்றார். இது எதிரணிக்கு இலங்கை துடுப்பாட்ட வரிசையை ஊடுருவி சாய்க்க இலகுவானது.

குசல் மெண்டிஸை பொறுத்தவரை 2022 இல் ஒருநாள் போட்டிகளில் இலங்கை அணிக்காக அதிக ஓட்டங்கள் பெற்றவர் வரிசையில் இரண்டாவது இடத்தில் இருந்தார். அதற்கு ஏற்ப அவர் உலகக் கிண்ணத்தையும் நம்பிக்கையுடனேயே ஆரம்பித்தார். தென்னாபிரிக்காவுக்கு எதிராக 76 ஓட்டங்களை அவர் விளாசியபோது எதிரணியும் சற்று தடுமாறியது. அந்த ஓட்டங்களில் எட்டு சிக்ஸர்கள் அடங்கும். பின்னர் அவர் பாகிஸ்தானுக்கு எதிராக 122 ஓட்டங்களை பெற்றார்.

ஷானக்கவின் காயத்தால் அணித் தலைமை பொறுப்பு குசல் மெண்டிஸின் கைகளில் விழுந்தது. அதுவும் உலகக் கிண்ணத்தில் வைத்து முதல் முறை இலங்கை அணித் தலைமை பொறுப்பை ஏற்க வேண்டி ஏற்பட்டது. அது தொடக்கம் குசல் மெண்டிஸால் 40 ஓட்டங்களைக் கூட தாண்ட முடியவில்லை. கடைசி ஏழு போட்டிகளதும் அவரது ஓட்ட சராசரி 13.71 தான். தலைமை பொறுப்பு அவருக்கு ஓரளவுக்கேனும் சுமையை ஏற்படுத்தி இருப்பது இந்தத் தரவு உறுதி செய்கிறது.

இது எதிர்காலத்தில் அவருக்கு தலைமை பொறுப்பை வழங்குவது பற்றி ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளும்.

என்றாலும் சதீர சமரவிக்ரம மற்றும் சரித் அசலங்க பெரும் நம்பிக்கை தருபவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இருவரும் ஒன்றிணைந்து இன்னிங்ஸை கட்டியெழுப்புவது அரிதாக இருந்தது. ஒருவரேனும் தனித்து பொறுப்புடன் ஆடுவதை காண முடிந்தது. என்றாலும் மத்திய பின் வரிசையில் வனிந்து ஹசரங்க மற்றும் ஷானக்க போன்ற வேகமாக ஓட்டங்கள் பெறுபவர்கள் இல்லாதது பெரும் பின்னடைவாக இருந்தது.

கடைசி பத்து ஓவர்களில் இலங்கை சராசரியாக 83.43 ஓட்டங்களையே பெற்றிருக்கிறது. மற்ற அணிகளுடன் ஒப்பிட்டால் இது மோசமானது. இதில் முதல் நான்கு இடங்களை பிடித்த அணிகளைப் பார்த்தால் கடைசி ஓவர்களில் இந்த அணிகள் சராசரியாக 130 ஓட்டங்களுக்கு மேல் பெற்றிருக்கின்றன. இது இந்த உலகக் கிண்ணத்தில் கடைசி ஓவர்களின் முக்கியத்துவத்தை காட்டுகிறது.

துடுப்பாட்ட வரிசை நம்பிக்கை தரா

இலங்கை அணியின் பந்துவீச்சு பற்றிய எதிர்பார்ப்பு உலகக் கிண்ணம் ஆரம்பிப்பதற்கு முன் பெரிதாக இருந்தது. ஆனால் வனிந்து ஹசரங்க காயத்தால் வெளியேறியது பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. இது மத்திய ஓவர்களில் பெரிதாகத் தெரிந்தது. டில்ஷான் மதுஷங்க ஆரம்பத்தில் தொடர்ச்சியாக விக்கெட்டுகளை சாய்த்தார். ஆனால் அவருக்கு உதவியாக, குறிப்பாக மத்திய ஓவர்களில் பந்துவீச்சாளர்கள் இருக்கவில்லை.

மதுஷங்க தொடரில் மொத்தமாக 21 விக்கெட்டுகளை வீழ்த்தியபோதும் வேறு எந்த பந்துவீச்சளரும் எட்டு விக்கெட்டுகளைக் கூட தாண்டவில்லை. மத்தியூஸ் மற்றும் லஹிரு குமார தலா ஒரு போட்டியில் சோபித்தார். அது தவிர்த்து மதுஷங்கவிலேயே பெரிதும் தங்க வேண்டி இருந்தது.

அதிலும் இலங்கைக்கு எப்போதுமே பலம் சேர்க்கும் சுழற்பந்து வீச்சு பெரும் பின்னடைவாக இருந்தது. அவர்கள் தொடர் முழுவதுமே 11 விக்கெட்டுகளைத் தான் வீழ்த்தி இருந்தார்கள். மற்ற அணிகளை விடவும் இது குறைவானது.

சுழற்பந்து வீச்சாளர்களின் பந்துவீச்சு சராசரி 78.85 ஆக இருந்ததோடு ஓவர் ஒன்றுக்கு 6.07 ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார்கள். எனவே மத்திய ஓவர்களில் எதிரணிகள் பெரிதாக நெருக்கடி இன்றி ஓட்டங்களை சேகரித்தன.

அனுபவம் பெற்ற சக வீரர் ஹசரங்க இல்லாத நிலையில் மஹீஷ் தீக்ஷன ஆதிக்கம் செலுத்தத் தவறினார். துனித் வெள்ளாலகேவுக்கு அந்த இடைவெளியை நிரப்புவது அதிக சுமையாக இருந்தது. எனவே தொடரில் எதிரணிக்கு அதிக ஓட்டங்களை விட்டுக்கொடுப்பதில் இலங்கை அணி முன்னிலை பெற்றது. அதாவது இலங்கை அணி ஓவர் ஒன்றுக்கு 6.52 ஓட்டங்கள் வீதம் விட்டுக்கொடுத்திருக்கிறது.

உலகக் கிண்ணம் ஆரம்பிக்கும் முன்னரே இலங்கை அணியின் திறமை பற்றி சந்தேகங்கள் இருந்தன. அது அரையிறுதிக்கு முன்னேறும் என்பது ஓரளவுக்கு குருட்டு நம்பிக்கையாகவே இருந்தது. என்றாலும் எதிர்பார்த்ததை விடவும் இலங்கை அணியின் ஆட்டம் மோசமாக இருந்தது. கடைசியில் 2025 சம்பியன்ஸ் கிண்ணத்திற்கு முன்னேறுவதற்கு தேவையான முதல் எட்டு இடங்களுக்குக் கூட இலங்கை அணியால் முன்னேற முடியவில்லை.

என்றாலும் இலங்கை அணியின் பெரும்பாலான வீரர்கள் இன்னும் இளமையானவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் குறைந்தது ஐந்தாறு ஆண்டுகளுக்காவது சர்வதேச கிரிக்கெட்டில் வயதுப் பிரச்சினை இல்லாமல் ஆட முடியும்.

எனவே, முறையான திட்டமிடலுடன் அணியை வழிநடத்த முடியுமாயின் அடுத்த உலகக் கிண்ணத்திலாவது இலங்கை அணி பற்றி பெருத்த நம்பிக்கையை வைத்திருக்க முடியும்.

**எஸ்.பிர்தௌஸ்...**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2023 நவம்பர் 19 ஞாயிற்றுக்கிழமை
தாரணி விஜேய்

# 250 ஆண்டுகளின் பின் பிரிக்கப்பட்ட கடிதங்கள்...

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

பிரான்ஸின் அன்புக்குரியவர்களுக்கு 18 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கடிதங்கள் 250 ஆண்டுகளுக்கு பின்னர் முதல் முறையாக பிரிக்கப்பட்டது. அந்தக் கடிதம் எழுதப் பட்ட பின்னர் பிரிக்கப்பட்டு வாசிக்கப் பட்டது இப்போது தான். ஆனால், அதில் வெளிப்பட்டிருக்கும் உணர்வுகள் இன்றைய திகதிக்கும் பொருத்தமானது என்று அதனை ஆய்வு செய்தவர்கள் கூறியிருக்கிறார்.

பிரான்ஸ் கடற்படையைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களின் மனைவிமார், சகோதரர்கள் மற்றும் பெற்றோர்கள்எழுதியகடிதங்களேஇதில் இருக்கிறன. என்றாலும் அந்தக் கடிதங்கள் எழுதப்பட்டவர்களுக்கு போய் சேரவே இல்லை. என்றாலும் இரண்டரை நூற்றாண்டுகளுக்குப் பின் அந்தக் கடிதங்கள் முதல் முறை பிரிக்கப்பட்ட போது அப்போதைய போர் சூழல், வாழ்வு முறை எப்படி இருந்தது என்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

“உங்களுக்கு எழுதாமல் எனக்கு இரவை கழிக்க முடியாதிருக்கிறது” என்று மேரி டுபொஸ் தனது கணவருக்கு எழுதுகிறார். “நான் உங்களின்' என்றென்றும் விசுவாசத்திற்குரிய மனைவி. எனது தோழனே, இரவு வந்தனங்கள். இப்போது நள்ளிரவாகிறது. நான் ஓய்வெடுக்க வேண்டிய நேரம் என்று நினைக்கிறேன்” என்று டுபொஸ்க் என்பவர் தனது கணவருக்கு எழுதுகிறார்.

பிரிட்டிஷ் படை அவரது கணவரை பிடித்திருப்பது டுபொஸ்கிற்கு தெரிந்திருக்காது. அவர் அனுப்பிய கடிதமும் கணவருக்கு கிடைக்கவே இல்லை. இந்தக் கடிதத்தை அனுப்பிய டுபொஸ்க் மரணித்துவிட்டார். பெரும்பாலும் அவர் கடிதம் அனுப்பிய பின் கணவரை பார்த்திருக்க மாட்டார்.

இந்தக் கடிதங்கள் 1757–58 காலப் பகுதியில் ஏழு ஆண்டு போரின்போது அனுப்பப்பட்டவை. அதாவது வட அமெரிக்கா மற்றும் இந்தியாவை கைப்பற்றுவதை இலக்காகக் கொண்டு பிரதானமாக பிரான்ஸ் மற்றும் பிரிட்டனுக்கிடையில் நடைபெற்ற போர் தான் இந்த ஏழு ஆண்டு போர்.

இதில் பிரான்ஸ் போர் கப்பலான கலாட்டீயில் இருக்கும் கடற்படை வீரர்களுக்கே பெரும்பாலான கடிதங்கள் எழுதப்பட்டிருந்தன. பிரான்ஸ் தபால் திணைக்களம் கடற்படையினருக்கு கிடைப்பதற்காக இந்தக் கடிதங்களை ஒவ்வொரு துறைமுகமாக அனுப்பியிருந்தது.

என்றாலும் பிரிட்டிஷ் கடற்படை கலாட்டீ போர் கப்பலை 1758 ஏப்ரலில் கைபற்றியது. பிரான்ஸ் நிர்வாகம் அந்தக் கடிதங்களை இங்கிலாந்துக்கு அனுப்பியது. என்றாலும் அந்தக் கடிதங்கள் உரிவர்களுக்குப் போய் சேராமல் திறக்கப்படாது நூற்றாண்டுகள் இருந்தன.

வரலாற்றாய்வாளரான கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரனோட் மொரியக்ஸ், பிரிட்டனின் தேசிய ஆவணக் காப்பகத்தின் பெட்டியொன்றை கண்டுபிடித்தார். அவர் கண்டுபிடித்த பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்று தெரியாமலேயே அதனைத் திறந்தார். உள்ளே பார்த்தால் மூன்று தொகுதி கடிதங்கள் வெள்ளை ரிப்பனில் கட்டப்பட்டிருந்தன.





அதில் 104 கடிதங்கள் இருந்தன. எல்லாமே விலையுயர்ந்த காகிதங்களில் எழுதப்பட்டிருந்ததோடு சில சிவப்பு மெழுகு முத்திரை பொறிக்கப்பட்டிருந்தன. என்றாலும் கடிதங்கள் சாதாரண பொதுமக்களால் எழுதப்பட்டவை. என்றாலும் தற்போதைய காலத்தில் கடிதத்தில் உள்ளவர்களது வரலாற்று பின்னணியை கண்டுபிடிக்க முடியாதிருக்கிறது.

“கீழ் தட்டு மக்கள் போர் சூழலில் தமது அன்புக்குரியவர்களை இழந்து வாழ்க்கையை கொண்டு செல்வது பற்றி இந்த கடிதங்கள் புரிதலை தருகின்றன. அச்சம் மற்றும் நிச்சயமற்ற சூழலில் அவர்கள் எப்படி வாழ்வை கொண்டு சென்றார்கள் என்பதை காட்டுவதாக இருக்கிறது” என்கிறார் மொரியக்ஸ்.

இந்த கடிதங்களை அதில் உள்ளவை மற்றும் பின்னணியை கண்டுபிடித்து ஆய்வு செய்வதற்கு மொரியக்ஸ் பல மாதங்களை செலவிட்டிருக்கிறார். அதன் ஆய்வு முடிவு அண்மையில் வெளியானது.

மெர்குரிட் வெலமொய்னி என்ற 61 வயது தாய் தனது மகள் நிகொலஸ் குயிஸ்னலுக்கு எழுதிய கடிதமும் இதில் இருக்கிறது:


“வருடத்தின் முதல் நாளில் (ஜனவரி 1) நீ உன் வருங்கால மனைவிக்கு கடிதம் எழுதியிருக்கிறாய்... என்னைப்பற்றி நீ நினைப்பதை விடவும் உன்னைப்பற்றி நான் அதிகம் நினைக்கிறேன்... எப்படி இருந்தாலும் உனக்கு இனிய புத்தாண்டுகளையும் இறைவனின் அருளையும் பிரார்த்திக்கிறேன். பல வாரங்களாக நான் சுகவீனமாக இருக்கிறேன். மரணத்தை நெருங்கி விட்டதாக நினைக்கிறேன். வரீனுக்கு (சகா) எனது வாழ்த்துகளை தெரிவி. அவனது மனைவி மாத்திரம்தான் உன்னைப் பற்றிய செய்தியை சொல்லுகிறாள்.”

இது உலகின் எந்த இடத்திற்கும் பொருத்தமான குடும்பத்தில் இருக்கும் பிரச்சினைகளை காண்பிப்பதாக இருக்கிறது. அதாவது அந்த மகன் தனது மனைவிக்கு மாத்திரம்தான் கடிதம் எழுதுகிறான். அதனால் தாய் கோபத்தை வெளியிட்டிருப்பது தெரிகிறது. வரீன் என்ற சகா ஒரே ஊர் காரரர் போல். அவர் தனது மனைவிக்கு எழுதும் கடிதங்கள் மூலம் தான் தாய் மகனைப் பற்றி தெரிந்து கொள்கிறார்.

பொதுப்படையாகச் சொல்வதென்றால் 250 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த மாமியார் மருமகள் சண்டைதான் இந்த கடிதத்தில் தெரிகிறது.

அதேபோன்று 1750 களில் இருந்து தொலைதூர தொடர்பாடல்களில் இருக்கும் சிக்கல்களையும் இது காட்டுகிறது. அதே போன்று கடிதம் எழுதியிருக்கும் பலரும் எழுத்தறிவு அற்றவர்களாகவே இருந்திருக்கிறார்கள். வெலமொய்னி என்ற அந்தத் தாய் கூட எழுத்தறிவு இல்லாதவராக இருக்கக் கூடும். அவர் சொல்லச் சொல்ல அந்தக் கடிதத்தை வேறு யாரோ எழுதியிருக்கக் கூடும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

கடிதத்தை அனுப்பியதற்கு என்ன அது உரியவர்களுக்கு சேருவதும் உறுதியாக இல்லை. எனவே பல்வேறு துறைமுகங்களுக்கு பல்வேறு பிரதிகளை அனுப்புவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.





வந்தவர் : என்ன டாக்டர், இந்த நடு ராத்திரியிலே டிஸ்பென்ஸரியைத் திறந்து வச்சுக்கிட்டு இருக்கீங்க?

டாக்டர் : தூக்கத்துலே நடக்கற வியாதிக் காரன் எல்லாம் இப்பதான் பீஸ் கொண்டு வந்து தருவாங்க.

நர்ஸ் : ஐந்து நிமிஷம் கழிச்சு வந்திருந்தா இவரைக் காப்பாத்தியிருக்கலாம் !

நபர் : ஏன்?

நர்ஸ் : டாக்டர் ஊருக்குக் கிளம்பிப் போயிருப்பார் !





நோயாளி : ஹலோ டாக்டர்... உங்களை வந்து பார்க்கணும்... நீங்க எப்ப ஃப்ரீ?

டாக்டர் : எப்ப வந்தாலும் ஃப்ரீ கிடையாது... பீஸ் வாங்குவேன்.....

அப்பா : டேய் அங்க என்னடா பண்ணிக்கிட்டு இருக்க?

மகன் : கடிகாரம் நின்னுப் போச்சுப்பா?

அப்பா : சாவி கொடுடா சரியாகிடும்.

மகன் : அதான்பா ரொம்ப நேரமா கொடுத்துக்கிட்டு இருக்கேன். அது வாங்கவே மாட்டேங் குதுப்பா...



இயக்குனர் : படத்தோட முடிவுல ஹீரோவான நீங்க வில்லனா மாறிடுறீங்க.

நடிகர் : பேசின சம்பளத்தை உடனே தரல்லேன்னா இப்பவே வில்லனா மாறிடுவேன்



டாக்டர் : குழந்தைக்கு தண்ணீர் கொடுக்கறதுக்கு முன்னாடி நல்லா கொதிக்க வெச்சுக் குடுங்க.

ஜோ : ஏன் டாக்டர், குழந்தைகளை அடுப்பில கொதிக்க வைக்கிறது தப்பில்லையா?

ஆசிரியர் : "டேய் ராமு, இன்னும் பத்து நாளில் உலகம் அழியப்போகுதுன்னு வச்சுக்கோ. அப்போ கடவுள் கிட்டே என்ன வேண்டிக்குவே?"

ராமு : "அன்னிக்கு ஸ்கூல் லீவு விடணும்னு வேண்டிக்குவேன் சார்"



கவிதா : அட! இந்த டிரஸ் உனக்கு சூப்பரா இருக்குப்பா!! தீபாவளிக்கு எடுத்ததா?

பார்த்தீபன் : இல்லை. எனக்கு எடுத்தது.

கவிதா : ?!?!





வடிவேல் : யப்பா! உன்னைய நான் டிரைவரா சேத்துக்கிடறேன். ஸ்டார்ட்டிங் ஸாலரியா ரெண்டாயிரம் தாரேன். ஓகேவா?

பார்த்திபன் : உங்களுக்கு ரொம்ப பெரிய மனசு ஸார்!

வடிவேல் : இருக்கட்டும் இருக்கட்டும்!

பார்த்திபன் : ஸ்டார்ட்டிங் ஸாலரி ரெண்டாயிரம் ஓகே. இந்த டிரைவிங் ஸாலரி எவ்வளவு கொடுப்பீங்க?

வடிவேல் : ஆகா!! கௌம்பிட்டானே





சித்தையா : என் மவனை ஏன் வெட்னரி டாக்டர் கிட்டே வைத்தியம் பண்ண கூட்டிப்போறே ?

ராணி : நீங்கதானே எம் மவன் வாயில்லா ஜீவன்னு சொன்னீங்க !




காதலி : நம் காதலை ஏன் அப்பாகிட்ட சொல்ல அவசரப்படுத்துறீங்க...?

காதலன் : அப்பதான் உனக்கு வேற இடத்தில் சீக்கிரம் மாப்பிள்ளை பார்ப்பார்.

# அ.இ.அ.தி.மு.க வின் பொன்விழா நிகழ்வு இன்று பழைய நகரசபை மண்டபத்தில்

அகில இலங்கை எம்ஜிஆர் மன்றத்தின் தலைவரும் அனைத்திந்திய அ.தி.மு.கவின் இலங்கை கிளைத் தலைவருமான கலாபூஷனம் எஸ்.எச்.எம். இதிரிஸ் ஒவ்வொரு ஆண்டும் மக்கள் திலகம் எம். ஜீ.ஆரின் ஜனனதினம் வருகின்றபோதும் அவரது நினைவு தினம் வருகின்றபோதும் அதுபோல் புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதாவின் ஜனன தினம் வருகின்றபோதும் அவரது நினைவு தினம் வருகின்றபோதும் கொழும்பு 11, புறக்கோட்டை, ஐந்து லாம்புச் சந்தியிலுள்ள பழைய நகர சபை மண்டபத்தில் நிகழ்வுகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. எவ்வளவு இடர்கள் வந்தபோதும் எவ்வளவு தடைகள் வந்தபோதும் இவர் இவற்றை இடைவிடாது தொடர்ந்து நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் பிறந்து தமிழகத்திற்குச் சென்று திரைப்படங்களில் நடித்து தமிழக மக்களின் மனங்களை வென்று அரசியலில் ஈடுபாடு கொண்டு தமிழக முதல்வராக ஆட்சிபீடமேறியவர் மக்கள் திலகம் எம்ஜிஆர். இவர் மீது தீராத தீவிர ஆர்வம் கொண்டு அந்நிகழ்வுகளை நடத்தி வருபவர் கலாநிதி எஸ்.எச்.எம். இதிரிஸ். மக்கள் திலகம் எம். ஜீ.ஆரின் மறைவுக்குப் பின் எம். ஜீ.ஆரின் கொள்கைகளைப் பின்பற்றி அரசியலில் ஈடுபட்டு எம். ஜீ.ஆரின் கொள்கைப் பரப்புச் செயலாளராக ஈடுபட்டு வந்தவர் புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா தலைவியாகக் கொண்டு அவரது ஜனன தினத்தையும் நினைவு தினத்தையும் நடத்தி வருபவர் கலாநிதி எஸ்.எச்.எம். இதிரிஸ். அனைத்திந்திய அ.தி.மு.கவின் 52ஆவது ஆண்டு பொன்விழா வையொட்டி அகில இலங்கை



எம். ஜீ.ஆர். மன்றம் ஏற்பாடு செய்துள்ள விஷேட நிகழ்வு இன்று 2023.11.19ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு 11, பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.சட்டத்தரணி ரஷித் எம் இம்தியாஸ் முன்னிலையில் நடைபெறும் இந்நிகழ்வில் அகில இலங்கை எம்ஜிஆர் மன்றத்தின் தலைவர் கலாநிதி எஸ். எச்.எம். இதிரிஸ் வரவேற்புரை ஆற்றவுள்ளார். கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் எம். டீ. எம். இக்பால், தொழில் அதிபர்களான அ. முத்தப்பன் செட்டியார், எட்மண்ட் பெர்னாண்டோ, ஜே.பி. ஜெயராம், தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம உதவி ஆசிரியர் கே. ஈஸ்வரலிங்கம், மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் குமரகுருபரன், மக்கள் தொடர்பு அதிகாரி எம். சீ. எம். அலி, நெய்னார் காப்பகத் தலைவர் இம்ரான் நெய்னார், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஜோசப் பெனார்ந்து, சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் துரைராசா சுரேஸ், கவிஞர் பிரேம்ஜி, தென்றல் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் அபு உபைத் மவ்ஜித், அச்சக உரிமையாளர் தேவர் முனிவர், ஏ. ஆர்.எம். ரிஸ்வி, ஓம் சரவணா புரடக்ஷன் அதிபர் எஸ். நடராஜா, தெலுங்கு காங்கிரஸ் தலைவர் அ. அன்பழகன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொள்வார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 1972ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி மக்கள் திலகம் எம்ஜிஆரால் ஆரம்பிக்கப்பட்டது. கலாநிதி இதிரிஸ் தலைமையில் அ.தி.மு.கவின் பொன்விழாஅஇஅதிமுக என்பது தமிழ்நாடு மாநிலம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள ஓர் இந்திய பிராந்திய அரசியல் கட்சியாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து பிரிந்த தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனால் (எம்.ஜி.ஆர்.) மதுரையில் நிறுவப்பட்ட திராவிடக் கட்சி இது.





நீர்கொழும்பு, பெரிய முல்லை சபேசன் முரளி அண்மையில் B.M.I.C.Hல் நடைபெற்ற ESOFT கணனி கல்வி நிறுவனத்தின் பொருளியல் டிப்ளோமா பட்டதாரிக்கான சான்றிதழைப் பெற்றுக்கொண்டுள்ளார். இவர் நீர்கொழும்பு விஜெயரத்தினம் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது .




சங்கவி தியேட்டர் மற்றும் சங்கவி பிலிம்ஸ் ஆதரவுடன் 'விழிகள் கலா முற்றம்' நடத்தவுள்ள 'கலைவிழி விருது' விழா தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடன் இன்று 19ஆம் திகதி (ஞாயிற்றுக் கிழமை) பேசாலை சங்கவி திரையரங்கில் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது. இவ்விழாவின் போது, பேசாலையில் நாட்டுக்கூத்து, மரபு நாடகங்களில் மிகவும் சிறப்பாக பங்காற்றிய சூசை ஞானப்பிரகாசம் லெம்பேட், செபமாலை விக்டர் ஜெயபாலன் பெர்னாண்டோ ஆகிய முதுபெரும் கலைஞர்கள் 'கலைவிழி' விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். இவ்விழாவில், எஸ். ஏ.உதயன் (நெறியாளர்) சி.எம்.பறுனாந்து (அண்ணாவியார்) சுரேன் முரளி (மாநாகன்) மொட்வின், கூஞ்ஞு திசையன், மோ.தேனுஜா அனுலாதேவி, உ.சினேகா (குறிகாட்டி, மோ.மிதுசா (கட்டியகாரன்), (பூதம்) அ.நிரோசன் குலாஸ், மெ. கிரேஸியன் (மாசிவன்) தோழன் ரூ.வெரோன், (பிராமணன்) அ.அபிசன், ரூ.வெரோன் (தோழன்), அ.அபிசன் (பிராமணன்) ஒஸ்மன் பறுனாந்து, ஒஸ், சதுசன் பறுனாந்து, பெனோஸ்ரிபன், (இசை) முரசு முரளி ஆகியோர் பங்கேற்கும் மாநாகன் என்ற நாட்டுக்கூத்தும் அரங்கேறவிருக்கிறது.

## மாற்றுத் திறனாளிகளுக்கு சங்கவி பிலிம்ஸின் கலாவிபூஷண விருது

### யாழ். மாவட்டச் செயலகத்தில் டிசம்பர் 6ஆம் திகதி

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமும் உளநல தினமும் யாழ். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் டிசெம்பர் 6ஆம் திகதி யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது, 15 பிரதேச செயலகங்களிலுள்ள மாற்றுத்திறனாளிக் கலைஞர்கள், சுயதொழில் முயற்சியாளர்கள், சமூக சேவையாளர்கள் ஆகிய 300 பேர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மாற்றுத்திறனாளிக் கலைஞர்களுக்கான கலாவிபூஷண விருது, சங்கவி பிலிம்ஸ் மற்றும் சங்கவி தியேட்டருடன் இணைந்து தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் அனுசரணையுடன் வழங்கப்படவுள்ளது.

சுயதொழில் முயற்சியாளர்கள் மற்றும் சமூக சேவையாளர்களுக்கான விருதை, யாழ். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பு வழங்கவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், இனிய விருந்தினர்களாக தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், உளநல மருத்துவ நிபுணர் எஸ். சிவதாசன், வடமாகாண சமூகசேவைத் திணைக்களப் பணிப்பாளர் அகல்யா செகராச, சங்கவி பிலிம்ஸ் மற்றும் சங்கவி தியேட்டர் பணிப்பாளர் கலாநிதி துரைராசா சுரேஸ், கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன், வடமாகாண கைத்தொழில் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர், Crafttary பணிப்பாளர் தம்பிராசா சுரேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.


# 25வது வெள்ளி விழா தேசிய கொடகே தேசிய சாகித்திய விழா 2023











25வது வெள்ளி விழா தேசிய கொடகே தேசிய சாகித்திய விழா 2023 கடந்த நவம்பர்15 அன்று கொழும்பு 7ல் அமைந்துள்ள தேசிய நூலக சேவைகள் சபை கேட்போர் கூடத்தில் திருமதி நந்தா கொடகே தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் 2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த சிங்கள தமிழ் ஆங்கில நூல்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. தமிழுக்கான விருதுகளாக 2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த நாவலுக்கான விருது ஏ.எஸ் உபைதுல்லாவின் வேராகிப் போன மனிதர்கள் எனும் நாவலுக்கும், சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான விருது மண்டூர் அசோகாவின் எழுதப்படாத கவிதைகள் சிறுகதைத் தொகுப்புக்கும், சிறந்த கவிதைத்தொகுப்புக்கான விருது சிவனு மனோஹரனின் மலைகளின் பாடல் எனும் கவிதைத் தொகுப்புக்கும்,. சிறந்த முதல் நூலுக்கான விருது ஜெயவதியின் அணங்கே ; அகிலம் வெல் எனும் கவிதைத் தொகுப்புக்கும், சிறந்த மொழிபெயர்ப்பு தொகுப்புக்கான விருது இப்னு அசூமத்தின் நீ கூறுகிறாய் இறந்துவிட்டாயாம் நீ எனும் தொகுப்புக்கும், 2022 ஆண்டுக்குக் கொடகே ஆக்க இலக்கியப் போட்டியில் சிறந்த கவிதைத் தொகுப்பாகத் தெரிவு செய்யப்பட்ட தினுஷா மகாலிங்கத்தின் சொற்களற்ற இடைவெளி எனும் கவிதைத் தொகுப்புக்கும், சிறந்த சிறுகதைத் தொகுப்பாகத் தெரிவு செய்யப்பட்ட ஜே. வஹாப்தீனின் அவனுக்கும் சிறகுகள் உண்டு எனும் சிறுகதைத் தொகுப்புக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

இவ்விருதுகளை இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் வழங்கி வைத்தார். விருதுகளுக்கான அறிவிப்புகளை மும்மொழியிலும் ஹேமமாலி ஹேமசந்திர பதிரன, மேமன்கவி ஆகியோர் முன் வைத்தார்கள்.




செந்தூரம் வாசகர்கள் குருமண்வெளி

## ஆடற்கலைப் போட்டி

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் வருடாந்தம் அறநெறிப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் ஆடற்கலைப் போட்டியின் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்திற்கான முதலாம் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 2023.11.25ஆம் 26ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் கொழும்பு, கொட்டாஞ்சேனை இந்து கல்லூரியில் நடைபெறும்.

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் இந்தமுறை இப்போட்டியை இந்து கலாசார திணைக்களத்துடன் இணைந்து நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. இதில் நாடு முழுவதிலும் உள்ள அறநெறிப் பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன. இப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெறுகின்ற அறநெறிப் பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபா பரிசாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத் தலைவர் எஸ். விஜேயுடன் கலைஞர்கள்

# பெண்களுக்கு நீதி வேண்டித் தோற்றம் பெற்றது பெண்ணியம் – உடுவிலூர் கலா



எழுத்தாளர், ஆய்வாளர், கவிஞர், சுயதொழிலாளர், சமூக சேவகர் என பல்வேறு பரிமாணங்களில் தன்னுடைய திறனை வெளிக்காட்டி வரும் முன்மாதிரியான ஒரு சிறந்த பெண்மணி உடுவிலூர் கலா. இவரை தினகரன் வார இதழுக்காக நேர்காணல் செய்தபோது கிடைத்த தகவல்களை பரிமாறிக் கொள்கிறோம்.

தங்களுடன் இணைந்திடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். முதலில் தங்களைப் பற்றிக் கூறுங்கள்.

நான் உடுவிலூர் கலா. பெண்ணியம் சார்ந்த எழுத்தாளர், ஆய்வாளர், கவிஞர், சுயதொழிலாளர், சமூக சேவகர் என்று எனது பயணம் தொடர்கிறது.

**? எழுத்துத்துறையை தேர்ந்தெடுக்கக் காரணங்கள் ஏதும் உண்டா?**

தமிழ் மீதும் சமூகம் மீதும் பெண்கள் மீதும் கொண்ட பற்றுதான் காரணம்.

**? உங்களது கலைப் பயணத்தின் பகுதிகளைக் கூறுங்கள்.**

சமூகம் நோக்கியதாக பட்டிமன்றம், கவியரங்கம் மூலம் தமிழின் பணி. புலம்பெயர் உறவுகளின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களின் நூலை எனது யாழிசை கவித்தடாகம் மூலம் வெளியீடு செய்கிறேன். படைப்புகளாக கதை, கட்டுரை, கவிதை, திறனாய்வு, சிறுவர் பாடல், சமையல் குறிப்புகள், பெண்ணியம் சார்ந்த படைப்புகள் எழுதி வருகிறேன். இணையத்தில் யாழிசை கவித்தடாகம் மூலம் பன்னாட்டுக் கவிஞர்களை ஒன்று சேர்த்து போட்டிகள் நடாத்துகிறேன்.

**? ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடனும், பத்திரிகைகளுடனுமான தங்களது தொடர்பு எப்படியானது?**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எனக்கு அடித்தளமிட்டது. வானொலி கேட்கும் ஆர்வம் எழுதத் தூண்டியது. இசையும் கதையும், பாட்டும் பதமும், இன்றைய நேயர், வாலிப வட்டம், இளைஞர் மன்றம் போன்ற நிகழ்வுகளில் தொடர்ந்து எழுதி வருகிறேன். kks ராஜா, BH அப்துல் ஹமீட், ராஜேஸ்வரி சண்முகம், புவனலோஜினி துரைராஜசிங்கம் போன்ற ஆளுமைகளின் குரலில் எனது படைப்புகள் ஒலிபரப்பானமை எனக்கான அங்கீகாரம் மட்டுமல்ல, இலக்கியப் பரப்பின் வரவேற்பும் கூட. அதேபோல்,உதயன் வலம்புரி, தினமுரசு, மித்திரன், தினக்குரல் தீபம் போன்ற பத்திரிகைகளில் இன்றுவரை எழுதிக் கொண்டே இருக்கிறேன்.

**? பதினாறு நாடகங்களை மேடையேற்றியுள்ளீர்கள் பெருமையே......இது பற்றிய உங்கள் கருத்து...?**

சிறுவயதில் அதாவது, பாடசாலை நாட்கள் சுகந்தமானது. எனது தெளிவான உச்சரிப்பும் தமிழின் வாஞ்சையும் நாடகத்திலும் கோலோச்ச வைத்தது. நவராத்திரி நாட்களில் பட்டிமன்றப் பேச்சு எனத் தொடங்கி நாடகத்திலும் பிரவேசித்தேன். தொடர்ந்து 16 நாடகங்கள் நடித்தேன். 16வது நாடகம் தக்கன் வதம். உயர்தரம் கற்கும் போது இந்த நாடகம் இறுதியாக நடித்தேன்.

**? பெண்ணியம் சம்பந்தமாக தாராளமாக எழுதுகின்றீர்களே!.... "உலகத்தில் பெண்ணியம் "விளக்கம் தாருங்கள்.**

அழகான தலைப்பில் உங்கள் கேள்வி. பெண்ணியம் பெரிய பரப்பு. பெண்கள் உள்ளவரை பெண்ணியமும் இருக்கும். அடிமை நிலையில் இருக்கும் பெண்களுக்கு நீதி வேண்டித் தோற்றம் பெற்றது பெண்ணியம். 18ம் நூற்றாண்டில் மெல்ல மெல்லத் துளிர் விட்ட பெண்ணியம் 19ம் நூற்றாண்டில் தனிக் கோட்பாடாக, வலுப்பெற்றது. ஆனாலும், பெண்ணியம் பயணிக்க நீண்ட தூரம் உள்ளது. தீவிரவாதப் பெண்ணியம் சமதர்மப் பெண்ணியம், இந்தியப் பெண்ணியம், தலித் பெண்ணியம், எனப் பல பெண்ணியம் இருந்த போதும், இலங்கைப் பெண்ணியம் அதிக தேவைகளையும் துரித செயற்பாடுகளையும் வேண்டி நிற்கிறது. தினமும் பெண்ணியம் பேச வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். காரணம், உலகளாவிய ரீதியில் வன்முறைகளாலும் பாலியல் சீண்டல்களாலும் பெண்மை அழுகிறது. நீதிக்கான குரலாக பெண்ணியம் செயற்படவேண்டும். ஆனால், பெண்ணிய வாதிகளில் பெரும்பாலானோர் தூக்கத்தில் இருந்து விழித்துக் கொள்ளவில்லை. உலகில் பெண்ணியத்தின் தேவை அவசியமாகின்றது.

**? நீங்கள் எழுதியுள்ள நூல்களின் எண்ணிக்கையும், வெளியிட்டுள்ள நூல்கள் பற்றியும் கூறுங்கள்?**

எழுதியுள்ள நூல்கள் 25. வெளியீடு செய்த நூல்கள் எட்டு. எழுதிக் கொண்டே இருக்கிறேன். எனது முதல் நூல் பெண்மையின் பக்கங்கள். பெண்ணின் வாழ்வியலில் பக்கங்களாகப் பயணிக்கும் காதல் வரதட்சணை, மணமுறிவு, வன்முறை கைம்பெண் அம்மா என 48தலைப்புகளில் எழுதியுள்ளேன். இரண்டாவது நூல் பால் நிலை சமத்துவமா? எங்கே? என்ற நூல். இன்று வரை தீராத பெண்ணடிமை நிலையைக் கட்டுரைகளாக எழுதியுள்ளேன். மூன்றாவது நூல் தையலர்க்கான தையற்கலை...தையல் தொழிலை படங்களுடன் விளக்கியுள்ளேன். நான்காவது," சுயம் தரும் சுய தொழில்கள் "இதில் நான் செய்கின்ற தொழில்கள் 25 தலைப்புகளில் விளக்கமாக, பொருட்கள் பெற்றுக் கொள்ளும் இடங்களின் முகவரியும் பதிவிட்டுள்ளேன். 5 வது நூல் மரபின் விழுதுகள். இது மரபுக் கவிதை மட்டும். 6 வது நூல் என் சுவாசக் காற்று. இது தன்முனைக் கவிதை. 7வது நூல் யாழிசை. இது 88 கவிஞர்களின் யாழிசை கவித்தடாக தொகுப்பு நூல். 8 வது வேள்வித் தீயில வள்.. இது பெண்ணியக் கவிதை.




**? குடும்பம் எனும் போது உங்களுக்கு எவ்வாறு உதவுகின்றார்கள்? நிலையாக நீங்கள் தொடர்ந்திடுவதற்கு யார் ஒத்துழைக்கின்றார்கள்.**

நிலையாகத் தொடர்வதற்கு என் தற்துணிவும், இறை நம்பிக்கையுமே காரணம். இவ்வளவு பணிகளோடும் மிக நேர்த்தியாகக் குடும்பத்தைச் செதுக்குகிறேன். கடவுளுக்கு நன்றி சொல்கிறேன்.

**? இருபத்தியொரு சுய தொழில்கள் பயிற்றுவிக்கின்றீர்களே! அவை பற்றிய தெளிவை கூறுங்கள்.**

ஆரம்பம் பண்ணை வேலை. தையல் 40வருடங்கள். Batik 15 வருடங்கள். இவ்வாறு நீண்ட வரலாறு எனது தொழில்கள். குடும்பம் வறுமையில் இருந்த வேளை வாழ்வாதாரமாக சுயதொழில்களை மேற்கொண்டேன். இன்று வலி தெற்கில் சிறந்த சுயதொழில் வல்லுநராக வளவாளராக இருக்கிறேன். தங்களிடம் சுய தொழில் கற்பதில் இளம் வயதினரின் ஆர்வம் எவ்வாறு உள்ளது? 100'/'என்று சொல்ல முடியாது. பெரும்பாலான இளையோர் விரும்பித் தொழில் பழகுகிறார்கள்.

**? நீங்கள் ஒரு "சுகாதாரத் தொண்டர் "என்று அறிந்தேன். எங்கே? எக்காலத்தில்?**

1982ஆம் ஆண்டு முதல் இன்று வரை தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையின் கீழ் சுகாதாரத் தொண்டராக உள்ளேன். இவ்வாறே தாதியப் பயிற்சிக்கு உள்வாங்கப்பட்டேன். தாதிய நியமனமும் கிடைத்தது. ஆனால், நாட்டுச் சூழல், பிள்ளைகளின் பாதுகாப்புக் கருதித் தொடர முடியவில்லை. பின்னர் புற்றுநோயாளர் காப்பாகத்திலும் தாதியப் பயிற்சி முடித்து, அங்கும் தொடர முடியவில்லை. ஆனாலும், அவர்கள் தொடர்பில் இன்றும் உள்ளேன்.1995இல் போலியோ ஒழிப்புத் திட் டத்தில் தென்மராட்சியிலும், தொடர்ந்து உடுவிலிலும் மூன்று வருடங்கள் சிறப்பான பணியில் இருந்தேன்.1988வரை red barna வின் சத்துணவுத் திட்டத்தில் நிலையப் பொறுப்பாளராகவும் சேவை செய்தேன்.

**? அருகி வரும் கலையான "ரேந்தை பின்னுதல் "என்ற கலையை தெளிவு படுத்துங்கள்.**

ரேந்தை பின்னுதல் அருகி வரும் கலைகளில் ஒன்று. இப்போது 40 வீதமான தொழில்கள் அருகிவிட்டன. அவற்றில் றேந்தையும் ஒன்று. கலை நுட்பம் கொண்ட இதை நான் மிக விரும்பிச் செய்கிறேன். இதுவே எனது மூத்த தொழில் என்று சொல்லலாம். 45வருடங்கள் கடந்து விட்டது. தேசிய அருங்கலைகள் பேரவை வருடா வருடம் நடாத்தும் கண்காட்சியில் பல பொருட்களோடு ரேந்தையைக் காட்சிப் படுத்தி முதலாம், இரண்டாம், இடங்களையும் பணப் பரிசிலையும் பெறுவேன். ரேந்தை முன்னர் பெண்கள் பாவாடைக்கு கீழ்ப்பகுதியை அலங்கரிக்க பயன்படுத்துவர். மேசைவிரிப்பு, பறவைகள் மிருகங்கள், அழகிய வடிவங்கள் றேந்தையில் பின்னலாம். மனதை வழிப்படுத்தவும் ஏற்ற தொழில் ரேந்தை

**? இதுவரைக் காலமும் நீங்கள் பெற்றுள்ள பட்டங்களையும், விருதுகளையும் நேர்காணலில் பகிர்ந்துக் கொள்வீர்கள் என எதிர்பார்க்கின்றேன்'**

2016 கலைமாமணி விருது, தேசிய கைப்பணிகள் விருது 2015) ஜனாதிபதி கைப்பணிகள் விருது 2017) எழுமதி விருது 2018) வடஜோதி விருது 2021)பன்முகக் கவிவேந்தர் பட்டம் 2019) மிகச் சிறந்த கட்டுரையாளர் பட்டம் இணையத்தில் 489விருதுகள் பட்டங்கள்

**? வளர்ந்த எழுத்தாளராகவும், கலைமாமணியாகவும், பன்முக கவி வேந்தராகவும் வலம் வரும் நீங்கள் வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு கூறும் ஆலோசனை...?**

நிறைய வாசியுங்கள். நேரிய சிந்தனையோடு பயணியுங்கள். அரச வேலைக்குக் காத்திராமல் சுயதொழில் பழகுங்கள். விழுந்த போதும் எழுந்து நிற்கும் மனப்பலத்தோடு தொடருங்கள். அடுத்தவரை நம்பி வாழாது தன் கையே தனக்குதவி என்று வாழப் பழகுங்கள் வாசிப்பு ஒன்றே இலக்கியத்தில் தன்னிறைவு காணும் என நம்புங்கள் என்பதே எனது அன்பான வேண்டுகோள்.





நேர்காணல்
திருமதி பவானி சச்சிதானந்தன்

# IDM Nations Campus International இன் வருடாந்த பட்டமளிப்பு விழா












இலங்கையிலுள்ள முன்னணி தனியார் கல்வி நிறுவனமான IDM Nations Campus International இன் வருடாந்த பட்டமளிப்பு விழா சனிக்கிழமை (11) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்றது. இதன்போது 1,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டமளிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். பிரிட்டனிலுள்ள IDM International இன் கிளை நிறுவனமாக செயற்பட்டு வரும் IDM Nations Campus International, இலங்கையில் கல்வியினூடாக தொழில் தரத்தை மேம்படுத்துவதற்காக IDM Nations Campus International உருவாக்கப்பட்டதுடன், தொழில் ரீதியான கல்வித் திட்டத்தில் கடந்த 40 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தையும் இந்தக் Campus கொண்டுள்ளமை சிறப்பம்சமாகும். அத்துடன், ISO தரச் சான்று வழங்கப்பட்ட கல்வி நிறுவனமாகவும் IDM Nations Campus International உள்ளது. இலங்கையில் மாணவர்களுக்கு இளங்கலை, முதுகலை மற்றும் கலாநிதி (முனைவர்) பட்டப் படிப்புகளை வழங்குவதற்காக பிரிட்டனிலுள்ள Buckingham shire New University மற்றும் மலேசியாவிலுள்ள Lincoln University College ஆகியவற்றுடன் IDM Nations Campus International இணைந்து செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தெஹிவளை மவுண்ட் ரோயல் சர்வேதேச பாடசாலையின் வருடாந்த விருது வழங்கும் விழா













தெஹிவளை எஸ். டி. எஸ். ஜெயசிங்க மண்டபத்தில் பாடசாலை அதிபர் சிக்கந்தர் மொஹிடீன் தலைமையில் இடம்பெற்றது.

ஆண்கள் பிரிவு நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அபிவிருத்தி கற்கை மையத்தின் பணிப்பாளர் கலாநிதி ரவூப் செயின் கலந்துகொண்டதுடன் பெண்கள் பிரிவு நிகழ்விற்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அப்துல் ரஹீம் நிஹ்மியா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இவ்விழாவில் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகள் பிரதம அதிதி மற்றும் சிறப்பு அதிதிகளிடம் பரிசுகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களைப் பெற்றனர்.

கௌரவ அதிதி மொஹிதீன் பாவா, முகாமையாளர் நசீர் ஹுசைன், கல்வி ஒருங்கிணைப்பாளர் திருமதி ரிகாஸா சமீம், பிரிவுத் தலைவர்கள் திருமதி முபீதா அஸ்யான், திருமதி செனப் நவாஸ், திருமதி நப்ரா பஸ்மி, திருமதி ஷப்னம் சம்சுதீன், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

பிரதம அதிதி கலாநிதி ரவூப் செனுக்கு பாடசாலை அதிபர் சிக்கந்தர் முஹிதீன் பாராட்டுச் சின்னம் வழங்கினார்.

Senthooram செந்தூரம்



# 15 வருடங்களாக லாரன்ஸை பிடித்து ஆட்டம்; கெட்ட நேரம்.. ரூட்டை மாற்றினால் தான் பிழைக்கலாம்

இப்போது பெரிய நடிகர்கள் கையில் கூட இவ்வளவு படங்கள் இருக்குமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறார் லாரன்ஸ். தன்னை தேடி வரும் இயக்குனர், தயாரிப்பாளர்கள் இடம் கால்ஷீட் கொடுத்து நிற்கக் கூட நேரமில்லாத அளவுக்கு ஓடிக் கொண்டிருக்கிறார். ஆனாலும் தான் சம்பாதிக்கும் பணத்தை தனது தொண்டு நிறுவனத்திற்காக செலவு செய்து வருகிறார். மேலும் இப்போது தன்னுடைய சம்பாத்தியம் தனது ஆசிரமத்திற்கு போதுமானதாக உள்ளதால் யாரும் உதவ வேண்டாம் என்றும் சமீபத்தில் லாரன்ஸ் வேண்டுகோள் வைத்திருந்தார். இவ்வாறு லாரன்ஸுக்கு ஏறுமுகம் என்றாலும் அவருடைய படங்கள் வெற்றி பெறுகிறதா என்றால் கேள்விக்குறி தான்.அதாவது 2008இல் இருந்த தொடங்கி 2023 வரை எடுத்துக்கொண்டால் அவரது ஹிட் படங்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அதுவும் குறிப்பாக மிகப்பெரிய படம் என்றால் அந்த லிஸ்டில் காஞ்சனா மட்டும் தான் இடம் பெறுகிறது. அதன் பிறகு தொடர் பிளாப் படங்களை மட்டுமே லாரன்ஸ் கொடுத்து வருகிறார். அதுவும் மிகப்பெரிய ப்ளாக் பஸ்டர் படமான சந்திரமுகி படத்தின் இரண்டாம் பாகத்தில் லாரன்ஸ் நடித்திருந்தார். படம் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு போகாமல் படு மொக்கை வாங்கியது. ஆனால் இப்போது அவரது கேரியர் பீல்ட் அவுட் ஆகாமல் இருக்க சற்று ஒரு ஆறுதலாக அமைந்திருக்கிறது கார்த்திக் சுப்புராஜின் ஜிகர்தண்டா டபுள் எக்ஸ் படம். அதாவது எஸ்ஜே சூர்யா இந்த படத்திற்கு பக்கபலமாக அமைந்தாலும் லாரன்ஸும் தனது பங்களிப்பை கொடுத்திருக்கிறார். தீபாவளி ரேசில் படு பயங்கரமாக ஜிகர்தண்டா டபுள் எக்ஸ் படம் ஓடிக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த வெற்றியை லாரன்ஸ் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்றால் அவருடைய ரூட்டை மாற்றினால் தான் முடியும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. லாரன்ஸ் ஹீரோவாக நடிக்கும் படங்கள் பெரிய அளவில் போகாத நிலையில் வில்லன் கதாபாத்திரம் அவருக்கு பக்காவாக பொருந்தும். ஹீரோவாக ஜெயிக்க முடியாத நடிகர்கள் வில்லனாக பட்டையை கிளப்பி வருகிறார்கள். சொல்லப்போனால் விஜய் சேதுபதி கூட ஹீரோவாக நடிப்பதை காட்டிலும் வில்லனாக நடித்து பெயரை தட்டிச் சென்றார். ஆகையால் லாரன்ஸ் கொஞ்சமும் தயங்காமல் இந்த வில்லன் கதாபாத்திரத்தை ஏற்று நடித்தால் அவரது சினிமா கேரியர் பிரகாசமாக அமைய அதிக வாய்ப்பு இருக்கிறது. இல்லையென்றால் இன்னும் சில வருடங்களிலேயே ஃபீல்ட் அவுட் ஆகவும் வாய்ப்பு இருக்கிறது.





## இமான் கொளுத்தி போட்டதுக்கு ஒரே பதிவில், பதில் கொடுத்த எஸ்கே..

சிவகார்த்திகேயன் நடித்த மனம் கொத்தி பறவை, வருத்தப்படாத வாலிபர் சங்கம், ரஜினி முருகன், நம்ம வீட்டுப்பிள்ளை, சீமராஜா உள்ளிட்ட படங்களுக்கு இசையமைத்தவர் தான் டி இமான். இவ்வாறு சிவகார்த்திகேயன் திரை உலகில் அறிமுகமான முதல் படத்திலிருந்து பல ஹிட் பாடல்களை கொடுத்து அவரை தூக்கிவிட்டவர் டி இமான்.ஆனால் இவர் இப்போது சிவகார்த்திகேயனுக்கு எதிராக அளித்திருக்கும் பேட்டி பெரும் சர்ச்சையை கிளப்பியது. 'சிவகார்த்திகேயன் எனக்கு துரோகம் செய்துவிட்டார். இந்த ஜென்மத்தில் அவருடன் இணைந்த படம் பண்ண மாட்டேன். அவர் செய்த துரோகம் என்ன என்பதை வெளிப்படையாக சொன்னால் குழந்தைகள் எதிர்காலம் பாதிக்கப்படும்' என பொடி வைத்துப் பேசினார்.இதனால் சிவகார்த்திகேயனின் கேரக்டரை சோசியல் மீடியாவில் கிழித்து தொங்க விட்டனர். ஏனென்றால் டி இமானின் முதல் மனைவிக்கும் சிவகார்த்திகேயனுக்கும் தொடர்பு இருந்திருக்குமோ, அதனால் தான் டி இமான் அவருடைய முதல் மனைவியை விவாகரத்து செய்தாரா என்று ஏகப்பட்ட சர்ச்சைகள் கிளம்பியது.

ஆனால் இதற்கெல்லாம் சிவகார்த்திகேயன் எதுவும் சொல்லாமல் அமைதி காக்கிறார். நீங்க எவ்வளவுதான் கொளுத்தி போட்டாலும் நான் என்னுடைய குடும்பத்தோட சந்தோசமா ஜாலியா இருக்கேன் என வெளிப்படுத்தும் விதமாக இப்போது சிவகார்த்திகேயன் தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில் குடும்பத்துடன் இருக்கும் புகைப்படத்தை பதிவிட்டு இருக்கிறார். இதில் அவருடைய மனைவி மற்றும் இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர். சிவகார்த்திகேயனின் மகன் மற்றும் மகள் இருவரும் நன்றாக வளர்ந்து விட்டார்களே! என ரசிகர்களும் இந்த புகைப்படத்தை பார்த்து கமெண்ட் செய்கின்றனர். மேலும் சிவகார்த்திகேயன் இப்போது மாவீரன் படத்திற்கு பிறகு அடுத்ததாக ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் எஸ்கே 21 படத்தில் நடிக்கிறார். இந்த படத்தை கமலஹாசனின் தயாரிப்பு நிறுவனமான ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் தயாரிக்கிறது.இந்த படத்தின் ஷூட்டிங் காஷ்மீரில் நடைபெற்று வரும் நிலையில், அடுத்த கட்ட படப்பிடிப்பு பாண்டிச்சேரியில் நடக்கிறது. இதில் சிவகார்த்திகேயன் ராணுவ வீரராக நடிப்பதாக கூறப்படுகிறது. இந்த புகைப்படத்தில் இவருடைய ஹேர் ஸ்டைலை பார்க்கும்போது ஆர்மி மேன் போல் தெரிகிறார். மேலும் சிவகார்த்திகேயனின் அயலான் படம் பொங்கலுக்கு ரிலீஸ் ஆக இருக்கிறது.

# பான் இந்தியா படத்துக்காக மணிரத்தினம் செய்யத் துணிந்த விஷயம்

சமீபகாலமாக பெரிய நடிகர்களின் படங்கள் பான் இந்தியா படமாக வருகிறது. அதாவது ஒரு காலத்தில் தமிழ் சினிமாவில் உருவாகும் படம் அந்த மொழியில் மட்டும் தான் வெளியிடப்பட்டு வந்தது. ஆனால் இப்போது நிலைமை அப்படியே தலைகீழாக மாறிவிட்டது. அதாவது சாதாரணமாக ஒரு படம் உருவானால் ஐந்து மொழிகளில் வெளியிடப்படுகிறது. இப்போது ரஜினியின் ஜெயிலர், விஜய்யின் லியோ படங்களும் பான் இந்திய படமாக தான் வெளியானது. அதேபோல் பாலிவுட்டில் ஜவான் படமும் மற்ற மொழிகளில் டப்பிங் செய்யப்பட்டு வெளியானது. இப்போது அதேபோல் தான் மணிரத்தினம் மற்றும் கமல் கூட்டணியில் தங் லைஃப் படமும் ஐந்து மொழிகளில் வெளியிட திட்டமிட்டு இருக்கின்றனர்.இதுவரை மணிரத்தினத்தின் படங்களை எடுத்துக் கொண்டால் தமிழில் தான் டைட்டில் வைக்கப்படும். பொன்னியின் செல்வன் படத்திற்கும் அப்படி வைக்கப்பட்ட நிலையில் மற்ற மொழிகளில் PS1, PS2 என ஆங்கில மொழியில் பொன்னியின் செல்வன் படத்தை குறிப்பிட்டு இருந்தனர். அதேபோல் கமலும் இதுவரை தமிழ் பெயர் தான் டைட்டிலை வைத்து வந்தார்.

ஆனால் இப்போது முதல் முறையாக ஆங்கிலத்தில் தங் லைஃப் என்று பெயர் வைத்ததற்கான காரணத்தை மணிரத்தினம் வெளியிட்டு இருக்கிறார். அதுவும் கிட்டத்தட்ட 40 வருட காலமாக மணிரத்தினம் தமிழ் பெயரை மட்டுமே பயன்படுத்தி வந்த நிலையில் திடீரென இதை உடைப்பதற்கு காரணம் பான் இந்திய படம் என்பதால் தானாம்.

அதாவது ஆங்கில மொழியில் டைட்டில் வைத்தால் மற்ற எல்லா மொழிகளிலுமே வரவேற்பு அதிகமாக இருக்கும். இதனால் தான் இத்தனை வருட காலமாக தமிழ் டைட்டிலை மட்டுமே பயன்படுத்தி வந்த மணிரத்தினம் மற்றும் கமல் இருவரும் கூட்டணி சேர்ந்து தங் லைஃப் என்ற டைட்டிலை வைத்திருக்கிறார்கள்.

இது தமிழ் ரசிகர்களுக்கு சிறு ஏமாற்றத்தை கொடுத்தாலும் சினிமா என்பது பொழுதுபோக்கை தாண்டி அதுவும் பணம் சம்பாதிக்கும் ஒரு தொழில் தான். அதனால்தான் இப்போது பெரிய படங்கள் 500 கோடி, 600 கோடி வசூல் செய்து வருகிறது. ஆகையால் தங் லைஃப் படமும் சர்வதேச அளவில் பேசப்படும் படமாக மணிரத்தினம் எடுக்க இருக்கிறார்.





# அஜித் எடுத்த அதிரடி முடிவு

அஜித் தற்போது லைக்கா தயாரிப்பில் மகிழ்திருமேனி இயக்கத்தில் விடாமுயற்சி படத்தில் நடித்து வருகிறார். விஜய்யின் வாரிசு மற்றும் அஜித்தின் துணிவு படங்கள் ஒரே நாளில் வெளியான நிலையில் அடுத்ததாக விஜய்யின் லியோ படமும் வெளியாகிவிட்டது. அதோடு மட்டுமல்லாமல் வெங்கட் பிரபு இயக்கத்தில் தளபதி 68 படத்தின் படப்பிடிப்பும் தொடங்கிவிட்டது.

இந்த சூழலில் அஜித்தின் விடாமுயற்சி எப்போது வெளியாகும் என ரசிகர்கள் ஏக்கத்தில் இருக்கிறார்கள். அவர்களை இனியும் காலதாமதம் செய்து வருத்தத்தில் தள்ளி விடக்கூடாது என்பதற்காக அஜித் ஒரு முக்கிய முடிவு எடுத்திருக்கிறார். அதாவது இந்தப் படத்தில் சஞ்சய் தத், அருண் விஜய் போன்ற முக்கிய பிரபலங்கள் நடிக்கிறார்கள். இந்த சூழலில் தற்போது விடாமுயற்சி படத்தின் படப்பிடிப்பை அஜர்பைஜானில் நடத்த படக்குழு திட்டமிட்டு இருந்தது. அதாவது முழு வீச்சாக 50 நாட்களிலேயே படப்பிடிப்பை நடத்தி முடித்து விடலாம் என்று யோசித்த நிலையில் நடுவில் தீபாவளி பண்டிகையால் பிரேக் எடுக்க நினைத்திருந்தனர். ஆனால் இப்போது அஜித் ஒரே கட்டமாக படத்தை எடுக்க சொல்லிவிட்டாராம். இதனால் விடாமுயற்சி படக்குழு தீபாவளியை படப்பிடிப்பில் தான் கொண்டாட இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் அங்கு சண்டைக் காட்சிகள் மற்றும் சேச்சிங் சீன்கள் படமாக்கப்பட இருக்கிறதாம். விடாமுயற்சி படத்தில் இந்த காட்சிகள் பெரிய அளவில் பேசப்படும் என்று கூறப்படுகிறது. அஜித்தின் வலிமை படத்திற்கும் இதே நிலைமை தான் ஏற்பட்டிருந்தது. அதாவது வினோத் மற்றும் அஜித் கூட்டணியில் உருவான இந்த படத்தின் படப்பிடிப்பும் தீபாவளி சமயத்தில் நடந்தது. அப்போது ஹைதராபாத்தில் தான் வலிமை படக்குழு தீபாவளியை கொண்டாடினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் படம் சீக்கிரம் வெளியானால் போதும் என்பதுதான் இப்போது அஜித் ரசிகர்களின் நிலைப்பாடாக இருக்கிறது. வலிமை போல் விடாமுயற்சிக்கும் ஏற்பட்ட நிலைமை.





# பணத்தைவிட கேரக்டர் தான் முக்கியம்

## வாணி போஜன்

சின்னத்திரையிலிருந்து வெள்ளித்திரைக்கு சென்று கலக்கி வரும் வாணி போஜன் தமிழ் சினிமாவின் முன்னணி நடிகைகளில் ஒருவராக திகழ்கிறார். பகைவனுக்கு அருள்வாய், கேசினோ, ரேக்ளா, ஆர்யன் என வரிசையாக படங்களை கையில் வைத்திருக்கும் அவர், தமிழ், தெலுங்கு என இருமொழிகளிலும் வரிசையாக படங்களில் நடித்து வருகிறார்.

இந்நிலையில், இவர் அளித்துள்ள சமீபத்திய பேட்டியில், சில படங்களில் தேவையில்லாமல் படுக்கையறை காட்சிகளை வைக்கிறார்கள். அந்த காட்சி படத்திற்கு தேவையில்லை. எனவே, நான் ஏன் மசாலாவாக அந்த காட்சியை எடுக்கிறீர்கள் என்று கேட்டேன்.

அதன்பின் அந்த காட்சியை எடுக்காமல் முடித்தார்கள். நடிப்பு என்று வரும் போது கதாபாத்திரம் தான் முக்கியம். கதாபாத்திரமும் கதைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். பணத்தை விட நான் நடிக்கும் கதாபாத்திரம் தான் முக்கியமானது' என்று கூறியுள்ளார்.

# எதிரிக்கு எதிரி நண்பராக கூட்டு சேர்ந்த ரஜினி.. தனுசை பழிவாங்க தலைவர் போட்ட பிளான்

எதிரிக்கு எதிரி நண்பராக கூட்டு சேர்ந்த ரஜினி.. தனுசை பழிவாங்க தலைவர் போட்ட பிளான் ரஜினியுடன் சேர்ந்து ஒரு படத்திலயாவது நடித்து விட வேண்டும் என்று பல நடிகர்கள் ஆசையுடன் சுற்றி வருகிறார்கள். அந்த வகையில் கிடைக்கிற கேப்பில் எல்லாம் அவர்களுடைய ஆசையை பொது இடங்களில் வெளிப்படுத்துகிறார்கள். அதிலும் சில நடிகர்கள் ரஜினி தான் எங்களுடைய மானசீக குரு என்று நினைத்து அவருடன் சேர்ந்து நடிக்கும் நாட்களை எண்ணிக்கொண்டு வருகிறார்கள்.

அதில் தனுஷ், லாரன்ஸ் மற்றும் சிவகார்த்திகேயன் ரொம்பவே மும்மரமாக காத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் தனுசுக்கு சில இடங்களில் அந்த வாய்ப்பு கிடைத்தும் ரஜினி அதை மறுத்திருக்கிறார். அதே மாதிரி லாரன்ஸ்க்கும் ஒரு வாய்ப்பை கொடுத்திருக்கிறார். ஆனால் அதை அவர் சரியாக பயன்படுத்தாமல் ரஜினியிடமே வாலாட்டியதால் கிடைத்த வாய்ப்பு கைநழுவி விட்டது.

அடுத்தபடியாக சிவகார்த்திகேயன், ஜெயிலர் படத்தில் நடிக்க வேண்டியதாக இருந்தது. ஆனால் அதை ரஜினி பெரிதாக விரும்பவில்லை. அதனால் இவருக்கும் அந்த வாய்ப்பு கிடைக்காமல் போய்விட்டது. ஆனால் தற்போது தனுசை பழிவாங்கி சரியான பாடத்தை கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காக இவருடைய எதிரியான சிவகார்த்திகேயனுடன் கூட்டணி வைக்க முடிவெடுத்து இருக்கிறார்.

ரஜினிக்கு ஓப்பனிங் சாங் வைத்த முதல் படம்.. இருந்த கெட்ட பெயர் மொத்தத்தையும் அழித்துக் காட்டிய தலைவர் அதாவது எதிரிக்கு எதிரி நண்பர் என்ற முறையில் ரஜினி, தனுசை பழிவாங்க பிளான் பண்ணி இருக்கிறார். அந்த வகையில் லோகேஷ் இயக்கத்தில் ரஜினி நடிக்கப் போகும் தலைவர் 171 படத்தில் சிவகார்த்திகேயன் நடிப்பதற்கு சம்மதத்தை கொடுத்து இருக்கிறார். ஆரம்பத்தில் லோகேஷ் இதைப் பற்றி ரஜினி இடம் கேட்ட பொழுது உடனே ஓகே சொல்லவில்லை.

அதன்பின்என்னநினைத்தாரோ சிவகார்த்திகேயனை நடிக்க வைத்தால் தனுசுக்கு வலிக்கும் என்று வாய்ப்பு கொடுத்திருக்கிறார். ஏனென்றால் தனுசுக்கு சுத்தமாக சிவகார்த்திகேயனை கண்டாலே பிடிக்காது. இதை தெரிந்ததனால் அவரை கடுப்பாக்கி பார்க்க வேண்டும் என்பதற்காக ரஜினி பிளான் பண்ணி இருக்கிறார்.

அதனால் லோகேஷ் இயக்கத்தில் ரஜினி நடிக்கப் போகும் படத்தில் முக்கியமான கேரக்டரில் சிவகார்த்திகேயன் நடிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது மட்டுமல்லாமல் தற்போது சிவகார்த்திகேயன் பெயர் கொஞ்சம் டேமேஜ் ஆகி இருப்பதால் அவரை கைகொடுத்து தூக்கும் விதமாக ரஜினி முயற்சி எடுக்கப் போகிறார்.





# நோயில்லா வாழ்வு வாழ உதவும் சிறந்த உணவுப் பழக்கம்

நேரத்தில் உணவும் மனித ஆரோக்கியமும் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், அன்னம் ஒடுங்கினால் ஐந்தும் ஒடுங்கும் போன்ற பழமொழியை கேட்டிருப்போம். எமது ஐம்பொறிகளையும் இயக்குவது நாம் உண்ணும் உணவேயாகும் . தலைமுடி, நகம் சருமத்தின் தன்மையை வைத்தே ஒருவரின் ஆரோக்கியத்தை மதிப்பிடலாம். இக்கருத்து உண்மை மட்டுமல்ல ஆழமான அர்த்தங்களைக் கொண்டவை. நாம் ஓடி ஓடி உழைக்கிறோம். யாருக்காக எதற்காக என்பதெல்லாம் பிறகு. முதலில் நாம் ஆரோக்கியமாக உழைக்க வேண்டுமெனில் முதலில் எம்மீது அன்பும் அக்கறையும் செலுத்த வேண்டும். அப்படி நம்மை நாம் சிறப்பாக பார்த்துக்கொண்டால் எம்மால் இன்னும் சிறப்பாக பணிகளைச் செய்ய முடியும். இதற்காக நாம் முதலில் ஆரோக்கியமான உணவின் மீது கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் அவ்வுணவும் நேரத்திற்கு உட்கொள்ளுவது சிறந்தது. காரணம் நேரம் தவறிய உணவு பழக்க வழக்கம் எம்மை நோயாளியாக மாற்றிவிடும் வல்லமை கொண்டவை. அத்துடன் சில உணவுகள் சமிப்பாடு அடைய அதிக நேரம் எடுப்பதால் எம்மால் அடுத்த வேளை உணவுக்கான திட்டமிடலை மேற்க்கொள்ளமுடியாது. நேரத்திற்கு நாம் உணவை சாப்பிடாமல் தவிர்த்தோமானால்கொஞ்சகாலம்செல்ல வைத்தியருக்கு வைத்தியத்திற்கும் பணத்தை செலவழிப்பது நிச்சயமாகும். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம். இங்கு நமது உடலெனும் சுவரை கவனிக்காமல் விட்டால் உழைப்பு என்கிற சித்திரத்தை எப்படி சிறப்பாக தர முடியும். உணவே மருந்து மருந்தே உணவு. உணவு பழக்க வழக்கங்கள் மூலம் நாம் நோயை வரவைத்துக்கொள்ளவும் முடியும். வராமல் பார்த்துக்கொள்ளவும் முடியும். எமது உணவு அனைத்து சக்திகளும் நிறைந்த ஆரோக்கியமான உணவாக இருப்பது போலவே நேரத்திற்குமான முக்கியதுவம் கட்டாயமாக இருக்க வேண்டும். எமது உடலெனும் இயந்திரம் சரியான முறையில் எவ்வித குளறுபடிகளும் அற்று எம்மோடு இயங்கவேண்டும் எனில் நேரத்திற்க்கான உணவு கட்டாயம். நமது உடல் நல்ல ஆரோக்கியத்துடனும், வலிமையுடனும் இருக்க வேண்டுமானால், தேவையான அளவு கலோரி மற்றும் சத்துகள் உடைய உணவுகளை எடுத்துக் கொள்ளவேண்டும். சுவையாக இருக்கிறது என்ற ஒரே காரணத்துக்காக கண்ட உணவுகளையும் சாப்பிடுவது, இரத்த அழுத்தம் சர்க்கரை நோய் உள்ளிட்ட பல பிரச்சினைகளில் முடியும். மேலும், சரிவிகித ஊட்டச்சத்துள்ள உணவுகளை சரியான நேரத்தில் சாப்பிட வேண்டும். கண்ட நேரத்தில் சாப்பிடுவதும் உடலுக்கு தீங்கையே ஏற்படுத்தும். குறிப்பாக, சில உணவுகளை சரியான நேரத்தில் சாப்பிடாமல், தவறான நேரத்தில் சாப்பிடுவதன்மூலம், அவை சரியாக செரிமானம் ஆகாமலோ, அல்லது ஒரு உணவை சாப்பிட்ட பின், சாப்பிடும் மற்றொரு உணவை செரிமானம் ஆக விடாமலோ போய் விடும். இதனால், அஜீரணக் கோளாறு, மலச்சிக்கல், வயிற்றுவலி போன்றவற்றை சந்திக்க நேரிடும். சாப்பிடக் கூடாததை சாப்பிட்டு மருத்துவருக்கு செலவழிப்பதும், சாப்பிடக் கூடியதை தவறான நேரத்தில் சாப்பிட்டு மருந்துகளுக்கு செலவழிப்பதும் சஸ்ஸெக்ஸ் பல்கலைக்கழகத்தில் ஊட்டச்சத்து மற்றும் வாழ்க்கை முறை எப்படி நோய் எதிர்ப்பு மண்டலத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறது என்பது பற்றி ஆய்வு செய்தவர் மேசியோச்சி. அவரது கருத்துடன் உயிரியலாளர்கள் உடன்படுகின்றனர். நமது ஆரோக்கியமான மற்றும் சிறப்பான வாழ்க்கைக்கு நேரத்திற்க்கான உணவு பழக்கத்தை நாம் கையாண்டு நோயில்லா வாழ்வை வாழ வழிவகுத்துக் கொள்வோம்.



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...



# புடவையில் ஜொலிக்க

நம் அழகை வெளிப்படுத்துவதில் ஆடைக்கு முக்கியப் பங்கு உண்டு. ஒல்லியாக இருக்கும் பெண்கள் இறுக்கமாக ஆடை அணியக் கூடாது. ரவிக்கையும் இறுக்கமாக இல்லாமல் சற்றுத் தொளதொளவென்று அணிய வேண்டும். பருமனான உடல்வாகு கொண்டவர்கள் இறுக்கமாக உடை அணிவது பருமனைக் குறைத்துக் காட்டும்.

★ புடவை இளவண்ணமுடையதாக இருந்தால் ரவிக்கை சற்று அடர் வண்ணம் உடையதாக இருப்பது நல்லது. புடவையின் வண்ணம் அடர்த்தியானதாக இருந்தால், ரவிக்கை மெல்லிய வண்ணத்தில் இருப்பது நல்லது. ஒரே நிறத்தில் புடவை, ரவிக்கை என்று பார்த்து வாங்குவதை விட, இவ்வாறு அணிவது அழகை மேம்படுத்திக் காட்டும்.

★ 'ஷாப்பிங்' போகும்போது சிறிய பூக்கள் போட்ட இளம் வண்ண 'நைலான்' புடவைகளையே பயன்படுத்துங்கள். கோவில், கடற்கரை போன்ற பொது இடங்களுக்குச் செல்லும்போது அடர்வண்ணம் கொண்ட 'காட்டன்' புடவைகளை ஏற்றவை.

★ உயரமாக உள்ள பெண்கள், தங்கள் உயரத்தைக் குறைத்துக் காட்ட குறுக்குக் கோடு போட்ட புடவைகளைத் தேர்ந்தெடுத்து அணிய வேண்டும்.

குள்ளமான பெண்கள், உயரத்தைச் சற்று அதிகரித்துக் காட்ட நேர்வாக்கில் கோடு போட்ட புடவைகளை அணிய வேண்டும்.



# மினுமினுப்பான கழுத்துக்கு...

சிலர் பார்க்க அழகாக இருப்பார்கள். ஆனால், அவர்களது கழுத்துப் பகுதி மட்டும் கருத்துப்போய் காணப்படும். வெயிலில் அலைவது கூட இதற்கு காரணமாக இருக்கலாம். அதனால், முகத்திற்கு பயன்படுத்தும் மேக்அப்பை கழுத்து பகுதிக்கும் சேர்த்துப் போடுவது நல்லது.

அதற்கு சில டிப்ஸ்:

★ கோதுமை மாவு, ஓட்ஸ் பவுடர், பாசிப்பயறு மாவு – இந்த மூன்றையும் சமமாக எடுத்து பாலுடன் திக்காக குழைத்துக் கொள்ளவும்.

அதை கழுத்தில் தடவி சில நிமிடங்கள் மசாஜ் செய்து 20 நிமிடம் அப்படியே விட்டு விடுங்கள். பிறகு கழுவிக் கொள்ளவும்.

★ பப்பாளிபழத்தின் தோல், எலுமிச்சை பழத்தோல், ஆரஞ்சு பழத்தோல் – இதில் ஏதாவது ஒன்றை நன்றாக அழுத்தி கழுத்தில் தேய்க்கலாம்.

★ முட்டைக்கோசை அரைத்து அந்த சாறையும் கருப்பாக நிறம் மாறிய கழுத்தில் தேய்க்கலாம். இதனுடன் சிறிது தேன் அல்லது எலுமிச்சை சாறு கலந்து தேய்ப்பது கழுத்து கருமையை போக்குவதோடு மினுமினுப்பையும் தரும்.

★ பயத்த மாவு, ஒலிவ் ஒயில், ரோஸ் வாட்டர் – இவற்றை ஒன்றாக கலந்து கழுத்தில் பூசினாலும் கருமை நிறம் மறையும்.

★ சிலருக்கு செயின் போட்டு, அதனால் பின் கழுத்து கருத்துப் போய் இருக்கும்.

அதனை போக்க சிறிது பால், தேன், எலுமிச்சை சாறு கலந்து கழுத்தில் தடவி 10 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் அலசி விடவும். கடலை மாவு தயிர் கலந்தும் தடவலாம்.





தமிழருவி வானொலி, ஜெர்மனி கவிஞர் முனைவர் ஆலத்தூர் கோ.மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மையம் (சென்னை) இணைந்து வெளியிட்ட திருமதி அன்னலட்சுமி இராஜதுரையின் "ஈழத்தின் கலை இலக்கிய ஆளுமைகள்"எனும் நூல் வெளியீட்டு விழா (3) வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு தமிழ் சங்க விநோதன் மண்டபத்தில் நடைபெற்ற போது நூலின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட் டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர், தமிழவேள் தமிழருவி நயினை விஜயனி டமிருந்து பெறுவதையும் நிகழ்வுக்கு தலைமை வகித்த பேராசிரியர் சபா ஜெயராசா, முனைவர் மோ.பாட்டழகன் ஆகியோர் இணைந்து வழங்குவதையும் ஏனைய நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.








துபாயில் 42 ஆவது ஷார்ஜா சர்வதேசப் புத்தக கண்காட்சியில் கடைசி நாள் நிகழ்வாக முனைவர் மு.ரா.ரோகிணியின் "நிறா" எனும் சிறுகதைகள் நூல் வெளியீட்டு வைபவம் ஞாயிற்றுக்கிழமை காலை கண்காட்சியின் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற போது நூலின் முதல் பிரதியை இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் நூலாசிரியரிடமிருந்து பெறுவதையும் ஏனைய நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.





அறிஞர் அண்ணா மன்றம் நடாத்திய முப்பெரும் நூல் வெளியீட்டு விழா கல்முனை கிறிஸ்டா மண் டபத்தில் தமிழ்நாடு சென்னை தமிழில் ஆய்வு மையம் மற்றும் ஜெர்மனிய தமிழருவி வானொலி அனுசரணையுடன் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வின்போது கவிஞர் சரவணன் சரவணமுத்து கணேசமூர்த்தியின் உயிர்ப்பின் முகவரி சிறுகதை தொகுப்பு நூல், திருமதி தனலட்சுமி முரசொலி மாறனின் அரசியல் சமூகவியல் அறிமுக மும் ஆய்வும் கட்டுரை தொகுப்பு நூல் மற்றும் விவேகவெளி தமிழேந்திரன், சரவணமுத்து நவேந்தி ரனினுடைய தாயும் தமிழும் கவிதை தொகுப்பு நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வின் போது அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், கல்முனை வடக்கு பிரதேச செயலக செயலாளர் டி ஜே அதிசயராஜ் ,கிழக்கு மாகாண பண்பாட்டளர் கள் திணைக்கள பணிப்பாளர் நவநீதன், பிரபல எழுத்தாளர் உமா வரதராஜன் , கவிஞர் சோலை கிளி ,இறைவரித் திணைக்கள ஆணையாளர் சட்டத்தரணி கணேசராசா, கல்முனை வலையக்கல்வி பணிப்பாளர் அப்துல் நஜீம் , கலாநிதி அனுசியா சேனாதிராஜா சைவ புலவர் ரஞ்சித மூர்த்தி , ஜெர் மனிய தமிழருவி வானொலி நிறுவனர் நயினை விஜயன் என பலர் இதன் போது கலந்து கொண் டனர் .











இலங்கை நெய்னார் சமூக நல காப்பகத்தின் தலைவர் இம்ரான் நெய்னார் ஏற்பாட்டில் எம். எச். ரகீப் அல் ஹாதி எழுதிய 'விநோதக் கனவு' நூலின் அறிமுக விழா (11.11.2023) இல. 63, தெமட்டகொட வீதியில் அமைந்துள்ள வை.எம்.எம்.ஏ மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நூல் அறிமுக விழாவுக்கு பன்னூலாசிரி யர் அஷ்ரஃப் சிஹாப்தீன் தலைமை தாங் கினார். நிகழ்வில், பிரதம அதிதியாக ஜன நாயக மக்கள் முன்னணி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கலந்து சிறப்பித்தார். நிகழ்வில் முதற் பிரதியை புரவலர் டாக்டர். எம்.ஏ.எம். முனீர் பெற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சி செல்வன் ஹுமைத் மௌசூகின் கிராத் துடன் ஆரம்பமானது. வரவேற்புரையினை கவிதாயினி சிமாரா அலியும் தலைமையுரை யினை பன்னூலாசிரியர் அஷ்ரஃப் ஷிஹாப்தீ னும் நிகழ்த்தினார்கள். செல்வன் எம்.எச். ரஷீத் அல் ஹாமி 'வாசிப்பின் மகிமையை' பற்றி அழகுற உரை நிகழ்த்த நூல் உரைதனை ஆசி ரியர் பாலஸ்ரீதரனும் கவிஞர் நாச்சியா தீவு பர்வீனும் வழங்கினார்கள்.

நிகழ்ச்சியின் இடையில் செல்வன் யூசுப் சுஹைலின் இனிமையான பாடல் ஒன்று அரங்கேறியது. மனோ கணேசனின் அதிதி உரை மிகச் சிறப்பானதாகவும் மாணவர்களுக் கும். பெற்றோர்களுக்கும் சிறந்த வகையில் தன்னம்பிக்கை தரும்வகையிலும் அமைந்தி ருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்புரையில் நூலாசிரியர் தான் எவ்வாறு எழுத ஆரம்பித்தார் என்ற தனது அனுபவத் தைப் பகிர்ந்தார். நன்றியுரையினை இளம் எழுத்தாளர் ரகீப் அல் ஹாதியின் தாயாரான எழுத்தாளர் ராஹிலா ஹலாம் வழங்கினார். நூல் அறிமுக நிகழ்வினை கெப்பிட்டல் எப். எம். அறிவிப்பாளினி தொகுத்து வழங்கினார்.

**படங்கள்: எம். நஸார்**

# காத்தான்குடி பரத நாட்டிய கலைஞன் தமீம்





காத்தான்குடி பரத நாட்டியக் கலைஞன் தமீம் 48 வயதாகியும் நாட்டியத் திறமையை வெளிப்படுத்தி வருகிறார்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு காத்தான்குடியைச் சேர்ந்த வெள்ளைத் தம்பி முஹமட் தமீம் ஒரு பரத நாட்டியல் கலைஞன்.

பாடசாலைக் காலம்முதல் இந்தக் கலையில் இவருக்கு அதிக ஆர்வமும் ஈடுபாடும் காணப்பட்டது.

இவர் தனது ஆரம்பக் கல்வியை காத்தான்குடி அல்அமீன் வித்தியாலயத்திலும் உயர் கல்வியை காத்தான்குடி மத்திய கல்லூரியிலும் கல்வி கற்றார்.

இவரது ஆரம்ப பாடசாலையான காத்தான்குடி அல்அமீன் பாடசாலையில் படிக்கும் போதே இவரது கலைப்பயணம் வித்திடப்பட்டது.

தரம் ஒன்றில் இருந்தே பாடசாலை கலை நிகழ்ச்சி எல்லாவற்றிலும் பங்குபற்றுவார். அப்போது நன்றாக பாடக் கூடியவராக காணப்பட்டார்.

பிற்பாடு நாடகங்களில் நடித்தார். பல போட்டிகளில் பரிசில்களை பெற்றிருக்கின்றார்.

இந்த வேலையில் தான் தனக்குள் இருந்த நாட்டிய திறமையை வெளிப்படுத்தினார்.



ஆரையம்பதியைச் சேர்ந்த ஆசிரியை திருமதி கோபாலன் என்பவர் ஒரு நாட்டிய கலைஞராக இவரை அடையாளப்படுத்தினார்.

இளம்கன்று பயமறியாது என்பது போல் நிறைய நிகழ்ச்சிகளில் மேடை ஏறினார். தொடர்ந்து பல மேடை நிகழ்ச்சிகள் இவருக்கு வெற்றியைக் கொடுத்தது.

1990 களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் ஏற்பட்ட அச்சம் பீதி காரணமாக பல்வேறு இன்னல்களை இவர் சந்தித்து இந்த கலையை இவர் வளர்த்தார். இது பற்றி இவர் கூறியதாவது...

பாடசாலை காலங்களில் நாட்டின் நிறைய இடங்களுக்கு எனது கலை பயணங்களை தொடர்ந்தேன். அவ் வேளையில் மகரகம தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தினால் நான் மட்டுமே நடனதிற்கு இங்கிருந்து தெரிவானேன். எனது ஆசை கனவு அப்படித்தான் நிறைவேறியது. எனக்கே தெரியாது எனக்குள் எப்படி இந்த பரத கலை வந்தது என்பது. சிறுவயதில் வெறும் கேள்வி ஞானமாகவேயிருந்த நடனத்தை திருமதி கோபாலன் மூலம் கற்றேன். அதன்பின் இதற்கான அங்கீகாரம் எனக்குக் கிடைத்தது. 1992ம் ஆண்டு வெளிநாடு செல்ல நேர்ந்தது. ஏழு வருடங்கள் தொடர்ந்து அங்கு பணிபரிந்துள்ளேன்.

அங்கும் எனது நடனத்தை அரங்கேற்றி பாராட்டைப் பெற்றேன்.

இப் போது இரண்டு ஆண் பிள்ளைகள் ஒரு பெண் பிள்ளை என மூன்று பிள்ளைகளுக்கு தந்தையாகியும் இந்த பரத நாட்டியத்தை இளமையில் போன்றே ஆடுகின்றேன்.

இபபோது இவருக்கு 48 வயதாகின்றது. மிக நீண்ட காலம் இந்த கலையோடு தொடர்பில்லா விட்டாலும் சுமார் முப்பது வருடங்களுக்கு பின்னர் இவர் கற்ற பாடசாலையான காத்தான்குடி மத்திய கல்லூரியின் 'மீண்டும் பள்ளிக்குப் போகலாம்' என்ற நிகழ்ச்சி நிரல் ஒன்று இடம் பெற்ற போது அதில் கலை நிகழ்ச்சியில் மீண்டும் இவரது நடனம் அரங்கேற்றப்பட்டது.

ஆச்சரியம் என்னவென்றால் முகத்தில் அதே இளமை துள்ளல்கள் எதுவுமே முப்பது வருடங்களுக்கு மேலாகியும் மாறாமல் இருந்ததுதான் அனைவரையும் கவர்ந்தது. இவர் தற்போது ஒரு வர்த்தகராக உள்ளார். அன்று கிடைக்காத பாராட்டுக்கள் இன்று இவரைத் தேடி வருகின்றன. நிறைய நிகழ்ச்சிகளுக்கு அழைக்கின்றார்கள். வாழும் போதே ஒரு கலைஞன் வாழ்த்தப்படனும், பாராட்டப்பட வேண்டும். அவனது திறமை என்றாவது ஒருநாள் வெளிப்பட வேண்டும். இதுதுான் ஒரு கலைஞனின் விருப்பம்.

இவரோடு பயணித்த நண்பர்கள் வளர்த்துவிட்ட ஆசான்கள் இவரது பெற்றோர்கள் அனைவருக்கும் இவர் இத்தருணத்தில் நன்றி தெரிவித்தார்.

எம்.எஸ்.எம்.நூர்தீன்
புதிய காத்தான்குடி
தினகரன் நிருபர்





# 'மணல்' திரைப்படத்திற்கு சர்வதேச அங்கீகாரம்



இலங்கையில் விரல்விட்டு எண்ணக் கூடிய தமிழ்த் திரைப்படங்களே வெளியாகியுள்ளன. இந்திய தமிழ் திரைப்படங்கள் நம் நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் நிலையில் உள்நாட்டு தமிழ்த் திரைப்படங்களை தயாரித்து நஷ்டப்பட யாரும் விரும்பவதில்லை. இதற்கு விதிவிலக்காக சிலர் தமிழ்த்திரைப்படங்களை தயாரித்து இலங்கை தமிழ்த் திரைப்படத்துறைக்கு




பங்களிக்க முயல்வதுண்டு.

அண்மையில் 'மணல்' எனும் முழு நீள தமிழ்த் திரைப்படம் குறிப்பிடத்தக்க சில அரங்குகளில் காண்பிக்கப்பட்டது. தமிழ் ரசிகர்கள் மாத்திரமன்றி சிங்கள ரசிகர்களும் ரசிக்கும் வகையில் அமைந்த இந்தத் திரைப்படத்தை விசாகேச சந்தரசேகரம் தயாரித்தளித்திருந்தார்.

நெதர்லாந்தின் “ரோட்டர்டாம்“ சர்வதேச திரைப்பட விழாவில் (International Film Festival of Rotterdam – IFFR) விசாகேச சந்திரசேகரம் எழுதி, இயக்கி தயாரித்த மணல் திரைப்படம் விசேட நடுவர் விருதினை வென்றுள்ளது. IFFR விழாவில். இரண்டு நடுவர் விருதுகளில் மணல் திரைப்படம் ஒரு நடுவர் விருதினை (Jury award) பெற்றுக்கொண்டது.

சட்டத்தரணியான விசாகேச சந்திரசேகரம் கல்வியாளர் மற்றும் கலைஞர் என பல பரிமாணங்களை கொண்டவர். அவர் இரண்டு முழுநீள திரைப்படங்களைத் தயாரித்துள்ளார் – சயாபேதி குசுமா (ஃபிராங்கிபானி மற்றும் பாங்ஷு (பூமி ) இது பல உள்நாட்டு மற்றும் சர்வதேச விருதுகளை வென்றது. Tigers Don’t Confess மற்றும் The King and the Assassin ஆகிய இரண்டு நாவல்களையம் எழுதி வெளியிட்டுள்ளார். கிரேடியன் பரிசை வென்ற “Forbidden Area” (தடை செய்யப்பட்ட பகுதி) உட்பட பல மேடை நாடகங்களை எழுதி இயக்கியுள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் வழக்கறிஞராகவும் அவுஸ்திரேலியாவில் NSW அரசாங்கத்தின் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றுகிறார்.

அவரை ரொம்ப பிஸி பகுதிக்காக சந்தித்தேன்.

**கே: உங்களைப்பற்றி?**

நான் குருநாகலில் பிறந்தேன். எனது தந்தை இந்து .தாய் பௌத்த மதத்தவர். இரு சமூகங்களிலும் வளர்ந்தேன். பெற்றோர் சுகாதாரத் துறையுடன் தொடர்புடையவர்கள் என்பதால் நாட்டின் பல பகுதிகளுக்கும் செல்ல நேரிட்டது. மன்னாரில் கூட 3 வருடங்கள் இருந்துள்ளோம்.

மஸ்கெலிய, கட்டுகுருந்த போன்ற பகுதி பாடசாலைகளில் கற்று பின்னர் கொழும்பு ரோயல் கல்லூரியில் இணைந்தேன். படிக்கும் காலத்தில் கலைத்துறை ஈடுபாடு ஏற்பட்டது. கலைக்கழகங்களில் அங்கம் வகித்தேன். ஆனால் பெரிதாக சோபிக்கவில்லை. ஆனால் நிறைய எழுதினேன். அத்தோடு சினிமா பற்றிய ஆர்வமும் ஏற்பட்டது. சிங்கள மொழியில் தான் கற்றேன்.

**கே: திரைப்பட ஆர்வம் எப்படி வந்தது?**

தந்தை ஒரு வைத்தியர். அவர் நிறைய திரைப்படம் பார்ப்பார். புதிய படங்கள் வெளியானால் எம்மை அழைத்துச்





செல்வார். இந்திய படங்களும் பார்ப்போம். அன்று கருப்பு வெள்ளைப் படங்கள் தான் காண்பிக்கப்படும்.அவற்றில் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதம்,பாடும் விதம், காட்சிகள் என்பன என்னை கவர்ந்தன.

ஊர் மாறினாலும் படம் பார்ப்பது நிற்கவில்லை. அதனுடன் தான் திரைப்படம் தயாரிக்கும் ஆர்வம் ஏற்பட்டது.

**கே: தந்தை வைத்தியர் என்பதால் உங்களை மருத்துவராக்க வேண்டும் என அழுத்தம் வந்ததா?**

ஆமாம். இருந்தாலும் திரைப்படம் மீதான ஈர்ப்பு குறைப்பவில்லை. சாதாரண தரம் கற்று பெறுபேறு வரும் வரை திரைப்படம் குறித்து கற்கும் வகுப்புகளுக்குச் சென்றேன். சில திரைப்படங்களில் உதவியாளராக பணியாற்றினேன். ஒரு கட்டத்தில் எனது ஆடைகளை எடுத்துக் கொண்டு வீட்டுக்குத் தெரியாமல் சென்றேன். ஆனால் நான் திருட்டுத்தனமாக வந்தது தெரிந்ததால் வீட்டில் அனுமதி பெற்று வருமாறு அனுப்பினார்கள். எனது தந்தை யாழ்ப்பாணத்தை சேர்ந்த தமிழர். அவருக்கு கல்வி தான் முக்கியம். வகுப்பில் முதலிடம் வர வேண்டும். எனவே நான் திரைப்படத்துறைக்கு வருவது குடும்பத்தில் பெரிய பிரச்சினையை ஏற்படுத்தியது. தந்தை கடுமையாக இருந்தார்.

இருந்தாலும் எனது போராட்டம் வென்றது. திரைப்பட உதவி இயக்குநராக பணியாற்ற ஆரம்பித்தேன். ஆனால் அதற்கு சம்பளம் கிடைக்காது.

சில நாளில் மீண்டும் திரைப்படத்துறையில் இருந்து ஒதுங்கி உயர் தரம் கற்க வந்தேன். அதன் பின்னர் திரைப்படத்துறையில் இருந்து தூரமானேன்.

**கே: திரைப்படத்துறையில் இருந்து தூரமாகி மீண்டும் எப்படி திரைத்துறைக்கு பிரவேசித்தீர்கள்?**

அதன் பின்னர் நாடகங்கள் தயாரித்தேன். சில காலத்தில் அவுஸ்திரேலியாவுக்கு சென்றேன். அங்கு சிலருடன் சேர்ந்து திரைப்படம் தயாரிக்க முற்பட்டோம். 2013இல்இலங்கைக்குவந்தேன். நான் எழுதியிருந்த திரைக்கதையை மெருகூட்டி முதல் திரைப்படத்தை தயாரித்தேன். 'சயபெதி குசும்' தான் அந்தப் படம். அடுத்து "தனிதட்டுவென் பியாபன்ன" என்ற படத்தை தயாரித்தேன். அதன் பின்னர் "பாங்சு" எனும் படத்தை தயாரித்தேன். இந்த அனுபவத்தில் தான் முதன் முறையாக "மணல்"எனும் தமிழ்த் திரைப்படத்தை தயாரித்தேன்.

**கே: கடந்து வந்த பாதை பற்றி...?**

யுத்தத்தின் பின்னர் சந்தேகத்தின் பேரில் தமிழ் இளைஞர்கள் கைதானவர்களுடன் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது. அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றிலும் பணியாற்றினேன். பின்னர் அவுஸ்திரேலியாவுக்கு சென்றேன். நான் அவுஸ்திரேலிய இலங்கை இரட்டைப் பிரஜை. அங்கு சட்டத்துறையில் கற்றேன். பின்னர் இங்கு கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தில் விரிவுரையாளராக சேர்ந்து பணியாற்றுகிறேன்.

ஷம்ஸ் பாஹிம்

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

Whatsap: 0714901181



# முட்டை வாசி

முட்டை வாசிகளை இப்போது இருபத்தொன்பதாம் தடவை வாசிக்கிறான்.

முட்டையென்ற சொல்லில் அவனுக்குப் பிரியம் அதிகம். பிஞ்சுப் பாலகத்தில் குருவி முட்டை, காக்கை முட்டை, ஆந்தை முட்டை, ஆமை முட்டை, முயல் முட்டை, ஆட்டு முட்டை, மாட்டு முட்டையென்று இல்லாததுக்கும் சேர்த்து முட்டை தேடித்திரிந்தவன்.

பூட்டி முத்தும்மா தான் வளர்த்த வெண் நாட்டுக் கோழி முட்டையை ஒவ்வொரு நாளும் அவித்துக் கொடுத்ததிலிருந்து முட்டைப் பிரியனானவன் முபாரக்கன்.

முதலாம் வகுப்பிலேயே அமுதம் ரீச்சர் கொப்பியில் போட்ட முட்டையை பெருமையாக நினைத்தவன் இவன். பூட்டிக்கு காட்டிய பிறகு வழமையான கோழி முட்டையை அவ நிறுத்திய போதுதான் இவன் அமுதம் ரீச்சர் மீது கோபப்பட்டான். பிறகு அவன் பத்துப் படித்தபோது ஒன்பது டி எடுத்தபோது பூட்டியும் இல்லை; அமுதம் ரீச்சருமிருக்கவில்லை . ஆனால் இவனது முட்டைப்பிரியம் விட்டுப் போகவில்லை.முட்டையின் வடிவமும், அழகும், விதவித நிறங்களும் சுவையும் இவனைக் கவர்ந்திருந்தது.

பூட்டி கோழிகள் வளர்த்து குஞ்சு பொரித்து,குஞ்சுகள் வளர்த்து,முட்டையும்கோ ழியுமாய் பூட்டி முற்றம் கிடந்த இவனது பால்யத்தில் முட்டையும் கோழியுமாய் இவனும் முற்றத்தை நிரப்பியவன் தான்.

'முட்டையன் முபாரக்கன்' இப்படித்தான் அப்போ கூட்டாளிமார் கூப்பிட்டார்கள். அவனுகளுக்குத் தெரியாது .ஏன் இவனுக்கும் தெரியாது இவன் முட்டை வியாபாரி ஆவானென்று.

முட்டையன் இருபதின் பதின்மத்தில் பூட்டியின் யாபாரத்தைச் செய்திருந்தான். நாட்டுக்குப் போய் முட்டை வாங்கி வந்து நகரத்துக்கு அனுப்பும் மகா பணி. இவனது வாப்பாவின் றலி சைக்கிள் கரியலில் முட்டைக்கூ டை ஊர்ப்புற வீதியெல்லாம் கடந்து வரும். கோழிகள் முட்டைகள் பொழிந்தன;இவனது கூடையும் பொக்கட்டும் செழித்தது. ஒரு கட்டத்தில் கோழிநோய் வர முட்டை யாவாரம் படுத்தது.பிறகு ஊரிலே சண்டை வழுக்க துவக்குகளுக்குப் பயந்து கோழிகளும் முட்டைபோட மறுத்த காலத்தில் உடைஞ்சு போன முட்டைக்கோதாகி நின்றான் முபாரக்கன் என்கிற முட்டையன்.

காலம் முட்டைபோலத்தான் உடைந்து வழிந்தது. இவன் முட்டைவாசியாயிருந்தவன்.முட்டைவாசிகளையே இப்போது முப்பதாம் முறையாய் வாசிக்கிறான். உலகம் உடைந்துருகும் ஒரு முட்டை அதற்குள் இத்தனை மோதல்,இடிபாடு,குழப்பம்.தாங்குமா பூமி முட்டை. அவனக்கு பூட்டி ஒரு முட்டை,அமுதம் ரீச்சர் ஒரு முட்டை,கூட்டாளிகள் முட்டைகள்,அவனது யாவாரமும் முட்டைதான்.

முட்டை போல் மென்மை வாழ்வு வாழவே விரும்பினான்.ஒருபோதும் இவனது கையிலிருந்து முட்டை தவறி விழுந்ததில்லை.

ஆனால் இப்போது தவறியிருக்கிறது.முட்டையென்ற சொல்லும் அதன் வடிவமும். இவன் பூட்டி போலாகி தன் பிள்ளைகளுக்கும் முட்டை கொடுக்க முடியாத நிலையானான். இவனது சின்னவன் அவனது அமிர்தா ரீச்சரிடம் முட்டைக்கு பதிலாக நட்சத்திரங்கள் வாங்குகிறான். மின்னுகிறான். ஆனால் சின்னவனுக்கு முட்டையின் புரதத்தைக் கொடுக்க முடியாது தவிக்கிறான் முட்டையன். முட்டையென்று முன்னால் ரேடியோ சின்னவன் தான் ஸ்டேஷன் பிடிக்கிறான்.

முதலில் தலைப்புச் செய்தி;

முட்டைக்குத்தட்டுப்பாடு; முட்டை விலையில் திடீர் அதிகரிப்பு.

விரிவான செய்தி இவனது காதுகளுக்குள் தீயாய் இறங்கியது.முட்டை கனவானது.

மாவு, சீனி, பாண், ம.எண்ணை, பெற்றோல், அங்கருக்குப்போல முட்டைப்

போலிங்கிலும் நின்று தொலைந்தான் முபாரக்கன்.



முட்டை விலை தொண்ணூறைக்கடந்த போதும் பூட்டி முட்டையின் நினைவுதான் சுழன்று சுழன்று வந்தது. உள்நாட்டில் முட்டை உற்பத்தி பாதிப்பு, முடக்க கால பிரச்சினைகள் தலைதூக்கின, கோழி நோய் பரவியது. முட்டைத் தட்டுப்பாடு கூடியது. பண்ணையாளன்கள், யாவாரிகள் பாதிப்பு. உள்ளே முளைத்த புதிய சிஸ்டமென முட்டை கனவுப் பொருளானது.

முபாரக்கன் முட்டைக் கனவு கண்டான்.கனவில் பூட்டி முட்டைகொடுத்தாள்.சின்னவன் பச்சை முட்டை குடித்தான்.

இனி முட்டை வாசிகளை எப்படி வாசிப்பது. எனினும் வாசித்தான் முபாரக்கன். மீண்டும் தலைப்புச் செய்தி வந்தது. முட்டைத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வு,வெளிநாட்டிலிருந்து முட்டை இறக்குமதி. எல்லா இறக்குமதியும் நடக்கும் காலத்தின் பிரஜை இவன்.

அரிசி, சீனி, மாவு, இப்படி இங்குள்ளவற்றைப் பெருக்கும் திறனற்று போச்சு.ஓபன் இக்கோணமி நடக்குது.

முட்டை வந்தது.

உள்ளக முட்டைகளுக்கு என்ன நடந்தது.

ஓபனில் வந்தது சாதோசாவில் என்றனர்.போலிங் பெருத்தது.35/க்கு போலிங்கில் நின்று சின்னவன் மூன்று வாங்கினான்.

அவனே கேட்டான்.வாப்பு ஊர்க்கோழிக்கும், முட்டைக்கும் என்னாச்சு. பதில் இவனுக்கு அல்லது அவர்களுக்குத் தெரியாததா வந்த முட்டைகள் தரம் பிரித்தல் ஏ,பி,சி கிரேட். பெரியது,நடுத்தரம், சிறியது.

எல்லாம் ஒரே விலை. சிறியது சாதோசாவுக்கு முட்டைச்சீலுடன்.ஒரிஜின் பொறின் . சின்னவன் வயிற்றுக்கென்றானது அதுவும் போலிங்கில் காத்து நின்று வாங்குவது. நடுத்தரம் நடுத்தர ஹோட்டலுக்கு.35/ பெயரில் 5 கூட்டி.

பெரிசு 5ஸ்டார் ஹோட்டலுக்கு 35/பெயரில் பத்துக் கூட்டி. முபாரக்கனுக்குக் கணக்குத் தெரியும் .அவனது கல்கூலேற்றர் மூளை சொன்னது. இது அன்பு கலந்த பூட்டி முட்டை அல்ல.வன்பு நிறைந்த மாபியா முட்டை. முட்டை மாபியா. இரும்பு முட்டை.உடையாது; உடைப்பதும் கடினம். றேடியோ வைத்திருப்பினான்.

செய்தி : பாராளுமன்றத்தில் மீண்டும் தீர்மானம். முட்டை இறக்குமதியில் தட்டுப்பாடு தீர்ந்தது. எனவே தொடர்ந்தும் முட்டையை இறக்கி குறைந்த விலைக்கு பொது மக்களுக்குக் கொடுப்போம்.

ரேடியோவை மற்றப்பக்கம் திருப்பினான் முபாரக்கன். உள்ளூர் முட்டை உற்பத்தியாளர் பாதிப்பு,தீர்வு கோரி சுற்று வட்டத்தில் முட்டை வடிவத்தில் ஆர்ப்பாட்டம்.கண்ணீர்க்குண்டு ஒவ்வொன்றும் இரும்பு முட்டையாகி வீசியது. குறைந்த விலையில் புதிய வியாபாரிகள் வாங்குகிறார்கள். அதே முட்டை அதிக விலையில் 5 ஸ்டாருக்குப் போகிறது. சின்னவன் அமிர்தம் ரீச்சரிடம் கேட்டான்.அங்க இருந்து கொண்டு வந்து கொடுக்கிற செலவுக்கு இங்க உள்ள முட்டைக்காரரை அல்லது கோழிக்காரனை உயர்த்தி விடலாம் தானே. ரீச்சருக்கு பதில் தெரியாது. இப்போதெல்லாம் சின்னவன் முட்டையை ஓவியத்தில் வரைகிறான். அதைப் பார்க்கும் போது பூட்டியும், அமுதா ரீச்சரும் முட்டையன் முபாரக்கனின் உடையாத கனவில் வந்து போகிறார்கள் முட்டை தான் உடைந்து கிடக்கிறது.

பொன்மீரா


# ஒரு பலஸ்தீனக் குரல்

எம். ஏ. நுஃமான்

[இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் சொல்கிறார்: 'We are fighting with human animals' இஸ்ரேல் பிரதமர் நெத்தன்யாஹு நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையில் சொல்கிறார்: 'Israel is fighting with the enemies of civilization this war is between forces of civilization and the forces of barbarism' இக்கவிதை அதற்கு ஒரு எதிர்வினை.]

நீ சொல்கிறாய்
நாங்கள் விலங்குகளுடன்
போரிடுகிறோம் என்று
அவர்களை அப்படித்தான் நடத்தவேண்டும்
என்று சொல்கிறாய்
நீ அப்படித்தான் சொல்வாய்
உன் மூளை மரத்துவிட்டது
உன் இதயம் காய்ந்துவிட்டது
விலங்குகளை அவமதியாதே
விலங்குகள் மனிதரின் தோழர்கள்
விலங்குகள் இல்லாத உலகில்
நீயும் நானும் வாழமுடியாது
விலங்குகளை அவமதியாதே
விலங்குகள் ஆக்கிரமிப்பதில்லை
விலங்குகள் குண்டுவீசி மனிதரைக் கொல்வதில்லை
விலங்குகள் ஒரு தேசத்தை அபகரிப்பதில்லை
விலங்குகள் மனிதரைத்
தங்கள் வீடுகளை விட்டுத் துரத்துவதில்லை
கிராமங்களை நிர்மூலமாக்குவதில்லை
விலங்குகள் மனிதரை அகதிகளாக்குவதில்லை
விலங்குகளை அவமதியாதே
எப்படி இங்குவந்தாய்
என்பதை எண்ணிப்பார்
எப்படி எங்கள் மண்ணில் காலூன்றினாய்
எப்படி எங்களைத் துரத்தினாய்
எப்படி எங்கள் கிராமங்களை அழித்தாய்
எப்படி எங்களைக் கொன்றுகுவித்தாய்
எப்படி எங்களை அகதிகளாக்கினாய்
எப்படி எங்களைச் சிறையில் அடைத்தாய்
என்பதை எண்ணிப்பார்
உன்மனச்சாட்சி மடிந்துவிட்டது
உன் இதயம் காய்ந்துவிட்டது
உன் மூளை மரத்துவிட்டது
நீ எங்களைப் பயங்கரவாதி என்கிறாய்
மனித விலங்குகள் என்கிறாய்
விலங்குகளை அவமதியாதே
எங்கள் அமைதியைக் குலைத்தவன்
நீ இல்லையா
எங்கள் தேன்கூட்டைக் கலைத்தவன்
நீ இல்லையா
எங்கள் ஒலிவ மரங்களை அழித்தவன்
நீ இல்லையா
எங்களைத் துப்பாக்கி தூக்கவைத்தவன்
நீ இல்லையா
எங்கள் குழந்தைகளைக் கல்பொறுக்கவைத்தவன்
நீ இல்லையா
இப்போது நீ எங்களைப்
பயங்கரவாதி என்கிறாய்
மனித விலங்குகள் என்கிறாய்
விலங்குகளை அவமதியாதே
நீ சொல்கிறாய்
நாங்கள் நாகரீகத்தின் எதிரிகளுடன்
போரிடுகிறோம் என்று
இது நாகரீக சக்திகளுக்கும்
காட்டுமிராண்டிகளுக்கும்
இடையிலான போர் என்று சொல்கிறாய்
இந்த நூற்றாண்டின் பெரிய நகைச்சுவை
இல்லையா இது
நான் சொல்லவேண்டியதை நீ சொல்கிறாயா
சாத்தான் வேதம் ஓதுகிறதா ஹிட்லருக்குப்
பிறகுஅவன்பாதையில் செல்லும்
மனித நாகரீகத்தின் மோசமான எதிரி
நீ இல்லையா
உலகின் பெரிய பயங்கரவாதிகள்
உன்னை ஆதரிக்கிறார்கள்
ஆனால் உன் கண்களைத் திறந்துபார்
நீதி உணர்ச்சி கொண்ட மக்கள்
உலகெங்கும் உனக்கெதிராகக்
கிளர்ந்தெழுகிறார்கள்
நீதி உணர்ச்சி மிக்க உன் சொந்த மக்களே
உனக்கெதிராகக் கிளர்ந்தெழுகிறார்கள்
உங்கள் முடிவு நெருங்கிவிட்டது
அநியாயக் காரர்கள் நிலைத்திருப்பதில்லை
வரலாறு அவர்களைக் காறி உமிழ்கிறது
அந்த வரிசையில் நீ வந்துநிற்கிறாய்
உன் முடிவு நெருங்கிவிட்டது
உன் மனச்சாட்சி மடிந்துவிட்டது
உன் இதயம் காய்ந்துவிட்டது
உன் மூளை மரத்துவிட்டது
உன் சித்தம் கலங்கிவிட்டது
நீ எங்களை விலங்குகள் என்கிறாய்
காட்டுமிராண்டிகள் என்கிறாய்
நாகரீகத்தின் எதிரி என்கிறாய்
எங்களை முற்றாக அழித்துவிட
ஆசைப்படுகிறாய்
எங்களை அழித்துவிட்டு
நிம்மதியாய்த் தூங்கலாம்
எனக் கனவுகாண்கிறாய்
அது நடக்காது
உலகில் ஒரு துளி நீதி இருக்கும்வரை
அது நடக்காது
பிறரின் அமைதியைக் குலைத்தவனுக்கு
ஏது அமைதி
பிறரின் சுதந்திரத்தைப் பறித்தவனுக்கு
ஏது சுதந்திரம்
இன்னும் இன்னும் ஆயிரம் ஆயிரம்
குண்டுகளை வீசி நீ எங்களை அழிக்கலாம்
அந்த இடிபாடுகளில் இருந்து
அந்தச் சாம்பலில் இருந்து
மீண்டும் மீண்டும்
நாங்கள் உயிர்த்தெழுவோம்
உன் கனவுகளைக் கலைப்போம்
உன் ஆயுதங்களைக் கடலில் வீசிவிட்டு
ஒரு ஒலிவம் கிளையைக் கையில் எடுத்துக்கொண்டு
என்னை நோக்கிவா
எழுபத்தைந்து வருடகால
உன் பாவங்களை நான் மன்னித்துவிடுகிறேன்
உன்னை அரவணைத்துக்கொள்கிறேன்
என் மண்ணில் வாழ உனக்கும் இடம் தருகிறேன்
நாம் நம் வீடுகளில் நிம்மதியாகத் தூங்கி எழலாம்
அதற்கு நீ தயாரா
உன் இதயத்தில் ஈரம் கசியட்டும்
உன் உணர்வு துளிர்க்கட்டும்
உன் சித்தம் தெளியட்டும்
அதற்கு நீ தயாரா
உன் ஆயுதங்களைக் கடலில் வீசிவிட்டு
ஒரு ஒலிவம் கிளையுடன் வர நீ தயாரா
அதுவரை கலைக்கப்பட்ட தேனீக்கள்
உன்னைத் துரத்திக்கொண்டே இருக்கும்
உன் காதில் இரைந்துகொண்டே இருக்கும்
எங்களை முற்றாக அழித்துவிடலாம்
என்று மட்டும் கனவுகாணாதே
அது நடக்காது
உலகில் ஒரு துளி நீதி இருக்கும்வரை
அது நடக்காது

# முல்லைப் பிரதேச பண்பாட்டு விழா



2023ஆம் வருடத்துக்கான முல்லைப்பண்பாட்டுப் பெருவிழா கடந்த வாரம் செழுமையாக நடந்தேறியது. வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை யுடன் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் அமரர் சிவநேசன் வி.எஸ் கந்தையா நினைவரங்கில் நிகழ்வுகள் அரங்கேறின.

கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகம், பிரதேச சபை, கலாசாரப் பேரவை இணைந்து நடாத்திய பண்பாட்டுப்பெருவிழா பிரதேச செயலர் திருவாட்டி மணிவண்ணன் உமாமகள் தலைமையிலான, முல்லை மாவட்ட செயலர் அருளானந்தம் உமாமகேஷ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்ட நிகழ்வில் முல்லைப்பிரதேச துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்து நிகழ்வுக்கு மெருகூட்டினர். பண்பாட்டுக் கலைவிழா பிரதேச கலைஞர்களின் வெளிப்பாடாக அமைந்தது. பிரதேச கலை இலக்கிய வாதிகள் பலரும் கௌரவிக்கப்பட்டனர்.

முல்லைத்தீவின் கரைதுறைப்பற்று பிரதேசத்தின் மண்வாசனையை முல்லைப்பண்பாட்டு பெருவிழா சுமந்து நின்றது. இதற்கென ஈடுபாடு காட்டிய அனைவரையும் வாழ்த்துவோம். முல்லை மொழியால் கலை படைத்தீர் காலமெல்லாம் பண்பாட்டின் வாசம் பரவட்டும்.

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்–32

சினிமாவில் புரட்சி நடிகராகவும் அரசியலில் புரட்சித் தலைவராகவும் அரசாங்கத்தில் சத்துணவு கதாநாயகனாகவும் பொதுமக்களுக்கு தொண்டனாகவும் வெற்றிவாகை சூடிய எம்.ஜி.ஆருக்கு ஒரு சோதனை வந்தது. 1984 இல் ஒக்டோபர் மாதத்தில் உடல்நலக்குறைவு ஏற்பட்டது. அதனையடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பிறகு அமெரிக்காவுக்கு சென்று பல மாதங்களாக தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. சுகமடைந்து அமெரிக்காவிலிருந்து எம்.ஜி.ஆர். சென்னைக்கு திரும்பி வந்தார். அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுவந்த மாதங்களில் அதாவது 1984 ஒக்டோபருக்கும் 1985 பெப்ரவரிக்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற்று ஆட்சியை பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தி.மு.க. மிகவும் கடுமையாக தமிழ்நாடு முழுவதும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டது. ஆனால் தேர்தல் முடிவில் அண்ணா தி.மு.க. அமோக வெற்றி பெற்றது.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். முதல் முறையாக எம்.எல்.ஏ. ஆகும்போது 1967 இல் எம்.ஆர். ராதாவுடைய துப்பாக்கிச் சூட்டில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். அதேபோல் 1985 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் இருந்து சென்னைக்கு வரும்போது மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்தார். இரு முறையும் ஆஸ்பத்திரியில் படுத்துக் கொண்டே எம்.எல்.ஏ. ஆனார். 24121987 அன்று இறைவனடி சென்றுவிட்டார்.

எம்.ஜி.ஆர். 1960 இல் பத்மஸ்ரீ விருதுக்கு தேர்வு செய்யப்பட்டிருந்தும் ஹிந்தியில் அதன் வாசகங்கள் இருந்ததால் அதனை ஏற்க மறுத்துவிட்டார். 1972 இல் ரிக்ஷாக்காரன் படத்திற்காக சிறந்த நடிகருக்கான தேசிய விருது கிடைத்தது. 1987 இல் மரணத்துக்கு பின் பாரத ரத்னா விருது கிடைத்தது. சென்னை பலகலைக்கழகம் மற்றும் அரிசோனா உலக பல்கலைக்கழகத்தினால் டாக்டர் பட்டம் கிடைத்தது. மேலும் அண்ணா விருது, வெள்ளி யானை விருது என்பனவும் வழங்கப்பட்டன.



தமிழ் சினிமாக்களில் எம்.ஜி.ஆர். தான் முதல் கொமர்ஷியல் ஹீரோ அவரை வைத்து படம் எடுத்தால் வெற்றி நிச்சயம், வசூல் அதிகம். ஆனால் அவர் ஆரம்பத்தில் ஒரு ஹீரோவாக நடிப்பதற்கே பல வருடங்களாயின.

எம்.ஜி.ஆர். மூன்று திருமணங்கள் செய்தும் குழந்தைகள் இல்லை. எனவே ஜானகி கணபதி பட் ஆகிய இருவருக்கும் பிறந்த சுரேந்திரனையும் ஜானகியின் தம்பி நாராயணனின் குழந்தைகளான லதா, கீதா, சுதா, ஜானகி, தீபன் ஆகியோரையும் தன் வளர்ப்பு பிள்ளைகளாக தத்தெடுத்தார்.

எம்.ஜி.ஆர். எத்தனையோ குழந்தைகளுக்கு பாதுகாவலராக இருந்து படிக்க வைத்தார். அதில் அரசியல்வாதி துரைமுருகன், சினிமாவில் நடிக்கும் கோவை சரளா ஆகியோரைக் குறிப்பிடலாம்.

எம்.ஜி.ஆருக்கு அறிஞர் அண்ணா, “இதயக்கனி” என்றும் கலைஞர் மு. கருணாநிதி, “புரட்சி நடிகர்” என்றும் தமிழ்வாணன், “மக்கள் திலகம்” என்றும் கிருபானந்த வாரியார், “பொன்மனச் செம்மல்” என்றும் சிங்கப்பூர் ரசிகர்கள், “பல்கலை வேந்தர்” என்றும் இலங்கை ரசிகர்கள், “நிருத்திய சக்கரவர்த்தி” என்றும் இரா. நெடுஞ்செழியன், “மக்கள் மதிவாணர்” என்றும் பட்டங்கள் வழங்கினர். தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆரின் நினைவாக சென்னையில் மெரினா கடற்கரையில் அண்ணா நினைவிடத்திற்கு அருகில் அவரது உடல் புதைக்கப்பட்டு, அந்த இடத்தில் “எம்.ஜி.ஆர். நினைவிடம்” அமைக்கப்பட்டுள்ளது. இங்கு எம்.ஜி.ஆரின் மார்பளவுச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

எம்.ஜி.ஆர், சென்னை தியாகராய நகரில் ஆற்காடு முதலியார் வீதியில் உபயோகித்த அலுவலகத்தை “டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவு இல்லம்” என அடையாளப்படுத்தியுள்ளனர். இங்கும் எம்.ஜி.ஆரின் மார்பளவுச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு எம்.ஜி.ஆர். பயன்படுத்திய டி.எம்.எக்ஸ். 4777 எண்ணைக் கொண்ட அம்பாஸிடர் கார் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. மேலும் எம்.ஜி.ஆரின் பரிசுப் பொருட்களும் அவர் பயன்படுத்திய பொருட்களும் இந்த இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தை பொறுத்தவரையில் எம்.ஜி.ஆர். என்பது வெறும் நடிகரின் பெயரோ வெறும் அரசியல்வாதியின் பெயரோ இல்லை. அது ஒரு தமிழகத்தின் குறியீடு.

எத்தனை வருடங்கள் கடந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் எம்.ஜி.ஆரை நினைவுபடுத்தியவர்களாகவும் நன்றியுடையவர்களாகவும் பாராட்டுபவர்களாகவும் இருப்பார்கள் என்றால் மிகையாகாது.

(முற்றும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# 'படிக்காததால் நடிக்க வந்தேன்...' நடிகை கே .ஆர்.விஜயா

1960களில் இருந்து 80 வரை இருபது வருடங்கள், தமிழ் சினிமாவில் புகழ்க் கொடி பறக்க விட்டவர், கே. ஆர். விஜயா . எம். ஜி. ஆர், சிவாஜி ஆகிய இரண்டு இமயங்களுக்கும் ஜோடியாக நடித்தவர்.

தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மூன்று மொழிகளில் 450 படங்களுக்கும் மேல் நடித்தவர் கே. ஆர். விஜயா. என்றும் `புன்னகை அரசியாக பளிச்' சிரிப்புடன் தோற்றமளிப்பவர்.

1963ல் அவர் சினிமாவுக்கு வந்தபோது, நடிகர் நடிகைகளை `நட்சத்திரங்கள்' என்றுதான் சொல்வார்கள் . நடிகைகளை, சினிமா தாரகைகளாக மதித்தார்கள்.



சௌகார் ஜானகி, கே. ஆர். விஜயா, சரோஜாதேவி `கற்பகம் ' படத்தில், இவர் பாதி படம் வரைதான் வருவார். என்றாலும், அந்த படம் பார்த்தவர்கள் அத்தனை பேர் மனதிலும், `கற்பகம்' கதாபாத்திரம் பதிந்து விட்டது. இவருக்கு, ரசிகைகள் நிறைய பேர் உருவானார்கள். நிறைய ரசிகர் ரசிகைகளை இவர் சந்தித்து இருந்தாலும் ஒரே ஒரு ரசிகையை இவரால் மறக்க முடியவில்லை.

`கற்பகம்' படம் பார்த்துவிட்டு, இவர்கள் வீட்டுக்கு வந்து இவரைச் சந்தித்த ஒரு ரசிகை, தனது கழுத்தில் கிடந்த தங்க சங்கிலி, காதில் கிடந்த கம்மல், கைகளில் அணிந்திருந்த வளையல்கள் அத்தனையையும் கழற்றி கையில் வைத்துக்கொண்டு எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார். அவருடைய அன்பைப் பார்த்து அவர் நெகிழ்ந்துபோனார். ``இதெல்லாம் வேண்டாம். உங்க அன்பு போதும்'' என்று அந்த பெண்ணின் நகைகளை மீண்டும் அவருக்கே அணிவித்தவர் இவர். ``அவர் உங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும்'' என்று திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருந்தார்.

பிறகு ஒருநாள், ஒரு பட்டுப் புடவையுடன் அவர் வீட்டுக்கு வந்தார் இதையாவது நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார். வேண்டாம் என்று சொன்னால், அவர் மனம் புண்படும் என்பதற்காக, அந்த பட்டுப் புடவையை அவர் வாங்கிக் கொண்டுள்ளார்.

இவருக்கு நிறைய ரசிகை களை உருவாக்கிக் கொடுத்த இன்னொரு படம், ` நம்ம வீட்டு தெய்வம். ' அந்தப் படம் பார்த்துவிட்டு தன்னை சந்தித்த பெண்கள் எல்லோரும், `` பூஜை ரூமுக்கு போனால் , அவர் முகம்தான் தெரியுது'' என்றார்கள். `மிருதங்க சக்ரவர்த்தி' படம் வந்த நேரத்தில், சுசீந்திரம் போய் அங்குள்ள ஒரு கோவிலில் சாமி கும்பிட்டுக் கொண்டிருந்துள்ளார். யாரோ அவர் முதுகில் தட்டியுள்ளார்கள் . சாமி கூட கும்பிட விடாமல் இடையூறு

செய்வது யார் ? என்று அவர், திரும்பி பார்த்தபோது, ஒரு அழகான பெண் நின்று கொண்டிருந்துள்ளார். ``மிருதங்க சக்ரவர்த்தி படம் தன் வாழ்க்கையை போலவே இருக்கிறது.

எங்க வீட்டுக்காரர் ஒரு மிருதங்க கலைஞர். நான் பாடகி எங்கள் வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்கள் படத்தில் உள்ளன '' என்றார். அதைக் கேட்டு இவர் ஆச்சரியப்பட்டுள்ளார்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# நிர்த்தனா நடனப்பள்ளியின் 48ஆவது ஆண்டு நிறைவு விழா











நிர்த்தனா நடனப் பள்ளியின் 48ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதன் இயக்குனர் ஸ்ரீமதி சிவானத்தி ஹரி தர்ஷனின் நெறியாள்கையில் நடனமணிகளின் 'நிருத்த நிருத்திய சங்கமம்' என்ற நடன நிகழ்ச்சி கடந்த 11ஆம் திகதி வெள்ளவத்தை, இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக ஸ்ரீமதி பாலசுந்தரி பிரார்த்தலிங்கம் கலந்து கொண்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.